ஜோதி

ஆசிரியர் — வெ. சாமிநாத சர்மா

சுடர் 1 — மார்ச் 1938 — கதிர் 8

அடுத்த பக்கங்களில்

நமது நியாய சபை	(தலையங்கம்)	1
ஏழு வயது ஆகாத குழந்தையின் ஏழு தேவைகள்	—	13
அடிமை கொள்ளும் வழக்கம்	ஏ. ஜே. எப்.	14
மதங்களின் இருவித இதோபதேசம்	(லெனின் கூறுவது)	16
மகாத்மாவுக்கு அடுத்தபடி யார்?	வி. எம். ராமதாஸ்	17
இரு பெரு இறவா நாடுகள்	எஸ். எஸ்.	26
பிரிட்டிஷ் ஆட்சிக்கு முன்னர் இந்தியா ஞான சூனியமாயிருந்ததா?	"ஒரு மாணாக்கன்"	30
ஜெர்மானிய மாணவர்களுக்கு—	—	32
தர்மமும் தயையும்	எஸ். கே. நாராயணய்யர் B.A.,B.L.,	33
தந்தையும் தனயனும்	எஸ். முத்து வீரப்பன் B. A.,	36
விமோசனம் உண்டா?	சு. குருசாமி B. A.,	40
இந்தியாவில் நான் கண்டதென்ன?	லார்ட் சாமியல்	45
இன்ப வசனாமிர்தம்	ச. முனிஸ்வாமிப் பிள்ளை	49
நிலையிற் பிரியேல் (பாட்டு)	மு. த. பிள்ளை	54

கனகாவின் கடிதங்கள்	"சரசா"	55
பி. அனந்தாச்சார்லு	"ஒரு காங்கிரஸ் வாதி"	57
இடிக்குத் தப்புவ தெப்படி?	—	59
அசோகன் சாஸனங்கள்	"மௌத்கல்யன்"	60
சோம்பல்	ஒரு பெண்மணி	63
வீர பத்தினி	ஸ்ரீ. ஸ்ரீ. ஆச்சாரியா	64
மாஜி கெய்ஸர் எப்படி வாழ்கிறார்?	எச். ஜே. ஜி.	74
பூலோகத்தின் வயதென்ன?	"விஞ்ஞான போதகர்"	77
துலாக்கோல்	(புஸ்தக விமர்சனம்)	88
ஜோதி—(ஒரு கதை)	எம். வேங்கட்ராமன்	91
காங்கிரஸ் தலைவருக்கு ஒரு வேலைத்திட்டம்	மீ. பாலகணேசன்	101
அன்றுட உலகம்		105
காங்கிரஸ் காட்சிகள்	(படங்கள்)	111
51-வது தேசீய காங்கிரஸ்		125
கொடி யேற்ற விழா	—	127
உபசரணைக் கூட்டத் தலைவர் பிரசங்கம்	—	129
தலைவர் பிரசங்கம்	—	131
காங்கிரஸ் உத்தியோகஸ்தர்கள்	—	160

'ஜோதி'

		வருடச் சந்தா	தனிப்பிரதி
பர்மாவில்	...	4-0-0	0-6-0
இந்தியாவில்	...	6-0-0	0-8-0

ஜோதி

சுடர் 1 மார்ச் 1938 கதிர் 8

காங்கிரஸ்

ஹரிபுரா காங்கிரஸ் ஒரு பெரிய ஏமாற்றத்தை உண்டுபண்ணி விட்டது. நமக்கல்ல; ஏகாதிபத்திய தாசர்களுக்கு. இவர்கள் எதிர்பார்த்தார்கள்,

1. ஹரிபுராவில், காங்கிரஸின் 'பண்டைய நம்பர்'களாகிய காந்தி, படேல் முதலியவர்களுக்கும் அபேதவாதிகளுக்கும் பெரிய 'ரகளை' நடக்குமென்று;

2. காந்தியடிகளின் ஆன்மசக்தி என்கிற உலைக்களத்திலே வார்க்கப்பட்ட சம்மட்டியாக இருந்ததனால்தான் ஜவஹர், அரசியல் பிரச்னைகளைப் பதம் பார்த்து உடைக்கத் தெரிந்து கொண்டார்; ஆனால் போஸோ, வார்ப்படத்திற்குள் சென்று பக்குவப்படாத சம்மட்டி; சிறை வாசமும் அஞ்ஞாத வாசமும் சேர்ந்து இவருக்கும் இந்திய அரசியல் வாழ்வுக்கும் இடையே ஒரு திரையைப் போட்டுவிட்டன. அப்படியிருக்க, அநுபவ சாத்தியமான அரசியல் பிரச்னைகளைச்சொல்லி, இவர் என்ன வழி காட்டப் போகிறாரென்று;

3. பீஹார்—ஐக்கிய மாகாண மந்திரிச் சபைகள் ராஜீநாமா செய்துவிட வேண்டுமா, வேண்டாமா வென்பதைப்பற்றி அபிப்பிராய வேற்றுமை ஏற்பட்டு, காங்கிரஸ் இரண்டு கட்சிகளாகப்பிரிந்து விடுமென்று;

4. காந்தியடிகள் ரத்தக்கொதிப்பினால் தேக நலங் கெட்டிருப்பது காரணமாகஅவர் காங்கிரஸுக்கு வந்தாலும், அவர் 'கைவரிசை' அங்கே காண முடியாது. ஆகவே மற்றத் தலைவர்களாகிய சூத்திர பொம்மைகள், சுபாஷ் போஸ் என்கிற சின்ன பொம்மைக்கு முன்னர் எப்படி சும்மா யிருக்கப் போகிறார்களென்று.

ஆனால் ஹரிபுராவில் இந்த ஏகாதிபத்திய உபாசகர்களுடைய எண்ணத்திற்கு மாறாகவே எல்லாம் நடைபெற்றன. 'பழைய பசலி'களுக்கும் 'புதிய வருஷங்க'ளுக்கும் எவ்வித தகராறும் உண்டாகவில்லை. ஒன்றிலே மற்றொன்று—தற்காலிகமாகவாவது-ஐக்கியமாகிவிட்டது. ராஜீநாமா நெருக்கடி, காங்கிரஸை ஒன்று சேர்த்து இழுத்துச் செல்லும் ஒரு வடக் கயிறு மாதிரியாகி விட்டது. ஸ்ரீ போஸ், விசுவ திருஷ்டியில் இந்தியாவை வைத்துக் காட்டி, நமது கடமைகளை நினைவூட்டி, தேசத்தை வருங்காலத்

பத்திய பக்தர்களுக்கு ஏமாற்றந்தானே ?

ஏற்பாடுகள்

ஹரிபுராவில் காங்கிரஸுக்காகச் செய்யப் பட்டிருந்த ஏற்பாடுகள் அதி அற்புதமாயிருந்தன வென்றும், இந்தியா அரசாங்கத்தார் கூட பாடங் கற்றுக் கொள்ள வேண்டிய ஓர் உதாரணப் பொருளாக இந்தக் காங்கிரஸ் இருந்த தென்றும் சொல்லப் படுகின்றன. வாஸ்தவம். ஆனால் இதில் ஏன் ஆச்சரியங் கொள்ள வேண்டு மென்பது நமக்குத் தெரியவில்லை. ஸ்ரீமதி சரோஜினி தேவி கூறியது போல், இந்த ஹரிபுரா, ஒருவருடைய கனவு; மற்றொருவருடைய எண்ணம்; பிறிதொருவருடைய செயல். ஒருவர் ஞானி; மற்றொருவர் கர்ம வீரர்; பிறிதொருவர் தொண்டர். மகாத்மா காந்தியின் மனமும், சர்தார் பட்டேலின் செயலும், தர்பார் கோபால்தாஸ் தேசாயின் சேவையும் கலந்தது தான் ஹரிபுரா காங்கிரஸ். இது விமரிசையாக இல்லாது வேறெப்படி இருக்க முடியும் ? லட்சுமணபுரியை விட பெய்ஸ்பூர் சிறப்பாக இருந்தது; பெய்ஸ்பூரைக் காட்டிலும் ஹரிபுரா விசேஷம்; ஹரிபுராவி னின்றும் மஹா கோசலம் ஒரு படி உயர்ந்துதான் இருக்கப் போகிறது? இதில் என்ன சந்தேகம்? போகப் போக வளர்ச்சி தானே! நமது லட்சியம் நெருங்க நெருங்க, நாம் சமாளிக்க வேண்டிய பிரச்னைகளும் சிக்கல் பட்டுக்கொண்டு

தோடு பூட்டியும் வைத்து விட்டார். அவருக்கு இவ்வளவு பரிபக்குவம் ஏற்பட்டிருக்கிற தென்று யாருமே நினைத்திருக்க மாட்டார்கள். மற்றும், காங்கிரஸ் நடை முறைகளில் காந்தியடிகளின் குரல் ஒலிக்காமற் போனாலும், அவருடைய கை, வழி காட்டிக் கொண்டுதா னிருந்தது. நெருக்கடியான சந்தர்ப்பங்களில் தலைவர்கள், அவருடைய குடிசைக்குத் தான் குனிந்த தலையோடு போனார்கள்; ஆனால் நிமிர்ந்த பார்வையோடு வெளி வந்தார்கள். இவை யெல்லாம் ஏகாதி

தான் வரும். அதற்காக நாம் செய்து கொள்ள வேண்டிய சந்நாகங்களும் அதிகந்தானுகும். படை பலம் பெருகு வதோடு, உற்சாகமும் அதிகரிக்கத் தான் செய்யும். இவை, இயற்கை நியதிகளல்லவோ?

தலைமை யுரை

ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸின் தலைமை யுரையை நாம் பரிசீலனை செய்து பார்க்க வேண்டுமானால், அதற்கு உலகக் கண்ணுடியைப் போட்டுக்கொள்ள வேண்டும். இல்லா விட்டால் அவருடைய பிரசங்கத்தின் ஆழத்தை நாம் பார்க்கவே முடியாது. சமூகம், மதம், பாஷை என்கிற போர்வைகளை மட்டும் போர்த்துக் கொண் டிருக்கிறவர்களுக்கு அவரு டைய பேச்சு, நடுக்கத்தைக் கொடுக் கும் என்பதை நாம் அங்கீகரிக்கி ரோம்.

ஸ்ரீ போஸின் பேச்சில் நாவன்மை யைப் பார்க்க முடியாது. சொல்லடுக் குகளோ, சொல்லழகோ அதில் இல்லை. ஓசை நயத்திற்காகப் பொரு ளைத் தியாகம் செய்துவிட அவர் விரும்பவில்லை. சேனாதிபதிகள், தங்க ளிடத்திலே யுள்ள ஆயுதங்களுக்கு மெருகு போடுவதிலே கவலை கொள்ள மாட்டார்கள்; அவற்றை எப்படி உபயோகிப்பது என்பதிலேதான் சிந்தனை செலுத்துவார்கள். ஸ்ரீ போஸ் சுயராஜ்ய சைன்னியத்தின் சேனாதி பதியல்லவா? இதனாலேயே, இவரு டைய பிரசங்கத்தில் ராஜ தந்திர பாஷை ஒன்றையுங் காண முடிய வில்லை. உறை திறந்த கத்தியோடு எப்படி ஒரு தளகர்த்தன் சேனைக்கு முன்னின்று நடத்திச் செல்வானோ, அப்படியே இவரும் உள்ளந் திறந்த உரைகளுடன், ராஷ்ட்ரபதி ஸ்தானத் தில் ஏறி நிற்கிறார். பிரிட்டிஷ் ஏகாதி பத்தியத்தின் 'களி மண் பாதம்' முதல், நமது தலையிலே சுமந்திருக் கும் பொறுப்புகள் வரை ஒவ்வொன் றையும் விண்டு விண்டுக் காட்டுகிறார் தமது பிரசங்கத்தில்.

ஏகாதிபத்தியம்

இவருடைய பிரசங்கத்தைப் படிக் கிறபோது, உலக ஏகாதிபத்தியங்களை யும் அவற்றோடு பிணைந்த உலக நிலை யையும் தமது கை விரல்களால் அளந்து வைத்துக் கொண்டிருக்கிறார் என்ற எண்ணமே நமக்கு உண்டாகி றது. சிறப்பாக பிரிட்டிஷ் ஏகாதி பத்தியத்தைப் பற்றி இவர் கூறுகிற போது, ஒரு நோயாளியை, வைத்திய நிபுணன் ஒருவன் எப்படி அங்கம் அங்கமாகப் பரிசோதித்துப் பார்ப் பானே அந்தக் காட்சிதான் நம் கண் முன்னே வந்து நிற்கிறது. ஜனநாய கத்தின் தந்தை யென்று சொல்லிக் கொள்ளும் பிரிட்டனிலேயே, பிரிட் டிஷ் ஜனங்களுக்குச் சுதந்திரமில்லை யென்று இவர் தர்க்க ரீதியாக நிரூபிக்கிறபோது, நாம் திகைப்பே கொள்கிறோம். பிரிட்டிஷ் முதலாளி வர்க்கத்திற்கும், குடியேற்ற நாடுக ளின் அடிமைத் தனத்திற்கும் எவ் வளவு நெருங்கிய தொடர்பு இருக்கி றது? 'பிரித்து ஆளும் தந்திரம்' எந்தெந்த நாடுகளில் எந்தெந்த வித மாக உருவெடுத்து வேலை செய்கின் றது? இவைகளை யெல்லாம் ஒன்றன் பின் னொன்றாக நாம் பார்த்துக் கொண்டு வருகிறபோது, இந்த ஏகாதிபத்தியத்தின் 'களி மண் பாதம்' தானுக நம் கண் முன்னர் வந்து தோன்றுகிறது. இப்பொழுது, பிரிட்டிஷ் அரசாங்கம், அந்நிய நாட்டு விவகாரங்களில் நடந்து கொள்கிற மாதிரி, யாருக்குமே ஒரு மதிப்பை உண்டுபண்ண வில்லை. இப்படியே

சுறுக்கிக் கொண்டு போகாமல், அது தன்னை விரைவில் ஸ்திரப்படுத்திக் கொள்வதுடன், சுதந்திர நாடுகள் பல அடங்கிய ஒரு சமஷ்டி அமைப்பாகத் தன்னை மாற்றிக் கொள்வது நல்லது என்று ஸ்ரீ போஸுடன் நாமும் சேர்ந்து கூறுகிறோம்.

லட்சியமென்ன ?

இந்தியாவின் லட்சியம், சுதந்திரம் என்றும், சுயராஜ்யம் என்றும் பொதுப் படையாகவே இதுவரையில் சொல்லப்பட்டு வந்திருக்கிறது. இந்தச் சுதந்திரம் அல்லது சுயராஜ்யம் எப்படிப்பட்டதா யிருக்கும் என்பதைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் யாரும் சொல்லவில்லை. ஆனால், ஸ்ரீ போஸ், தமது தலைமையுரையில் இந்தியாவின் லட்சியம் 'சமஷ்டி குடியரசு' என்கிறார். பூரண சுதந்திரமும் சம அந்தஸ்தும் உடைய சுதேச சமஸ்தானங்களும் பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களும் சேர்ந்த ஒரு சமஷ்டியையே இவர் குறிப்பிடுகிறார். வருங்கால ஜனநாயக இந்தியாவில் சமஸ்தானங்களே இல்லாமற் செய்துவிட வேண்டுமென்ற ஒரு சிலருடைய தீவிர நிலைக்கும் இவர் செல்லவில்லை யென்பது குறிப்பிடத்தக்கது. பொதுஜனங்களால் கூட்டப்படுகிற ஒரு ஜனப்பிரதிநிதி சபை மூலமாகவே இந்தச் சமஷ்டி குடியரசுத் திட்டம் நிர்ணயிக்கப்பட வேண்டுமென்பதையும் இவர் வலியுறுத்துகிறார். ஆனால் அப்படி ஏற்படுகிற சமஷ்டி குடியரசு, பிரிட்டிஷ் தொடர்பற்றதாய், ஆனால் பிரிட்டனுடன் சமநிலையில் இருக்கவேண்டும் என்பது இவர் கருத்து. இதிலே யாருக்குமே கருத்து வேற்றுமை இருக்க நியாயமில்லை. பூரண சுதந்திரம் என்பதற்கு இதுதானே அர்த்தம்.

சிறுபான்மையோர்

சுதந்திர இந்தியாவில் சிறுபான்மையோருடைய உரிமைகள் என்னவாயிருக்கும், அவை எப்படிப் பாதுகாக்கப் பெறும் என்பதைப் பற்றி ஸ்ரீ போஸ் கூறியுள்ள வாசகங்களை நமது முஸ்லீம் சகோதரர்கள் கவனிக்க வேண்டுகிறோம். ஹிந்துஸ்தானம், எல்லாருக்கும் பொதுவான தாய்நாடு. அது உரிமை பெறுவதினால் எல்லாருக்கும் சாதகங்கள் உண்டு. அந்தச் சாதகங்களில் ஏற்றத் தாழ்வு இராது. ஆகவே, மதத்திற்கு முன்னர், தேசத்தை வைத்துப் பார்க்குமாறு நமது முஸ்லீம் சகோதரர்களைக் கேட்டுக் கொள்கிறோம். சுதந்திர இந்தியாவில், பிரஜா உரிமைகள் எத்தகையனவா யிருக்குமென்பதைக் காங்கிரஸ், பல முறைகளில் தீர்மான ரூபமாக வெளியிட்டிருக்கிறது. இந்த உரிமைகளின் அநுபவ பாத்தியம் ஒவ்வோர் இந்தியப் பிரஜைக்கும் உண்டு. அப்படியிருக்க நமது முஸ்லீம் சகோதரர்கள், தங்களுடைய உரிமைகள்மட்டும் ஏன் சட்ட பூர்வமாகப் பாதுகாக்கப்பட வேண்டுமென்று கோருகிறார்கள்? எல்லாருக்கும் பாதுகாப்பு அளிக்கத்தானே சட்டம் இருக்கிறது! ஆதலின் ஜனாப் ஜின்னா முதலியோர் காங்கிரஸிற்குள் வந்து சேர்ந்து, தேசிய உரிமைகளுக்கு முதலில் பாடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். ஸ்ரீ போஸ் கூறுகிறபடி, இந்த வகுப்புப் பிரச்னைகளெல்லாம் பொருளாதாரப்பிரச்னைகளையே அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. பின்னைய பிரச்னை தீர்க்கப்பட்டு விட்

டால் முன்னது தானாகவே தீர்ந்து விடும் அல்லவா? இதற்காக, நமது முஸ்லீம் சகோதரர்கள் உழைக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

சுதந்திரம் பெற்ற பிறகு

இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு அந்தச் சுதந்திரம் பெறுவதற்குக் காரணமாயிருந்த காங்கிரஸ் இருக்க வேண்டுமா, அல்லது ஒடுங்கிவிட வேண்டுமா என்பதைப் பற்றி ஸ்ரீ போஸ் விரிவாகக் கூறியிருக்கிறார். நமது கருத்தில் சுதந்திரம் பெற்ற பிறகுதான் காங்கிரஸுக்கு அதிகமான பொறுப்பும், கடமையும் இருக்கின்றன. ஸ்ரீபோஸ் கூறுகிறபடி இந்த காங்கிரஸ் ஸ்தாபனமே சுதந்திர இந்தியாவின் பார்லிமெண்டாக மாறுதல் வேண்டும். காங்கிரஸ் காரியக் கமிட்டியே சுதந்திர இந்தியாவின் மந்திரிச் சபையாக அமையவேண்டும். ஜெர்மனியில் நாஜிக் கட்சியும் இத்தலியில் பாஸிஸ்ட் கட்சியும், துருக்கியில் இளந் துருக்கியர் கட்சியும், அயர்லாந்தில் சின்பீன் கட்சியும் அதிகாரத்தை ஏற்றுக்கொண்ட பிறகு கலைந்து போய்விடவில்லை. அதிகார பலத்திற்கு இந்தக் கட்சிகள் அஸ்திவாரமாக அமைந்தன. ஏனென்றால் எந்தக் கட்சியானது அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்குக் காரணமாயிருந்ததோ, அந்தக் கட்சிதான் அதிகாரத்தைச் சரியாகக் கொண்டு செலுத்த முடியும். எந்தெந்த லட்சியங்களுக்காக ஒரு கட்சி ஸ்தாபிக்கப்பட்டதோ, அந்த லட்சியங்களை நிறைவேற்றி வைக்க அதிகார பலம் கைக்குக் கிட்டியிருக்கும் போது அந்தக் கட்சியே இறுகிவிட வேண்டுமென்று சொல்வதில் அர்த்தமேயில்லையல்லவா? ஆனால் ஒரு விஷயத்தில் நாம் எச்சரிக்கையா யிருக்க வேண்டும். அதாவது அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்ட கட்சியானது, மற்றக் கட்சிகளுக்கு இடங்கொடாமல் ஏகேச்சாதிகார பீடத்தில் ஏறிக் கொண்டு விடுமானால், அஃது ஆபத்துத்தான். இன்று இத்தலியிலும் ஜெர்மனியிலும் உள்ள சர்வாதிகாரிகள் தங்கள் கட்சி பலத்தைக் கொண்டு கருத்து வேற்றுமைகளுக்கு இடங்கொடாமல் அடித்துப் போட்டிருக்கிறார்களேயாயினும், அந்தந்த நாட்டின் நாபிக் கமலத்தில் அதிருப்தியானது புகைந்து கொண்டு தானிருக்கிறது; அப்படித் தானிருக்கும். இது நாளா வட்டத்தில் அக்கினி மலையாகவே கிளம்பலாம்; சூறுவளியாகச் சுழன்று அடிக்கலாம். இந்தியாவில் அப்படிப்பட்ட நிலைமைக்கு நாம் இடங் கொடாதபடி காங்கிரஸை செலுத்திக் கொண்டு வர வேண்டும்.

பொருளாதாரத் திட்டங்கள்

சுதந்திரம் பெற்ற இந்தியாவில் சமுதாயப் புனருத்தாரண வேலைகள் அபேதவாதத்தை அடிப்படையாகக் கொண்டு நடைபெற வேண்டுமென்று ஸ்ரீ போஸ் கூறுகிறார். இதை நாம் முற்றிலும் அங்கீகரிக்கிறோம். இயற்கையும் அந்த வழிக்குத் தான் நம்மைக் கொண்டுபோய் விடும். பண்டித ஜவஹர்லால் நேரு லட்சுமணபுரி காங்கிரஸ் தலைமையுரையில் குறிப்பிடும் வாக்கியங்கள் இங்குக் கவனிக்கத் தக்கன.

'உலகப் பிரச்னைகளுக்கும் இந்தியாவின் பிரச்னைகளுக்கும் பரிகாரம் அபேத வாதத்திலேயே இருக்கிறது என்று நான் உறுதியாக நம்புகிறேன். இந்த வார்த்தையை நான் உபயோகிக்கிற போது மானிட தர்மத்திற் கேற்பட்ட ஒரு சம்பிரதாய வார்த்தையாக உபயோகிக்க

வில்லை. சாஸ்திர ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் உள்ள அபேதவாதத்தையே இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன். அபேதவாதமென்பது ஒரு பொருளாதாரக் கொள்கை மட்டுமன்று; அது வாழ்க்கையின் தத்துவம். இந்தியாவிலேயுள்ள வறுமையையும், வேலையில்லாத் திண்டாட்டத்தையும், இந்திய மக்களின் மிகக் கேவலமான ஸ்திதியையும் ஒழிக்க அபேதவாதத்தைத் தவிர வேறு மார்க்கம் எனக்குத் தென்படவில்லை'.

இந்த அபேதவாத தத்துவத்தை நமது நாட்டின் தர்மத்திற்கும் ஜனங்களின் மனோபாவத்திற்கும் நாகரிகத்திற்கும் இசைய மாற்றியமைத்துக்கொள்ள வேண்டும். ருஷ்யாவில் நடைமுறையிலிருந்து வரும் பொதுவுடைமைக் கொள்கையையோ, அல்லது ஜெர்மனியில் தேசீய அபேதவாதம் என்ற பெயரால் நடைபெற்று வரும் சர்வாதிகார முறையையோ அப்படியே இந்தியாவில் கொண்டுவந்து நட்டுப் பயிர் செய்துவிட வேண்டுமென்று யாருமே சொல்லவில்லை. ஆதலின் போஸ், நேரு கூறுகிற அபேதவாதத்தைக் கண்டு யாருமே அஞ்ச வேண்டுவதில்லை.

பொதுவான பாஷை

இந்தியாவில் வழங்கப் பெறும் எல்லாப் பாஷைகளுக்கும் ரோம எழுத்துக்களை உபயோகித்தல் நல்லது என்று ஸ்ரீ போஸ் கூறுகிறார். இந்த யோசனை, பலருக்குத் திகிலை உண்டு பண்ணலாம் என்பதையும் அவர் ஒத்துக் கொள்கிறார். ஆனால் கொஞ்சம் ஆர அமர இருந்து எதிர்காலத்தில் கண்ணை வைத்துப் பார்த்தால் இதன் நுண்மை தெரியும். இந்தியாவில் பேசப் பெறும் எல்லாப் பாஷைகளுக்கும் பொதுவான ஓர் எழுத்து இருக்க வேண்டுமென்பது ஸ்ரீ போஸின் புதிய யோசனையன்று. அநேக வருஷங்களுக்கு முன்னேயே, பண்டித மதன் மோகன் மாளவியா, தேவநாகர எழுத்தின் மூலமாக இந்தியாவிலுள்ள எல்லாப் பாஷைகளும் எழுதப் பெற வேண்டுமென்று கூறினார். பண்டித ஜவஹர்லால் நேருவும், இந்தியாவிற்குப் பொதுவான ஓர் எழுத்து இருக்க வேண்டுமென்று பல முறை சொல்லியிருக்கிறார். ஆனால் எந்தப் பொது எழுத்தையும் நாம் நடைமுறையில் கொணர்வதானால், அதை விரைவிலேயே கொணர்ந்து விடுதல் நல்லது. ஏனென்றால், இந்தியாவிலுள்ள படிப்பில்லாத பெரும்பாலான ஜனங்களுக்குப் பலபல எழுத்துக்களில் கல்வியைப் புகட்டிவிட்டு, பின்னர் அத்தனையையும் மாற்றி வேறொரு புது எழுத்தைக் கற்றுக் கொள்ளுங்கள் என்று சொன்னால் அது சிரமமாகவே யிருக்கும். எந்த எழுத்தைப் பொது எழுத்தாக நாம் நிர்ணயிக்கிறோமோ, அதனை இப்பொழுதே நிர்ணயித்து அதன் மூலமாக ஜனங்களுக்குக் கல்வி புகட்டச் செய்வது நல்லது. நம்மைப்பொறுத்தமட்டில், ரோம எழுத்துக்களைப் பொது எழுத்தாகக் கொண்டு வருவதற்கு எவ்வித ஆட்சேபமுமில்லை. இந்தப் பொது எழுத்தை அப்யசிக்கத் தொடங்குவதின் மூலமாக நமது நாட்டிலே ஒற்றுமையேற்பட்டு, அதன் வாயிலாக உலக வல்லரசுகளின் மத்தியில் நமக்குச் சம அந்தஸ்து கிடைக்குமானால் இதனை நாம் ஏன் வரவேற்கத் தயங்க வேண்டும்? நமது பாஷாபிமானமோ, தேசாபிமானமோ இந்த ரோம எழுத்தை வரவேற்பதனால் சிறிது கூடக்

குன்றி விடாது. ஸ்ரீ போஸைப் போல் நாமும் உலகக் கண்ணாடியிலே தான் இந்தியாவின் எதிர் கால வாழ்வைக் காண்கிறோம். அந்த நிலையிலிருந்துதான் இந்தப் பிரச்னையை நாம் கவனிக்க வேண்டும்.

சமஷ்டி

சமஷ்டி திட்டத்தைப் பற்றி ஸ்ரீ போஸ் அலசி அலசிப் பேசியிருக்கிறார். தலைமையுரையில் இதற்கு இவ்வளவு முக்கியத்வம் கொடுக்க வேண்டியதில்லையென்பதே நமது அபிப்பிராயம். ஏனெனில், இந்த சமஷ்டித் திட்டம் ஏற்கனவே பலராலும் நொறுக்கப் பட்டு விட்ட ஒரு மட்பாண்டம்; எல்லோரும் உதறித் தள்ளின ஒரு செல்லாக் காசு. இந்தியா இதனை அப்படியே ஏற்றுக் கொள்ளும் என்று பிரிட்டிஷ் ராஜ தந்திரிகள் நினைப்பார்களானால் அது பகற் கனவுதான். இதனை மீண்டும் மீண்டும் தகர்த்து நமது பொழுதைப் போக்குவதைக் காட்டிலும் ஜனப் பிரதிநிதி சபையைக் கூட்டி அதன் மூலமாக ஓர் அரசியல் திட்டத்தை வகுக்கும் துறையில் கவனம் செலுத்துவது நல்லது.

தொண்டர் படை

காங்கிரஸுக்கென்று ஒரு தொண்டர் படை தேவையென்பதையும் அந்தப் படையினருக்குப் போதிய பயிற்சி அளிக்கப்பட வேண்டுமென்பதையும் வற்புறுத்திக் கூறுகிறார் ஸ்ரீ போஸ். இது அவயசிம் தேவை. தற்போது அரசியல் வாழ்விலே ஈடுபட்டிருக்கிறவர்களில் பெரும்பாலோர் துணிப்புல் மேய்கிறவர்களாயும், உற்சாகத்திலே மிதக்கிறவர்களாயும் இருக்கிறார்கள் என்று சொன்னால் நம்மை இந்த அரசியல் வாதிகள் முறைத்துப் பார்க்க மாட்டார்களென்றே நம்புகிறோம். காலஞ் சென்ற கோகலே, இந்திய ஊழியர் சங்கத்தை ஸ்தாபிக்கிற போது அதில் அங்கத்தினராகச் சேர்ந்து பொது வேலையில் ஈடுபட வேண்டுமென்று விரும்புவோர் ஐந்து வருஷப் பயிற்சி பெற வேண்டுமென்னும் ஒரு விதியை ஏற்படுத்தினார். இந்திய ஊழியர் சங்கத்தின் தொண்டுகள் வெளிப் பார்வைக்குப் பகட்டா யில்லாமற் போனாலும், ஆழமானவை யென்பதையும், ஸ்திரமானவை யென்பதையும் நாம் ஒத்துக் கொள்ள வேண்டும். அந்த மாதிரி காங்கிரஸ் வேலையில் ஈடுபடுவோர் ஒரு சிறிது காலம் நல்ல முறையில் பயிற்சி பெற வேண்டுமென்று கட்டாய விதி ஏற்படுத்துவது நல்லது. அதிகாரத்தைச் சம்பாதிப்பதற்காகப் போராடுவது பெரிதல்ல. அந்த அதிகாரத்தை வைத்துக் காப்பாற்றும் திறமையும் பொறுமையும் வேண்டும். அதற்குப் போதுமான அரசியல் ஞானம் இல்லாவிட்டால் முடியாது. 'காங்கிரஸ் கட்சியில் திறமைக்கு இன்னும் எவ்வளவோ இடமிருக்கிறது' என்று ஸ்ரீ போஸ் கூறிய வார்த்தையில் எவ்வளவோ ஆழ்ந்த பொருள்கள் இருக்கின்றன. மாகாணக் காங்கிரஸ் கமிட்டிகளும், காரியக் கமிட்டி அங்கத்தினர்களும் இது சம்பந்தமாக உடனே ஒரு வேலைத் திட்டத்தைத் தயாரித்து நடைமுறையில் கொணர்தல் நல்லது.

வெளி நாட்டுத் தொடர்பு

நாம் ஏற்கனவே கூறி யிருந்தபடி ஸ்ரீ போஸ், வெளி நாடுகளில் இந்தி

யாவைப் பற்றி அதிகமான பிரசாரஞ் செய்ய வேண்டுமென்பது குறித்து அதிகமாக வற்புறுத்திப் பேசியிருக்கிறார். ஒத்துழையாமைக் காலத்தில், நம்முடைய பலத்தைக்கொண்டே நாம் நிற்க வேண்டுமென்றும், வெளியாருடைய உதவியைக் கொண்டோ, அநுதாபத்தைப் பெற்றோ சுயராஜ்யம் பெறுவது, தன் மதிப்புள்ளதாக இராதென்றும் ஓர் எண்ணம் நிலவிவந்தது. இதற்குக் காரணங்கள் இல்லாமற் போகவில்லை. ஏனென்றால், பிரிட்டிஷ் தொழிற் கட்சியினர், இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்திற்குத் துணை செய்வர் என்று எதிர் பார்க்கப் பட்டதெல்லாம் கானல் நீராகவே போய் விட்டது. எந்த ராம்ஸே மாக்டோனல்ட்—பாவம்! அவருடைய ஆத்மா எங்கோ பரலோகத்தில் சாந்தி பெற்றுக் கொண்டிருக்கிறது!— 'பப்ளிக் சர்விஸ் கமிஷன்' அங்கத்தினராக 1913ம் வருஷம் இந்தியாவுக்கு விஜயஞ் செய்தபோதும், அதற்கு முன்னரும் கூட, இந்தியாவுக்கு அவசியம் சுதந்திரம் கொடுத்து விட வேண்டுமென்று சாதனை செய்தாரோ—அதே மாக்டோனல்ட், 1924ம் வருஷம் மந்திரிப் பதவியை ஏற்றுக் கொண்ட பிறகு அடியோடு மாறி விட்டார். அப்பொழுதும் அதற்குப் பின்னரும் நடைபெற்றதீவிர அடக்கு முறைகளுக் கெல்லாம் ஆதரவாயிருந்தார். இதனால் தொழிற்கட்சியினருடைய அநுதாபமெல்லாம்உதட்டளவிலேயே நிற்கிறதென்ற எண்ணம் நன்றாக இந்தியர்கள் மனதில் பதிந்து விட்டது. பின்னரே இந்தியாவைப் பற்றி வெளி நாடுகளில் தீவிரப் பிரசாரம் செய்ய வேண்டியதன் அவசியத்தைக் காங்கிரஸ் நன்றாக உணர ஆரம்பித்தது. இந்தச் சமயத்தில் நாம் காலஞ் சென்ற ஸ்ரீ வித்தல் பாய் பட்டேலைப் பற்றி நினைக்காமலிருக்க முடியாது. உடல் நலங் குன்றியிருந்த காலத்தில் கூட இவர், அமெரிக்காவுக்குச் சென்று சுழற் காற்றுப் போல் சுற்றுப் பிரயாணஞ் செய்து, இந்தியாவின் சுதந்திர ஆவலை அமெரிக்கர்களுக்குத் தெரியப் படுத்தினார்.

ஆதலின் ஸ்ரீ போஸ் கூறுகிற மாதிரி, காங்கிரஸ் காரியாலயத்தின் அந்நிய நாட்டிலாகா வலுப் படுத்தப் பெற வேண்டும். அரசாங்க ஸ்தானீகர்கள் ஒவ்வொரு நாட்டிலும் இருக்கிற மாதிரி, காங்கிரஸின் ஸ்தானீகர்கள் ஒவ்வொரு நாட்டிலும் இருந்து, இந்தியாவின் நாகரிகத்தையும், அதன் உன்னத லட்சியங்களையும் அந்தந்த நாட்டாருக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். இதற்காக ஒரு நிதி திரட்டப் பட்டு, இந்த வெளி நாட்டுப் பிரசாரத்திற் கென்றே அதனை ஒதுக்கி விடுதல் நல்லது.

பிரசாரம் என்ற வார்த்தையையே ஸ்ரீ போஸ் வெறுக்கிறார். ஆம்; நாமும் வெறுக்கிறோம். ஐரோப்பிய மகா யுத்தத்திற்குப் பிறகு, இந்த வார்த்தைக்கு மதிப்பே போய் விட்டது. மேற்படி யுத்தத்தில் நேசக் கட்சியினர் வெற்றி பெற்றதெல்லாம் பிரசாரத்தினாலேயே யென்றும், இந்தப் பிரசாரம் எவ்வளவு கேவலத் தன்மைகளுக் கெல்லாம் இறங்கி விட்டது என்பதைப் பற்றியும், ஹிட்லர் கூட, தன் சுய சரித்திரத்தில் ஒரு குரல் அழுதிருக்கிறான். அப்படிப் பட்ட பிரசாரத்திற் கெல்லாம் காங்கிரஸ் போக வேண்டுவ தில்லை. அந்த உரிமையை, நாகரிகம் பெற்ற மேனாடுகளுக்கே விட்டு விடுவோம். சத்திய ஆத்மா இல்லாத சுதந்திர உடலம் நமக்குத் தேவையில்லை. இந்தியாவின் புராதன நாகரிகத்தையும், அது

தற்போது அடைந்திருக்கிற நிலையையும் அப்படியே படம் பிடித்துக் காட்டினாலும் சொன்னாலும் போதும். இந்த வேலையை எந்த வார்த்தை கொண்டாகிலும் அழைத்துக்கொள்ளட்டும். வார்த்தைகளைப் பற்றி நமக்குக் கவலையில்லை. வேண்டுவது செயல். ஏற்கனவே, ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தார், இது விஷயத்தில் ஓரளவு தொண்டு செய்து வருகின்றனர். ஆனால் இது போதாது. தவிர இது வெறும் மத ஸ்தாபனம். காங்கிரஸானது, தனது சொந்த ஹோதாவில் ஆங்காங்குப் பிரசார ஸ்தாபனங்கள் ஏற்படுத்தி, அவற்றில் சம்பளங் கொடுத்து ஆட்களை நியமித்து, இந்தியாவுக்கும் வெளி நாடுகளுக்கும் ஒழுங்கானதொரு தொடர்பு இருக்குமாறு செய்ய வேண்டும்.

தென்னமெரிக்காவில் காங்கிரஸ் பிரசாரம் செய்ய வேண்டுமென்று ஸ்ரீ போஸ் கூறுகிறார். இத்தலியிடமிருந்தும், ஜெர்மனியிடமிருந்தும், ஜப்பானிடமிருந்தும் பெற்ற ஓர் எண்ணத்தின் சாயல் இந்த யோசனை என்று நாம் கருதுகிறோம். ஏனென்றால், இந்த மூன்று நாடுகளும் இப்பொழுது போட்டா போட்டியிட்டுத் தென்னமெரிக்காவில் பிரசாரஞ் செய்து வருகின்றன. எதற்கு? தத்தம் நாட்டு நாகரிகத்தைப் பரப்புவதற்கல்ல; தென்னமெரிக்காவிலுள்ள பொருள்களைச் சுரண்டுவதற்கு. 16வது நூற்றாண்டில் ஸ்பானிஷ் ஏகாதிபத்தியம் அந்த நாட்டிலே ருசி கண்ட பிறகு 'ஒண்ட வந்த பிடாரி ஊர்ப் பிடாரியை ஓட்டிற்றாம்' என்ற பழமொழியைப் போல், ஸ்பெயினுக்கு இடமில்லாமற் செய்து விட்டு மற்ற நாடுகள் அங்கே மூகாம் போட நினைத்து வருகின்றன. ப்ரேஜில், சில்லி, அர்ஜண்டைனா முதலிய நாடுகளில், பாசிஸ்ட் கட்சி ஏஜெண்டுகளும், நாஜி கட்சி ஏஜெண்டுகளும் இருக்கிறார்களென்றும், மேலே கூறப்பட்ட மூன்று நாடுகளும், தென்னமெரிக்கப் பிரதேசங்களில் ஆயுதங்களைக் கொண்டு திணிக்கப் போட்டி போட்டு வேலை செய்கின்றனவென்றும் கெனூரோ அர்பேஜியா வென்பவர் 'கர்ரண்ட் ஹிஸ்டரி' என்ற அமெரிக்கப் பத்திரிகையில் எழுதியிருக்கிறார். இந்த மாதிரியான பிரசாரத்தின் நடுவில், காங்கிரஸ் பிரசாரம் எவ்வளவு தூரம் மேற்படி தென்னமெரிக்கப் பிரதேசங்களில் செல்லுபடியாகும் என்பது நமக்குச் சந்தேகமாயிருக்கிறது. ஆயினும், மற்ற நாடுகளில் நமது பிரசாரத்தை நடத்துகிறபோது, தென்னமெரிக்கப் பிரதேசங்களை நாம் ஏன் ஒதுக்க வேண்டும்.? ஆனால் இதற்கு விசேஷ முக்கியத்துவம் கொடுக்க வேண்டியதில்லையென்பது தான் நமது அபிப்பிராயம்.

மந்திரிகளின் வேலை

ஏழு மாகாணங்களிலுள்ள காங்கிரஸ் மந்திரிச் சபைகள் இதுகாறும் செய்து வருகிற வேலை, பொது ஜனங்கள் எதிர் பார்த்ததை விடக் குறைவாக இருக்கிறது என்று ஸ்ரீ போஸ் தமது பிரசங்கத்தில் கூறுகிறார். பண்டித ஜவஹர்லால் நேருவும், காங்கிரஸுக்குச் சமர்ப்பித்த அறிக்கையில்,

> 'காங்கிரஸ் மந்திரிச் சபைகள் ஏழு மாகாணங்களிலும் மிகத் தைரியமாக வேலை செய்து வருகின்றன. இவைகள் நல்ல வேலையைச் செய்திருக்கின்றனவென்றே சொல்ல வேண்டும். ஆனால் இவை இன்னும் அதிகமாக வேலை செய்ய வேண்டுமென்று விரும்புகிறேன்'

என்று இதற்கு எதிரொலி கொடுத்திருக்கிறார். இந்த ஒலியோடு, நமது குரலும் சேர்ந்து பாட முடியவில்லை. தேசம், காங்கிரஸ் மந்திரிகளிடமிருந்து எவ்வளவோ எதிர் பார்க்கிறதென்பதை நாம் அங்கீகரிக்கிறோம். ஆனால் வரம்பிட்ட ஒரு சட்டத்தின் கீழ் அவர்கள் வேலை செய்கிறார்களென்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். தவிர, அவர்களுடைய எண்ணங்களையெல்லாம் செயலில் கொணர்வதற்கு ஆவலிருந்தாலும், அவகாசம் வேண்டுமல்லவா ? காங்கிரஸ் கட்சியினர், மந்திரிப் பதவியேற்று சுமார் எட்டு மாதங்கள் தானாகின்றன. இன்னும் கொஞ்சம் பொறுத்துப் பார்த்து, பிறகு நமது தீர்ப்பைக் கூறுவது நல்லதென்பதே நமது கருத்து.

ஒரே தோரணை

பொதுவாக ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸின் பேச்சு, செயலில் கொணரக் கூடிய அம்சங்கள் நிறைந்ததாய், இந்தியாவின் சுதந்திர லட்சியத்தை முன்னிலைப் படுத்திக் கொண்டிருக்கிறதென்று சொல்ல வேண்டும். ஸ்ரீ போஸ், ஆத்திரப்பட்டு ஒரு காரியத்தைச் செய்யக் கூடியவரல்லவென்பதற்கு அவருடைய காரியக் கமிட்டி நியமனத்திலிருந்தே நன்கு தெரிந்து கொள்ளலாம். காங்கிரஸ், சென்ற இரண்டு வருஷங்களாகச் செய்து வந்த வேலையின் போக்கு ஒரே தோரணையிலிருக்க வேண்டுமென்பதுதான் இவர் கருத்து. ஒரு ராஷ்ட்ரபதி நடந்து கொள்ள வேண்டிய மாதிரியும் இதுதான்.

தீர்மானங்கள்

காங்கிரஸிலே நிறைவேற்றப் பட்ட தீர்மானங்களைப் பற்றிச் சிறிது கவனிப்போம். நமது கருத்தில் இரண்டு தீர்மானங்களை முக்கியமாகக் குறிப்பிடுவோம். ஒன்று சுதேச சமஸ்தானங்களுக்கும் காங்கிரஸுக்கும் இருக்க வேண்டிய தொடர்பு; மற்றொன்று, காங்கிரஸுக்கும், விவசாயிகள், தொழிலாளர்கள் முதலியோர் அடங்கிய ஸ்தாபனங்களுக்கும் எந்த மாதிரியான சம்பந்தம் இருக்க வேண்டுமென்பது. இந்த இரண்டு பிரச்னைகளையும், காங்கிரஸ் ஒரு நடு நிலை நின்றே கவனித்திருக்கின்றது. இந்த இரண்டு தீர்மானங்களும், மேற்பார்வைக்கு, வழவழவென்று இருப்பதுபோல் தோன்றும் என்பதை நாம் அங்கீகரித்துக் கொள்கிறோம். ஆனால் இப்பொழுதைய நிலையில், இந்த இரண்டு பிரச்னைகளைப்பற்றியும் காங்கிரஸ் வேறு விதமாகத் தீர்மானித் திருக்க முடியாது. ஏனென்றால், காங்கிரஸ் தன் லட்சியத்தை யடைவதற்கு முக்கிய சாதனமாகக் கோருவது இந்திய ஒற்றுமை. இந்த ஒற்றுமையில் சுதேச சமஸ்தானங்களும், விவசாயிகள், தொழிலாளர்கள் முதலியவர்களும் அடங்கியவர்கள்தான். இவ்விரண்டு பகுதிகளையும், காங்கிரஸ், தன் கூடவே இழுத்துக் கொண்டு செல்ல விரும்புகிறது. சமஷ்டி திட்டத்தில், பிரிட்டிஷ் இந்தியா வென்றும், சமஸ்தான இந்தியா வென்றும் இரு கூறுகப் பிரிக்கப்பட்டிருப்பதைக் காங்கிரஸ் வெறுக்கிறது. இதனாலேயே, மேற்படி இரண்டு தீர்மானங்களையும் நடு நிலையிலிருந்து செய்திருக்கிறது காங்கிரஸ்.

பாராட்டு

பீஹார், ஐ. மாகாண மந்திரிச் சபை நெருக்கடியைப் பற்றியது மற்றொரு தீர்மானம். இதில், காங்கி

ரஸ், உத்தியோக மேற்றுக் கொண்ட சரித்திரம் சுருக்கமாகக் கூறப் பட்டிருக்கிறது. மாகாணப் பொறுப்பாட்சிக்கு, இந்தத் தீர்மானம் ஓர் அளவு கோல் போன்றிருக்கிறதென்று சொல்லலாம். அரசியல் கைதிகள் மிகச் சொற்பமான பேர் விடுதலை செய்யப் படுதல் வேண்டுமா, வேண்டாமா என்பது முக்கியப் பிரச்னையல்ல. விடுதலை செய்யக் கூடிய அதிகாரம் யாரிடத்தில் இருக்கிற



தென்பதுதான் முக்கியமான பிரச்னை. இதில், காங்கிரஸ், ஒரே உறுதியுடன் தானிருக்கிறது. அந்த உறுதி வெற்றியும் பெற்று விட்ட தென்று நாம் கூறுவோம். நெருக்கடி தீர்ந்து, இரண்டு மாகாணங்களிலும், மந்திரிகள் பதவிகளை மீண்டும் ஏற்றுக் கொண்டதும் அரசியல் கைதிகளை விடுதலை செய்திருக்கின்றனர். இவர்களுடைய விடுதலையினால், தேசத்தை அமைதியின்மை என்ற நெருப்புப் பற்றிக் கொண்டு விடவில்லை. இதனால், கவர்னர்-ஜெனரல் தலையிட்டது எவ்வளவு அநாவசியம் என்பதும், எவ்வளவு ராஜ தந்திர மற்ற செயல் என்பதும் நன்றாகத் தெரிகின்றன. காங்கிரஸ் நிறை[illegible]வேற்றியுள்ள தீர்மானத்திலிருந்து, அது அவசரப் பட்டு எதையும் செய்து விட விரும்பவில்லை யென்பதும், ராஜ தந்திரத்தில் காங்கிரஸிட மிருந்து மற்றவர்கள் பாடங் கற்றுக் கொள்ள வேண்டு மென்பதும் நன்கு வெளியாகும். ஆனால், எப்படியோ இந்த நெருக்கடி சமாஸமாகத் தீர்ந்து விட்டதைக் குறித்து நாம் லார்ட் லின்லித்கௌ, ஸர் மாரிஸ் ஹாலெட் உள்பட எல்லாரையும் பாராட்ட விரும்புகிறோம். கடந்து போன ஒரு விஷயமாகவே இனி, இது கருதப் படவேண்டும்.

ஸ்ரீ ஈடன்

சரித்திரம், தன் ஏட்டைத் திருப்பிப் படிக்க ஆரம்பித் திருக்கிறது. ஸர் ஸாமியல் ஹோர், 1936ம் வருஷம், பிரிட்டிஷ் அரசாங்க யந்திரத்திலிருந்து கழற்றப் பட்டு, வேறோர் இடத்தில் திணிக்கப் பட்டார். 1938ம் வருஷம் ஸ்ரீ ஈடனுக்கும் மேற்படி கதி கிடைத் திருக்கிறது. ஆனால் இவர் வேறோர் இடத்தில் கொண்டு திணிக்கப் படுவாரோ என்னவோ தெரியாது. பால்ட்வினுக்கு இவர் செல்லப் பிள்ளையா யிருந்ததனாலேயே சேம்பர்லேனுக்கும் அப்படித்தான் இருக்க வேண்டுமென்ற நியதி இல்லையே. ஹோருக்கு பிரான்ஸ் காரணமா யிருந்தது. ஈடனுக்கு இத்தலி காரணமா யிருக்கிறது. இந்த ஈடன் ராஜீநாமாவினால், பிரிட்டிஷ் ராஜ தந்திர யந்திரம் சரளமாகச் சுழல வில்லை யென்பது மட்டுமன்று; இத்தலியின் கை வலுவும் நன்றாகத்

தெரிகிறது. இத்தலியையோ, ஜெர்மனியையோ பகைத்துக்கொள்ள பிரிட்டன் விரும்பவில்லை. இத்தலி, மத்தியதரைக் கடலில் எவ்வளவு தொந்திரவு கொடுத்தாலும், ஜெர்மனி, தனது குடியேற்ற நாடுகளைத் திருப்பிப் பெற வேண்டுமென்ற ஆத்திரத்திலே என்ன பேசினாலும், அவற்றையெல்லாம் பிரிட்டன், அலட்சியமாகவே கவனித்துக்கொண்டு வந்திருக்கிறது. ஆனால் இப்படியே விட்டுக்கொண்டு போனால், இதற்கு முடிவு தான் எங்கே என்பது தெரியவில்லை. ஸ்பெயின் விஷயத்தில் எல்லோரும் ஏகோபித்துச் செய்துகொண்ட உடன்படிக்கைப்படி இத்தலி நடந்துகொள்ளவில்லை யென்பது ஈடனின் குறை. ஆனாலும் பாதகமில்லை; அதனோடு சமரஸம் பேசுவோம் என்கிறார் சேம்பர்லேன். எப்படி யிருந்தபோதிலும், ஈடனின் ராஜீநாமா, முஸோலினிக்கு ஒரு வெற்றி என்பதுதான் பலருடைய அபிப்பிராயம்.

மதுவிலக்கின் பயன்

சேலம் ஜில்லாவில் மதுவிலக்குத் திட்டம் எவ்வாறு வேலை செய்கிறதென்பதைப்பற்றி மேற்படி ஜில்லா கலெக்டர் சென்னை அரசாங்கத்திற்கு அனுப்பியுள்ள அறிக்கையை நாம் படித்துப் பார்த்தோம்.

'மூன்று மாத அநுபவத்திற்குப் பிறகு, நான் கருதுவதென்னவென்றால், மதுவிலக்கானது, ஏழை ஜனங்களுக்கு ஒரு வரப்பிரசாதம் போல் அமைந்திருக்கிறதென்பதுதான். மிக வறுமையான வாழ்க்கையை நடத்திக்கொண்டு வந்த இவர்கள் குடிப் பழக்கத்தினால் கொஞ்சநஞ்சம் சம்பாதிக்கிற பணமும்கரைந்து, இவர்களுடையகுடும்பத்தாருடைய ஜீவனத்திற்குக்கூட வகையில்லாமலிருந்தது. குடியானது, அநேக குடும்பங்களில் துயரத்தையே உண்டு பண்ணிக்கொண்டு வந்தது. ஆகாரக் குறைவும், கடன் சுமையும் அதிகரித்துக்கொண்டு வந்தன. ஆனால், மதுவிலக்குத் திட்டம் அமுலுக்கு வந்த பிறகு, ஆயிரக் கணக்கான குடும்பங்களின் நிலைமையே மாறிவிட்டது. குடும்பச் சச்சரவுகள் நின்று விட்டன. போதிய ஆகாரம் ஜனங்களுக்குக் கிடைக்கிறது. கடன் கொடுத்தவர்களுடைய பிடிப்பு தளர்ந்திருக்கிறது. நான்கு மாத காலத்திற்குள்ளே இவ்வளவும் நடை பெற்றிருக்கின்றன'

என்று கலெக்டர் கூறுகிறார். குடிக்க வேண்டாமென்று சொல்வது தனி மனிதனுடைய உரிமையைப் பறி முதல் செய்வதாகுமென்று சொன்ன 'பெரிய மனிதர்' களின் சந்நிதானத்தில் இந்த அறிக்கையைச் சமர்ப்பிக்க விரும்புகிறோம். இந்தச் சந்தர்ப்பத்தில், சித்தூர் ஜில்லாவிலும் கடப்பை ஜில்லாவிலும் 1-10-38-லிருந்து மதுவிலக்குச் சட்டம் அமுலில் வரும் என்று ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் சென்னை வரவு செலவுத் திட்டத்தில் கூறியிருப்பது நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

க்ஷய ரோகம்

1935ம் வருஷத்தில் இந்தியாவில் மொத்தம் 6,578,711 பேர் இறந்திருக்கின்றனர். இவர்களில் க்ஷய ரோகத்தினால் மட்டும் இறந்து போனவர்கள் 5 லட்சம் பேர். இந்தப் பாழான நோய், நாகரிகப் பேய் தாண்டவமாடும் நகரங்களிலேயே அதிகமாகத் தன் அழிவு வேலையைச் செய்து கொண்டிருக்கிறது. இதனை ஒழிக்க, லேடி லின்லித்கௌ எடுத்துக் கொண்டுள்ள நன் முயற்சியில்

எல்லாரும் கலந்துழைக்க வேண்டுமென்று நாம் கேட்டுக் கொள்கிறோம்.

ஞானோதயம்

வங்காள மாகாணத்திலுள்ள மிதுனபுரி ஜில்லாவிலிருக்கும் காங்கிரஸ் ஸ்தாபனங்கள்மீது அநேகவருஷங்களாகத் தடையுத்திரவு பிறப்பிக்கப் பட்டிருந்தது. இஃது இதுகாறும் ரத்து செய்யப்படாமலே இருந்தது. இதைப் பற்றி ஹரிபுரா காங்கிரஸ் கூட ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. இந்தத் தீர்மானத்தைக் கௌரவிக்க வேண்டுமென்ற எண்ணமோ என்னவோ, வங்காள அரசாங்கத்தார், இந்தத் தடை யுத்திரவை ரத்து செய்துவிட்டனர். இந்த அளவுக்காவது ஞானோதயம் பிறந்ததே!

ஸ்ரீ ஜார்ஜ் ஜோஸப்

நமது தோழர் ஸ்ரீ ஜார்ஜ் ஜோஸப் 5-2-38ல் மதுரையில் இறந்துவிட்டதைக் குறித்து வருந்துகிறோம். இந்தியாவின் கோரிக்கைகளை இங்கிலாந்திலுள்ள பொது ஜனங்களுக்கு எடுத்துச் சொல்லிப் பிரசாரஞ் செய்ய முதன் முதலாக 1917ம் வருஷத்தில் ஒரு பிரதிநிதிக் கோஷ்டி புறப்பட்டது. ஸ்ரீமான்கள் பி. வி. நரசிம்மையர், மஞ்சேரி ராமையர், ஜார்ஜ் ஜோஸப் ஆகிய மூவரும் அடங்கியதே இந்தப் பிரதிநிதிக் கோஷ்டி. இவர்களுக்குப் பின்னர்தான் திலகர், பாலர், கெல்கார், கரந்திகார், கபர்தே ஆகிய ஐவர் அடங்கிய கோஷ்டி புறப்பட்டது. இந்த இரண்டு கோஷ்டியினரும் இங்கிலாந்து செல்லவொட்டாமல் வழியிலேயே நிறுத்தப் பட்டு விட்டனர். அந்தக் காலத்தில் ஸ்ரீ ஜோஸப்புக்கு, அரசியல் வாழ்க்கையில் நல்ல செல்வாக்கு உண்டு. இவர் அ. இ. கா. கமிட்டி அங்கத்தினராகவும் 'யங் இந்தியா' பத்திரிகையின் ஆசிரியராகவும் சில காலம் இருந்திருக்கிறார். ஒழுங்கும் ஒழுக்கமுமுடையவர். இவருடைய குடும்பத்தாருக்கு நமது அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஏழு வயது ஆகாத குழந்தையின் ஏழு தேவைகள்

(ஆங்கிலப் பேரறிஞர் பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் கூறியது.)

(1) காற்றும் வெளிச்சமும்.
(2) சரியான வளர்ச்சிக் கேற்ற ஆகாரம்.
(3) ஓடிக் குதித்து விளையாடப் போதுமான இடம்.
(4) மனங் கொண்ட மட்டும் சப்தமிடுவதற்கு உரிமை.
(5) ஒத்த வயதுக் குழந்தையின் தோழமை.
(6) பெற்றோர் கண் காணிப்பிலிருந்து விடுதலை.
(7) தீங்கு விளையாதபடிக்கு விநோதங்கள் நிறைந்த வாசஸ்தலம்.

இவை பெறாத குழந்தைகள் ஆரோக்கியம் குறைந்தவர்களாய், மன உறுதியற்றவராய், எதுவும் செய்யத் துணிவில்லாதவராய் வளர்வது சகஜம்.

அடிமை கொள்ளும் வழக்கம்

—ஏ. ஜே. எப்.

இந்த இருபதாம் நூற்றாண்டில்—நாகரிகம் முதிர்ந்துள்ள 1938-ம் வருஷத்தில்—உலகத்தின் பல பாகங்களிலும் சுமார் ஐம்பது லட்சம் ஜனங்கள் ஆடுமாடுகளைப்போல் விற்கவும் வாங்கவும் படுகிறார்கள் என்று சொன்னால் அஃது எவ்வளவு ஆச்சரியமான விஷயம்? எப்படி காசை வீசியெறிந்து, நமக்கு வேண்டிய சில்லரைச் சாமான்களை வாங்குகிறோமோ அப்படியே மனிதர்களை பேரம் பேசி விலைக்கு வாங்குகிற வழக்கம் சுதந்திரக்கொடி பறக்கிற பல நாடுகளில் இப்பொழுதும் இருக்கிறது. வில்லியம் வில்பர் போர்ஸ் என்பவன், 150 வருஷங்களுக்கு முன்னே, அடிமை வழக்கத்தை ஒழிக்க வேண்டுமென்று பாடுபட்டு ஓரளவு வெற்றியும் பெற்றான். சட்ட புத்தகங்களிலும் அடிமை கொள்ளும் வழக்கம் தண்டனைக்குரிய ஒரு குற்றமாகவே எழுதப் பட்டிருக்கிறது. ஆனால் குழந்தைகளைத் திருடிக்கொண்டு போய் விற்றல், கடனுக்கு மனிதர்களை ஈடுகாட்டல், மனிதர்களையே பணயமாக வைத்துச் சூதாடுதல், வேலை செய்வதற்கென்றே ஆயுள் பரியந்தம் மனிதர்களை அடிமை கொள்ளுதல் முதலிய வழக்கங்கள் இன்னும் பல பாகங்களிலும் காணலாம். சீனாவின் பல இடங்களில் மூன்று வயதுக் குழந்தைகள் மூன்று ரூபாய்க்கும் நான்கு ரூபாய்க்கும் விற்கப்படுகின்றன. இந்தக் குழந்தைகளை வியாபாரிகள் மொத்தமாக வாங்கி ஆடுமாடுகளை வளர்ப்பது போல் வளர்த்து, கொஞ்சம் வயதான பிறகு, பெரிய மனிதர்களுடைய வீடுகளில் வேலை செய்வதற்காக அதிக லாபத்துக்கு விற்று விடுகிறார்கள். எப்படி மூன்று ரூபாய்க்கு ஒரு கன்றுக் குட்டியை வாங்கி அதனைத் தீனி போட்டு வளர்த்துப் பெரிதான பிறகு முப்பது ரூபாய்க்கு விற்று விடுகிறோமோ அப்படித்தான் இந்த அடிமை வியாபாரமும் நடைபெறுகிறது. சீனாவில் இந்த மாதிரி அடிமை கொள்ளப் பெற்றவர்கள் மட்டும் சுமார் இருபது லட்சம் பேர் இருப்பதாகச் சொல்லப் படுகிறது.

ஆப்ரிக்காவின் மேற்குப் பாகத்திலே லிபீரியா என்றொரு பிரதேசம் இருக்கிறது. இந்தப் பிரதேசம், ஆதியில் தென்னமெரிக்காவினின்று, அடிமைத் தளையிலிருந்து விடுவிக்கப் பட்ட நீக்ரோவர்களைக் குடியேற்றுவதற்கென்று பிரத்தியேகப் படுத்தப் பட்டது. இதில் இப்பொழுது சுமார் 10,000 நீக்ரோவர்கள் இருக்கிறார்கள். இவர்கள், லிபீரியாவின் ஆதிக்குடிகளான சுமார் 25 லட்சம் ஜனங்கள் மீது ஆதிக்கம் செலுத்தி, அக்கிரமம் புரிகிறார்கள். பெற்றோர்களே, தங்கள் குழந்தைகளை மார்க்கெட்டிலே கொண்டு விற்கிற காட்சியை இந்த லிபீரியாவில் இன்னும் பார்க்கலாம்.

அபிசீனியாவில் அடிமை வழக்கம் இருந்ததென்றும் ஆனால் இத்தலியின் ஆக்ரமிப்புக்குப் பிறகு சுமார் இருபது லட்சம் அபிசீனியர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்களென்றும் இத்தலியின் சார்பாகப் பறை சாற்றப் பட்டது. ஆனால் உண்மையிலே இவர்கள் விடுதலை பெற்றார்களா என்பது சந்தேகத்திற்கிடமான ஒரு பிரச்னையாகவே இருக்கிறது. இவர்

களில் பெரும்பாலோர் தங்களுடைய பழைய எஜமானர்களுடன் பிணைக்கப் பட்டிருக்கிறார்களென்று தான், அபிசீனியாவை நேரில் போய்ப் பார்த்துச் சமீபத்தில் திரும்பி வந்தவர்கள் சொல்கிறார்கள்!

பர்மாவின் வட பாகங்களில் அடிமை வழக்கம் இருந்த தென்றும், ஸர் ஹார்க்கோர்ட் பட்லர்கவர்னராயிருந்தபோது, 9586 அடிமைகள் விடுதலை செய்யப் பட்டார்களென்றும் ஓர் அறிக்கை கூறுகிறது.

அடிமை வழக்கத்தை ஒழிக்கிற பிரச்னை இன்னும் ஒரு பெரிய சமுதாயப் பிரச்னையாகவே இருக்கிறது. இதற்காக வென்று அல்லும் பகலும் உழைத்து வருகிற பல சீர்திருத்தவாதிகள் ஆங்காங்கு இருக்கிறார்கள். இவர்களுடைய அமைதியான தொண்டை யார்தான் பாராட்டாமலிருக்க முடியும்?

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குட் பட்ட சுமார் இருபது நாடுகளில், இந்த அடிமை வழக்கத்தை ஒழிப்பதற்குத் தீவிரமான வேலைகள் நடைபெறுகின்றன. சிறப்பாக, ஆப்ரிக்கா கண்டத்தின் வட பாகத்திலும், ஆசியா கண்டத்தின் மத்திய பாகத்திலும் இந்தச் சீர்திருத்த வேலை நடைபெறுகிறது. இந்தப் பொது நலத் தொண்டிலே ஈடு பட்டுள்ள அத்தனை பேருக்கும் கடவுள் துணை செய்வாராக!

ஸர் ஹார்கோர்ட் பட்லர்

பர்மாவின் லெப்டினெண்டு கவர்னராக 1915ம் வருஷத்தி லிருந்து 1917ம் வருஷவரையிலும் பின்னர் 1923ம் வருஷத்திலிருந்து 1928ம் வருஷம்வரையில் கவர்னராகவும் இருந்த ஸர் ஹார்கோர்ட் பட்லர் 3—3—1938ல் காலமானார். இவர் 1—8—1869ல் பிறந்தவர். 1890ம் வருஷம் ஐ. சி. எஸ். உத்தியோகஸ்தராக இந்தியாவுக்கு வந்து, வட மேற்கு எல்லைப்புற மாகாணத்தில் முதன் முதலாகப் பதவியை ஏற்றுக் கொண்டார். அதுமுதற் கொண்டு, இவர் உத்தியோக ஏணியில் வெகு சீக்கிரமாக ஏறி மேலுக்கு வந்தார். இந்தியா அரசாங்கத்தின் நிருவாக சபை அங்கத்தினராக ஐந்து வருஷ காலம் வேலை பார்த்தார். பர்மா லெப்டினெண்டு கவர்னர் பதவியைத் திரும்பட வகித்த பிறகு, ஐக்கிய மாகாண கவர்னராக இவர் நியமனம் பெற்று அங்கு ஐந்து வருஷ காலம் கவர்னராயிருந்தார். இந்தக் காலத்தில் பண்டித மோதிலால் நேருவுக்கு ஐக்கிய மாகாணத்தில் அதிகமான செல்வாக்கு. இருவரும் நெருங்கிய நண்பர்களானார்கள். பண்டித நேருவின் 'ஆனந்த பவன்' மாளிகைக்கு ஸர் பட்லர் அடிக்கடி வந்து, பண்டித நேருவின் ஆலோசனைகளைக் கேட்டுச் செல்வார் என்று சொல்வதுண்டு.

ஸர் பட்லர், மற்ற ஐ. சி. எஸ். உத்தியோகஸ்தர்களைப் போலல்லாமல், இந்தியர்களுடைய நியாயமான 'அபிலாஷைகளுக்கு ஆதரவு காட்டி வந்தார். எப்படிப்பட்ட எதிர்ப்புகளையும், தமது புன் சிரிப்பாலும் ஆனால் கண்டிப்பான நடவடிக்கையினாலும் சமாளித்துக் கொண்டு விடுவார்.

அரசாங்க வரவு செலவுத் திட்டங்கள்
1938-ம் வருஷத்திற்கு

பெயர்	உத்தேச வரவு	உத்தேச செலவு	அதிக வரவு
இந்தியா அரசாங்கம்	85,92 ல.ரு	85,83 ல.ரு	+ 9 ல.ரு
சென்னை	15,98,21,000 ரு	15,98,09,000 ரு	+ 12,000 ரு
பர்மா	15,48,33,000 ரு	15,40,29,000 ரு	+ 8,04,000 ரு

இந்த மாதிரியான கேள்வியை, நான் மட்டும் கேட்கிறேனென்று நீங்கள் நினைத்துக் கொள்ளவேண்டாம். லட்சக் கணக்கான மக்களுடைய மனத்திலும் இந்த எண்ணம் இருக்கத்தான் செய்கிறது. சிலர் மட்டுந்தான் வாய்விட்டுச் சொல்கிறார்கள்.

காங்கிரஸ் கட்சியினர் இப்பொழுது ஏழு மாகாணங்களில் மந்திரிப் பதவிகளை ஏற்று நடத்தி வருகிறார்கள். பொதுஜனங்களோ அவர்களிடமிருந்து ஏராளமாக எதிர்பார்க்கிறார்கள். இந்த நிலையில் காந்தியடிகளின் ஆலோசனை நமக்கு எவ்வளவு அவசியமாயிருக்கிறது? இதனாலேயே யன்றோ, பாரத சமுதாயம் முழுவதும், அவர் சீக்கிரத்தில் குணமடைய வேண்டுமென்று பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறது.



காந்தியடிகள்

மகான்களிடத்தில் ஒரு விசேஷ சக்தியுண்டு. அதாவது அவர்கள் நிகழ் காலத்திலே வாழ்ந்து கொண்டிருந்தாலும், எதிர்காலத்திலேயே பார்

வையைச் செலுத்துகிறவர்கள். தம்மினத்தாரை எதிர்காலத்திற்கு அழைத்துச் செல்வதில் முனைந்து நிற்பவர்கள். அன்பு முறையிலே, ஆனால் உறுதியாக, காந்தியைப் போல் நம்மை எதிர்காலத்திற்கு அழைத்துச் செல்கிறவர்கள் இனி யாராயிருப்பர்? எவ்வளவு சங்கடமான கேள்வி? இப்பொழுது காந்தியைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருக்கும் தலைவர் நட்சத்திரங்களெல்லாம், ஒன்றுக்கொன்று மோதிக் கொண்டும் முரண்டிக் கொண்டும், நம்மை நடுச் சந்தியிலே விட்டுவிடுமா? சீனாவிலே, ஸன்-யாட்-ஸென் அகால மரணமடைந்து விட்டான். அவனுக்குப் பின்னால், அந்தத் தேசம் சின்னாபின்னப்பட்டு, இப்பொழுது ஜப்பானுடைய ஏகாதிபத்தியப் பசிக்கு இரையாகிக் கொண்டிருக்கிறது. ருஷ்யாவிலே லெனின் செத்தான். அவனைச்சுற்றியிருந்த கிரகங்களெல்லாம் ஒன்றுக்கொன்று போரிட்டு அழிந்தன. ஒரு கிரகம் மட்டும், அந்த அழிவின் மீது இப்பொழுது ஆதிக்கம் செலுத்தி வருகிறது. நமது நாட்டிலேயும் இப்படியெல்லாம் நேர்ந்து விடுமா?

ஃ ஃ ஃ

இப்பொழுது ஸ்ரீராஜ கோபாலாச்சாரியார், சர்தார் வல்லபாய் படேல், பாபு ராஜேந்திர பிரசாத், பண்டித ஜவஹர்லால் நேரு ஆகிய நட்சத்திரங்கள், காந்தியென்னும் சூரியனுடைய ஒளியில் மூழ்கியிருக்கின்றன. எம். என். ராய் என்ற ஒரு சிறிய நட்சத்திரம் இப்பொழுதுதான் உச்சிவானிலே ஏறப் பார்க்கிறது. இந்த நட்சத்திரங்களில் ஏதாவது ஒன்றுதான் சூரியனாக முடியும்? இரண்டு சூரியர்கள் ஒரே சமயத்தில் பிரகாசிக்க முடியாதல்லவா? அப்படி பிரகாசிக்கத் தொடங்கினால் நாம் எரிந்து போய் விட வேண்டியதுதான்!

அதிருஷ்ட வசமாக, மேலே சொன்ன தலைவர்கள், ஒரு குருவினிடத்தில் பாடம் படிக்கிற சிஷ்யர்களைப் போல் இருக்கிறார்கள். இந்தச் சிஷ்ய கோஷ்டியின் மும் மூர்த்திகளென்று படேல், ராஜகோபாலாச்சாரி, ராஜேந்திர பிரசாத் ஆகிய மூன்று பேரையும் சொல்ல வேண்டும். பண்டித நேருவை, இந்த உள் கோஷ்டியில் சேர்த்துச் சொல்ல முடியா விட்டாலும், ஒரு தனிக் கோஷ்டியாக இருந்து வேலை செய்யக் கூடியவர் என்பதையும், மேற்படி மும்மூர்த்திகளும் இவருக்குத் தனி மதிப்புக் கொடுத்திருக்கிறார்களென்பதையும் நாம் மறந்து விடக் கூடாது. இந்த நான்கு பேரடங்கிய சிஷ்ய பரம்பரைக்குச் சிறிது புறம்பானவர், எம். என். ராய். ஆனால் இப்பொழுது தான், இந்த நட்சத்திரம் இந்திய அரசியல் வானத்திலே தோன்ற ஆரம்பித்திருக்கிறது.

ஃ ஃ ஃ

இந்தச் சிஷ்ய பரம்பரையினரை ஒவ்வொருவராகச் சிறிது பரீட்சை செய்து பார்க்கலாம். இவர்களில் அதி சூட்சுமமான அறிவு படைத்தவர் நமது தமிழ் நாட்டுப் பேர்வழி. வாதத்திலே மகா நிபுணர்; தம் கட்சியை எடுத்துச் சொல்லுவதிலே சமர்த்தர்; எதிர்க் கட்சியினர், எந்தச் சமயத்திலே வந்து தாக்குவர் என்பதை மோப்பம் பிடிப்பது போல் அறிந்து, அதற்காக முன் கூட்டியே சந்நாகங்களைச் செய்து வைக்கிறவர்; எதிரிகள் வீசும் வலையிலே எளிதில் சிக்காதவர். 'ஆழ்ந்த கொள்ளி' என்பார்களே, அப்படித்தான் ராஜ கோபாலாச்சாரியாரைச் சொல்ல வேண்டும். கூர்மையான அறிவு



ச. ராஜகோபாலாச்சாரியார்.

படைத்தவர்களும் இவரைக் கண்டு பயப்படுகிறார்கள், ஏன்? இவர் கூர்மையான அறிவு படைத்தவர். அம்புக்கு விஷந்தடவிப் பிரயோகம் செய்வார்களே அதுபோல், எதிர்க் கட்சியினரை மடக்கிப் பேசுகிற போது அதில் கொஞ்சம் விகடத்தையும் கலந்து விடுகிறார். தவிர, இவருடைய கறுப்புக் கண்ணாடியின் கீழுள்ள கண்கள், யாரைப் பார்க்கின்றன என்பது தெரிவதேயில்லை. இந்த நகைச்சுவை கலந்த பேச்சும், கறுப்புக் கண்ணாடிக்குள்ளேயிருந்து பார்க்கும் பார்வையும் இவருடைய பெருமையை அதிகப் படுத்துகின்றன. ஆனால் இவ்விரண்டையும் கண்டு,

பலருக்கு இவரிடத்தில் ஓர் அச்சமும் ஏற்படுகிறது. எப்பொழுது நம் மீது பாய்வார் என்பது நமக்குத் தெரியாது. இவர், எந்தக் கட்சியிலும் சேராமல் வளைந்து கொடுத்துக் கொண்டிருக்கும் பேர் வழிகளை நேராக நிமிர்த்தி வைப்பார். தமது கட்சியில் சேர்ந்தவர்களை திடசாலிகளாக்குவார். எதிராளிகள் இவரைக்கண்டு அஞ்சுவதில் அல்லது வெறுப்புக் காட்டுவதில் என்ன ஆச்சரியம்? பொதுவாகச் சொல்லப் போனால், காந்தியினுடைய கொள்கையின் சிறந்த வியாக்கியான புஸ்தகம் என்று இவரைச் சொல்லலாம்.

ஃ ஃ ஃ

அடுத்தது சர்தார் வல்லபாயை எடுத்துக் கொள்வோம். இவர் ஒரு தளகர்த்தன். முன்னே முடுகிச் செல்லக் கால்களும், சண்டைபோடக் கைகளும், எதிரியை அறை கூவியழைக்க வாயும் இவருக்கு இருக்கின்றன. ஏனென்றால் எப்பொழுதும் இவர் யுத்த சந்நத்தராகவே இருக்கிறார். எதனையும், அநுபவ சாத்தியமா என்ற தராசில் வைத்து நிறுத்துப் பார்ப்பவர். இதனால் மனிதர்களை எடை போட்டுப் பார்ப்பதிலே மகா நிபுணராயிருக்கிறார். இவருக்கு ஒரு போர் முனையைக் காட்டி விடுங்கள்; அங்கே இன்னது செய்ய வேண்டும் என்று சொல்லி விடுங்கள்; அவ்வளவு தான். மற்றவற்றை அவர் பார்த்துக் கொள்வார். எதிரிகள் எந்த மாதிரியான நிலத்திலிருந்து சண்டை போடுகிறார்கள், அவர்கள் எப்படிப் பட்டவர்கள் என்பதையெல்லாம் சுலபமாகச் சொல்லி விடுவார். அப்படிச் சொல்கிற போது கூட, ஒரு உத்வேகத்தோடு, ஆக்ரோஷத்தோடுதான் சொல்வார். இன்னின்னமாதிரி யுத்தஞ்செய்ய வேண்டுமென்று சொல்லி விட்டு அந்த வரம்புக்குள்ளேயிருந்து சண்டை போடுவதில் இவர் சிறந்த சர்தார்தான். அபேதவாதிகள், இவரை விரும்புகிறார்களில்லை. ஏனென்றால், இவர், அவர்களை 'பகற் கனவு காண்பவர்கள்' என்று கருதியே பேசுகிறாரல்லவா?

ஆனால், சர்தாருக்கு அகில இந்தியத் தலைவர் என்ற பெயர் வந்து விட்டாலும், மாகாண திருஷ்டி தான் இருக்கிறது. இவரால் ஒரு தோப்பிலுள்ள மரங்களைக் கணக்கிட்டுத் தான் பார்க்க முடியுமே தவிர, அந்தத் தோப்பைப்பொதுப் படையாக இவரால் பார்க்க முடியாது. இதனால் அநேக சமயங்களில் தோப்



சர்தார் வல்லபாய் பட்டேல்

பை மறந்து மரங்களிலே தம்மை ஒப்புக் கொடுத்து விடுவார். அடுத்து வரப்போவது இன்னது என்பதை இவரால் பார்க்க முடிகிறது. அப்படி வந்தால் அதனை எதிர்த்து நிற்கவும், அணைத்துச் செல்லவும் ஆற்றல் இவரிடத்தில் இருக்கிறது. ஆனால் ஒரே சமயத்தில் பல சம்பவங்கள் நேர்ந்து விட்டால் கொஞ்சம் திகைத்துப் போய் விடுகிறார். இதற்குக் காரணம் என்னவென்றால், இவர் மனிதர்களைக் கவனிக்கிறாரே தவிர, அந்த மனிதர்களைக் கொண்டு சேர்ப்பித்திருக்கும் சம்பவங்களைக் கவனிப்பதில்லை. ஒரு தளகர்த்தனுடைய வேலையும் இதுதானே. தமது தலைவருடைய அடிச் சுவடுகளை இவர் சிறிது கூடப் பிசகாமல் பின்பற்றி வந்திருக்கிறார் இது வரையில். அவருக்குப் பிறகு, இவர் யாரைப் பின் பற்றுவார்? அப்பொழுது ஏற்படுகிற சந்தர்ப்பத்தைப் பொறுத்திருக்கிறது. போதும்! ஆனால் போர்க்களத்தைக் காட்டிக் கொடுத்து விட்டால் அதில் போராட எப்பொழுதும் இவர் தயார். அபேதவாதிகள், இவருடைய இலக்குக்கு அகப்பட்டுக் கொள்ளாமலிருப்பார்களாக!

ஃ ஃ ஃ

ராஜேந்திர பிரசாத், காந்தியின் இதயமும், ராஜகோபாலாச்சாரியாரின் விழிப்பும், படேலின் தைரியமும் ஒருங்கே படைத்தவர். எளியர்; சாத்விக சுபாவமுடையவர். இவரிடத்தில் அன்பும் அருளும் பொங்கி வழிகின்றன. யார் வேண்டுமானாலும் அதனைப் பருகலாம். பொறாமை, கட்சி, போட்டி முதலியவைகளுக்கெல்லாம் அப்புறப் பட்டவர். எல்லாரும் இவரிடத்தில் மரியாதை செலுத்துகிறார்கள். யாரும் இவரைக் கண்டு பயப்படுவதில்லை. இவர் சொல்வதை யாரும் காது கொடுத்துக்கேட்கிறார்கள். பெரிய வக்கீலானபடியால், தம் கட்சியைச்சுருக்கமாகவும் நுணுக்கமாகவும் எடுத்துச்சொல்வார். உள்ளதை உள்ளபடியே பேசும் சுபாவ முடையவராதலால், இவரிடத்தில் எல்லாருக்கும் ஒரு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது.

பாபு ராஜேந்திர பிரசாத்

ஆனால் ராஜேந்திரர் உடல் நலம் இல்லாதவர். எதிர் காலத்தில் ஏற்படக்கூடிய பல சிக்கலான பிரச்னைகளுக்கு ஈடு கொடுத்து உழைக்க இவரால் முடியுமா? ஆலோசனை கூறுவதில் இவர் மகா சமர்த்தர். ஆனால் ஒரு காரியத்தைத்தொடங்கி, அதனைத் தொடர்ந்து நடத்த இவரால் முடியுமா? இவரால் ஒரு கட்சிசேர்க்க இயலுமா?

ஃ ஃ ஃ

பண்டித ஜவஹர்லால் நேரு ஒரு பெரிய புயற்காற்று. இவர்தான் இந்தியாவின் வருங்கால புருஷனா என்று பலரும் கேட்கிறார்கள். அப்படி பலருடைய சிந்தையிலும் இவர் நிறைந்திருப்பதே இவருடைய எதிர்கால வாழ்வுக்கு நல்ல சகுனந்தான். இவர் முன்னுக்கு வருவதற்குப் பல சௌகரியங்கள் இவருக்கு உடந்தையாயிருந்தன. பிறப்பு, படிப்பு, செல்வம், மேல்நோக்கிய பார்வை எல்லாம் இவருக்குச்சாதகமாக இருந்தன. மற்றும், இங்கிலீஷ் பாஷையிலும் ஹிந்தி பாஷையிலும் இவர் பெற்றிருக்கும் புலமை, இவருடைய கொள்கைகளைச் சரியானபடி பிரசாரஞ் செய்யத் துணை செய்து வருகின்றன. இவருடைய எண்ணங்கள் சிறந்தவை. அதனால் இவர் சிறந்தவரா யிருக்கிறார். அந்த எண்ணங்களை முற்றுவிக்க வேண்டுமென்ற ஆவலும் இவரிடத்தில் நிரம்பியிருக்கிறது. இவருக்கு மாகாணப் பார்வையே கிடையாது. உலகத்துப் பிரஜையாகவே இவர் இருக்கிறார். இப்பொழுதுள்ள எல்லாத் தலைவர்களைக் காட்டிலும் இவருக்குத்தான் உரமான உடலும், உறுதியான உள்ளமும் இருக்கின்றன. இவரைக் கண்டால் பலருக்கு அச்சம். ஆனால் எல்லாருக்கும் இவரிடத்தில் நம்பிக்கை. ஏனென்றால் இவரிடத்தில் தன்னம்பிக்கையோடு கூடிய அதிகார பலம் இருக்கிறது. பாரத சமுதாயத்தின் மத்தியிலே, காந்திக்கு அடுத்தபடியாக இவருக்குத்தான் அதிகமான செல்வாக்கு இருக்கிறது. ஜவஹர் காந்தியினிடத்தில் தமது இதயத்தை ஒப்புக்கொடுத்திருப்பது போல் அறிவை ஒப்புக்கொடுத்திருக்கிறாரா என்பது ஒரு சந்தேகப் பிரச்னையாகவே இருக்கிறதானாலும், தமக்குப் பின்னால் இவர்தான் தலைமைப் பதவிக்கு வரக்கூடியவரென்று காந்தி கூட கருதுவதாகச் சொல்கிறார்கள்.

ஜவஹர் விஷயத்தில் எல்லாருக்கும் ஒரு கவலை. ஜன சமூகத்தின் மத்தியிலே திடீர் திடீரென்று ஒரு வஜ்ராயுதத்தை எறிகிறார். இதனால் நன்மை உண்டாகாமல் இல்லை. உணர்ச்சியற்றவர்களும் உணர்ச்சி பெறுகிறார்களல்லவா? ஆனால் ஜவஹருக்கு, புரட்சியை உண்டு பண்ணத் தெரியுமே யொழிய அதனை நடத்திச் செல்லத் தெரியுமாவென்பது கேள்வி. அப்படித் தெரிந்தாலும் அவரால் முடியுமா வென்பது அடுத்த கேள்வி. இவர் எப்பொழுதும் சரியான பாதையில் தான் போய் நிற்கிறார். ஆனால் அங்குப் போய் நின்று கொண்டு, மற்றவர்களும் தொடர்ந்து பின்னால் வருகிறார்களாவென்று பார்க்கும் பொறுமை இவருக்கு இல்லை. தான் மட்டும் ஓட ஆரம்பிக்கிறார். வருங்காலத்தில், தேசீயத்திலே அபேதவாதத்தைக் கொண்டு புகுத்தும் பொறுப்பு இவருடையது தான் என்று சொல்கிறார்கள். அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளக் கூடிய சக்தி இவரிடத்தில் இருக்கிறது. ஆனால் அந்தச் சக்தியைச் சரியாக உபயோகப் படுத்த வேண்டுமென்பதுதான் நமது பிரார்த்தனை. ஒரு நெருக்கடியிலே தைரியமாக

இருக்கப் பண்டிதருக்கு நன்ருகத் தெரியும். ஆனால் ஒரு புயற் காற்றடிக்கிற போது, அதனை அமைதியாக இருந்து சமாளிக்க முடியுமாவென்பதுதான் சந்தேகம்.

மற்றும், பண்டித ஜவஹர்லால் நேரு ஒரு பெரிய தலைவர் தான்; அவரை ஜனங்கள் பின்பற்றுகிருர்கள் என்பதும் உண்மைதான். ஆனால் அவருக்கென்று ஒரு கட்சியில்லையே. கட்சிகளுக்கு மேற்பட்டவராக இருப்பது நல்லதுதான். ஆனால் ஒரு கட்சியின் உள் அந்தரங்கங்களையெல்லாம் ஒரு தலைவர் தெரிந்துகொண்டிருக்க வேண்டாமா? பண்டிதர், தான் என்பதை மறந்தவர். மனிதர் மீது மனிதருக்கு இருக்க வேண்டிய பாசமோ பற்ருே அவருக்குக் கிடையாது. அவரோடு நீங்கள் யுகக்கணக்காக வாழ்ந்துகொண்டிருக்கலாம். உங்களுடைய பூர்வோத்திரங்களைத் தெரிந்துகொள்ளவோ, உங்களுடைய சுபாவம் இன்னது என்பதை அறிந்துகொள்ளவோ அவர் சிறிதுகூட ஆவல் கொள்ள மாட்டார். அவரைப் போல் நீங்களும் ஒரு தேசத்தொண்டன் என்ற அளவோடுதான் உங்களுடன் பழகுவார். இதனால் அவர் காந்தியினிடத்திலிருந்து முக்கியமாகக் கற்றுக்கொள்ள வேண்டியது, முக்கியத்துவம் பெருத விஷயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய பாடந்தான். காந்தியை நாம் ஏன் பெரியவரென்று கைகூப்பி வணங்குகிருேம்? மஹான் என்ற ஒரு காரணத்திற்காக மட்டுமன்று. அவர் நம்மிடத்தில் காட்டும் பரிவுக்குப் பதில் காணிக்கையாக அவரிடம்



பண்டித ஜவஹர்லால் நேரு

பக்தி செலுத்துகிறோம். அவர், உடல் நோயாயிருக்கிறார் என்று தெரிந்தால் நம்மையறியாமலே நமது கண்களில் நீர் வடிய ஆரம்பிக்கிறது. ஆகையால், பண்டித நேரு, தம்மைச் சுற்றியிருப்பவர்களை, அன்புப் பாசத்தினால் தம் பக்கம் அணைத்துக் கொள்ளவேண்டும். பண்டிதர், தமது பதவியின் பொறுப்பை நன்கு உணர்கிறார். அதனைக் கண்டிப்பாக நடத்தவும் செய்கிறார். ஆனால் இவர் ஓர் ஆசிரமத்தில் வசித்துத் தம் உள்ளத்தைப் பக்குவப்படுத்திக்கொள்ளவில்லை.

ஃ ஃ ஃ

இந்திய அரசியல் வானத்தில் இப்பொழுதுதான் ஒளிவிட ஆரம்பித்திருக்கும் எம். என். ராய், தம் கைக்கு ஏதேனும் ஒரு கட்சி அகப்படாதா என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். இவரை இந்தியாவின் ஸ்டாலின் என்றும் அதிபதியாக இருந்து ஒரு ஸ்தாபனத்தை நடத்திச் செல்லக்கூடிய சாமர்த்தியம் இவரிடத்தில் இருக்கிறது என்றும் சொல்லிக்கொள்கிறார்கள். இவருக்கு ராஜதந்திரம் இன்னது என்பது தெரியுமோ தெரியாதோ அது தெரியாது. ஆனால் இப்பொழுதுள்ள தலைவர்களில் இவர் நிரம்ப ஆழமான பேர்வழி என்று சொல்லப்படுகிறது. ஜவஹர்லால் நேருவும், இவரும் ஒரே மேடையில் எதிருக் கெதிராக ஏறி நிற்கக்கூடிய காலம் அதிக தூரத்தில் இல்லை என்பது ஒரு சிலருடைய அபிப்பிராயம். ராய்க்கு, ஒரு புயற்காற்றைக் கிளப்பிவிட சாமர்த்தியமில்லையானாலும் கிளம்பிய புயற் காற்றைத் தம் பக்கம் இழுத்துச் செல்லக்கூடிய சக்தி பெற்றவர் என்கிறார் சிலர்.

எப்படியிருந்த போதிலும் இந்தியாவின் எதிர்காலத் தலைவருக்கு காந்தியின் மனமும், ராஜகோபாலாச்சாரியாரின் அறிவும், படேலின் போராடுந்திறனும், ராஜேந்திரரின் இனிமை கலந்த எளிமையும், ஜவஹர்லால்நேருவின் சலியா உழைப்பும், ராயின் ஆழ்ந்த சிந்தனா சக்தியும் ஒன்று கூடியிருத்தல் வேண்டும்.'

அப்படிப்பட்ட தலைவர் யார்?

ஸர் பிரபாசங்கர பட்டாணி

தும்பைப் புஷ்பம் போன்ற தாடி; எப்பொழுதும் சிரித்த முகம்; 76 வயதுக் கிழவர். ஸர் பிரபா சங்கர பட்டாணி 17-2-38ல் இறந்து விட்டார். சமஸ்தான இந்தியாவிலே உத்தியோகம் பார்த்தார், ஆனால் பிரிட்டிஷ் இந்தியாவிலே அதிக மதிப்புடையவராக இருந்தார். மகாத்மா காந்திக்கு உற்ற நண்பர்.

இவர் 1862ம் வருஷம் பவ நகர் சமஸ்தானத்திலே பல சிறப்பட்ட பொறுப்பான உத்தியோகங்களை வகித்தவர். பின்னர் எட்டு வருஷ காலம், பம்பாய் அரசாங்க நிருவாக சபை அங்கத்தினராகவும் இந்தியா சட்ட சபை அங்கத்தினராகவும் இருந்தார். மறுபடியும் பவ நகர் சமஸ்தானத்திற்குச் சென்று சுமார் 11 வருஷ காலம் ரீஜெண்டாக இருந்து சமஸ்தான நிருவாகத்தை ஒழுங்கு பட அமைத்துத் திறம்பட நடத்தினார், வட்டமேஜை மகா நாட்டுக்கு இரண்டு முறை பிரதிநிதியாகச் சென்றிருக்கிறார். சர்வ தேச சங்கத்திலும் இந்தியா அரசாங்கத்தின் பிரதிநிதியாகச் சென்றிருக்கிறார்.

காந்தியடிகளின் தண்டி உப்பு சத்தியாக்கிரக யாத்திரை காலத்திலும், உண்ணாவிரத காலத்திலும் இவர் கூடவே இருந்தவர் என்பது, இவருக்கும் காந்தியடிகளுக்கும் இருந்த தொடர்பை நன்கு விளக்கும்.

இரு பெரு இறவா நாடுகள்

—எஸ். எஸ்.

சீனாவுக்கு ஒரு துன்பம் நேரிட்டால், இந்தியாவுக்கு அதனிடத்தில் இயற்கையாகவே ஓர் அநுதாபம் உண்டாகிறது. ஏனென்றால் இந்த இரண்டு நாடுகளும் ஆயிரக் கணக்கான வருஷங்களாக நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தன. நாகரிகத்திலும், கலை ஞானத்திலும் ஒரு காலத்தில் மிகச் சிறப்புற்றிருந்த இந்த இரு பெரிய நாடுகளும் இப்பொழுது ஏன் இந்த நிலையில் இருககின்றன என்பதற்கு இந்தக் கட்டுரையில், கதைரூபமாக ஒரு காரணம் கூறப்படுகிறது. இதனின்றும் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் பல.

மனித அறிவின் வைகறையிலேயும் கூட பாரத தேசமும் சீன தேசமும் ஓங்கி யிருந்ததாகவே காணப்படுகின்றன. கிறிஸ்து சகாப்த ஆரம்பத்திற்குச் சில நூற்றாண்டுகள் முந்தியும் பிந்தியும் அவை அடைந்திருந்த உயர் நிலையைச் சரித்திர வழியில் ஒத்திட்டுப் பார்க்கலாம். ஞானத்தையே முக்கிய மென்றெண்ணி, அதன் நுட்பங்களில் ஈடுபட்டு, இவ்வுலக வாழ்க்கை வெறுக்கத்தக்கது, பரலோகம் ஒன்றே பெறத்தக்கது எனக் கருதியது ஒரு தேசம்; மற்றொன்று இவ்வுலக இன்பத்தை வளர்ப்பதே பெரிதெனக் கருதி, பல கலைகளில் நன்கு பயின்று, பொருள் ஞானத்தையும் செய்கைத் திறனையும் தம்முள் பெருக்கிக் கொண்டு பரலோகத்தைப் பற்றி அசட்டையா யிருந்து வந்தது.

தாழ்மை யுற்ற காரணம்

இவ்விரு தேசங்களும் இப்படி வெவ்வேறு நோக்கம் கொண்டிருப்பினும் ஆதிகாலம் தொட்டு ஒன்றை மற்றொன்று கண்ணியமாகவே நோக்கி வந்தது; ஒன்றை யொன்று விழுங்க முயலவில்லை. இருந்தாலும் இரு நாட்டினர்க்குள் பொதுவாக ஒரு எண்ணம் பரவி வந்தது. அதாவது தனி ஆள் ஒருவன் பொதுநலத்தினும் தன்னலத்தை அதிகமாக நாடுவது ஒரு பிழை யன்று என்பதே யாகும். பிற்காலங்களில் இவ்விரு தேசங்கள் வரவரத் தாழ்மை யுற்றதற்கு இத்தகைய எண்ணமே முக்கிய காரணமாயிருந்தது. எப்படி என்றால்:—

பாரத தேசத்தில் உலக வாழ்க்கையை வெறுத்து அதினின்று விலகின ஞானிகளுக்கும் அவ்வாழ்க்கையைவிட வொண்ணாத பொதுஜனங்களுக்கும் நெருங்கிய சம்பந்தம் ஏற்பட்டு இவ்வுலகில் மேலோங்கி நிற்க இடமில்லாமற் போயிற்று. பாமர ஜனங்கள் எப்படியாவது போகட்டும், தம்மட்டில் நற்கதி கிடைத்தால் போதுமென்று முயன்று வந்தார்கள் ஞானிகள். சாமான்ய ஜனங்கள் அவர்களைப் பெரியோர்களெனப் புகழ்ந்தார்களானாலும் தம்மால் அவர்களைப் பின் தொடர இயலாதெென உணர்ந்தார்கள். இது போலவே சீன தேசத்திலும் தத்தம் சுகபோகங்களை நாடிய பிரபுக்களுக்கும் சாமான்ய ஜீவனம் செய்து வரும் பொதுஜனங்களுக்கும் ஒற்றுமை ஏற்படாதது மாத்திரமேயன்றி இருவருக்கும் பொறாமையும் கூட ஏற்பட்டது.

இப்படி ஜனங்களுக்குள் பிளவுண்ட இவ்விரு நாடுகளும் நாளுக்கு நாள் தாழ்வுற்று வந்தது அதிசயமில்லை. இந்நிலையிலுங்கூட நுண்ணறிவுடைய

தலைவர்கள் அவைகளில் ஆங்காங்கு தோன்றியதுதான் அதிசயம். அத்தலைவர்களிடத்தில் விரிந்த எண்ணங்களும் குறுகிய நோக்கங்களும் ஒன்றாய்க் குவிந்து கிடந்தன. கீழ் வரும் பூர்வ கதையொன்று அதை ஒருவாறு விளக்கிக் காட்டும்.

அமர கல்பம்

சீன தேசத்தைச் சேர்ந்த ஓர் மாகாணத்தில் யாங்ட்ஸி நதி யோரமாகப் பெரியதோர் காடு. சூரிய வெப்பமும் நீர்ப்பெருக்கும் ஒன்றுகூடி உண்டாக்கும் செடி கொடிகளின் பசுமை எங்கும் பரவியிருந்தது. பல நூற்றாண்டுகளாக ஓங்கி வளர்ந்த மரங்களின் அடர்த்தியினால் இருளும், நிழலும், ஒளியும் ஆங்காங்கு விரவிக் கிடந்தன.

நதிக்குச் சற்று தூரத்தில் ஓர் பர்ணசாலை. அதைச் சூழ்ந்த நந்தவனமொன்றில் புஷ்பங்கள் நக்ஷத்திரங்களைப் போலே சூரிய ஒளிக்கு அஞ்சவில்லை. பின்னும் அதிக மேனியோடு காலை வெய்யிலில் திகழ்ந்தன. இம் மலர்களின் நறுமணத்தைச் சுமந்த காற்று பல்லாயிரம் பட்சிகளின் இன்னொலியை எங்கும் பரப்பி வந்தது. விரிந்த புல் தரைகளில் ஆநிரைகள் யதேச்சையாய் மேய்ந்தன. பசுக் கன்றுகளும் மான் குட்டிகளும் களி கொண்டு துள்ளி விளையாடின. சிங்கம் புலி கரடிகள் வாழும் இவ்வனாந்தரத்தில் குற்றம் மற்ற இக்கால் நடைகள் பயமின்றி நடமாடுவதைக் காண்போர் அப்பர்ண சாலையில் ஓர் மகரிஷி வாசம் செய்வதை எளிதில் ஊகிக்கலாம். அங்கெழுந்த ஓமப் புகையும் வேத ஒலியும் அந்த ஊகத்தை வலியுறுத்தின.

பராக்கிரமமும், பெரும் புகழும் பெற்ற அரசனொருவன் அப்பண்டைக் காலத்தில் சீனத்தை ஆண்டு வந்தான். அவன் பல கலைகள் கற்றவன். நல்ல ஆட்சித் திறனுடையவன். எனினும் அவனுக்குச் சற்று அவசர புத்தி. முன் பின் தெரியாத விஷயங்களில் யோசிக்காது தலையிடுவான். தன் பிரிய நோக்கத்துக்கு ஒத்தவாறு எவனாவது பேசுவானாகில் அவன் சொல்லெல்லாம் வேத வாக்கியம் போலாகும்.

சம்பாஷணை

அவ்வரசன் ஒரு நாள் யாங்ட்ஸி நதிக் கரையில் வசித்த பாரத நாட்டு ஞானியோடு அளவளாவி வருகையில், 'ஆஹா! அரசன் முயன்றால் குடிகளுக்கு எவ்வளவு நன்மை செய்ய முடிகிறது! நாட்டைச் செழிக்கச்செய்யலாம்; நோய்களை யொழிக்கலாம்; கல்வியை வளர்க்கலாம்; நெறிப்படி எதையும் ஒழுங்கு படுத்தலாம்; இன்னும் பல செய்து அவர்களை இன்புறச் செய்யலாம்' என்றான் குங்-சீ என்ற அச்சீன அரசன்.

'உண்மைதான். ஆனால் வெகு சில அரசர்களே அப்படிச் செய்வதின் பெருமைமையை உணர்கிறார்கள். மற்றவர்கள் தமது சுகபோகங்களிலேயே கவனத்தைச் செலுத்தி, நிலைபெற்ற பேரின்பத்திற்குப் பாடுபடுவதில்லை' என்றார் விருக்ஷி என்னும் ஞானி.

குங்-சீ—அரசர்கள் அல்பாயுஸ்களாயுள்ள வரை தமக்குள்ள சில வருஷங்களைச் சிற்றின்பங்களில் கழிப்பது தப்பிதமன்று என அவர்களுக்குத் தோன்றுவது சகஜந்தானே.

விருக்ஷி-தமக்குள்ளது சில வருஷங்களே யாகையால் பேரின்பம் பெறுவதற்கு அவர்கள் நெறி பிறழாதிருக்க வேண்டிய காலமும் சொற்பமல்லவா? அதனால் அற்பாயுள் பெற்றிருப்பது நமக்கோர் நன்மையேயாகும்.

குங்-சீ—இருக்கலாம். ஆனால் சிற்றின்பங்கள் மனதை வெகு பலமாகக் கவர்கின்றன. ஆதலால் தமக்குள்ள சொற்பநாட்களை இவற்றின் அநுபவத்தில் கழிப்பது அவர்கள் பிழையன்று. மனிதர்களைச் சிரஞ்சீவிகளாகச் செய்துவிடுவோமானால், உமது நாட்டு மார்க்கண்டேயரைப் போலே இளமைப் பருவம் சீக்கிரத்தில் அற்றுப்போகாது. மனமும் சுலபமாய் அவைகளுக்கு அடிமைப் படாது. ஆதலால் இவ்வமரகல்பம்—அதாவது இறவாமைக்கு மருந்தைத் தேடிக்கண்டுபிடிப்பது பெரியோர் கடனாகும்.

விகுக்ஷி—பிறப்பவன் இறப்பான் என்பதுதான் இவ்வுலக தர்மம். மார்க்கண்டேயரின் இயல்பு வேறுபட்டதாயிருக்கலாம். நாள் தவறாது பசி தாகங்களோடிருக்கும் ஒவ்வொருவனும் இங்கு இறந்தே தீரவேண்டும். அது பொது விதி.

குங்-சீ—இப்பொழுது விதி, அரசர்களைப் பொறுத்தமட்டிலாவது மாற்றப்படவேண்டும். என்னைப்பொறுத்தமட்டில் அதை மாற்றப் பெருமுயற்சி செய்யப்போகிறேன். அப்பொழுது சிற்றின்பங்களை அவசரப்பட்டு அநுபவிக்க முயலாது குடிகளின் நன்மைக்கு உழைத்தல் சாத்தியமாகும்.

விகுக்ஷி— சிரஞ்சீவிகளாய் விட்டால் மற்றவர்களுக்காகப் பாடுபடுவோம் என்ற பேச்சு அவ்வளவு நிச்சயமன்று. அது போகிறது. அமரகல்பம் என்பது என்ன? அதை எப்படிச் செய்கிறது?

குங்-சீ—ஆச்சரியமான சக்திகளை ஔஷதாதிகளில் காண்கிறோம். ஔஷதங்கள் நோய்களைப் போக்குவது மாத்திரமன்றி ஜீவ சத்துக்கு புஷ்டியளிக்கின்றன. சரியான வழியில் ஓஷதிகளைப் பரிசோதித்து வந்தால் அவைகளில் அமரத்துவ சக்தியும் இருப்பதைக் காணலாம் என்பது என் துணிபு.

விகுக்ஷி—அது எப்படி இருந்தாலும் உலக வாழ்க்கையை வெறுக்கும் ஞானிகள் இதில் மனம் செலுத்த இசையார்கள்.

குங்-சீ-ரஸாயன விற்பன்னர்களான வைத்தியோத்தமர்களைக் கொண்டு இதைக் கண்டு பிடிக்க எண்ணுகிறேன். பல நாடுகளிலிருந்து அவர்களை வரவழைத்து இதில் ஈடுபடச் செய்வேன். இக் கல்பம் கை கூடுமாயின் நான் முற் கூறிய நன்மைகளை விடப் பன் மடங்கு அதிக நன்மைகளைச் செய்து குடிகளை இன்புறச் செய்வேன். தாங்களே அதைக் கண்டு களிப்பீர்கள். நான் போய் வருகிறேன். நமஸ்காரம்.

விகுக்ஷி-உமது நோக்கம் மிக உயர்ந்ததேயாகும். அது கை கூடுவது பற்றி என்னால் கூற முடியாது. உமக்குச் சுபமுண்டாகுக. தெய்வம் கிருபை செய்யும். போய் வாரும்.

மந்திரவாதியின் தந்திரம்

மேற் கூறிய சம்பாஷணை நடந்த சில நாட்களுக்கெல்லாம் குங்-சீயின் சபைக்கு 'மணி மந்திரௌஷத சிகாமணி' என்ற பட்டம் பெற்ற மந்திரவாதியொருவன் வந்தான். அரசனுடைய நோக்கத்தையும் இயல்பையும் வெகு சீக்கிரத்தில் அறிந்து கொண்டு, தான் பெரியதோர் கல்பம் தயாரித்திருப்பதாக அரசனிடம் விண்ணப்பித்தான். ஆயிரக்கணக்கான வருஷங்கள் ஜீவிக்கும் திமிங்கிலம் போன்ற ஜல ஜந்துக்களின் சத்தைக் கொண்டும் தன் மந்திர சக்தியைக் கொண்டும் ஓர் வகைப்பானகம் செய்திருப்பதாகச் சொன்னான். அதற்கு அமிர்தத்தின் தன்மையுண்டென்றும், அதை முற்றும் எவனோ

ருவன் அருந்துகிறானோ அவனுக்கு மரண பயமில்லையென்றும் தெரிவித்தான். அதன் விலை அபரிமிதமாகையால் அதை ராஜாக்கள்தான் பெறக் கூடுமென்றான்.

குங்-சீ-யிக்கு அதை எப்படியாவது விலை கொடுத்து வாங்க வேண்டுமென்ற ஆசையுண்டாயிற்று. மந்திரிமார்கள் வெகு தூரம் தடுத்தார்கள். குங்-சீ சுபாவமாகவே பிடிவாதக்காரன். ஆகையால் அவர்கள் பேச்சைக் கேட்கவில்லை.

மந்திரவாதி நல்ல பளிங்குக் கிண்ணத்தில் அந்தப் பானகத்தைவார்த்து அரசன் முன் வைத்தான். அதன் பரிமளத்தையும் இனிய நிறத்தையும் கண்டு அரசனுக்குஆவல் அதிகரித்தது. அரசன் பொக்கிஷக்காரனை அழைத்து மந்திரவாதிக்குப் பணத்தைக் கொடுக்கும்படி உத்தரவிட்டான்.

அமைச்சனின் ஆழ்ந்த மதி

அரசவையில் உட்கார்ந்திருந்த த்ஸாங்-மீ என்னும் அமைச்சனுக்கு இதைக் காணச் சகிக்கவில்லை. குடிகளின் பணம் இப்படி விரயமாக வேண்டுமா என்று மனம் வருந்தினான். ஆனால் இன்னது செய்வதென்று தோன்றவில்லை. திடீரென்று ஒரு எண்ணம் அவனுள்ளத்தில் எழுந்தது. உடனே அரசன் அருகிலிருந்த கிண்ணத்தையெடுத்துக் கடகடவென்று அப்பானகத்தைக் குடித்துவிட்டான்.

எல்லோரும் திடுக்கிட்டார்கள்! அரசனுக்கு அடக்கொணாத கோபம் வந்துவிட்டது! த்ஸாங்-மீயை உடனே கைது செய்து கொல்லும்படி உத்தரவாயிற்று. அவ்வமைச்சன் புன்சிரிப்போடு, 'அரசே, என்னைக் கொல்வதற்கு முன் என் பேச்சை தயவு செய்து கேளும். இப்பானகத்துக்கு மந்திரவாதி சொல்லும் குணங்கள் இருந்தால் அதன் அமிர்தத்தன்மையால் என்னைக்கொல்லமுடியாது. அக்குணங்கள் அதற்கில்லையாயின் நான் அதை அருந்தியதால் அவன் பொய் வெளியாயிற்றேயன்றி என்மேல் குற்றம் ஏற்படாது. இனி உமக்கிஷ்டமானால் என்னைக் கொல்லலாம்'.

'அவசரக்காரனுக்குப் புத்திமட்டு' என்னும் பழமொழியின் உண்மையை குங்-சீ அப்பொழுது உணர்ந்தான். தன் உயிரைக் கொடுத்தாவது இவ்வவசரச் செயலைத் தடுத்த த்ஸாங்—மீயைப் பெரிதும் போற்றினான். மந்திரவாதிக்கும் ஏதாவது சன்மானம் செய்தனுப்பலாமென்று சுற்றுமுற்றும் பார்த்தான். அவன் எங்கும் காணப்படவில்லை. அவனிடம் இறவாமைக்குத் தக்க மருந்தில்லாமற்போனாலும் குழப்பத்தில் மாயமாய்ப் பறந்து போகும் கால்கள் அவனிடமிருந்தது அப்பொழுது வெளியாயிற்று.

இப்படி இவ்விரு பெரும் நாடுகள் யோக ஸித்திக்காகவும், காய ஸித்திக்காகவும் பாடுபட்டுக்கொண்டுதம்மைத் தாமே பெருமை பாராட்டி வந்தன. அதே காலத்தில் கடலால் ஒதுக்கப்பட்ட இரு சிறு தீவுகளில் கப்பல் கட்டுவதிலும், சேனைகள் நடத்துவதிலும், வெடிகுண்டு வீசுவதிலும், விஷக்காற்று பரப்புவதிலும் பயின்று அன்னியநாடுகளைத் தமக்கு அடிமைப்படுத்துவதையே ஜீவனமாகக் கொண்ட இரு சிறு கூட்டத்தினர் இப்பெரு நாடுகளை அடக்கி வருகிறார்கள். இந்நிலையிலும்கூட இவைகள் விழிப்புற்றெழுந்து மேலோங்க முயல்வது வெகு ஆச்சரியமாக இருக்கிறது. இவைகளின் ஜீவநாடிக்கு ஆணிவேர் எங்கோ பாதாளத்தில் ஊன்றி இருக்கவேண்டும்.

பிரிட்டிஷ் ஆட்சிக்கு முன்னர் இந்தியா ஞான சூனியமாயிருந்ததா?

—"ஒரு மாணுக்கன்"

பிரிட்டிஷாருடைய ஆதிக்கம் இந்தியாவிலே ஸ்திரப்பட்ட பிறகுதான், இந்தியர்களுக்குக்கல்வி ஞானம்பிறந்ததென்றும், அதற்கு முன்னர் இந்தியர்கள் நிரட்சர குட்சிகளாகவே இருந்தார்களென்றும் சாதாரணமாகப் பள்ளிக்கூடசரித்திரபுத்தகங்களில் எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. இது சரியில்லை யென்பது, 18வது 19வது நூற்றுண்டுகளில் சில ஐரோப்பியர்கள் எழுதி வைத்துப் போயிருக்கும் அறிக்கைகளினுலும் நூல்களினுலும் நன்கு தெரியும். லார்ட் மெக்காலே, ஆங்கிலக் கல்வி முறையை இந்தியாவில் நுழைப்பதற்கு, என்னவிதமான சமாதானங்கள் சொன்னுலும் அது, பிரிட்டிஷ் சாம்ராஜ்ய ஸ்தாபனத்திற்குத் துணை செய்ய ஒரு நிரந்தர கோஷ்டியைத் தயார் படுத்துவதுதான் அதனுல் ஏற்பட்ட பரிணுமமா யிருந்தது என்பது தெரிந்ததுதானே. இந்த மெக்காலே திட்டத்திற்கு முன்னுல், இந்தியாவில் கல்வியே இல்லையா? இந்தியர்களுக்கு எழுத்து வாசனையே கிடையாதா? இப்படிப்பட்ட எண்ணங்களை நமது சிறுவர்களின் மனத்தில் புகுத்தினுல், அவர்கள் பெரியவர்கள் ஆன பிறகு தாய் நாட்டின் மீதும், தாய் நாட்டின் நாகரிகத்தின் மீதும் என்ன விதமான பெருமை கொள்வார்கள்? உலகத்தின் நாலு பக்கங்களிலி லிருந்தும், ஆயிரக் கணக்கான பேர் இந்தியாவை நாடி ஓடி வந்து இங்கே பல்லாண்டுகள் தங்கி ஞானுேபதேசம் பெற்றுச் சென்ற வரலாறெல்லாம் பகற் கனவுகளா?

ஃ ஃ ஃ

நிற்க, உணர்ச்சி வழியே நாம் செல்லவேண்டாம். சில உண்மைகளைக் கவனிப்போம். எப். டப்ளியு. தாமஸ் என்ற அறிஞர் ஓரிடத்தில் எழுதுகிறபோது, 'ஆங்கிலேயர் இந்தியாவில் வந்து நுழைந்தபோது, ஆரம்பக்கல்வி முறையும் உயர்தரக் கல்வி முறையும் மிகவும் பரவியிருந்தது' என்று குறிப்பிடுகிறுர். சென்னைக் கவர்னரா யிருந்த ஸர் தாமஸ் மன்ரோ என்பவர், 1821-ம் வருடத்தில் நடத்திய ஒரு விசாரணையினுல், சென்னை மாகாணத்தின் ஜனத்தொகை 1,28,50,941 என்றும், இதில் 184,170பேர் பள்ளிக்கூடங்கள் சென்று படிக்கும் மாணுக்கர்களாக இருந்தார்களென்றும், இவர்கள் தவிர, வீட்டிலேயே படித்துக்கொண்டிருந்தவர் தொகை ஏராளமென்றும் தெரிகின்றன. அதாவது மொத்த ஜனத்தொகையில், 100-க்கு 10 பேர் விகிதம் பள்ளிக்கூடஞ் சென்று படிக்கும் மாணுக்கர்களா யிருந்தார்கள்.

ஃ ஃ ஃ

சென்னை ராஜதானியில் கல்விமுறை எப்படி யிருக்கிறதென்பதைப் பற்றி 1823-ம் வருஷம் லார்ட் வில்லியம் பெண்டிங்க் நடத்தின விசாரணையினின்று, அப்பொழுது 12,498 பள்ளிக்கூடங்கள் இருந்தனவென்பதும், இவை சுதேச மன்னர்களுடையவும் சில தனவந்தர்களுடையவும் ஆதரவு

பெற்று வந்தன என்பதும் வெளியாகின்றன.

ஃ ஃ ஃ

மிஸ்டர் ஆடம் என்பவர், வங்காளம், பீஹார் மாகாணங்களில் 1835ம் வருஷம் நடத்திய விசாரணையினின்று இந்த இரண்டு மாகாணங்களின் ஜனத்தொகை நான்கு கோடியென்றும், இரண்டு மாகாணங்களிலும் ஒரு லட்சம் பள்ளிக்கூடங்களிருந்தனவென்றும் தெரிவிக்கிறார். அதாவது நானூறு பேருக்கு ஒரு பள்ளிக்கூடமாக இருந்திருக்கிறது. மற்றும் இந்த இரண்டு மாகாணங்களிலும் 150,748 கிராமங்கள் இருந்திருக்கின்றன. அதாவது ஏறக்குறைய ஒன்றரை கிராமத்திற்கு ஒரு பள்ளிக்கூடமாக இருந்திருக்கிறது. மிஸ்டர் ஆடம் தம் அறிக்கையில் எழுதுகிறார்:—

'கிராமப் பள்ளிக் கூடங்களின் செல்வாக்கு அபரிமிதமாயிருக்கிறது. சாதாரண ஏழை ஜனங்கள் கூட, தங்கள் குழந்தைகளுக்குக் கல்வி போதிக்க வேண்டுமென்று ஆவலுடையவர்களாயிருக்கிறார்கள். ஜனங்களுடைய பழக்க வழக்கங்களுக்கும், வாழ்க்கை நிலைக்கும் இயைந்தாற் போல் இந்தப் பள்ளிக் கூடங்கள் இருக்கின்றன.'

இந்தக் குறிப்புகளினால், ஆங்கிலக் கல்வி முறை இந்தியாவில் புகுத்தப்பட்டதற்கு முன்னரேயே, பண்பட்ட தொரு கல்வி முறை அமைந்திருந்தது என்பது புலப்படவில்லையா?

ஃ ஃ ஃ

பிரிட்டிஷார் நிருவாகத்தில் ஆங்கிலக் கல்வி முறை புகுத்தப் பட்ட சுமார் 90 வருஷங்களுக்குப் பிறகு, கல்வி முறை எப்படியிருக்கிறதென்பதைச் சிறிது கவனிப்போம்.

இந்தியாவின் மொத்த ஜனத்தொகை 35 கோடி. 1933ம் வருஷம், இந்தியா மொத்தத்திற்கும் இருந்த சர்வ கலாசாலைகள், உயர்தரப் பள்ளிக் கூடங்கள் முதலியவைகள் உள்பட 257,792 பள்ளிக்கூடங்கள் இருந்தன. இவற்றில் 1,28,53,532 மாணாக்கர்கள் படித்தார்கள்.

ஃ ஃ ஃ

சென்னை மாகாணத்தை எடுத்துக் கொள்வோம். 1931ம் வருஷத்து ஜன கணிதப்படி ஜனத்தொகை 4,71,93,602. இந்த ஜனத்தொகைக்கு 51,000 பள்ளிக் கூடங்கள் இருக்கின்றன. இவற்றில் 28,65,000 மாணாக்கர்கள் படிக்கிறார்கள். ஏறக்குறைய ஜனத்தொகையில் ஆயிரம் பேருக்கு ஒரு பள்ளிக் கூட விகிதம் இருக்கிறது என்று சொல்லலாம். இது முற்போக்கா, பிற்போக்கா என்பதை நேயர்களே ஊகித்துக் கொள்ளட்டும்.

பத்தொன்பதாவது நூற்றாண்டின் இடைக் காலத்தில் சென்னை மாகாணத்தில் தனிப்பட்ட தனவந்தர்கள் ஆங்கிலக் கல்வியைப் போதிக்க சில கல்வி ஸ்தாபனங்களை நிறுவினார்கள். இவற்றுள் முதன் முதலாக ஸ்தாபிக்கப்பட்டவை திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூலும், பச்சையப்பன் பள்ளிக்கூடமும். திரு.பச்சையப்ப முதலியார், தமது ஆஸ்தியெல்லாம் கல்வி வளர்ச்சிக்கென்று உயில் எழுதி வைத்துப் போனார்.

ஜெர்மானிய மாணவர்களுக்கு—

சமீபத்தில் ஜெர்மனியில் நாஜி கட்சியின் தினம் கொண்டாடப் பட்டது. அப்பொழுது கூடிய ஜெர்மன் மாணவர்களுக்குக் கீழ்க்கண்ட பத்து உபதேசங்கள் செய்யப் பட்டன:—

1. ஜெர்மானிய மாணவனே! நீ வாழ்வது பெரிதல்ல; உன் சகோதரப் பிரஜைகளுக்கு உன் கடமையைச் செய்ய வேண்டும். நீ ஒரு ஜெர்மானியன் என்று அறிந்து நட.

2. ஜெர்மானியனுடைய பெரிய சட்டம் அவனுடைய நாணயந்தான். நாணயத்திற்குப் பழுது ஏற்படுமானால் அதற்கு இரத்தத்தினால் தான் பரிகாரஞ் செய்ய வேண்டும். உன் சகோதரப் பிரஜைகளுக்கு உண்மையாக நடந்து கொள்வதுதான் உன் நாணயம்.

3. ஜெர்மானியன் என்று சொன்னால் ஒழுக்க முள்ளவன் என்று அர்த்தப்படும்படி நீ நடந்து கொள்ள வேண்டும், ஜெர்மனியின் இழந்துபோன ஆத்மாவைப் போராடிக் கொணர்வது உன் கடமை. உன் ஜனங்களிடத்தில் புதைந்து கிடக்கும் உண்மைகளை நீ நன்றாகத் தேடிப்பார்.

4. இஷ்டப்படி நடப்பது, அல்லது கட்டுப்பாடின்றி நடப்பது என்று சொன்னால் அது சுதந்திரமல்ல. பிறரை வேலை வாங்குவதைக் காட்டிலும், பிறருக்குத் தொண்டு செய்வதிலேதான் அதிகமான சுதந்திரம் இருக்கிறது. உனது நம்பிக்கையிலும், ஊக்கத்திலும் மனோ திடத்திலுந்தான் எதிர்கால ஜெர்மனி இருக்கிறது.

5. கற்பனா சக்தி யில்லாதவன் ஒன்றுமே செய்ய முடியாது. உன்னிடத்தில் ஒரு விளக்கும் எரியாவிட்டால், மற்றவர்களிடத்தில் நீ எப்படி வெளிச்சத்தை உண்டுபண்ண முடியும்? பிறரிடத்தில் காணப்படும் நல்ல குணங்களைப் பாராட்டுவதில் உனக்குத் தைரியம் ஏற்படட்டும்.

6. நீ தேசீய அபேதவாதியாகவே பிறந்திருக்கிறாய். தேசீய அபேதவாதியாகவே கல்வியும் கற்பிக்கப்பட்டிருக்கிறாய். அப்படிக் கல்வி பயிலாதவர்கள், தங்களைத் தேசீய அபேதவாதிகளாகவே பயிற்சி செய்து கொள்ள வேண்டும்.

7. தலைவிதியினும் சக்தி பொருந்தியது ஏதேனும் இருந்தால் அதுதான் உனக்குள்ள தைரியம். அந்தத் தைரியந்தான் உன் தலைவிதியைத் தாங்கிச் செல்கிறது. உன்னை அழிக்கச் சக்தியில்லாதது உனக்குப் பலத்தை அளிப்பது. ஒருவனை எது கெட்டிப்படுத்துகிறதோ அதனை நாம் போற்றுவோமாக.

8. ஒழுங்கான வாழ்க்கையை நடத்தக் கற்றுக் கொள். ஒழுங்கும் ஒழுக்கமுந்தான், ஒரு சமூகத்தின் அஸ்திவாரங்கள். கல்வியின் ஆரம்பமும் அவைகள்தான்.

9. தலைவன் என்ற முறையில், உன் கடமையைச் செய்வதிலேயே நீ கடுமையாயிரு. தேவையானதும் நன்மை பயப்பதுமானவற்றைச் சம்பாதித்துக் கொள்வதில் உறுதியாயிரு. மனிதர்களுடைய குறைகளைக் கூறிக் கொண்டிருப்பதில் உன் காலத்தைப் போக்காதே. மற்றவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்து உன் தேவையைக் குறைத்துக் கொள்.

10. உற்ற தோழனாயிரு. உற்சாகமாயும் இரு. உன் தனிப்பட்ட வாழ்க்கையில் பிறர்க்கு வழிகாட்டியாயிரு. நீ மற்றவர்களோடு பழகுவதில், உன்னுடைய குணங்கள் புலனாகும். உனது எண்ணமும் செயலும் ஒன்றாயிருக்கட்டும். உன் வாழ் நாள் முழுவதும் (ஹிட்லரைப்) பின் பற்று.

தர்மமும் தயையும்

—எஸ். கே. நாராயணய்யர்
B. A., B. L.,

ஆங்கில நாட்டிற்கும் மற்றேனைய ஐரோப்பிய தேசங்களுக்கும் பொது ஜன நடைமுறைக்காக லௌகிக தர்மம் சட்டமாகச் செய்யப்படுவதற்கு அடிப்படையாயிருந்தது மோசஸ் என்பவர் நிர்ணயித்த சட்டம். இம்மோசஸ் என்பவர் ஓர் தீர்க்கதரிசி. இவரைப்பற்றிய விவரங்கள் கிறிஸ்தவர்கள் தங்கள் வேதமென்று கொண்டாடும் சுவிசேஷத்தில் பழைய பகுதி (Old-Testament) ல் குறிக்கப்பெற்றிருக்கின்றன. இவர் கிறிஸ்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னிருந்தவர்.

மோசஸ் சட்டம் (The Law-Of Moses) 'பிரதிக்குப் பிரதி' என்னும் கொள்கையை அடிப்படையாகக் கொண்டது. பிறனொருவன் கண்ணை ஒருவன் பிடுங்கினால் பிடுங்கினவன் கண்ணையும் பிடுங்கிவிட வேண்டியது. மற்றொருவன் பல்லை ஒருவன் உடைத்தால் உடைத்தவன் பல்லையும் பிடுங்கிவிட வேண்டியது. பின்னவனுக்குச் செய்யும் தண்டனை முன்னவனுக்கு ஏற்பட்ட குறையினளவே யிருக்கும். ஒரு கண்ணைப் பிடுங்கினால் ஒரு கண்ணும், இரு கண்களையும் பிடுங்கினால் இரண்டு கண்களையும் இழக்கும்படி தண்டனையடைவர். இதனடியாகவே மற்றொருவனைக் கொலை செய்தவனுயிரை வாங்க வேண்டுமென்று நிர்ணயித்துள்ள தண்டனையும் பிறந்தது. இத்தகைய அபிப்பிராயங்கள் மிகுதியும் பாராட்டப்பெற்று சில நூற்றாண்டுகளுக்கு முன் அதிகமாக அமுலில் இருந்து வந்தது. குற்றத்திற்கேற்ற அளவே தண்டனை யளிப்பதென்ற கொள்கை போய் தண்டனையைக் கடூரமானதாக்கி மக்களிடத்தே குற்றம் செய்யாதிருக்க எண்ணமுண்டாக வேண்டிப் பின்னர் சட்டங்களை மாற்றினர். உதாரணமாக பதினாறாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் மட்டும் சற்றேறக்குறைய நூற்றுக்கு மேற்பட்ட குற்றங்களுக்கு மரண தண்டனையே விதிக்கப்பெற்று வந்தது. கொலைக்கு மரண தண்டனை பொருத்தமுடையதென்று வாதாடலாமெனினும் ஏனைய சிறிய குற்றங்களுக்கும் மரண தண்டனை விதிக்கப்பெற்றது எவ்விதத்திலும் சம்மதிக்கக்கூடிய வகையிலில்லை

சட்டத்தில் மாறுதல்

குற்றங்களுக்கு ஏற்றாற் போலல்லாமல் கொடூரமான தண்டனைகள் மேன்மேலும் அதிகப்படவே சுவரில் முட்டிய பந்து பின் பாய்வதுபோல் சட்டமும் மாறுதலடைந்தது. மேனாட்டினர் பலரும் தம் கருத்திலும் நோக்கத்திலும் மிகுதியும் மாற்றமடைந்தனர். பீதியினால் குற்றம் குறைவதில்லையென்றும் அவைகள் பிறர் கண்டறிய முடியாதபடி மறைக்கப்பெறுகின்றனவென்றும் கண்டறிந்தனர். தவிர குற்றம் செய்யும் மனப்பான்மை மக்களிடத்தே எப்போதுமில்லையென்றும், மனத் தூய்மை யிழந்து அறிவு மயக்கமுற்றபோது உண்மை நிலையற்ற மக்கள் சந்தர்ப்பத்திற்கு

ஏற்றவாறு செயல்களில் ஈடுபடுகின்றனரென்றும் அத்தகைய அறிவு விசாலமில்லாத ஞானக் கோழைகளை நாகரிகத்திலும் நன்னடத்தையிலும் புகுத்தி மேன்மையுறச் செய்வது ராஜாங்கத்தின் கடமையென்றும் கண்டனர். அஞ்ஞானத்தாலும் அறிவின்மையாலும் இழைத்த செய்கைகளை வியாஜமாகக் கொண்டு மென்மேலும் கஷ்டங்களையும் மனத்தூய்மைக்குக் காரணமில்லாமையும் உண்டாக்கிக் கொடுப்பதினும் ஒரு சிறிதேனும் நல்வழியில் நடக்கத் துணை செய்யின் எத்தனையோ மக்கள் வாழ்க்கை நலம் பெறுமென்று கொண்டனர். இம்மாறுதலுக்கு அடிப்படையா யிருந்ததும் இருப்பதும் அன்பேயாகும். முந்திய ஏட்டிக்குப் போட்டி என்னும் எண்ணமின்றிக்கேட்டிற்குக் குழையும் கவலை தோன்றியது. இத்தகைய கொள்கையை ஊக்கியது இயேசு நாதனின் வாழ்க்கையும் அவர் போதித்த நீதிகளுமே யாகும். சிலுவையிலறையப் பட்டபோதும் அறியாமையினுல் மற்றவர் செய்யும் செய்கைகளுக்காக மனமுடைந்து வருந்தினரன்றோ! கான்ஸ்டாண்டிநோபிள் என்னும் நகரம் முகம்மதியர் கை வசமான பிறகு அவ்விடத்தினின்றும் மேற்கே வெளியேறிய எண்ணிறந்த ஞானிகளும் அறிவாளிகளும் தாம் தாம் தங்கிய இடத்து மக்களிடத்தே புதியதோர் மறு மலர்ச்சி யுண்டாக்கினர். இம்மறு மலர்ச்சியே (Renaissance) முந்திய குறுகிய எண்ணங்களைப் போக்கி, தயையும் மேன்மையும் நிறைந்த விசாலமான நோக்கத்தை யுண்டாக்கி வளர்த்தது. இவ்வெண்ணம் வளர வளர முந்திய நடைமுறைச் சட்டங்களாகிய லௌகிக தர்மமும் மாறுதலடைந்தது. காராகிரகம், குற்றம் செய்தவனை மேலும் மேலும் குறுகிய எண்ணமுள்ளவனுக்க உதவும் தண்டனைச் சாலையென்றுமல் அவன் குறுகிய மனது விசாலமடைய நேர்ந்த, திருத்தத்தலமென்று கருதப்பட்டது. இப்போது மேனுட்டில் கொலைக்குத் தண்டனை மரணமாகாதென்றும் மனதை மாற்றும் பிராயச் சித்தம்தான் சிறந்ததென்றும் வாதமிருக்கிறது. மரண தண்டனையையே ஒழித்து விடவும் முயற்சி யிருந்துவருகிறது.

மனச் சாட்சியை மாற்ற முடியுமா ?

அன்பும் சிவமும்இரண் டென்பாறிவிலர்; அன்பே சிவமாவதாரு மறிந்திலார். சர்வஜீவ தயாபரனுகிய ஈசன் கருணையால் கடலா யிருக்கும்போது அவன் சிருஷ்டியிலேயே 'அரிது அரிது மானிடராதலரிது' என்னும் சிறந்த பிறவியை யடைந்து கேவலமான எண்ணங்களை வளர்க்காமல் கண்ணியமானதும் புண்ணியமுள்ளதுமான நோக்கங்களையும் செய்கைகளையும் நாடுவது சகஜமே யொழிய மாருகாது. தன்னை யொளித்தொரு வஞ்சகமில்லை. எப்போதும் தன் மனச்சாக்ஷிக்கு விரோதமாய் எவனும் செய்யா தொழியின் குற்றமும் குறையும் மற்றைய புரையும் காண்பதரிது. முதல் முதல் தவறு செய்யும் சிறுவன் அல்லது பெரியவ னிடத்தில் தானுகவே மனச்சாக்ஷி அவ்விதம் செய்யாதபடி தூண்டுகிறது. தன்னைப் போன்ற பிறமனிதர் காணுதபடி செய்திடின் தான் மிகுதியும் வல்லமையுடையவனென்று நினைத்து இறுமாப்படைகிருன். ஆனுல் சர்வக்ஞனுகிய ஈசனையும் தன்னுள்ளே இருக்கும் மனச்சாட்சியையும் ஏமாற்ற முடியாமல் விழிக்கிருன். 'தன்னெஞ் சறிவது பொய்யற்க—பொய்த்தபின் தன்னெ

ஞ்சே தன்னைச்சுடு'மன்றோ. அடாத செயலைச் செய்யுமுன்னிருந்த நேர்மையும் பெருமையுமிழந்து தன் மதிப்பிலேயே குறைந்து மனம் வாடிச் சாம்பும் வாழ்க்கையும் ஓம்பற்கானதோ? ஒருக்காலு மில்லை. தவிர அத்தகைய செய்கையைச் செய்து மீறுவதும் சிரம சாத்தியமான மார்க்கத்தில் நடந்து நம் மினத்தவர் கண்ணிலும் மற்றவர் உள்ளத்திலும் மேன்மையோடு வாழ்வது சுலபமும் சிலாக்கியமு மானதன்றோ.

எல்லாம் தலை விதியா ?

தற்போது அநேகர் தம் தொழிலில் குறை நேரின் வினைப் பயன் என்றும் தலை விதி யென்றும் சொல்லிப் போவர். வினைப் பயன் என்னும் சொற்களே, செய்த தொழிலுக்கேற்ற ஈடு என்பதைக் குறிக்கிறது. அது தெரிந் திருக்கும்போது சொல்வதில் பல னென்ன? தலை விதி யென்பதும் அர்த்த மில்லாத ஓர் சொற் தொகுதியாகும். இயற்கை விநோதங்களையும் நியாயங்களையும் கூர்ந்து நோக்கும்போது செய்கை எதற்கும் எதிரும் சமமுமான பிரதி யிருப்பதாகத் தெரிகிறது. (Action and reaction are equal and opposite). முதலில் ஒரு செய்கை வேண்டும். அதற்குத்தான் பிரதி சம பலத்தோடும் எதிரிடையாகவும் தோன்றுகிறது. இதனைக் கொண்டு சிலர் நாம் செய்யும் நற் செய்கைகளுக் கெல்லாம் சமமானதும் எதிரானதுமான துர்ச் செய்கைகள் எப்போது முண்டாகின்றன. ஆகவே நற் செய்கைகள் செய்வதிலும் பலனில்லை என்பர். இதனையே அறிவையும் ஏமாற்றும் புதிர் எனச் சொல்வது. ஆழ்ந்து யோசித்தா லொழிய சொல்லும் விளக்கம் பொருத்தமானதாகவே காணப்படும். இதைக் குறித்து அதிகம் சொல்லலா மாயினும் இங்கே செய்த நற்செய்கைக்குப் பிரதியான நற் செய்கை சம பலத்தோடும் அளவோடும் தோன்று மென்று சொல்லி நிறுத்துவோம்.

உரிய தொழில்

ஒவ்வொருவருக்கும் தத் தமக் கென்று ஒரு தொழிலுண்டு. இயற்கைப் பொருள்களும் ஒவ்வொன்றும் ஒவ்வோர் தொழிலைச் செய்து வருகின்றன. கடவுள் தம் நிறைந்த அறிவால் அவையவைகளுக்கு ஏற்றபடி காரியங்களைக் காட்டி யுள்ளார். நம் மதியால் அதனை உசாவாது எளிதிற் குறை கூறின் ஆல நிழலி லிருந்து அம் மரத்தின் பழம் சிறி தென்றும் அதனைப் படைத்த கடவுள் அறிவிற் குறைந்தவ ரென்றும் கருதிய வழிப்போக்கன் அனுபவ முதிர்ச்சியாலும் பிரத்தியட்ச மாகவும் அறிவு விளக்கம் அடைந்தது போல்தான் தெரிந்து கொள்ள வேண்டும். செய் தீவினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால் எய்தவருமோ இரு நிதியம்? துஷ் கிருத்தியங்கள் செய்யும் வரையில், மனச்சாக்ஷிக்கு விரோதமான செய்கைகளை விளைக்கும் வரையில் அகண்டஐசுவரியம் எப்படி உண்டாகும்? அவ்விதம் பெரும் செல்வ முண்டாகாமையோடல்லாமல் பொருட் செல்வமாவது, செவிச் செல்வமாவது இரு செல்வங்களுமாவது எய்த வரா தென்பது வெள்ளிடை மலை. இகத்திற்கு முக்கியமான அறிவும் பொருளு மில்லாது போக பரத்திற்கு அவசியமான ஞானமும் அதன் வழியிலாக மோக்ஷமும் கிடைப்பதும் அரிதே யாகு மன்றோ?

தந்தையும்—தனயனும்

—எஸ். முத்து வீரப்பன் B. A.

தந்தைக்கும் மகனுக்கும் இருக்க வேண்டிய தொடர்பு, நமது அன்றாடக் குடும்ப வாழ்க்கையில் நம் எதிரே வந்து நிற்கும் பிரச்னைகள் ஆகிய இவற்றை திரு. முத்து வீரப்பன் இந்தக் கட்டுரையில் நமக்கு எடுத்துக் காட்டுகிறார். இதனை மேலெழுந்த வாரியாகப் படித்து விட்டு திருப்தியடைய வேண்டாமென்று அன்பர்களைக் கேட்டுக் கொள்கிறோம். இந்தக் கட்டுரையை ஆழ்ந்து படித்து, கூடியவரை நமது அனுபவ வாழ்க்கையில் இதன் உண்மைகளைக் கொண்டு வந்தால், நமது குடும்பத்திற்கு மட்டுமல்ல, நமது தேசத்திற்கே பெரிய நன்மையைச் செய்தவர்களாவோம். ஒவ்வொருவரும், தமது சுய சரிதத்தை எழுதி, தமது பிற்கால சந்ததியாருக்கு ஒரு பொக்கிஷம் போல் வைத்தல் அவசியம் என்ற திரு. முத்து வீரப்பனுருடைய கோரிக்கையை நாம் முற்றிலும் ஆதரிக்கிறோம்.

ஜீவனுள்ள வஸ்துக்களெல்லாம் தன் இனத்தை விருத்தி செய்வது சகஜமாயிருக்கிறது. இது இயற்கையின் தர்மம். மனிதர்களும் இயற்கைக்குட்பட்டவர்களேயாதலால் தம் இனம் பெருக வேண்டுமென விரும்பியோ விரும்பாமலோ அதன் பலனை அடைகிறார்கள். ஒவ்வொருவரும் தன் பரம்பரையாகிய சந்தான நூலை (புத்திரனைப்பெறாது) அறுத்துவிடக்கூடாதெனச் சொல்லுகின்றன நமது புராதன கிரந்தங்கள். தற்கால நாகரீக நாட்டுக் கிரந்தங்களும் ஒருவன் உலகிற்கு நன்மை செய்வதானால் இயன்ற வரை அதிகமான நற்புத்திரர்களைப் பெற்று உலகிற்குச் சமர்ப்பிப்பதேனெனச்சொல்கின்றன. ஒவ்வொருவருக்கும் உயிர் தந்தை யிடமிருந்தும், உடல் தாயிடமிருந்தும் கிடைத்ததெனச் சொல்வதில் நிரம்பிய உண்மை உண்டு. பண்டையகாலத்தில் பிதாவுடைய அதிகார வரம்பில் சந்தானங்களெல்லாம் சர்வ சாதாரணமாக விற்பனை செய்யும் பொருள்களைப் போன்று மரண தண்டனைக்கும் உட்பட்டவர்களே என்று வாசித்தறிகிறோம். அவிபக்த குடும்பங்களுக்கே நமது மிதக்கிரந்தங்களும் சலுகை காட்டுவதாக இருக்கிறது. இவ்விதமுள்ள நிலையில் தந்தையும் புத்திரர்களும் அவரவர்களுக்குரிய கடமைகளைச் செய்து, தந்தை புத்திரனைப் பெற்ற பலனையும், புத்திரன் தந்தையைப் பெற்ற பலனையும் அடைகிறார்களா என்பதையே நமது ஆராய்ச்சியின் விஷயமாக இவ்வியாசத்தில் எடுத்துக்கொள்ளுகிறோம்.

பிறந்தோரெல்லாம் உயிருடனிருந்தால்—?

உலகில் எல்லா வஸ்துக்களும், பிரதானமாக உயிருள்ளவைகளும், ஓர் காலவரம்பிற்குட்பட்டு அழிந்துபோக வேண்டுவது மிக்க நியாயமாகும். அவ்வாறே ஒவ்வொரு மனிதரும் சில காலத்திற்குப் பின் இறந்துபோக வேண்டுவதும் மிக்க அத்யாவசியமே. இயற்கை, தன் இனத்தை விருத்தியாக்கும் செய்கையில் ஒவ்வொரு ஜெந்துக்களையும் பிரவிர்த்திக்கச் செய்வதன் நோக்கமாவது அவைகளின் வாழ் நாளைக் குறைத்து அவைகளின் ஜீவியத்தை ஓர் முடிவுக்குக் கொண்டு வருவதேயாகும். மனிதர்களும் தம் வம்சத் தொடர்ச்சிக்குப் பின் வாரசு

ஒன்றை உற்பத்தி செய்து வைத்து, தாம் இறந்து பின்னுள்ளவர்களுக்கு இடங் கொடுப்பது மிகவும் பொருத்த முடையதே. பிறந்தோர் எல்லாம் உயிருடனிருந்தால் இப்புவியில் நிற்கத் தான் இடமுண்டா! அதுவும் மற்ற மதஸ்தர்களைப் போன்று தம் மூதாதையரைச் சமாதி ரூபமாக வைத்துப் பூஜித்தால் உலகமே புதை குழி மயமாகி விடுமெனப் பயந்துதான் ஹிந்து மதம் தகனக் கிரியையைத் தழுவியது போலும். உலகில் ஒருவன் செய்ய வேண்டுவன வெல்லாம் செய்து முடித்து, இனி நன்மை செய்ய முடியாது சக்தியற்று, அனுபவத்தில் முதிர்ந்து திடசித்தனாய், தான் செய்த நற் காரியத்தின் ஓர் பிரதிபலனை தனக்குச் சேவை ரூபமாக எதிர் பார்த்து, இனி உலகில் இருப்பதும் ஓர் பாரமெனக் கருதி, இறுதியாக இப் புவியினின்றும் செல்லும் ஓர் பருவமே முதுமைப் பருவமாகும். அந்தியில் வரும் இவ் வயோதிகத்திற்கு ஒவ்வொருவரும் கௌரவித்து இயன்றதைச் செய்து, சமீபத்தில் உலகைத் துறந்து செல்ல இருப்பவரைச் சந்தோஷப் படுத்துவது ஒவ்வொரு இளைஞரின் கடமையானால் அதில் ஒரு புதல்வன் கடமை தன் தந்தைக்கு எத்துணை அளவு என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

தந்தையரும் தனயரும்

ஆனால் இக் காலத்தில் பெரும்பாலும் அதி விபரீதத்தைக் காண்கிறோம். தந்தையைப் பெரியோரெனக் கண்ணியம் தந்து அன்பு மயமாக நேசிக்கிறவர்கள் ஓர் ஆயிரத்தில் எத்தனை பேர்களோ! அநேக வருஷங்கள் ஒன்று கூடி வாழ்ந்தும் ஒருவரை ஒருவர் நன்றாய் அறிந்து கொள்ளாமலும், அநேக விஷயங்களை ஒருவர்க் கொருவர் மனந் திறந்து பேசி ஓர் முடிவுக்கு வராமல் கடைசி வரை மனதிலேவைத்திருந்தும் மாண்டவர்கள் எத்தனையோ! சிலர், தங்கள் தந்தையென்று வெளிப்படையாகச் சொல்லவும் கூட வெட்கி நிற்பதை நாம் காணவில்லையா? ஜீவியகாலத்தில் சண்டையிட்டுக் கடிந்து இவ்வுலகு விட்டுச் சென்ற பிறகு, சிறப்பாக சிரார்த்தாதிகளை நடத்தும் மைந்தர்கள் இக் காலத்தில் எண்ணிறந்தவர்களல்லவா! சிறு பிராயத்தில் காத்து அறிவு அளித்த தந்தையை தனக்கோர் மணமகள் வந்ததும் தாளத்தில் விட்ட தனயர்கள் எத்தனையோ? இவ்விருத்த குணங்களின்றி சுபுத்திரர்களாக இருக்கும் மனிதர்களும் பெரும்பாலோர் தந்தையென்றால் ஓர் பயங்கரமான பிராணியென்று சமீபத்தில் செல்லவும் தயங்குவதை நாம் பிரத்தியக்ஷமாகக் காணவில்லையா? இது ஒரு புறமிருக்க, எத்தனையோ தந்தையர்கள் அன்புடன் பாராட்டிய அருமைச் சிறுவர்களை அவர்களின் அன்னை இறந்ததும் முற்றிலும் புறக்கணித்து புனர் விவாக சாகரத்தில் ஆழ்ந்து தத்தளிக்கவில்லையா? இவ்விதமாகில் ஆரம்பத்தில் தாரம், தனயர்களிடம் வைத்த அவ்வன்பும் ஓர் அன்பா? எத்தனையோ வருஷங்கள் உடனிருந்த முதல் மனைவியைப்பின் எக்காலத்திலாவது ஒரு முறை நினைப்பதற்காவது இவர்களுக்கு நேரமுண்டா? இது நமது குழந்தைகளுக்கு நன்மை தரும், இது தராதெனப் பகுத்தறிந்து கவலையெடுத்து கவனித்து புத்திரர்களின் க்ஷேமத்தைக் கோரிய தந்தையர்கள் இக் காலத்தில் மிகச் சொற்பமே யாகும். சுவீகாரத் தந்தையர்கள் பெரும்பாலும் புத்திர வாஞ்சைக்கே புதிதாகையால் மற்றோர் அகத்திலி

ருந்து ஏற்றுக் கொண்ட புத்திரனு
டன் ஆயுள் பரியந்தமும் பிணக்கா
கவே காலங்கழிப்பதை நாம் கண்
கூடாகப் பார்க்கிறோம். அப் புத்தி
ரனோ இம்மனோவேதனை நம் தந்தை
யின் வாழ் நாள் வரைதானே, யாரும்
சிரஞ்சீவியாக இருந்ததோ இல்லை,
சிறிது காலம் கஷ்டப்பட்டாலும் பின்
அதற்குரிய பலன் திரவிய ரூபமாகக்
கிடைக்குமன்றோ எனக் கருதி மனப்
புழுக்கத்தில் காலங் கழிப்பதாக
இருக்கிறது. எத்தனையோ தந்தை
யர்கள் தம் புதல்வர்களுக்குத் துரும்
பும் கொடாது துரத்த நினைத்தும்
நியாயசபை, சட்டம் இவற்றின் உதவி
யால், அம்மைந்தர்கள் அதைப் பெற
முயற்சிக்கவில்லையா? இப்பிதா—மக்க
ளில் ஒரு பகுதியினர் எவ்வித கார
ணமுமின்றிக்கேவலம் ஒருவர்க்கொரு
வர் சில சாதாரண கொள்கைகளில்
ஒத்துக்கொள்ளாமல் விலகியிருந்து
காலங் கழிப்பதையும் பார்க்கிறோம்.
இவ் விசித்திர குணங்களினின்றும்
விலகி உலகிற்கே வழிகாட்டியாக
உள்ள சாத்வீகத்தந்தையர்களும் தன
யர்களும் இருக்கவே செய்கிறார்கள்
என்பதை நாம் ஒப்புக்கொள்ளவேண்
டும்.

தந்தையரின் கடமை

இவ்விபரீதங்களின் காரணங்கள்
என்னவா யிருக்கலாம் எனச் சற்று
லோசித்தால் பரஸ்பரம் ஒருவரை
ஒருவர் அன்யோன்யமாய் அறிந்து
கொள்ளாததும் அவ்விதம் அறிந்து
அன்பு மயமாய் நேசிக்காததும் தந்
தையும், மைந்தரும் தம் தம் கடமை
களை உணர்ந்து அவ்வக்காலங்களில்
செய்யாததுமான குறைகளே என
உணரலாம். ஆராயப் புகுந்தால்
ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்நாள்
இறுதியில்தான் ஈட்டிய பொருள்களை
விட்டுப் போவதற்கு ஒருவனைத்
தேடியே ஆகவேண்டி யிருக்கிறது.
இவன் தேடாவிட்டால் சட்டங்கள்
கவலையெடுத்துத் தேடிப் பிடிக்க
ஆரம்பிக்கும். இவ்விதம் நமது சம்
பத்துகளையும் நாம்பூர்த்திசெய்யவிருக்
கும் காரியங்களையும் ஏற்றுக்கொள்ள
விருக்கும்ஒரு புத்திரனை தந்தையர்கள்
அதி விசுவாசத்துடன் நம்பவேண்டி
யது மிக அவசியமென்பதை உணர்
வது; தம் புதல்வர்களுக்கு இளம்
பிராயத்திலே என்ன பாடுபட்டும்
உலகுடன்கூட ஒத்து வாழப்போதிய
அளவு கல்விப் பயிற்சி செய்துவைக்க
வேண்டிய கடமையைப்புறக்கணிக்கா
தது; தன் சரீர சுகத்தையே பெரி
தும் கருதி புனர் விவாஹம் செய்து
கொள்வது. பொருத்தமுடையதல்ல
வென்பதை நன்றாய் உணர்ந்து நடப்
பது; புதல்வர்கள் செய்யும் கிருத்தி
யங்களைக்கண்டிக்கும் பொழுதெல்லாம்
நாம் இளம்பிராயத்தில் எவ்வாறிருந்
தோ மென்பதையும் சற்று சிந்தித்துக்
கொள்வது; வரம்பு கடந்த பணத்
தைத்தேடிப் புதல்வனுக்குக் கொடுப்ப
தன் மூலம் அவன் திருப்தியைப்
பெற விரும்புவதினின்றும் நல்ல கல்வி
யையும் உலகத்தில் ஜீவிய காலத்தை
நடத்த ஆரம்பிக்கப் போதிய அளவு
திரவியத்தையுமே கொடுப்பது நன்
கென உணர்வது; தான் எக்காலத்
தும் நேர்வழியில் நடந்து காட்டி அவ்
வழியைச் சந்ததிகளும் பின்பற்ற
வேண்டுமென நிதர்சனப் படுத்திக்
காட்டுவது; புத்திரர்களுக்கும் ஓரளவு
சுயேச்சை கொடுத்து பொறுப்பை
உணரச்செய்து தம் முன்னிலையி
லேயே எல்லா விவகாரங்களையும் ஒப்
புவித்து வயோதிகத்தில் குடும்ப விவ
காரத்தினின்றும் முற்றிலும் ஓய்வெ
டுத்துக் கொண்டு தன் மைந்தனை அறி
வாளியென ஜனங்கள் போற்றுவதைக்

கேட்டானந்திக்க இச்சை கொள்வது முதலான சில கொள்கைகளை ஒவ்வொரு தந்தையும் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம். தந்தை தன் கடமையைத் தன் சக்திக்கேற்றவாறு செய்யாது புறக்கணித்து விட்டால் தனயர்கள் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்ய வேண்டுமென எவ்விதம் பெற்றோர்கள் எதிர்பார்க்க முடியும்? உபயகட்சியும் அன்புடன் இரு நண்பர்களைப் போல தங்கள் தங்கள் கடமைகளைச் சரிவர உணர்ந்து ஒத்துழைத்து நடத்தினால் அக் குடும்பங்களில் திருவினாள் புன்னகையுடன் வசிப்பதில் ஐயமுமுண்டோ? இதற்குக் கைம்மாறாக பிள்ளைகளும் தங்கள் தந்தைக்கு மனதில் கவலை கனவிலும் வரலாகாதே எனச் சிந்தித்து எல்லாச் சேவைகளும் அன்புடன் செய்து தன் உயர் குணங்களால் தந்தைக்குப் புகழை வருவித்து அந்திய காலத்தில் எல்லோரையும் முக மலர்ந்து ஆசிர்வதித்துச் செல்லத் தயங்காதிருக்கச் செய்வது தனயனின் கடனன்றோ? ஒருவன் இக் கடனை இயற்றுவது தன் தந்தைக்குப் பேருதவியும், தந்தையின் ஆத்மாவுக்குச் சாந்தியும் தன் புதல்வன் தனக்குச் செய்ய வேண்டியதற்கு ஓர் வழியைச் செப்பனிட்டுக் காட்டுதலுமாகும்.

சுய சரிதம் தேவை

ஆகவே ஒவ்வொரு தந்தையும், இல்லை, ஒவ்வொரு மனிதரும், தனக்கு அறிவு தோன்றிய நாள் முதல் வயோதிகம் மேலிட்டு அறிவு மழுங்கும் வரை தன் முன்னோர்களைப் பற்றியும் அக்காலப் பொருளாதார நிலையைப் பற்றியும், தான் அனுபவித்த நன்மை தீமைகளைப் பற்றியும், அச் சமய சுற்றத்தார்கள், நண்பர்களைப் பற்றியும் நடந்த எல்லா முக்கிய சம்பவங்களையும் உண்மையுடன் கூடிய தன் அனுபவத்தையும் சுருக்கமாக ஒரு கையெழுத்துப் பிரதியில் எழுதி தன் குடும்ப கிரந்தமென்றோ, பொக்கிஷமென்றோ, தன் பின் பரம்பரைக்கு உதவ வேண்டாமா! இக் காரியத்தைச் செய்து முடிப்பது ஒரு பெரும் மலையா? இதை எழுத ஆரம்பிக்க ஓர் நல்ல நாளும் வேண்டுமா? நமது நான்காம் தலை முறைப் பாட்டனார் உலகில் இருந்துதானே இருக்கிறார். அவர் பெயரென்ன என்பது நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்? எந்த இடத்தில் வசித்தார், என்ன தொழில் செய்தார், இவை போன்ற வினாக்களுக்கு உத்தரம் கொடுக்கச் சக்தியற்றவர்களாக நாமிருப்பது கேலிக்கிட மில்லையா? இவ்விதம் ஒவ்வொருவரும் வைத்துச் செல்லும் கிரந்தங்களையேபிதிர்தெய்வங்களாகப் பாவித்துப் பூஜிப்பது நமக்கும் நம்மைச் சூழ்ந்து நிற்கும் நம் பரிவாரங்களுக்கும் எத்துணை இன்பந் தரும்! இவ்விதம் பெறும் அனுபவ ஞானத்தில் எவ்வித நன்மையும் இல்லையென யார்தான் சொல்ல முன் வருவார்கள்? இச் சுய சரிதம் எழுத இரண்டணா ஒவ்வொருவரும் செலவிடக் கூடாதா? இன்றே எழுதத் துவங்குவதில் தடை ஏதும் உண்டோ?

ருஷியாவின் சர்வாதிகாரியாயிருந்து 1924ம் வருஷம் இறந்து போன லெனினின் தேகம், தைலப் பாதுகாப்பிடப் பெற்று, மாஸ்கோவில் ஒரு பொருட்காட்சியாக வைக்கப் பெற்றிருக்கிறது. சென்ற பதின் மூன்று வருஷ காலத்தில் 1,15,00,000 ஜனங்கள் இதனைச்சென்று பார்வையிட்டிருக்கிறார்கள்.

விமோசனம் உண்டா?

—சு. குருசாமி
B. A.,

'தமிழுக்கு விமோசனம் ஏது? மேனாட்டு ஆசிரியர்கள் எவ்வளவு அழகான கதைகளும், நாவல்களும், நாடகங்களும் எழுதுகிறார்கள்! இவ் விஷயத்தில் வட இந்திய ஆசிரியர்களாவது சிறிது தேவலை; நமது தமிழ் ஆசிரியர்கள் சுத்த மோசம்; உதவாக் கரைகள்!' என்றேன்.

'தமிழ் வசன இலக்கியம் ஆரம்பித்துச் சில வருஷங்கள் தானே ஆகிறது. அதற்குள் எவ்வளவோ முன்னேற்றத்தைக் காண்கிறோமே!' என்றார் நண்பர் சுப்பிரமணியம்.

'அழகிய உயர்தரத் தமிழ் நாவல் ஒன்றாவது நான் படித்துவிட்டுச் சாவேனென்று எனக்கு நம்பிக்கை இல்லை'.

'ஆசிரியர் சுந்தரேசன் எழுதியதைப் படித்திருக்கிறீர்களா?'

'இல்லை'.

'வெகு அழகாய் எழுதுகிறார். அவர் என் நண்பர்தான். ஒரு நாளைக்கு உங்களிடத்தில் கூட்டிக் கொண்டு வருகிறேன்'.

ஃ ஃ ஃ ஃ

மேற்கூறிய சம்பாஷணை நடந்து சில தினங்களுக்குப் பின் திருவல்லிக் கேணிக் கடற்கரையில் நானும் நாகராஜனும் சமுத்திரத்தை நோக்கி உட்கார்ந்திருந்தோம். சிற்றலைகளும், பேரலைகளும் கரையில் வந்து மோதிக் கொண்டிருந்தன. அகங்காரங் கொண்ட அலைகளிற் சில, நாங்கள் உட்கார்ந்திருந்த இடம் வரைக்கும் வந்து எங்களுடைய கால்களைக் கழுவிவிட்டுச் சென்றன. எக்காலந் தொட்டு அலை முழங்குகின்றன, இனி எக்காலம் வரை அலை முழங்கிக்கொண்டிருக்கும் என்று நினைக்கலானேன். திடீரென்று என்னையுமறியாமல், 'கடலே, நீ ஏன் ஓயாது அலறுகிறாய்? வானத்தைப் பார்' என்றேன்.

'கடல் அலறுவதன் காரணம் உனக்குத் தெரியவில்லையா?' என்று நாகராஜன் கேட்டான்.

என்னுடைய சிந்தனை கலைவதற்கு எனக்கு இஷ்டமில்லை. ஆகையால் நாகராஜன் கேள்விக்கு யாதொரு பதிலுஞ் சொல்லாமல் யோசித்துக் கொண்டிருந்தேன்.

நாகராஜன் மீண்டும் பேசினான். 'பண்டைத் தமிழகத்தை விழுங்கின பாவத்திற்குப் பிராயச் சித்தமாக அன்றிருந்து இன்றுவரை கடல் அலறிக் கொண்டே இருக்கிறது'.

'மடையா! அதற்கு முன்னால் கடல் கர்ஜிக்கவில்லையோ? காரணமாவது சரியாய்க் கற்பிக்கத் தெரிகிறதா, உனக்கு? நான் சொல்லுகிறேன், பார். பாக்கியுள்ள தமிழ் நாட்டையும் விழுங்காமல் விட்டு விட்டோமே என மார்பில் அடித்தும், கரையில் மோதியும், தன்னைத் தானே நொந்து கொள்ளுகிறது கடல்'.

'ஏன் அப்படிச் சொல்லுகிறாய்?'

இக் கேள்விக்குப் பதில் சொல்ல எனக்கு இஷ்டமில்லை. மௌனமாயிருந்தேன்.

'அங்ஙனம் நீ விரும்புவதன் காரணம் என்ன?' என்று நாகராஜன் மீண்டும் வினவினான்.

'உனக்குத் தெரியவில்லையா?'

'தெரியவில்லை'.

'தமிழ் இலக்கியத்தைப் பார்; அதில் புதுமை மணம் வீசவில்லை, கம்பராமாயண காலத்திலிருந்து புதிய ஊற்றுக்கள் அதில் ஒன்றுந் தோன்றவில்லை.'

'கமலாம்...............' என்று ஆரம்பித்தான் நாகராஜன்.

'கமலாம்பாள் சரிதையையும், பிரதாப முதலியார் சரித்திரத்தையும் இன்னும் எத்தனை வருடங்களுக்குத் தான் சொல்லிக் கொண்டிருப்பீர்கள்? இந்த நூற்றாண்டு முழுவதுஞ்சொல்லுவீர்களா? அவைகளின் பெயரைக் கேட்டுக் கேட்டு என் காது கூடப் புளித்து விட்டது.'

எனக்குக்கோபம் பொறுக்க முடியவில்லை.

ஃ ஃ ஃ

அச்சமயம் நண்பர் சுப்பிரமணியம் ஒரு வாலிபருடன் வந்து சேர்ந்தார்.

'இலக்கியப் பேச்சுத்தான் நடந்து கொண்டிருக்கிறது போலும்; சரியான சந்தர்ப்பந்தான். இவர்தான் ஆசிரியர் சுந்தரேசன். உங்கள் வீட்டிற்கெல்லாம் போய்த் தேடி விட்டல்லவா வருகிறோம்' என்றார்.

எங்களுக்கு முன்னால் நின்று கொண்டிருந்த வாலிபரைப் பார்த்தேன். 'கிராப்' என்ற பெயருள்ள ஒரு பரட்டைத் தலை. அதைச் சீவி விட்டு எத்தனை நாட்களாயினவோ? அதற்கும் எண்ணெய்க்கும் வெகு நாள் பகையாயிருந்திருக்க வேண்டும். இரண்டு வாரங்களுக்கு மேல் க்ஷவரஞ் செய்யப்படாத அவருடைய தாடி, மீசை உரோமங்கள், சிறுசிறு இரும்பு ஊசிகள் போல் அங்கங்கே நீட்டிக்கொண்டிருந்தன. ஆசிரியர்கள் கண்களிலிருந்து ஞான ஒளி வீசுமென்பார்கள். அவருடைய கண்களிலோ, முகத்திலோ நான் எத்தகைய பிரகாசத்தையும் பார்க்கவில்லை. இத்தனைக்கும் முடி சூடுவது போல், அழுக்கு வேஷ்டியும், ஷர்ட்டும் அணிந்திருந்தார். அவருடைய தோற்றம் அருவருப்பை ஊட்டியது.

'ஆசிரியரென்றால் நாவலாசிரியரா, நாடகாசிரியரா?' என்று குத்தலாகக் கேட்டேன்.

'இன்னும் இவர் வாலிபர் தானே; இப்பொழுது கட்டுரைகளுங் கதைகளும் எழுதுகிறார். இனிமேல் நாடகங்களும், நாவல்களும் எழுதுவார்' என்றார் சுப்பிரமணியம்.

இருவரும் உட்கார்ந்தார்கள்.

'இவருடைய கதைகளைக் கூட நீங்கள் பத்திரிகைகளில் படித்திருக்கலாமே!' என்று மீண்டும் சுப்பிரமணியம் சொன்னார்.

'நான் தமிழ் பத்திரிகை படிக்கும் வழக்கத்தை விட்டு வெகு நாளாய் விட்டது.'

இங்ஙனங் கூறுவதில் உள்ளூற நான் சிறிது பெருமை கொண்டேன்.

கொஞ்ச நேரம் யாவரும் மௌனமாயிருந்தோம். ஆசிரியர் சுந்தரேசன் இலக்கிய விஷயமாய் ஏதாவது பேசுவார் என்று எதிர் பார்த்தேன். ஆனால் அவர் ஒன்றும் பேசாமல் உட்கார்ந்திருந்தார். அவருடைய தோற்றந்தான் எனக்குத் திருப்தி அளிக்கவில்லை; ஆசாமியின் பேச்சு எப்படியிருக்கிறதென்று பார்க்கலாம் என நானே சிறிது கிண்ட வாரம்பித்தேன்.

'மேனாட்டு ஆசிரியர்கள் எல்லாத் துறைகளிலும் மிக்க அநுபவம் வாய்ந்தவர்களாயிருக்கிறார்கள். அவர்களுடைய கதைகளெல்லாம் வாழ்க்கையிலிருந்து அப்படியே எடுக்கப் பட்டிருக்கின்றன. அவைகளில் ஒரு ஜீவநாடி ஓடுகிறது. அவர்க

னுடைய சிருஷ்டிகளெல்லாம் உயிருள்ளவை' என்றேன்.

தனக்குத் தெரிந்த ஆசிரியர்களை உதாரணமாகக் காட்டிச் சுந்தரேசன் இவ் விஷயத்தை மேலும் விளக்குவார் என்பது என் எண்ணம். அவர் ஒன்றும் பேசாமலிருப்பதைக் கண்டு, நான் மேலுங் கூறலானேன். 'தொழிலாளர்களின் நிலைமையை உள்ளது உள்ளபடி அறிந்து எழுதுவதற்கு, அப்டன் சிங்க்ளேர் என்னும் அமெரிக்க ஆசிரியர், தாமே மில்களுக்குச் சென்று ஒரு சாதாரணக் கூலியாக இருந்து வேலை செய்வாராம். அத்தகைய ஆசிரியர்கள் நமது நாட்டில் எங்கே இருக்கிறார்கள்?' என்றேன்.

'ஏன், நம் நாட்டிலும் ஓரிருவர் இருக்கிறார்கள்'. பதில் சொன்னது சுப்பிரமணியம்; சுந்தரேசனல்ல!

'மேலும் ஓர் ஆசிரியனுக்கு இலக்கியக் கலையில் நல்ல பயிற்சி இருப்பதோடு, சிற்பம், சித்திரம், சங்கீதம் முதலிய இதர கலைகளிலும் சிறிது பரிச்சயம் இருக்க வேண்டும். நமது ஆசிரியருக்கும் அவைகள் கொஞ்சந் தெரிந்திருக்குமென்று நம்புகிறேன்' என்றான் நாகராஜன்.

'அவைகள் ஒன்றும் எனக்குத் தெரியாது' என்றார் சுந்தரேசன்.

'இதர கலைகள் அறிந்திருக்க வேண்டிய அவசியமில்லை; இலக்கியக் கலை நன்கு தெரிந்திருந்தால் போதும்' என்று சுப்பிரமணியம் தனது நண்பருக்காக வக்காலத்து வாங்கிப் பேசினார். அவர் பி. எல். வகுப்பில் படித்துக்கொண்டிருக்கிறார்!

'அப்டன் சிங்க்ளேரின் நாவல்கள் ஏதாவது படித்திருக்கிறீர்களா?' என்று நான் சுந்தரேசனைக் கேட்டேன்.

'இல்லை'.

'கார்க்கியின் 'அன்னை' படித்திருப்பீர்கள்' என்றான் நாகராஜன்.

'இல்லை'.

நான் ஆச்சரியமுற்றேன். பிரபல ஆசிரியர்களின் புத்தகங்களைப் படிக்காத இவர் எப்படிக் கதைகள் எழுத முடியும் என்று எனக்குத் தெரியவில்லை. சுப்பிரமணியத்திற்குங் கூட இது அதிசயமாயிருந்தது. பிறகு சுமார் பத்து நிமிஷங்கள் வரை ஒருவரும் ஒன்றும் பேசவில்லை. ஆசிரியர் சுந்தரேசனுடைய முகத்தைப் பார்க்கப் பரிதாபகரமாயிருந்தது. சில சமயம் தரையை நோக்கிக் கொண்டிருப்பார். சில சமயம் சமுத்திரத்தை நோக்குவார். நிமிஷத்திற்கு நிமிஷம் அவருடைய முகத்தின் நிறம் மாறியது. ஒன்றும் பேசாமலிருப்பது அவருக்கே கஷ்டமாயிருந்தது. ஆனால் பாவம்! பேசத் தெரியவில்லை! 'இவர்களிடத்தில் அகப்பட்டுக் கொண்டு இப்படி விழிக்க வேண்டியிருக்கிறதே' என்று நினைத்தார் போலும். தப்புவதற்கு ஒரு வழி தேடிக் கொண்டிருப்பதுபோல் தோன்றியது. திடீரென்று எழுந்திருந்து, 'எனக்குக்கொஞ்சம் வேலையிருக்கிறது. நான் சென்று வருகிறேன்' என்று விடைபெற்றுக் கொண்டு போய்விட்டார்.

ஃ ஃ ஃ

ஏன் தமிழ் இவ்வளவு மோசமான நிலைமையில் இருக்கிறது என்பது இப்பொழுது எனக்கு விளங்கிவிட்டது. சுந்தரேசனைப்போல் ஆசிரியர்களையுடைய ஒரு பாஷை இவ்வளவு தூரம் முன்னேறியிருப்பதே ஆச்சரியமல்லவா? ஆனால் சுப்பிரமணியம், தனது நண்பரை நான் அவமானப்படுத்தித் துரத்திவிட்டதாக என்னைக்

குற்றஞ் சாட்டினார். எனக்குக்கோபம் பொறுக்க முடியவில்லை. 'நாலு பேருக்கு மத்தியில் இரண்டு வார்த்தைகள் பேசத் தெரியவில்லை! இவனெல்லாம் ஆசிரியனாம்! இவனுக்கெல்லாம் என்ன எழுதத் தெரியும்? 'கட்டியணைத்து முத்தமிட்டார்கள்' என்று கழிசறைக் காதற் கதைகள் எழுதுவான்!' என்றேன்.

'ஆசிரியருக்குப் பேசத் தெரிய வேண்டுமென்று எந்த சாஸ்திரத்தில் எழுதி யிருக்கிறது?' என்று சுப்பிரமணியம் கேட்டார்.

'ஆசிரியனா யிருப்பவன் நானாவித மான ஜனங்களோடு பழகி, பேசி, அவர்களிடம் துளாவித் துளாவிக் கேள்விகள் கேட்டு வாழ்க்கையை யறியவேண்டும். அவன்தான் பேராசிரியனாய் விளங்க முடியும்' என்றேன்.

'ஆசிரியனுக்குக் கண்களுங் காதுகளுங் கூர்மையாயிருந்தால் போதும். நாவை உபயோகிக்க வேண்டிய அவசியமில்லை. ஆலிவர் கோல்டுஸ்மித்தும், அடிசனும் வெகு அழகாய்ப் பேசுவார்களோ?' என்றார் சுப்பிரமணியம்.

எனக்குக் கோபம் பொங்கியது. குருடனெல்லாந் தன்னை மில்டனென்றும், பித்தனெல்லாந் தன்னைச் சார்ல்ஸ் லாம்பென்றும், பேசத் தெரியாதவனெல்லாம் தன்னைக் கோல்டு ஸ்மித்தென்றுந்தான் நினைத்துக்கொண்டு திரிகிறான்கள், மடைய சாம்பிராணிகள்!' என்றேன்.

இதற்குமேல் சுப்பிரமணியம் வாய் திறக்கவில்லை. என்ன சொல்லுவார்?

ஃ ஃ ஃ ஃ

அப்புறம் வெகு நாள் வரைக்கும் ஆசிரியர் சுந்தரேசனை நான் பார்க்கவில்லை. அவரைப்பற்றிக் கேள்விப்படவுமில்லை. சில தினங்களுக்கு முன்னால் எழும்பூர் ஷ்டேஷனுக்குப் பக்கத்தில் அவரைச் சந்தித்தேன். அதே அழுக்குத் துணியும், ஷர்ட்டும் அணிந்துகொண்டு பைத்தியக்காரனைப்போல் போய்க்கொண்டிருந்தார். என்னைக் கண்டதும் இலேசாய்ப் புன்னகை செய்தார். ஆனால் அந்தக் கிறுக்கனோடு அறிமுகம் உள்ளவனாய்க் காட்டிக் கொள்வதற்கே எனக்கு வெட்கமாயிருந்தது. அவரைப் பாராதவன்போல் நான் போய்விட்டேன்.

ஃ ஃ ஃ

இரண்டு நாட்களுக்கு முன்பு நான் என் அறையில் உட்கார்ந்து, தாமஸ் ஹார்டி நாவல் ஒன்றைப் படித்துக்கொண்டிருந்தேன். மத்தியானம் சுமார் ஒரு மணி யிருக்கும். கையில் ஒரு பத்திரிகையுடன் சுப்பிரமணியம் ஓடி வந்தார். 'சுந்தரேசனுடைய திறமையைப்பற்றி நான் எவ்வளவு கூறியும் உங்களுக்கு நம்பிக்கையில்லை. இந்தக் கதையைப் படித்துப் பாருங்கள்' என்றார்.

நாவலில் கதாநாயகன் கதாநாயகியை முத்தமிடப் போகுங் கட்டம். இவ்வழகிய பாகத்தில் 'சிவ பூஜை வேளையில் கரடி வந்தது' போல் இவன் எங்கடா இருந்து வந்தான் என்று மனதிற்குள் நினைத்துக்கொண்டு, 'இப்பொழுது எனக்கு நேரமில்லை' என்றேன்.

'இதைப் படித்துப் பாருங்களேன், எவ்வளவு அழகா யிருக்கிறதென்று' என என்னைத் தொந்திரவு பண்ணினார் சுப்பிரமணியம். ஆசாமி என்னை விடமாட்டார்போலத் தோன்றியது. தலைவிதியே என்று ஹார்டியின் நாவலை வலது கையில் பிடித்த வண்ணம் இடது கையினால் பத்திரிகையை வாங்கிப் படிக்க வாரம்பித்தேன். கொஞ்சநேரத்தில் வலதுகையிலிருந்த நாவல் விழுந்ததைக்கூட நான்கவனிக்

கவில்லை. 'போர்ட்டர் மாரியப்பன்' என்னும் அக்கதை உண்மையிலேயே வெகு அழகா யிருந்தது. ரயில் கூலி ஒருவனுடைய வாழ்க்கையின் உள்ளும் புறமும் அதில் வெகு அழகாய்ச் சித்திரிக்கப் பட்டிருந்தது. மேனாடுகளில்கூட ஓரிரு பேராசிரியர்களால் தான் அத்தகைய வாழ்க்கைச் சித்திரம் வரைய முடியும். அதை அழியாச் சிறு கதைகளில் ஒன்றாய் மதிக்க வேண்டும். ஆனால் சுந்தரேசன் இவ்வளவு அழகாய் எழுதி யிருப்பார் என்று நான் நம்ப வில்லை. 'எத்தனை கோவில்களில் வேண்டுமென்றாலும் சத்தியஞ் செய்யத் தயார்; இது ஆசிரியர் சுந்தரேசனுடைய சொந்தக் கதை யல்ல!' என்றேன்.

'இம்மாதிரிக் கதை நீங்கள் வேறு எங்காவது படித்திருக்கிறீர்களா?' என்று சுப்பிரமணியம் கேட்டார்.

'இதுவரை படித்ததில்லை; ஆனால் இதன் மூலம் வேறு எந்த பாஷையிலாவது இருக்கு மென்று நிச்சயமாய்ச் சொல்லுவேன்'. இங்ஙனம் சொல்லி முடிப்பதற்குள், சில தினங்களுக்கு முன்னால் ஆசிரியர் சுந்தரேசனை எழும்பூர் ஸ்டேஷனுக்குச் சமீபத்தில் பார்த்தது திடீரென்று ஞாபகம் வந்தது. 'அத்தகைய ஆசிரியர்கள் தமிழிலுமா இருக்கிறார்கள்?' என்று அடுத்த நிமிடமே என் மனதில் ஓர் குரல் சொல்லியது. என்னவிருந்தாலும் நான் கடற் கரையில் அன்று பார்த்த அசடு இக் கதையை எழுதி யிருக்காது என்று தீர்மானித்தேன்.

அச் சமயம் வெளியி லிருந்து யாரோ ஒருவர் என்னைக் கூப்பிடும் சப்தங் கேட்டது. கிருஷ்ணன் வருவதாக எழுதி யிருந்தான். அவனாகத்தானிருக்கலாம் என்று 'கிருஷ்ணா! உள்ளே வாயேன்' என அறையிலிருந்தவாறே கத்தினேன். ஆனால் இரண்டு மூன்று நிமிஷங்களாகியும் அவன் வரவில்லை. போர்ட்டரோடு ஏதோ தகராறு செய்து கொண்டிருந்தான்.

'சாமான்களை உள்ளே கொண்டு வந்தால்தான் காசு கொடுப்பேன்' என்றான் கிருஷ்ணன்.

'காசு கொடுக்கா விட்டால் போங்கள். இந்த வீடென்று முன்பே தெரிந்திருந்தால் வந்திருக்க மாட்டேன்' என்று சொல்லிச் சாமான்களைத் திண்ணையிலே வைத்துவிட்டுப் போர்ட்டர் நடக்க வாரம்பித்தான்.

இதைக் கவனித்துக் கொண்டிருந்த நான் ஆச்சரிய முற்றேன். பேசின பணத்திற்குமேல் அரையணாவாவது அதிகம் வாங்காமல்செல்லும் போர்ட்டரை என் சிறிய வாழ்க்கையில் நான் இதுவரை கண்டதில்லை. அங்ஙனமிருக்க, மத்தியான வெய்யிலில் ஸ்டேஷனிலிருந்து சுமார் ஒரு மைல் தூரம் கழுத்து வலிக்கச் சாமான்களைச் சுமந்து கொண்டு வந்து விட்டு ஒரு பைசா கூட வாங்காமல் செல்லும் இவ்வதிசயப்போர்ட்டர் யார் என்று பார்க்க விரைவாய் வெளியில் சென்றேன். அப்போர்ட்டரைப் பார்த்ததும் என் கண்களை நம்பமுடியவில்லை. அப்படியே பிரமித்து நின்றேன். இரண்டொரு நிமிஷங்களுக்கப்புறம் கிருஷ்ணனைப் பார்த்து, 'அதோ போகிறாரே, அவரா உன் சாமான்களைச் சுமந்து கொண்டு வந்தது?' என்று கேட்டேன்.

'ஆமாம். அந்த அகங்காரம்பிடித்த பயல்தான்' என்றான் கிருஷ்ணன்,

அழுக்கு வேஷ்டியும், கிழிந்த பனியனும் அணிந்து கொண்டு ஆசிரியர் சுந்தரேசன் தெருவழியே போய்க்கொண் டிருந்தார்!

இந்தியாவில் நான் கண்டதென்ன?

—லார்ட் சாமியல்

லார்ட் சாமியல், ஹரிபுரா காங்கிரசுககு விஜயஞ் செய்த பிரமுகர்களில் ஒருவர் என்பது வாசகர்களுக்குத் தெரியும். இவருக்கு இப்பொழுது 68 வயதாகிறது. பிரிட்டிஷ் மந்திரிச் சபையில் பல பொறுப்பான உத்தியோகங்களை வகித்தவர், 1931ம் வருஷம் ஸ்ரீ ராம்ஸே மாக்டோனால்டைப் பிரதம மந்திரியாகக் கொண்டு நடைபெற்ற தேசீய அரசாங்கத்திலும், அதற்கு முன்னரும் உள் நாட்டு மந்திரியாகவும், தபால் இலாகா மந்திரியாகவும் வேலை பார்த்திருக்கிறார், பாலஸ்தீனத்தில் ஹை கமிஷனராயிருந்திருக்கிறார். தற்போதைய இந்தியா அரசாங்கச் சட்டம், பார்லிமெண்டில் வாதத்திற்கு வந்தபோதும், வட்ட மேஜை மகா நாடுகள் கூடிய காலத்திலும் இந்தியா விஷயத்தில் அதிக அக்கரை காட்டியவர். இவர் ஒரு தத்துவ ஞானி. இது சம்பந்தமாகச் சில நூல்களும் எழுதி யிருக்கிறார். ஸர் ஹேர்பர்ட் சாமியல் என்ற இவருடைய பூர்வப் பெயரைச் சொன்னால் எல்லாருக்கும் தெரியும்.

லார்ட் சாமியல்

இந்தியாவைப் பற்றி எனக்கேற் பட்ட முதல் அபிப்பிராயம் என்னவென்றால், அது விருந்தாளிகளை வரவேற்று உபசரிப்பதிலே மிகச் சிறந்த நாடுஎன்பதாகும். எங்குச் சென்றாலும் ஜனங்கள் அன்புடன் உபசரிக்கிறார்கள்.

இரண்டாவது அபிப்பிராயம் என்னவென்றால், ஜனங்களுடைய மனோசக்தி இப்பொழுது மிகவும் அபிவிருத்தி யடைந்திருக்கிறதென்பது. இந்தியா ஒரு 'தூங்கு மூஞ்சி தேசம்' என்று முன்னர், ஐரோப்பாவில் பலர் நினைத்த துண்டு. ஆனால் அந்தக் காலமெல்லாம் இப்பொழுது மலையேறிவிட்டது. இப்பொழுது இந்தியாவில் எங்குப் பார்த்தாலும் மகாநாடுகள் தான்; கமிட்டிகள் தான்; அரசியல் பேச்சுக்கள் தான். தங்கள் நாட்டின் கைத்தொழில், பொருளாதாரம், அறிவு முதலியவற்றை அபிவிருத்தி செய்ய வேண்டு மென்பதிலே இந்தியர்கள் மிகவும் முனைந்திருக்கிறார்கள்.

நான் சுற்றிப்பார்த்தது

ஏதோ காரியார்த்தமாக நான் இந்தியாவுக்கு வந்தேன் என்று யாரும் நினைக்க வேண்டாம். இந்தியாவில் புதிய அரசியல் திட்டம் எப்படி வேலை செய்கிறது என்பதைப் பார்த்துப் போகவே நான் வந்தேன். சென்ற பதினோரு வாரங்களில் ஆறு மாகாணங்களையும், இந்தியாவின் தலை நகரமாகிய டெல்லியையும், ஏழு சுதேச சமஸ்தானங்களையும் நான் சுற்றிப் பார்த்தேன். சுமார் நூறு தலைவர்களைக் கண்டு பேசினேன். இந்தச் சொற்ப காலத்திற்குள் இந்தியாவைப் பற்றிப் பூரணமாகத் தெரிந்துகொண்டு விட்டேன் என்று நான் எண்ணவுமில்லை; சொல்லவுமில்லை. இந்தப்

பெரிய நாட்டில், பல கொள்கைகள் நிறைந்த ஜன சமூகத்தின் மத்தியில் இரண்டு மாத காலம் சுற்றுப்பிரயாணம் செய்து விட்டு, திட்டமான சில முடிவுகளைச் சொல்வது மிக ஆபத்து என்பதை நான் நன்குணர்ந்திருக்கிறேன். ஆனால் இந்தியப் பொதுஜன அபிப்பிராயம், எந்தெந்த வகையில் ஒன்றுபட்டிருக்கிறதென்பதை மட்டும் இப்பொழுது சுருக்கமாகக் கூற விரும்புகிறேன்.

மந்திரிச் சபைகள்

புதிய திட்டத்தின் கீழ் மாகாணங்களில் வேலை செய்துவரும் மந்திரிச் சபைகள் மிகத்திறமையாக நடந்து வருகின்றன என்பது எல்லோருடைய ஏகோபித்த அபிப்பிராயம். பிரிட்டிஷ் அதிகாரிகளாகட்டும், ஸ்ரீ காந்தி உள்பட்ட மற்ற காங்கிரஸ் தலைவர்களாகட்டும், வியாபாரத் துறையிலே ஈடுபட்டவர்களாகட்டும், எல்லோரும் இது விஷயத்தில் ஒரு முகமான அபிப்பிராயந்தான் கொண்டிருக்கிறார்கள். சிறந்த ராஜதந்திரிகளுக்கு வேண்டிய எல்லா குணங்களும் இந்த மந்திரிமார்களிடத்தில் அமைந்திருக்கின்றன. ஓரிரண்டு சிறிய மாகாணங்களில், மந்திரிகள் தங்களுடைய பொறுப்பைச் சமாளிக்கக் கொஞ்சம் சிரமப்படுகிறார்கள் என்று சொல்லப்படுகிறதேயானாலும், பொதுவாக எல்லாம் ஒழுங்காகவே நடைபெற்று வருகின்றன. இந்தியாவுக்கு மாகாணப் பொறுப்பாட்சி கொடுத்துவிட்டால், குழப்பமும் கலகமுந்தான் உண்டாகும் என்று பிரிட்டிஷ் பார்லிமெண்டில், ஸ்ரீ சர்ச்சிலைத் தலைமையாகக் கொண்ட சில பிற்போக்காளர்கள் கத்தினார்களே, அவையெல்லாம் ஒன்றும் நிகழவில்லை.

சமரஸ மனப்பான்மை

பீஹார் மாகாணத்திலும் ஐக்கிய மாகாணத்திலும் ஏற்பட்ட மந்திரிச் சபைகளின் ராஜீநாமா நெருக்கடி, எல்லாருக்கும் ஓர் ஆச்சரியத்தையே உண்டாக்கியது. இந்த நெருக்கடியைப்பற்றி அபிப்பிராயங்கூறுவதற்கு நான் அருகனல்லன். ஆனால் இந்த நெருக்கடியை, காங்கிரஸ் தலைவர்கள் எவ்வளவு நிதானமாக இருந்து சமாளித்தார்கள் என்பதை நான் நேரில் பார்த்து வியப்புக்கொண்டேன். ஹரிபுராவில் நடைபெற்ற காங்கிரஸில் நான் ஆஜராயிருந்தேன். இந்தக் காங்கிரஸுக்கு எவ்வளவு திறமையான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன! எவ்வளவு ஜனங்கள் வந்திருந்தார்கள்! இந்த இடத்தில் நான் சந்தித்த ஸ்ரீகாந்தி முதலிய காங்கிரஸ் தலைவர்கள், மந்திரிகள் ராஜீநாமா நெருக்கடி விஷயத்தில் மிகுந்த சமரஸ மனப்பான்மையைக் காட்டினார்கள். இதே மனப்பான்மையை, ராஜப்பிரதிநிதியும் மாகாண கவர்னர்களும் காட்டுவார்கள் என்று நான் நம்புகிறேன். அப்படி இருதரப்பினரும் ஒத்துப் போகாவிட்டால், மந்திரிச் சபைகள் மூலமாகத் தேசமெங்கணும் நடைபெறுகிற நிர்மாண வேலைகள் நிலைகுலைந்து போகும்.

கஷ்டமான வேலை

இந்தச் சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தின் வேலையும் மிகவும் கஷ்டமானது. நமக்கு உயர்ந்த லட்சியங்களும் நல்ல எண்ணங்களும் இருக்கலாம். அவற்றை மசோதாக்களாகவும், அரசாங்க உத்திரவுகளாகவும் தயாரிப்பதில் எவ்வளவு சிரமம் இருக்கிறதென்பதை நான் நன்கறிவேன். அவசரத்தில் தவறுகள்

நிகழ்வது சகஜந்தான். ஒரு தலை முறையினுடைய ஆவலை ஒரு வருஷத்தில் பூர்த்தி செய்வதென்றால் அது மிகவும் கடினம். புதிய மந்திரிச் சபைகளை ஆதரிப்போர் இவற்றை உணர்தல் நல்லது. பணவிஷயமும் ஒரு முக்கியமான பிரச்னை. 'வரி செலுத்துவோரிட மிருந்து குறைவாகப் பெற்று, அரசாங்கப் பொக்கிஷத்திலிருந்து அதிகமாகச்செலவழிக்கவேண்டும்' என்று யாரோ ஓர் அரசியல் வாதி சொன்னானம். இந்த யோசனை என்னவோ நல்லதுதான். ஆனால் இதை அநுஷ்டானத்திற்குக் கொண்டு வர ஆரம்பித்தால், தேசத்தின் அரசியலும் பொருளாதாரமும் சீர் குலைந்து விடும்.

சமஷ்டி

மற்றொரு விஷயத்திலும் எல்லோரும் ஒரே மாதிரியான அபிப்பிராயங் கொண் டிருக்கிறார்கள். அகில இந்தியாவுக்கும் சமஷ்டி அரசியலை ஏற்படுத்தும் விஷயந்தான் அது. சமஷ்டி அரசியல்தான் தேவை என்று காங்கிரஸ் தலைவர்களும் சமஸ்தானதிபதிகளும் சொல்கிறார்கள். ஆனால், எல்லாரும் சமஷ்டியை, கொள்கை யளவிலே தான் ஆதரிக்கிறார்கள். 'கொள்கை யளவிலே ஒரு விஷயத்தை ஆதரிப்பதாக ஒருவன் சொன்னால், அதனை அநுஷ்டானத்திற்குக் கொண்டு வருவதில் அவனுக்கு இஷ்டமில்லை யென்று அர்த்தம்' என்று பிஸ்மார்க் ஒரு சமயம் கூறியது இப்பொழுது எனக்கு ஞாபகம் வருகிறது. என்னைப் பொறுத்த மட்டில் இந்தியாவில் சமஷ்டியை ஸ்தாபிப்பது மிகவும் அவசியம் என்று கருதுகிறேன். இது சம்பந்தமாக லார்ட் லோதியன் கூறிய அபிப்பிராயத்தை நான் முற்றிலும் ஆதரிக்கிறேன். இந்தியாவின் பெருமைக்கு ஏற்றாற்போல் மத்திய அரசாங்கமானது, ஜன நாயக முறையில் அமைய வேண்டு மென்று அவர் சொன்னார். இது முற்றிலும் சரி. தற்போதைய இந்தியா அரசாங்கச்சட்டத்தில் காணப் பெறும் சமஷ்டி சம்பந்தமான அமிசங்கள் ஆட்சேபகரமானவை என்று பலர் கூறுகின்றனர் என்பதை நான் அறிவேன். ஆனால் எந்த அரசியல் திட்டத்தையும் வேலை செய்து பார்த்தால்தான் அதன் கண்ணுள்ள குறை நிறைகள் நன்கு தெரியும். இதுதான் லார்ட் லோதியனுடைய அபிப்பிராயமும்.

வகுப்புப் பிரச்னை

இந்தியாவின் அரசியலிலே வகுப்புப் பிரச்னை ஒரு சிக்கலான விஷயம். சில சந்தர்ப்பங்களில் ஹிந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும், சீக்கியர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் ஏற்படுகிற பிணக்குகள் மிகவும் விசனிக்கத் தக்கதா யிருக்கிறது. மத வேற்றுமைகளை, அரசியலிலும் பொருளாதாரத்திலும் கொண்டு புகுத்துவதனால், தேசத்தின் முற்போக்கு தடைப்படுகிறது. வகுப்புத் தலைவர்கள் இதனை விரைவில் உணர்தல் நலம். மதமானது, மனித சமூகத்தை அன்பினால் ஒன்று படுத்த வேண்டிய ஒரு சாதனமாக இருக்க வேண்டுமே தவிர, சச்சரவுகள் ஏற்படுவதற்கு அதுவொரு கருவியாயிருக்கக் கூடாதல்லவா?

கிராம சேவை

என்னுடைய சுற்றுப் பிரயாணத்தில் பல கிராமங்களையும் சென்று பார்த்தேன். இவர்களுடைய தரித்திர வாழ்க்கையும், இவர்கள் வசிக்கிற பரிதாபகரமான குடிசைகளும், இந்தியாவின் தற்காலப் பிரச்னையில் மிகவும்

முக்கியமானவை. இந்தக் குறையை நிவர்த்திக்கப் பல இயக்கங்கள் தோன்றியிருக்கின்றன. இந்த இயக்கங்களுக்கு பூரண ஆதரவு கொடுக்க வேண்டுமென்கிற விஷயத்திலும் பொதுஜன அபிப்பிராயம் ஒரு முகமாக இருக்கிறது. பஞ்சாபிலும், இன்னும் சில இடங்களிலும் கிராம புனருத்தாரண வேலை நடைபெறுவதை நான் நேரில் பார்த்தேன். இந்தப் புனருத்தாரண வேலைக்கு அடிப்படையாகத் தேவையானது கல்வியபிவிருத்தி. இதனைக் கிராம ஜனங்களுக்கு அதிகமாக அளிக்க வேண்டும். இங்ஙனமே, ஸ்திரீகளுக்கும் கல்வி புகட்டி, சமூகத்தில், ஆண்களுக்குச் சமதையான அந்தஸ்து அளிக்க வேண்டும். இந்தக் கல்வி வளர்ச்சியின் மூலமாக, விவசாய உற்பத்தியும், கைத்தொழிலபிவிருத்தியும் அதிகமாகுமல்லவா? இந்தியாவின் பொருளுற்பத்தி சக்தியை அதிகப் படுத்த இன்னும் அநேக மார்க்கங்கள் இருக்கின்றன.

உழைப்பாளிகள் தேவை

எந்த நாட்டிலும், அந்த நாட்டின் ஜன சமுதாயம் முன்னேற்றமடைய வேண்டுமானால், அறிவும், ஊக்கமும் நிறைந்த உழைப்பாளிகள் தேவை. இந்த உண்மையை, இந்தியாவிலுள்ள பணக்கார சமூகத்தினர் இன்னும் சரியாக உணரவில்லையென்று நான் நினைக்கிறேன். 'கொடுக்காமலே வாங்கிக் கொண்டிருப்பது மகா கேவலமானது' என்று எமர்ஸன் கூறுகிறான். ஆனால், இந்தியாவிலுள்ள பணக்கார சமூகத்தினரிடையும் இப்பொழுது சுறு சுறுப்பு காணப்படுகிறது. ஆகவின், கிராமங்களிலும், நகரங்களிலும் தேசத் தொண்டர்கள் பலர் தோன்றி ஒரு மனதுடன் உழைப்பார்களானால், பாரத சமுதாயம் மிகப் பிரகாசமான வாழ்வைக் காணும் என்பதில் சந்தேகமில்லை.

'நண்பர்களைச் சம்பாதிக்கும் உபாயம் எது?' என்ற தலைப்புடைய ஒரு நூலை கார்னிஜி என்பவர் அமெரிக்காவில் வெளியிட்டார். வெளியான எட்டு மாதங்களுக்குள் இது 5 லட்சம் பிரதிகள் செலவழிந்திருக்கின்றன.

ஃ ஃ ஃ

மூன்று தீக்குச்சியிலுள்ள கந்தகம், ஒரு மனிதனைக் கொன்று விடும்படியான சக்தியுடையது. ஆனால், ஒரு மனிதனுடைய தேகத்தில், 8 லட்சம் தீக்குச்சிகளை உற்பத்தி செய்யக் கூடிய கந்தகம் இருக்கிறது.

ஃ ஃ ஃ

பனமா என்கிற அமெரிக்கப் பிரதேசத்திலுள்ள கோலோன் என்ற ஊரில் மனிதர்களுடைய தலைகள் பக்குவப் படுத்தப் பெற்று கடைகளில் விற்கப் படுகின்றன. ஒரு தலை நூறு ரூபாய் முதல் நானூறு ரூபாய் வரை விற்கப் படுகிறது.

ஃ ஃ ஃ

பிஜித் தீவுக் கருகாமையில் மக்கோகை என்றொரு சிறிய தீவு இருக்கிறது. இங்கே, உலகத்தின் பல பாகங்களிலுமிருந்து குஷ்டரோகிகள் வந்து வசிப்பதற்கு ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. இதனை 'குஷ்டரோகத் தீவு' என்றுதான் பொதுவாக அழைப்பர்.

ஃ ஃ ஃ

சென்ற இரண்டாயிர வருஷகாலத்திற்குள் சீனாவின் மீது ஆறு வகை ஜாதியார் படையெடுத்து ஆக்ரமித்துக் கொண்டிருக்கிறார்கள். தார்த்தாரியர், துருக்கியர், கித்தானியர், ஜூசெனியர், மங்கோலியா, மஞ்சூக்கள் ஆகிய ஆறு வகையினரே இவர். ஆனால சீனா, சீனாவாகவே இருக்கிறது. ஏனென்றால், சீனாவின் மீது படையெடுத்தவர்கள், சீன நாகரிகத்தில் ஐக்கியமாகி விட்டார்கள்.

இன்ப வசனாமிர்தம்

— ச. முனிஸ்வாமி பிள்ளை

வாங்குவதைத விட கொடுப்பதில் சௌக்கியம் அதிகம்.

ஃ ஃ ஃ

நாம் வீணாகக் கழிக்கும் பொழுதை நல்ல விஷயத்தில் உபயோகிப்போமானால் நம் ஆயுள் நீடித்தது போலாகும்.

ஃ ஃ ஃ

இவ்வுலகை நந்தவனமாகச் செய்கிற சாமர்த்தியம் அன்பினிடத்திலிருக்கின்றது.

ஃ ஃ ஃ

பரிசுத்தமான மனதை யுடையவர்கள் பிறர் நிந்திப்பதைப் பொருள் செய்ய மாட்டார்கள்.

ஃ ஃ ஃ

சௌகரியத்தினால் திருஷ்டிமோகிக்கும். ஆனால் சற்குணத்தினால் உள்ளம் மோகிக்கின்றது.

ஃ ஃ ஃ

ஆநந்தமாயிருப்பது நமது கடமையாயிருக்கிறது. ஆநந்த விருத்தியுள்ளவர்கள் எப்பொழுதும் உலகத்திற்கு உபகாரம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஃ ஃ ஃ

சுய புத்தியை விற்று விட்டு பிறர் பேச்சைக் கேட்டுக் கொண்டு வாழ்க்கை நடத்துகிறவனை நம்புதல் கூடாது. அவன் எப்போதும் ஆபத்தானவன்.

ஃ ஃ ஃ

தன்னைத்தான் அறிந்து கொள்ள முயல்பவனே சிரேஷ்டன். தன்னை யாரென்று அறிந்து கொண்டவன் தான் செய்ய வேண்டிய கடமையை உணர்ந்து விடுவான்.

மனிதன் எப்போதும் இருண்ட வாழ்க்கையை வெறுக்க வேண்டும். அவன் பிரகாசமான வாழ்க்கையைக், கோர வேண்டும். இப்படிக் கோருபவனுக்குத்தான் கடவுள் அநுக்கிரகம் செய்வார்.

ஃ ஃ ஃ

ஒருவன் ஒரு காரியத்தைச் செய்யு முன்பு மூன்று முறை யோசிக்க வேண்டும். அவன் அந்த முடிவான யோசனைப் பிரகாரம் பேசவேண்டும். அவன் அப்படியே செய்கையில் அநுஷ்டித்துக் காட்ட வேண்டும்.

ஃ ஃ ஃ

நற்குணவான்களின் செயல்கள் கடவுளையும் திருப்தி செய்யும். நற்குண நற் செயல்களுடைய மனிதர்களையே உலக ஜனங்கள் பின் பற்றுவார்கள். அவர்களை மாயை அசைக்க முடியாது. கிட்டவு மணுகாது.

ஃ ஃ ஃ

மனதை அடக்கி விட்டால் எதையும் ஜெயித்து விடலாமென்று சொல்லப்படுவ துண்மை. மனம்போன போக் கெல்லாம் போகா திருந்தால் மனதுக்குச் சாந்தி ஏற்படும். அவனது அறிவும் பிரகாசிக்கும்.

ஃ ஃ ஃ

மனிதனுடைய வாழ்க்கை லட்சியம் எதுவா யிருக்க வேண்டும்? சுகம் பெறுவதா? அல்ல பின்னென்ன? ஜீவ கோடிகளுக்குச் சேவை செய்வதாகும். சேவையினால் ஞானமும், ஞானத்தினால் மோட்சமும் கடைசியில் அடையலாம்.

நல்லவர்கள் எங்கிருந்தாலும் சரி தான். அவர்களிருக்குமிடம் பெரிய க்ஷேத்திரமாகும். ஒரு சிறு குடிசையிலிருந்தாலும், காட்டிலிருந்தாலும், நீரிலிருந்தாலும், வீட்டிலிருந்தாலும், அவர்களிருக்குமிடம் எல்லோருக்கும் க்ஷேத்திரமாகக் கொண்டாடப் படும்.

ஃ ஃ ஃ

உறுதியுடன் மனச்சாந்தி பெற்று வேலை செய்வோர்களை எப்போதும் ஜனங்கள் புகழ்வார்கள். யோசனையில்லாமலும், அவசரப்பட்டும், சதா மனக் கவலையுடன் வேலை செய்வோர்களை ஜனங்கள் குற்றம் குறை சொல்லிக் கொண்டே யிருப்பார்கள்.

ஃ ஃ ஃ

'இது எனக்குச் சொந்தம்—இந்தச் சொத்து என்னுடையது' என்று நினைத்து நினைத்து வாழ்க்கையைக் கழிப்பவன் பரமதுக்கவான். அவனே அவனுக்குச் சொந்த மில்லாமலிருக்கும் போது இந்தச் சொத்து எம் மாத்திரம்?

ஃ ஃ ஃ

எப்படி ஒரு தேனீ புஷ்பத்திலுள்ள மதுரத்தை அருந்திவிட்டு, அதன் வாசனையையோ, அழகையோ கெடுக்காது செல்வதுபோல், ரிஷிகள்ஜனங்களிடை யிலிருந்து கொண்டு அவர்களுக்கு இடைஞ்சல் வராது பாது காத்துக் கொண்டிருப்பர்.

ஃ ஃ ஃ

நாம் செய்வது தவறென்று தெரிந்திருந்தும், பிடிவாதமா யிருப்பது சரியல்ல. மூடப் பிடிவாதமும் மூடபக்தியும் மனிதனுக்குப் பெரிய சத்துருக்கள். அவை நம்மை முன்னுக்கு வர வொட்டாமல் தடுக்குமென்பதைஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

உலகத்தில் பாக்கியவான்கள் யார்? சுத்தமான ஹிருதயமுடையவர்களாய் யார் இருக்கிறார்களோ அவர்களே பாக்கியவான்கள். சந்தானமும் சம்பத்து மிருந்தால் மாத்திரம் அவர்கள் ஒருகாலும் பாக்கியவான்களாகி விட மாட்டார்கள்.

ஃ ஃ ஃ

ஒரு முட்டாளோடு வழிப் பிரயாணம் செய்யாதே. உனது யாத்திரையில் உனக்குற்ற நண்பன் கிடைக்காமலிருந்தால், தனி வழியே செல்ல வேண்டியிருக்கிறதென்று ஒரு முட்டாளை அழைத்துச் செல்லாதே. நீ தனியே உன் பிரயாணத்தை முடித்துக் கொள்.

ஃ ஃ ஃ

உலகில் பாவியென்று பெயரெடுக்காதே. உன் வாழ் நாள் சொற்பம். அச் சொற்ப காலத்திற்குள் உபகாரியென்று பேரெடுத்து விட்டு இறந்து போ. உன்னால் கூடுமான உபகாரத்தை உன் நண்பர்களுக்குச் செய். உனக்கு எல்லா ஜனங்களும் நண்பர்களென்று அறிந்து கொள்.

ஃ ஃ ஃ

பசித்துக் கிடக்கும் ஏழை ஜனங்களுக்கு ஆத்மோபதேசம் செய்வதால் பலனில்லை. அப்படி உபதேசம் செய்வது அவர்களை அவமானம் செய்வதாகு மென்று ராம கிருஷ்ண பரமஹம்சர் கூறி யுள்ளார். ஏழைகளின் பசியை ஆற்றி விட்டுப் பிறகு ஆத்மோபதேசம் செய்யலாம்.

ஃ ஃ ஃ

ஒருவனது மனம் சஞ்சலப்படாமலிருப்பதேயானால், அவனுக்கு அதுவே உற்ற துணையாக விருக்கும். சுகத்தைக் கொடுக்கும். அவன் நல்ல காரியங்கள் செய்யவே முற்படுவான். அவன் எடுத்த காரியத்தை முடித்து

விடுவான். ஆகவே மனிதனுக்கு மனம் அமைதி பெற வேண்டியது அவசிய மாகும்.

ஃ ஃ ஃ

ஒருவன் பட்டினி கிடக்கிறான். மற்றொருவன் வியாதியால் கஷ்டப்படுகிறான். வேறொருவன் சுகதேகியாகவும் சுகஜீவியாகவு மிருக்கிறான். காரணமென்ன? அவனவன் செய்த பூர்வகர்மங்களே யாகும். ஒருவன் செய்த பூர்வ ஜென்ம கர்மங்களுக் கேற்றபடி இப்போது சுக துக்கம் அநுபவிப்ப தாகு மென்று அறிய வேண்டும்.

ஃ ஃ ஃ

மனதை அடக்குவது கஷ்டம். இருந்தாலும், எப்படி ஒரு வேடன் தனது அம்பைவளைக்காமல்நேராகவே வைத்துக் குறி பார்க்கிறானோ அப்படியே அறிவுடையோர்கள் தங்களது எண்ணங்களை அங்கு மிங்கும் சிதற விடாமல், கட்டுப் படுத்தி, தங்கள் காரியங்களை நிறைவேற்றிக் கொள்கிறார்கள்.

ஃ ஃ ஃ

ஒரு மீனைப்பிடித்து தரையில் போட்டவுடன், அது எப்படி துள்ளிக் குதித்துவிட்டு அடங்கி விடுகிறதோ அப்படியே, நமது மனம் நல்லவழியினின்று தப்பித்துப் போகவே ஆரம்பிக்கும். ஆனால், அதைக் கட்டுப் படுத்தி நேர் பாதையில் இழுத்துவிட்டால், அது அடங்கிக் கிடக்கும்.

ஃ ஃ ஃ

மனிதர்களுக்குச் சோதனை காலம் வருதல் சகஜம்போல், தேசத் திற்கும் சோதனை காலம் வருவதுண்டு. சோதனை காலத்தில் நிமிர்ந்து, மனம் நிம்மதியா யிருந்து சமாளித்துச் செல்பவனே ஆண்மைத்தன முள்ள மனிதனென்று உலகினர் அழைப்பார்கள். அப்படிப்போல் தேசத்தினர் நிமிர்ந்து காரியங்கள் செய்ய வேண்டும்.

ஃ ஃ ஃ

விழித்துக் கொண் டிருப்பவர்களுக்கு இராப் பொழுது கழியாது நடந்து களைத்துப் போனவர்களுக்கு ஒரு மைல் தூரம் பல மைல்களாகத் தோன்றும். வாழ்க்கையின் நோக்கத்தை உணராத ஜனங்களுக்கு வாழ்நாள் கஷ்டமாகத்தோன்றும். ஆகவே மனிதர்களே! உங்களது வாழ்க்கை தர்மங்களை அறிந்து நடப்பீர்களாக.

ஃ ஃ ஃ

இப்போதே நாம் செய்ய வேண்டிய நற்காரியங்களைச் செய்து முடிப்போம். இந்த ஜன்ம வாழ்க்கையை நல்வாழ்க்கையாகச் செய்வோம். நல்ல காரியம் செய்துவிட்டு இறப்போம். நல்ல காரியம் செய்தோமென்ற ஆறுதல் நமக்குச் சந்துஷ்டி அளிக்கவல்லது.

ஃ ஃ ஃ

மனிதனுக்குக் கஷ்ட காலம் வருதல் சகஜம். உலகத்தில் எவனுக்கு நல்ல காலமே வந்திருக் கின்றது? கஷ்ட காலமும் நல்ல காலமும் மாறி மாறி வரும். கஷ்டம் வந்த காலத்துக் கஷ்டம் கஷ்ட மென்று கூச்சல் போட்டுக் கொண்டிராமலும், நல்ல காலம் வந்த காலத்து அதிக சந்தோஷக் கடலில் மூழ்காம லிருப்பதுமே நன்று.

ஃ ஃ ஃ

மனித சமுகம் ஒரு பொதுப்படையான சட்டத்திற்குக் கட்டுப்பட்டதாகவிருக்க வேண்டும். அது எப்போது சாத்தியம்? சர்வஜன சகோதரத்வ மிருந்தால்தான் முடியும். பொய்க்குணம் வாய்ந்த மனிதர்களுடைய நோக்கமெல்லாம் சர்வஜன

சகோதரத்வம் ஏற்படுத்துவதிலிருக்க வேண்டும்.

ஃ ஃ ஃ

சுயராஜ்யத்திற்கு லாயக்குடையவர்கள் எப்படியிருக்கவேண்டும்? அடக்கமும், தன்னல மறுப்பும், நிதான புத்தியும், உறுதியும், முன் யோசனையும் உள்ளவர்களாக இருக்க வேண்டும். மலைபோல் கஷ்டங்கள் வந்தாலும், அவைகளைச் சகிக்கும் தன்மை யுடையவர்களாயு மிருக்க வேண்டும்.

ஃ ஃ ஃ

விவேகிகள் தாங்கள் செய்யவேண்டிய கடமைகளை நன்குணர்ந்து விட்டார்களேயானால், அவர்கள் தான் சாந்த ஸ்வரூபிகள். நிறைந்த குடம் போலவும், நிரம்பிய ஏரிபோலவுமிருப்பார்கள். ஆதலால் ஒரு விவேகியைப் பார்க்க நேர்ந்தால், அவன் சொல்லும் இதோபதேசங்களைப்பற்றி யோசித்து அவைகளை அநுஷ்டானத்திற்குக் கொண்டு வர முயல வேண்டும்.

ஃ ஃ ஃ

மனிதர்கள் வீரர்களைப் பார்த்து, தைரியசாலிகளைக்கண்ணுற்று, பொறுமைசாலிகளைக்கண்டு, உண்மையாளர்களைப் பின்பற்றி அவர்களது குணங்களைப் பின்பற்ற வேண்டும். ஏனென்றால், அவர்களது வீரமும், தைரியமும், பொறுமையும் உண்மை பேசுந் தன்மையும் கடவுளுக்குப் பிரியமான குணங்களாகும். இக் குணங்களுடையவரிடத்தில் கடவுள் அம்சமிருக்கும்.

ஃ ஃ ஃ

குப்பையில் கிடந்தாலும் மாணிக்கம் மாணிக்கம் தான் என்பது போல், படித்த நற்குணவான்கள் அசுத்தமானவர்களிடையில் இருந்தாலும் அவர்களது சோபை குன்றாது. மனிதர்கள் இந்த வாழ்க்கையை ஒரு சிறிய நீர்க்குமிழ் என்று கருதி, நற்குண நற் செய்கைகளுடைய மகான்களைப் பின் பற்றுதல் வேண்டும்.

ஃ ஃ ஃ

உலகில் எத்தனை வித புஷ்பங்களிருந்தாலென்ன? எந்த விதமான உயர்ந்த சுவாசமான புஷ்பங்களிருந்தாலென்ன? அவைகளெல்லாம் நற்குணம் என்னும் புஷ்பத்திற்கு ஈடாகாது. உயர்ந்த புஷ்பத்தின் வாசனை வெகு தூரம் செல்லாது; காற்றை எதிர்த்து அப்புறம்வீசாது. நற்குணம் வாய்ந்தோரின் நற் செயல்கள் எல்லா விடங்களிலும் புகழ்ந்து பேசப்படும்.

ஃ ஃ ஃ

மனிதர்கள் வெறும் பேச்சுக்காரராயிருந்தால் மாத்திரம் போதாது. 'நான் அதைச் சாதிக்க முடியும்; இதைச் சாதிக்க முடியும்' என்று சொல்லித் திரிவதைவிட, அவன்தான் பேசுகிறபடி செய்து காட்டினால் அப்போது அவன் பேச்சுக்கு அர்த்தமிருக்கும். சொல்லுகிறபடி செய்து காட்டாதவன் பதருக்குச் சமானமென்று மார்க்கஸ் அரீலியஸ் என்னும் ஞானி கூறியுள்ளார்.

ஃ ஃ ஃ

உலகில் சன்மார்க்க முடையவன் எப்போதும் போற்றத் தக்கவன். அவனுக்கு உதவிகள் தானகவே கிடைக்கும். கஷ்ட சுகங்களை அவன் பெரிதாகப் பாராட்ட மாட்டான். தரித்திரமும் நஷ்டமும் அவனை பாதிக்காதென்பது நிச்சயம். உண்மையான சன்மார்க்க முடையவன் தான் அரசனுக்குச் சமானமானவன். ஜனங்கள் மத்தியில் அவனே கடவுளாகக் கொண்டாடப்படுவான்.

'ஒருவன் என்னை வைதான; என்னை அடித்தான்; என்னை மோசம் செய்தான்' என்று எவன் நினைத்து, அவைகளுக்குப் பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்று உருகுகிருனே, அவன் மனதை விட்டுத் துவேஷ புத்தி விலகுவதில்லை. துவேஷ புத்தியால் துவேஷ குணங்களைப் போக்கடிக்க முடியாது. துவேஷ குணம் அன்பைக் கண்ட மாத்திரத்தில் விலகி விடும். இது அநுபவம்.

ஃ ஃ ஃ

நான் இவ்வுலகில் பிறந்தேன், இவ்வுலகிலேயே இருப்பது நிச்சயம் என்று ஒவ்வொருவனும் தன் வாழ்க்கைத் தத்துவத்தை உணர்ந்து விட்டால், உடனே உலகில் சண்டை சச்சரவென்பதிராது. வாழ்க்கையில் துன்பங்களும், துயரங்களும், கஷ்டநஷ்டங்களும் ஏற்படுவது சகஜம். அவைகளை சம திருஷ்டியுடன் நோக்கிக் கொண்டு, வாழ்க்கை லட்சியத்தை அடைய வேண்டும்.

ஃ ஃ ஃ

ஒருவன் தனது இந்திரியங்களை அடக்காமல் அவைகள் போன போக்கில் விட்டுக் கொண்டிருந்தானேயாகுல், ஆகாரங்கள் உண்ணுவதில் மிதமாயிராமலிருந்தானேயானுல் சோம்பேறியாகவும், வெட்டிப் பேச்சுப் பேசிக் கொண்டிருப்பானே யானுல் அவன் ஒரு துர்ப் பலமுள்ள மரத்தைக் காற்று அடித்துக் கீழே வீழ்த்துவது போல் அற்ப ஆயுளில் கீழே வீழ்த்தப் படுவான்.

ஃ ஃ ஃ

ஒரு நல்ல அழகிய புஷ்பம் பல நிறங்கள் கொண்டது. மனதைக் கவரத்தக்கது. ஆனுல் வாசனையிராமற்போனுல், அதை யார் மதிக்கின்ருர்கள்? அதுபோல், ஒரு மனிதன் ருசிகரமாகப் பல உபதேசங்கள் கூறி விட்டு, அவைகளின்படி அவன் நடக்காவிட்டால், அவனை உலகில் யார் மதிப்பார்கள்? ஒருவரும் மதிக்க மாட்டார்கள். அவன் தன்னைத் தானே மதித்துக் கொண்டாலன்றி வேறு வழியில்லை.

ஃ ஃ ஃ

ஒரு மனிதன் பிறந்து விட்டால், அவன் தண்டத்திற்காகப் பிறந்தானென்று நினைக்க வேண்டாம். ஆனுல் சில காரியங்கள் ஆவதற்காகக் கடவுள் அவனைச் சிருஷ்டித்திருக்கிருர். ஒரு மனிதன் பிறந்தவுடன் ஒருவன் தான் பிறந்ததின் நோக்கத்தை அறிந்து வேலை செய்வான். மற்ருெருவன் கொஞ்சம் நாள் கழித்து உணர ஆரம்பிப்பான். இது தான் வித்தியாசம். மனிதப் பிறவி வீண் பிறவியல்லவென்று நினைத்து அவனை மதித்துப் பேசு.

ஃ ஃ ஃ

உலகில் நாமேன் பிறந்தோம் என்ற கேள்வியைக் கேட்டு மனதிலேயே யோசித்துப் பார். நாம் பிறந்ததற்கு நமது நினைவே காரணமாகுமென்று தெரிய வரும். நமது எண்ணங்கள் முதிர்ந்தால் அவைகளின் பலன்தான் நமது பிறப்பென்பது நிச்சயம். ஒரு மனிதன் கெட்ட எண்ணத்தோடு பேசி, அதன்படி அநுஷ்டானத்தில் நடந்து வந்தானேயானுல், அதினின்றுண்டாகும் துன்பம் வண்டியில் கட்டிய மாட்டின் அடிச்சுவடுகளை வண்டிச் சக்கரம் தொடர்ந்து வருவது போல, அவனைத் தொடர்கிறது. அதே மாதிரி சுத்த மனதோடு ஒரு மனிதன் பேசியும், அதன்படி நடந்தும் வந்தால் அவனை அவனது நிழல் தொடர்வது போல் மிக சந்தோஷமும் திருப்தியும் தொடர்கின்றன.

கேவலம் ஜனங்கள் புகழ வேண்டு மென்கிற உத்தேசத்துடன் நீங்கள் பற்பல உத்தியோகம் செய்வீர்களானால், உங்களுடைய ஆயுள் வீண்போகிறதற்கு சம்பவமுண்டு. சுய நலத்திற்கு மாத்திரம் கடமைப்பட்டிருப்பதாக நினைத்திருப்பீர்களாகில் வாஸ்தவத்தில் உங்களுடைய ஆயுள் வீண் போய்க்கொண் டிருக்கிறது. ஆனால் பரோபகாரார்த்தமாய் ஜீவிக்கவேண்டு மென்கிற உத்தேசம் உங்களுக்கிருந்தால் ஆயுளின் ஒவ்வொரு க்ஷணமும் பயனுடையதா யிருக்கின்ற தென்று உறுதியாய் நம்புங்கள்.

சர்வ தேச நிலை

சர்வ தேச சங்கம் என்கிற போலீஸ் காரன் எங்குமே காணப்படவில்லை. ஏனென்றால் ஜன நாயக வாதிகளாகிய நாம் அவனுடைய கழுத்திலே ஒரு பாறாங்கல்லைக் கட்டி ஆற்றிலே போட்டுவிட்டோம். 'ஒப்பந்தங்களின் புனிதத் தன்மை' என்கிற சுண்ணாம்பை இந்தப் பாறாங் கல்லில் பூசி விட்டோம். ஆனால், போலீஸ்காரனுடைய தேவையையும் உதவியையும் எதிர் பார்க்கிற நமக்கு இஃது ஓர் ஆறுதலாகாது. நூறு வருஷங்களுக்கு முன்னே மத்திய ஐரோப்பிய வல்லரசுகள் என்ன தவறுகளைச்செய்தனவோ அதே தவறுகளைத் தான் நாம் இப்பொழுது செய்கிறோம்.

—வெர்னன் பார்ட்லெட்

நிலையிற் பிரியேல்

—மு. த. பிள்ளை

நிலையிற் பிரியாதே தம்பி
நீதிடங் குன்றாதே
அலைகடல் குமுறினுமே தம்பி
அச்சம்நீ கொள்ளாதே. 1

இளந்தமி ழன்னையை தம்பி
எண்ணி வாழ்த்தியே
நலம்பல விழைகுவாய் நம்
நாடு சீர் பெறவே. 2.

ஓம் சக்தி யென்றாலே தம்பி
ஊக்கம தோங்கிடுமே
ஆம்; அது உண்மையே தம்பி
அறிவோ ரறைந்தார்கள். 3.

தோதகம் பேசாதே தம்பி
துடுக்குகள் செய்யாதே
வேதனை விளையாதே தம்பி
வீண்பொழு தாக்காதே. 4.

ஆகும் நாளின்றி தம்பி
ஆகா தெவ் வினையும்;
சாகும் வரையில் நீ தம்பி
சலியா துழைப்பாயே. 5.

அறிவைப் பெருக்குவையே தம்பி
ஆற்றல் கூட்டுவையே;
சிறுமை போக்குவையே தம்பி
சீரினை நாடுவையே. 6.

தனகாவின் கடிதங்கள்

—"சரசா"

கடிதம் VII

கீழ வேளூர்

அநேக சாஷ்டாங்க நமஸ்காரம். உபயகுசலம்.

எல்லாம் காலத்தின் கோலந்தான். இது, யாரை, எந்தவிதமாக எப்பொழுது எப்படி மாற்றும் என்பதைச் சொல்லவே முடியாது போலிருக்கிறது. நான் இப்பொழுது அடியோடு மாறி விட்டேன். என்னை இப்பொழுது நீ பார்த்தால் மிகவும் ஆச்சரியப் படுவாய். எனக்கு, இப்பொழுது புது நாகரிகம், புது தினுசு என்கிறார்களே அதெல்லாம் ஒன்றுமே பிடிக்கிற தில்லை. இதெல்லாம் மேல் தளுக்குத் தான். வீண் பணச் செலவுதான். உடம்புக்கு ஏதாவது சௌக்கிய முண்டோ என்றால் அதுவும் ஒன்றும் இல்லை. எவ்வளவுக் கெவ்வளவு காபியை அதிகமாகக் குடித்துக் கொண்டிருந்தேனே, அவ்வளவுக் கவ்வளவு இப்பொழுது அதைக் கண்டால் விஷமாயிருக்கிறது. முகத்தில் பவுடர் பூசிக் கொள்வதை நிறுத்தி விட்டேன். பவுடர் டப்பியை அப்படியே குப்பைத் தொட்டியில் போட்டு விட்டேன். இப்படிப் பட்ட வைராக்கியம் எனக்கு எப்படி வந்த தென்று எனக்கே ஆச்சரியமாயிருக்கிறது. கோணவகிடு எடுத்துக் கொள்வதும், பின்னலில் ரிப்பன் வைத்துக் கொள்வதும் நிறுத்தி விட்டேன்.

இத்தனைக்கும் காரணம் என்ன தெரியுமோ அம்மா? அதுதான் எனக்கே ஒரு பிரமிப்பாயிருக்கிறது. முந்திய கடிதம் எழுதினேன் பார், அதற்கு மறு நாளைக்கு மறு நாள், ஒருவர் இந்த ஊருக்கு வந்தார். பெரிய கூட்ட மொன்றில் ஒரு லெச்சர் பண்ணினர். அதற்கு நானும் உன் மாப்பிள்ளையுமாகப் போயிருந்தோம். என்னமோ, அவர் சொன்ன தெல்லாம் உடனே எங்கள் மனதில் நன்றாகப் பட்டது. அது முதற் கொண்டு உங்கள் மாப்பிள்ளை, கதர் தான் கட்டுகிறார். சூட்டுகளெல்லாம் போடுவதில்லை. இதனால் அவருடைய தொழிலுக்கும் எவ்வித ஹானியும் உண்டாக வில்லை. எல்லாரும், இப்பொழுது உன் மாப்பிள்ளையைக் கண்டு சந்தோஷப் படுகிறார்கள். உண்மையான ஒவ்வோர் இந்தியனும் இப்படித்தான் இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். உன் மாப்பிள்ளையின் முகங்கூட இப்பொழுது கொஞ்சம் களையாயிருக்கிறது.

நானும் இப்பொழுது கதர் புடவை தான் கட்டிக் கொள்கிறேன். முதலில் கொஞ்சம் கனமாகத் தான் இருந்தது. இப்பொழுது அது சகஜமாகவே இருக்கிறது. பழைய புடவைகளையெல்லாம் அப்படியே பெட்டியில் மடித்து வைத்திருக்கிறேன். மத்தியானத்தில் வீட்டுக்கு வந்து வம்படிக்கும் பாட்டிமார்களெல்லாரும், 'இவாள்ளாம் தேசத்துக்குச் சுயராஜ்யம் வாங்கிக் கொடுக்கப் போறாளாக்கும்' என்று ஏதேதோ பேசுகிறார்கள். அதையெல்லாம் நான் காதில் போட்டுக் கொள்வதில்லை. எந்தக் காரியத்திற்கும், இப்படித்தான் முதலில் பரிகாசஞ் செய்வார்கள்.

என் மாமியாரும் என் ஜோலிக்கு வருவதில்லை. 'என்னமோ நல்ல காரியந்தானே' என்று எங்கள் பக்கமா

கவே பேச ஆரம்பித்திருக்கிறாள். மாமனார்தான் கொஞ்சம் முணுமுணுக்கிறார். அவருடைய வேலைக்கு ஏதாவது ஹானி வருமோ என்று அவர் பயப்படுகிறார். உன் மாப்பிள்ளை, அதெல்லாம் ஒன்றும் ஏற்படாது என்று சொல்கிறார்.

இப்பொழுது நான் அதிகமான புஸ்தகங்களைப் படிக்கிறேன். தமிழில் ஒரு தினசரிப் பத்திரிகையும், இங்கிலீஷில் ஒரு தினசரிப் பத்திரிகையும்வருகிறது. இவைகளைப் படிக்கிறபொழுது, எனக்கு ஏதோ புதிய கண் திறந்தாப் போல் இருக்கிறது. உலகத்து விவகாரங்களைக் கவனியாமல், ஏதோ கிணற்றுத்தவளை மாதிரி இருக்க எப்படி முடிகிறது என்று இப்பொழுது எனக்கு ஆச்சரியமா யிருக்கிறது. பேப்பர்களைப் படித்தால், உலகத்திலுள்ள மற்றத் தேசங்களுக்கும் நமது தேசத்திற்கும் உள்ள தாரதம்யங்களை ஒப்பிட்டுப் பார்க்க முடிகிறது. ராமனாண்டாலென்ன, ராவணனாண்டாலென்ன என்று இந்தக் காலத்தில் நாம் இருக்க முடியுமா? இப்படி இருந்த தேசமெல்லாம் இப்பொழுது மண்மேடு மண்ணாகிப் போய்விட்டதைச் சரித்திர புத்தகங்களில் நாம் படிக்கவில்லையா?

போன வாரம் என் மாமனார் ஒரு வார்த்தை சொன்னார். பெண்களுக்கு இந்த வேலை யெல்லாம் எதற்கு? புருஷாள் பார்க்கிற வேலையல்லவா இது? மீட்டிங்குக்குப் போவதும், அங்கே பேசுவதும், சட்ட சபைகளில் மெம்பராவதும், உத்தியோகங்கள் பார்ப்பதும், பெண்களே ஆரம்பித்து விட்டால் புருஷாளுக்கு என்ன வேலை யிருக்கிறது? குடும்ப விவகாரங்கள் எப்படி நடக்கும்? என்றெல்லாம் பேசினார். உன் மாப்பிள்ளைக்கும் அவருக்கும் பெரிய தர்க்கம். நானும் நடுவில் தலையிட்டுப் பேசினேன். அவர் கொஞ்சம் அசந்து போனார். தேசம் கல்வி, பிரஜா உரிமை முதலியன, ஆண்களுக்கும் பெண்களுக்கும்பொது தானே. இதிலே வித்தியாசங்கள் இருக்க வேண்டிய நியாயமே யில்லையே. ஒவ்வொரு நாட்டிலும் உதித்த மகான்களெல்லாரும், அவரவர்களுடைய தாயார்கள் கொடுத்த பயிற்சியினா லல்லவோ முன்னுக்கு வந்திருக்கிறார்கள். பெண்கள் உதவியின்றி ஆண்கள் என்ன செய்ய முடியும்?

இங்கே இன்னும் கொஞ்ச நாளில் ஒரு ஸ்திரீகள் சங்கம் ஏற்பாடு செய்யப் போகிறேன். அதற்காக இப்பொழுது, வயது வந்த சில பெண்களையெல்லாம் கண்டு பேசிக்கொண்டிருக்கிறேன். கூடிய சீக்கிரத்தில் ஏற்பாடாகிவிடுமென்ற நம்பிக்கை இருக்கிறது. இதைப்பற்றி விஸ்தாரமாக அடுத்த கடிதத்தில் எழுதுகிறேன்.

இந்தக் கடிதத்தைப் பார்த்து அப்பா திகில்படுவாரோ என்னவோ? அப்படி யெல்லாம் ஒன்றும் இல்லையென்று அவருக்குச் சொல்லவும்.

உன் அன்புள்ள

கனகா.

2200 வருஷங்களுக்கு முன்

மத்திய மாகாணத்தில் பௌனி என்றொரு கிராமம் இருக்கிறது. இங்கே சிலாசாஸன இலாகா ஆராய்ச்சிக்காரர், பூமியைத் தோண்டிப் பார்க்கிறபோது, சுமார் 2200 வருஷங்களுக்கு முன் இங்கே வசித்து வந்த ஒரு ஜாதியாருடைய நாகரிகச் சின்னங்கள் பல காணப்படுகின்றன. நமது நாட்டின் மூலை முடுக்குகளில் இன்னும் என்னென்ன புதை பொருள்கள் இருக்கின்றனவோ?

பி. அனந்தாச் சார்லு

ஜனனம்—1843 மரணம்—1908

——"ஒரு காங்கிரஸ்வாதி"

சென்னை மாகாண வாசி ஒருவர் முதன் முதலாகக்காங்கிரஸில் தலைமை வகித்தாரென்றால் அந்தப் பெருமை பி. அனந்தாச் சார்லு அவர்களையே சாரும். காங்கிரஸ் ஆரம்ப காலத்தி லிருந்து அதில் ஈடுபட்டுழைத்த சென்னை மாகாண வாசிகளுள் இவர் மிகப் பிரபலஸ்தர். கொஞ்சங் கூட தயை தாட்சண்யமின்றி, ஜனங்களுக்கு நன்மை பயவாத அரசாங்க சட்ட திட்டங்களை எதிர்த்துப் போராடுவதில் இவரைத்தான் முதற் பெயராகச் சொல்வார்கள். இவர் தேசீயக் கண்கொண்டுதான் எல்லா விவகாரங்களையும் கவனித்தாரே தவிர மாகாணப் பற்றுடனோ, சமூக நோக்கத்துடனோ எந்த விஷயத்தையும் இவர் கவனித்தாரில்லை.

அனந்தாச்சார்லு, செங்கற்பட்டு ஜில்லா பனப்பாக்கம் கிராமத்திலே உயர்ந்த வைஷ்ணவ குடும்பத்திலே 1843-ம் வருஷத்தில் ஜனனமானார். இவர் தகப்பனார், தாலுகா கச்சேரியில் குமாஸ்தாவாக முதலில் வேலை பார்த்தார். பின்னர், தமது திறமையினாலும் உழைப்பினாலும் சிரஸ்ததாராக உயர்த்தப் பட்டார். ஆனால் நீண்ட காலம் இந்தப் பதவியில் இவர் இருக்கவில்லை. அனந்தாச்சார்லுவின் குழந்தைப் பருவத்திலேயே காலமாகி விட்டார். இதனால், குழந்தை அனந்தாச்சார்லுவைப் போஷித்துப் படிப்பிக்கும் பொறுப்பு அனைத்தும் தாயார் மீது விழுந்தது. ஒண்டியாக என்ன செய்வாள் பாவம்! தன் புத்திரனுக்கு நல்ல முறையில் கல்வி கற்பித்து அவனை அபிவிருத்திக்குக் கொண்டுவர வேண்டுமென்ற நோக்கத்துடன், சென்னை வந்து சேர்ந்தாள். அந்தக் காலத்தில் சென்னையில் மிகவும் பிரபலமாக இருந்தவர் ரங்கநாத சாஸ்திரியார் என்பவர். இவர் ஸ்மால்காஸ்கோர்ட் நீதிபதியாயிருந்தார். இவரும் அனந்தாச்சார்லுவின் தகப்பனாரும் பரிச்சயமுள்ளவர்கள். இவருடைய உதவியைக் கோரினாள் அனந்தாச்சார்லுவின் தாயார். இவரும், உடனே, அனந்தாச்சார்லுவை ஏற்று பிரசிடென்சி காலேஜில் கொண்டு போய்ச் சேர்த்துப் படிப்பித்தார்.

பிரசிடென்சி காலேஜில் படிக்கிற போதே, அனந்தாச்சார்லுவுக்குசமஸ்கிருதத்திலும் தெலுங்கிலும் நல்ல ஞானம் ஏற்பட்டது. வங்காளத்திலுள்ள நவத்வீபத்தி லிருக்கும் வடமொழிப் பண்டிதர்கள், இவருடைய

சமஸ்கிருத ஞானத்தை வியந்து பாராட்டி இவருக்கு 'வித்தியா விநோதர்' என்றும் 'விசாரதர்' என்றும் பட்டங்கள் வழங்கினார்கள்.

பிரசிடென்சி காலேஜில் படித்து பி. ஏ. பட்டம் வாங்கிய பிறகு, அனந்தாச்சார்லு, பச்சையப்பா கல்லூரியில் ஒரு போதகாசிரியராக நியமிக்கப்பட்டுச் சில காலம் வேலை பார்த்தார். இந்த வேலையுடன், வக்கீல் பரீட்சைக்கும் படித்து 1867ம் வருஷம் தேறினார். அப்பொழுது சென்னை ஹைகோர்ட்டில் பிரசித்தமான வக்கீலாயிருந்தவர் வைகுண்டராவ் என்பவர். இவர் கீழ் அனந்தாச்சார்லு 'அப்ரெண்டிஸா' கப்போய்ச் சேர்ந்து, வர வர விருத்தியடைந்து வந்தார். இவருடைய வாக்கு சாதுரியம், அதி தீட்சண்யபுத்தி முதலியவைகள், இவருக்கு நல்ல துணை செய்தன. நெடுநேரம் புரட்டிப் பார்த்து விஷயங்களைக் கிரகித்துக் கொள்ள வேண்டிய அநேக சிக்கலான வழக்குகளை வெகு சுலபமாக இவர் கிரகித்துக் கொண்டு கோர்ட்டில் வாதஞ் செய்வார்.

இவர், தமது திறமையையும் உழைக்கும் ஆற்றலையும் தமது தொழில் அளவில் வரம்பு கட்டிக் கொள்ள விரும்பவில்லை. பொது வேலையிலும் ஈடுபடத் தொடங்கினார். 1874ம் வருஷம், சென்னை அரசாங்கத்தார் ஸ்தலஸ்தாபனச் சட்டமொன்றைக் கொண்டு வந்தார்கள். அதனை எதிர்த்து இவர் பலத்த கிளர்ச்சிசெய்தார். இவர் பெயர் எங்கும் பரவியது. 1878ம் வருஷக் கடைசியில், பொது ஜனங்களுடைய குறைகளை அரசாங்கத்தாருக்குத் தெரிவிப்பதற்காக, 'மதராஸ் நேடிவ் அசோசியேஷன்' என்ற ஒரு ஸ்தாபனத்தை ஆரம்பித்து அதன் மூலமாக, அரசியல் கிளர்ச்சிக்குச் சென்னை மாகாணத்தில் விதை யூன்றினார். இந்த ஸ்தாபனத்தை ஆரம்பித்த முதல் இரண்டு வருஷ காலம், இவரே அதன் பூராவேலையையும் மேற்போட்டுக் கொண்டு உழைத்து வந்தார். தவிர, 'ஹிந்து' பத்திரிகையின் சொந்தக்காரரான ஸ்ரீ வீரராகவாச்சாரியாருக்கு இவர் பல வழிகளிலும் உதவி செய்தார். மற்றும், சென்னை மகா ஜன சபையை ஆரம்பித்து, அதன் காரியதரிசியாகப் பல வருஷ காலம் இருந்தார். காங்கிரஸ் தொடங்கப் படுவதற்கு முன்னரேயே இவர், சென்னையில் இரண்டு மகாநாடுகள் கூட்டி, பொதுப் பிரச்னைகள் பலவற்றை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். 1884ம் வருஷம் சென்னை நகர சபையின் அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப் பட்டார். சுமார் இருபது வருஷ காலம் இதில் அங்கத்தினராயிருந்தார். 1895ம் வருஷம், இந்தியா சட்ட சபையின் அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப் பட்டு, 1903ம் வருஷம் வரை அதில் ஸ்தானம் வகித்து அநேக பிரச்னைகளை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

அகில இந்தியாவுக்கும் பொதுவான தொரு ஸ்தாபனம் அவசியம் இருக்க வேண்டுமென்பதை இவர் அநேக வருஷங்களாக வற்புறுத்தி வந்ததன் பயனாக 1884ம் வருஷக் கடைசியில், சென்னையில் காங்கிரஸின் ஆரம்பக் கூட்டம் கூடியது நேயர்களுக்குத் தெரிந்த விஷயந்தான்.

1885ம் வருஷத்து முதல் காங்கிரசில், இவர், இந்தியா மந்திரி சபையைக்கலைத்து விட வேண்டு மென்று தீர்மானங் கொண்டு வந்து அதைப் பற்றி அதிக அழகாகப் பேசினார். பிறகு ஒவ்வொரு காங்கிரஸிலும் இவ

இடிக்குத் தப்புவதெப்படி?

உலகத்தில் இடியும் மின்னலும் ஏற்படாத தேசமே கிடையாது. இடிக்கு அஞ்சும் ஆயிரக் கணக்கானவர்கள் இன்னமு முண்டு. ஆனால், இவர்கள் அச்சங் கொள்வதற்கு ஏதுவாக, இடியினால் இறந்தவர்கள் தொகையும் ஏராளமாக உண்டு. முன் காலத்திலிருந்த ரிஷிகள், மழை அதிகமாகப் பெய்து கொண்டிருக்கும்போதும்,திறந்த வெளியில் நின்று கொண்டு இடி இடிக்கும்போதும் வானை நோக்கி வருணனைப் பிரார்த்தித்ததாகப் பழைய வேதங்கள் கூறுகின்றன. இடியும் மின்னலும் இயற்கையன்னையின் அம்சங்கள் என்று உணர்ந்த பின் அறிவுடையோர் அச்சங் கொள்வது கூடாது. அதைப்பற்றி மூட நம்பிக்கை கொள்ளுவதும் சரியல்ல. இடி இடிக்கும்போது, நாம் நடந்து கொள்ள வேண்டிய முறைகளும் சில உண்டு. பலத்து இடிக்கும்போது மரங்களுக்கு அடியில் தங்குவது அபாயமானது. இதனிலும் அதிகமான அபாயங்களும் வேறுண்டு. மரமிருக்கும் விதத்தைப் பொறுத்திருக்கிறது.

ஒருவன் தங்கும் மரம் தனியாக விருந்தாலும், அல்லது அது ஒரு தோட்டத்தில் பல சிறிய மரங்களுக்கு இடையில் அது உயரமாக இருந்தாலும் இது அபாயத்தை உண்டாக்கும். ஒரு பெரிய வனத்தில், பல நூற்றுக் கணக்கான மரங்களி னிடையில் இருந்தால் அது பந்தோபஸ்தான இடமென்பதில் சந்தேக மில்லை.

இடி இடிக்கும்போது, கம்பி வேலிகளுக்கு அருகில் நிற்பது கூடாது. இப்படி நிற்பதனால் தான் அநேக ஆடு மாடுகள் இறக்கும்படி நேரிடுகிறது. மழை பெய்து கொண்டிருக்கையில் நடந்து செல்ல நேரிட்டால் தலைக்கு மேல் திடீரென இடி இடிக்கும் சப்தம் கேட்டால், ஓடுவது கூடாது. மின்னல் மின்னி இடி இடித்து நிற்கும்வரை, அவ்விடத்திலேயே படுத்துக் கொள்வது நல்லது. இந்தச் சந்தர்ப்பங்களில் இரும்புக் கம்பியுடைய குடையையோ, அன்றி மண்வெட்டி, கோடாரி போன்ற வேறு இரும்புச் சாமான்களையோ கையில் வைத்திருத்தல் நல்லதல்ல. இரும்புச் சாமான்களால் ஆபத்து நேரிடலாம். தகரக் கொட்டகைகளின் அடியில் தங்குவது அபாயம் விளைவிக்கும். கனத்த மழையின்போது, ஒரு புதரின் கீழ்ப் படுத்துக் கொண்டால், நனைய வேண்டி நேரிட்டாலும் இடி விபத்துக்குப் பயப்பட வேண்டியதில்லை. கடலிலும் ஆறுகளிலும் செல்லும் படகுகளில் இடி விபத்து ஏற்படுவது அரிது. மோட்டார், சைக்கிள் முதலியவற்றின் இரும்புப் பாகம் தரையில் படாதவண்ணம், சக்கரங்களிலுள்ள டையர்களில் நிறையக் காற்றிருந்தால் இடி விபத்துக்கு அவ்வளவு பயப்பட வேண்டியதில்லை. வீட்டிலிருக்கும் மேல் மாடியிலும், புகை போக்கியின் அடியிலும், அதன் அருகாமையிலும், சமையலறையிலும், இருப்பது அபாயம். மேலே கண்டவை யெல்லாம், சாஸ்திரீய முறைகளைப் பின் பற்றிக் கூறப்பட்டவை யாகலான் இடி விபத்து நேரிடாதபடி முற்றிலும் தடுக்க முடியாது போனாலும், விபத்து நேராதபடி யிருக்க இவை சரியான ஏதுக்கள் என்று திட்டமாகக்கூறலாம்—ச.மு.

ருடைய கம்பீர வாக்கு ஒலித்துக் கொண்டு வந்தது.

1891ம் வருஷம் நாகபுரியில் நடைபெற்ற ஏழாவது காங்கிரஸுக்கு இவர் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். இந்தக் காங்கிரஸுக்கு உபசரணைக் கூட்டத் தலைவராக இருந்தவரும் ஒரு சென்னைவாசி. சி. நாராயணசாமி நாயுடு என்பவர். இவர் நாகபுரி நகரசபைத் தலைவராகவும் இருந்தார். அரசாங்க உத்தியோகஸ்தர்கள் இந்தக் காங்கிரஸுக்கு வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

1906ம் வருஷம் நாடெங்கணும் ஏற்பட்ட சுதேசியக் கிளர்ச்சியிலும் இவர் அதி தீவிரமாக ஈடுபட்டார். இவருடைய பொதுஜன சேவையைப் பாராட்டி அரசாங்கத்தார் இவருக்கு 'ராவ் பகதூர்' பட்டமும் 'சி.ஐ.இ.' பட்டமும் கொடுத்தார்கள்.

தென்னிந்திய அரசியல் வானத்திலே ஒரு நட்சத்திர மாகப் பிரகாசித்துக் கொண்டு வந்த இவர் 1908ம் வருஷம் நவம்பர் மாதம் 28ந் தேதி தமது 65வது வயதில் ஆண்டவன் திருவடி நீழ லடைந்தார்.

அசோகன் சாஸனங்கள்

—"மௌத்கல்யன்"

ஸ்தம்ப சாஸனங்கள்

6

நிர்ணயமான ஒரு கொள்கையின் அவசியம்

தேவப்ரிய பிரியதர்சி மகாராஜர் பின் வருமாறு கூறுகிறார் :—

நான் ராஜ்யாபிஷேகம் செய்து கொண்ட பன்னிரண்டாவது வருஷத்தில், மனித சமூகத்தின் நன்மைக்காகவும் சந்தோஷத்திற்காகவும் இந்தத் தர்ம சாஸனங்களை எழுதுவித்தேன். மனித சமூகத்தார், தங்கள் பழைய பழக்க வழக்கங்களை விட்டு விட்டு, ஏதோ ஒரு வழியாக பக்தி மார்க்கத்தில் வளர்ச்சி யடையட்டும் என்பது தான் என் நோக்கம்.

மனித சமூகத்தாருடைய நன்மையையும் சந்தோஷத்தையும் நான் எப்படி நாடுகிறேனோ, அப்படியே என் உறவினர்களிடத்திலும், எனது அருகிலும் தூரத்திலும் உள்ளவர்களிடத்திலும் நான் நடந்து கொள்கிறேன். இவர்களில் ஒரு சிலரையாவது சந்தோஷத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டுமென்ற நோக்கத்தோடு, நான் தகுந்த ஏற்பாடுகளைச் செய்து வருகிறேன்.

இதேமாதிரி, எல்லாச் சமூகத்தாரிடத்திலேயும் நான் கவனஞ் செலுத்துகிறேன். நான் எல்லாச் சார்பினரிடத்திலேயும், அந்தந்தச் சார்பினருடைய வழக்கப்படி மரியாதை செலுத்துகிறேன். ஆயினும், அவரவர்கள் ஸ்வதர்மத்தை அநுஷ்டிப்பதுதான் முக்கியம் என்பது என் அபிப்பிராயம்.

நான் ராஜ்யாபிஷேகம் செய்து கொண்ட இருபத்தாறுவது வருஷத்தில் இந்தத் தர்ம சாஸனம் எழுதுவிக்கப் பட்டது.

7

தர்மாபிவிருத்திக்காகச் செய்யப்பட்ட காரியங்கள்

தேவப்ரிய பிரியதர்சி மகாராஜர் பின்வருமாறு தெரிவிக்கிறார் :—

முற் காலத்திலே வாழ்ந்து கொண்டிருந்த அரசர்கள், தர்மம் அபிவிருத்தி யடைவதோடு கூடவே மனிதர்களும் அபிவிருத்தி யடையட்டும் என்று கருதினார்கள். ஆனால், தர்மாபிவிருத்திக்குத் தகுந்தாற்போல் மனிதர்கள் வளர்ச்சி யடைய வில்லை.

ஆகையினால் தேவப்ரிய பிரியதர்சி மகாராஜர் சொல்கிறதாவது:—

இந்த எண்ணம் எனக்கு உதித்தது. முற்காலத்தில் அரசர்கள், தர்மாபிவிருத்திக்குத் தகுந்தாற்போல் மனிதர்கள் வளர்ச்சி யடையட்டும் என்று எண்ணினார்கள். ஆனால் மனிதர்கள் அங்ஙனம் வளர்ச்சி யடைய வில்லை.

அப்படியானால் மனிதர்களை எந்த விதமாக தர்ம மார்க்கத்தை அநுஷ்டிக்குமாறு செய்வது? தர்மாபிவிருத்திக்குத் தகுந்தாற்போல், மனித சமூகம் எப்படி அபிவிருத்தி யடைவது? ஒரு சிலரையாவது, தர்ம மார்க்கத்தில் கை தூக்கி விட நான் என்ன செய்ய வேண்டும்?

ஆகையினால் தேவப்ரிய பிரியதர்சி மகாராஜர் சொல்வதாவது :—

இந்த எண்ணம் எனக்கு உதித்தது:—

தர்ம மார்க்கத்தை எங்கும் உபதேசிக்குமாறு செய்வேன். தர்ம போதனைகளை எங்கும் போதிக்கச் செய்வேன். இவைகளைக் கேட்பவர்கள், இவைகளை அநுஷ்டானத்திற்குக் கொண்டு வந்து, முற்போக்கடைந்து, தர்மத்தோடு தாங்களும் அபிவிருத்தியடைவார்கள்.

இந்தக் காரணங்களுக்காக, தர்ம மார்க்கம் எங்கும் உபதேசிக்கப் படுகிறது. தர்ம சம்பந்தமாகப் பல ஆலோசனைகளும் கூறப்பட் டிருக்கின்றன. இவற்றை, என் காரியஸ்தர்கள் ஜனங்களுக்கு எடுத்துச் சொல்லி அவர்களை அநுஷ்டிக்குமாறு செய்வார்கள்.

லட்சக் கணக்கான ஜனங்களுக்கு மேற்பார்வையாளர்களாக நியமிக்கப் பட்டிருக்கும் கமிஷனர்கள், 'கீழ்த்தர உத்தியோகஸ்தர்களுக்கு தர்மோபதேசம் செய்யும்பொழுது இன்னின்ன மாதிரி நடந்து கொள்ளுங்கள்' என்று சொல்லப் பட்டிருக்கிறார்கள்.

தேவப்ரிய பிரியதர்சி மகாராஜர் பின் வருமாறு கூறுகிறார்:—

மேற்படி நோக்கங்களுக் காகவே நான் தர்ம சாஸனங்களை எழுதுவித்திருக்கிறேன்; தர்மோபதேசகர்களை நியமனம் செய்திருக்கிறேன். தர்ம சட்டமும் நிர்ணயம் செய்திருக்கிறேன்.

தேவப்ரிய பிரியதர்சி மகாராஜர் பின் வருமாறு தெரிவிக்கிறார்:—

மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் நிழல் வேண்டுமென்பதற்காக நான் சாலைகளில் ஆலமரங்களை நட்டிருக்கிறேன். மாந்தோப்புகளை வளர்க்கும் படி செய்திருக்கிறேன். அரை கோசத்திற்கு ஓரிடத்தில் கிணறு தோண்டுவித் திருக்கிறேன். சாவடிகள் நிர்மாணம் செய்வித்திருக்கிறேன். மனிதர்களும் மிருகங்களும் சுகமடையும் பொருட்டு, அநேக தண்ணீர்த் தொட்டிகளை ஏற்பாடு செய்வித்திருக்கிறேன்.

இதனால் மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் சிறிது சந்தோஷம் உண்டாகிறதே யென்பது தான் திருப்தி. முற்காலத்து அரசர்களினால் மனிதர்கள் அதிகமான சந்தோஷத்தை யடைந்திருக்கிறார்கள். அதைப் போலவே, என் காலத்திலும் அடைந்திருக்கிறார்கள். தர்ம மார்க்கத்தில் மனிதர்கள் செல்லட்டும் என்ற நோக்கத்துடன் நான் இவற்றைச் செய்திருக்கிறேன்.

தேவப்ரிய பிரியதர்சி மகாராஜர் பின்வருமாறு சொல்கிறார்:—

என்னுடைய தர்ம உத்தியோகஸ்தர்கள், சந்நியாசிகள், கிருகஸ்தர்கள் முதலியவர்களுடைய மத்தியிலும், அதே மாதிரி எல்லாப் பிரிவாரிடத்திலேயும் நியமனம் செய்யப் பட்டிருக்கிறார்கள். தேவாலய விஷயங்களைக் கவனிப்பதற்கும், பிராமணர்கள், ஆஜீவிகர்கள், ஜெயினர்கள் முதலியவர்கள் மத்தியிலும் இன்னும் பல பிரிவாரிடத்திலேயும் இவர்களை நான் நியமித்திருக்கிறேன்.

உயர்தர உத்தியோகஸ்தர்கள் அவரவர் இலாகாவிலுள்ள விஷயங்களை மேற்பார்வை செய்வார்கள். அது போல் தர்ம உத்தியோகஸ்தர்கள் மற்ற எல்லா வகுப்பாரிடத்திலேயும் தங்கள் கடமைகளைச் செய்வார்கள்.

தேவப்ரிய பிரியதர்சி மகாராஜர் பின்வருமாறு கூறுகிறார்:—

இவர்களும் இவர்கள் போன்ற மற்ற உத்தியோகஸ்தர்களும் என்னாலும், என்னுடைய பட்ட மகிஷிகளினாலும் கொடுக்கிற தானத்தை மேற் பார்வை செய்வார்கள். தலைநகரத்திலும், மற்ற முக்கிய நகரங்

களிலும், தானம் வழங்குவதன் சம்பந்தமான எல்லா ஏற்பாடுகளையும் இந்த உத்தியோகஸ்தர்கள் கவனித்துக் கொள்வார்கள்.

என்னுடைய பிள்ளைகள், மற்ற ராணிகளுடைய பிள்ளைகள் முதலியவர்கள் செய்கிற தானங்களைப் பற்றியும் மேற்பார்வை செய்ய இந்த உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். இந்த மாதிரி தானங்கள் வழங்குவதினால், கருணை, தாராள மனப்பான்மை, சத்தியம், தூய்மை, சாந்தம், துறவு மனப்பான்மை முதலியவைகள் அபிவிருத்தி யடையும்.

தேவப்ரிய பிரியதர்சி மகாராஜர் பின் வருமாறு தெரிவிக்கிறார் :—

நான் என்னென்ன சத்காரியங்களைச் செய்திருக்கிறேனோ அவைகளையெல்லாம் மனித சமூகத்தார் அங்கீகரித்திருக்கிறார்கள். இதன்படி நடக்கவும் செய்வார்கள். இதனால் அவர்கள் வளர்ச்சி யடைந்தார்கள் என்பது நிதரிசன மாகிறது. இன்னும் தாய் தந்தையர்களிடத்தில் கீழ்ப்படிதல், ஆசாரியர்களிடத்தில் வணக்கஞ் செலுத்துதல், முதியோர்களிடத்தில் மரியாதை செலுத்துதல், பிராமணர்களையும் துறவிகளையும் மரியாதையாக நடத்துதல், ஏழைகள், அடிமைகள், வேலைக்காரர்கள் இவர்களைப் பட்சமாகப் பாதுகாத்தல் இவைகளையும் அநுஷ்டானத்தில் கொண்டுவர வேண்டும்.

தேவப்ரிய பிரியதர்சி மகாராஜர் பின் வருமாறு தெரிவிக்கிறார்:—

மனிதர்களிடத்தில், மேலே சொன்னவை அதிகப்படுமேயானால், இரண்டு வித சாதனங்களால் அவை ஏற்படுகின்றன. தர்ம சட்டங்களினாலும், தியானத்தினாலுமேயாம். இவ்விரண்டு சாதனங்களில், தியானந்தான் சிறப்பானது.

ஆனாலும், தர்மத்திற்கு அநுகுணமான பல சட்ட திட்டங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. உதாரணமாக இன்னின்ன மிருகங்கள் வதை செய்யப்படக் கூடாதென்ற திட்டங்கள் விதிக்கப் பட்டிருக்கின்றன. ஆனால், மனிதர்கள் தர்ம மார்க்கத்தில் அதிகமாகப் பிரவேசித்து வருவதனாலேயும், உணவுக்காகவும், பலிக்காகவும் பிராணிகள் வதை செய்யப்படாமலும் இருக்கிறதாலும், தியானத்தின் சிறப்பு நன்றாக விளங்குகிறது.

சூரிய சந்திரர்கள் இருக்கிற வரைக்கும் என்னுடைய சந்ததியார் இவைகளைப் பின்பற்றி நடக்க வேண்டுமென்பதற்காகவும், அப்படி நடப்பதனால் இகலோகமும் பரலோகமும் அவர்களுக்குச் சித்திக்கும் என்பதற்காகவும் இந்தத் தர்ம சாஸனத்தை நான் எழுதுவித்தேன்.

நான் ராஜ்யாபிஷேகஞ் செய்து கொண்ட இருபத்தேழாவது வருஷத்தில் இந்தத் தர்ம சாஸனத்தை எழுதுவித்தேன்.

இது சம்பந்தமாக தேவப்ரிய பிரியதர்சி மகாராஜர் பின் வருமாறு கூறுகிறார்:—

எங்கெங்கு கற்றூண்கள், கற்பாறைகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் அவைகளின் மீது இந்தத்தர்ம சாஸனம் எழுதுவிக்கப்பட வேண்டும். அது நீண்ட காலம் நிலைத்திருக்கும்.

முற்காலத்து ஹிந்து மன்னர்கள், வேட்டையாடுவது கூடாதென்று தடுத்திருந்தார்கள். ஆனால் இந்தக் காலத்தில், கோடீசுவரர்கள், வேட்டையிலேதான் இன்பங் காண்கிறார்கள். பட்சிகள் நிறைந்திருக்கும் காடுகளை, வாடகைக்குப் பிடிக்க இந்தப் பணக்காரர்கள் ஆயிரக் கணக்கான ரூபாய்களைச் செலவழிக்கிறார்கள்.

சோம்பல்

—ஒரு பெண்மணி

வேலை செய்ய கை, கால் முதலிய அவயவங்கள் நம் எல்லோருக்கும் ஒரே மாதிரியாகத் தானிருக்கின்றன. வேலை செய்வதற்காகவே ஈஸ்வரன் அவைகளைக்கொடுத்திருப்பதால், நாம் அவரிஷ்டத்திற்கு விரோதமாக வேலை செய்யாம லிருப்போமானால் அந்த அவயவங்கள் மரத்து விறைத்து உபயோக மில்லாமற் போவதுமன்றி தேக சௌக்கியமும் கெட்டுப் போகும். நாற்காலிகள், பெஞ்சுகள், பலகைகள், பாத்திரங்கள் எந்த உபயோகத்திற்காகச் செய்யப் பட்டனவோ அதைச்செய்யாமலும் அவைகளை உபயோகப் படுத்தாமலும் வைத்திருந்தால் அவைகள் துருப்பிடித்துச் சீர் கெட்டுப் போவதைப் போல வேலை செய்வதற்காக உண்டாக்கப் பட்டிருக்கும் நமது தேகம் ஒரு வேலையும் செய்யாம லிருந்தால் கெட்டுப் போகும்.

யானை முதல் எறும்பு வரை சகல ஜீவன்களையும் பாருங்கள். அதில் எந்தப் பிராணியாவது தனது ஜீவனத்துக்காகப் பாடு படாம லிருக்கிறதா? ஆகையால் அவரவர்கள் வேலையைச் சரியாய்ச் செய்தால்தான் தேகத்திற்கும் நல்லது. அப்படிக்கின்றி செல்வவந்தரான சீமான், சீமாட்டிகள் சோம்பலினாலும், கர்வத்தினாலும் வீட்டில் ஒரு வேலையும் செய்யாமல் நன்றாகச் சாப்பிட்டு விட்டு வீணாகக் காலத்தைக் கழிக்கிறார்கள். அவர்களில் ஒருத்தி 'நான் ஏன் வேலை செய்ய வேண்டும்? என் வீட்டில் என் மாமியார், நாத்தனார், ஓர்ப்படி எல்லாரு மிருக்கிறார்கள். என் புருஷன்தான் சம்பாதித்துப் போடுகிறார். அப்படி யிருக்க நான் வேலை செய்வேனா! அவர்களே செய்யட்டும்' என்கிறாள். மற்றொருத்தி 'என் வீட்டில் இரண்டு சமையல்கார னிருக்கிறான். குழந்தையைப் பார்த்துக் கொள்ளத் தனியாக ஓராளிருக்கிறது. அப்படி யிருக்க நான் வேலை செய்வேனா' என்கிறாள். மற்றொருத்தி, 'என்னடி யம்மா, நான் என்தாயார் வீட்டில் எவ்வளவோ அருமையாய் வளர்க்கப் பட்டவள்; அப்படிப்பட்ட நான் மாமியார் வீட்டில் வேலை செய்வேனா? அடுப்பண்டை போனால் எனக்குத் தலைவலி வந்துவிடும்' என்கிறாள்.

என்ன அநியாயம்! வேலை செய்தால் தலைவலி வந்து விடுமாம்! நன்றாகச் சாப்பிட்டு விட்டு வேலை செய்யாம லிருப்பதால்தான் அநேக வியாதிகள் வருகின்றன. அவரவர்கள் தங்கள் தேகத்திற்குத் தக்கவாறு வேலைகள் செய்து வந்தால் அவர்கள் தேக சௌக்கியத்தோடு வியாதி யில்லாம லிருக்கலாம்.

பகவான் எல்லாருக்கும் ஒரே மாதிரியாகத் தானே அவயவங்கள் கொடுத் திருக்கிறார். அப்படி யிருக்க வேலைக்காரர்தான் வேலை செய்ய வேண்டும் என்பதென்ன? நாம் சும்மா யிருப்பதென்ன? நாமே வலுவில் நம் தேகத்திற்கு வியாதியைத் தருவித்துக் கொண்டு ஓயாமல் மருந்து சாப்பிடுவதாயிருக்கிறது. டாக்டர் வந்து பார்த்து விட்டு ஜீரண சக்தி யில்லை யென்று 'டானிக்' எழுதிக் கொடுக்கிறார். நாம் வீணாக டாக்டருக்கும், டானிக்குக்கும், மருந்துக்கும், பணம் செலவு செய்கிறோம். குருடன், செவிடன், முடவன், ஊமை முதலிய ஏழைகளுக்குக்கூடப் பணம் செலவு செய்ய நமக்கு மனமில்லாமற் போகிறது. இதற்கெல்லாம் காரணம் சோம்பலில் சும்மா இருந்து விட்டு வியாதி வரவழைத்துக் கொள்வதனால்தான்.

அவரவர்கள் அவரவர் வீட்டு வேலையைச் செய்தால் என்ன! அப்படிச் செய்தால் ரொம்ப கௌரவத் தாழ்வென்று எண்ணும் சீமாட்டிகள் எத்தனை பேர்? அவர்களுக்கு வேலை செய்வதற்கு மட்டும் சோம்பல். அவர்களை அலங்கரித்துக் கொள்ளவும் தினம் பல தடவை ஸோப் போட்டு முகம் கழுவுவதிலும் சோம்பலைக் காணோம்! வீட்டு வேலை செய்ய மட்டும் சோம்பல். வேளை யில்லாவேளையிலும் தீனி தின்னச்சோம்பலில்லை. அப்போது சோம்பல் ஓடி விடுகிறது. எல்லாம் வேடிக்கையாகத்தா னிருக்கிறது.

உழைத்துப் பாடு படுவதில் ஊக்கமா யிருங்கள். நம் வீட்டு வேலை செய்வது நமக்குக் கௌரவமே. தேக நலத்தை எளிதில் யடையலாம்.

வீர பத்தினி

—ஸ்ரீ. ஸ்ரீ. ஆச்சாரியா

முன்னூறு வருஷங்களுக்கு முன்பு ஜப்பானில் நடந்த ஒரு சம்பவத்தை யொட்டிப் புனைந்த கதை இது. இதனை ஸ்ரீ. ஸ்ரீ. ஆச்சாரியா ஐந்து அத்தியாயங்களாகப் பிரித்திருக்கிறார். முதல் மூன்று அத்தியாயங்களை இந்தக் கதிரிலும், கடைசி இரண்டு அத்தியாயங்களை அடுத்த கதிரிலும் வெளியிடுகிறோம்.

I வினை விளைவு

டோக்கியோவில் ஒரு பெரிய மாளிகை. அதில் விசாலமான அறைகள், நிலாமுற்றங்கள், மாடி விடுதிகள், பெரிய கூடங்கள், நந்தவனங்கள் பல இருந்தன. வாயிற் புறத்தில் காப்பாளர்களுக்கென்று சிற்றறைகள் காணப்பட்டன. ஆனால் இவைகளில் எதிலுமே ஆட்களைக் காணோம். மாளிகையில் மனித வாசக் குறி இல்லாததோடு எங்கும் பாழடைந்த தோற்றம் பெரிய எழுத்துக்களால் எழுதப்பட்டது போலே இருந்தது. ஜனங்கள் அதைப் 'பேய் மாளிகை' என்று அழைத்ததோடு அதன் சொந்தக்காரன் சில வருஷங்களுக்கு முன் ஒரு பெரும் சமுசாரியின் குடும்பத்தை அநியாயமாய்க் கொலை தண்டனை விதித்து நாசம் செய்தான் என்ற கெட்ட பெயரும் அதற்கு இருந்து வந்தது.

ஒரு நாள் நல்ல மத்தியான வேளையில் கதைகள் எழுதுவதில் திறமையுடைய ஒருவன் அவ்வழி போகையில் இம்மாளிகையைக்கண்டு, 'பணக்காரர்களை அடுத்துப் பயனில்லை என அறிந்தோம்; அவர்கள் வாழ்ந்தழிந்த இம்மாளிகையில்போய்ப்பார்ப்போம்; அது நிழலாவது கொடுக்கும்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டு அதில் நுழைந்தான். கட்டிடம் பழையதாகக் காணப்பட்டாலும் அதிகமாக இடிந்திருக்கவில்லை. ஆனால் புழுதியும், இருட்பறவைகளின் எச்சமும், எலி வங்கும், வௌவால் நாற்றமும் அதில் நிறைந்திருந்தது. உடைந்திருந்த கதவுகள் மூடப்பட்டே இருந்தன.

சந்தடி ஒன்றும் காணாமையால் ஒவ்வொரு அறையாக நுழைந்து அவன் பார்த்துக் கொண்டே போனான். பின்கட்டிலிருந்து முன்கட்டிற்குத் திரும்பி வருகையில் கூடத்திற்கடுத்த ஓர் அறையில் யாரோ ஒருவன் மற்றொருவனோடு உரத்த குரலில் பேசுவது திடீரென்று கேட்கவந்தது.

'என் மானம் போயிற்றேடா! அது மறுபடி வருமா? சொல்வார் பேச்சை நான் கேட்பவன், ஆளும் திறமையற்றவன் என்பது மகாராஜாவுக்கு எட்டி விட்டதே! இனி அதை மாற்ற முடியுமா? அப்படி எட்டவைத்தவனை நான் சும்மாவிடப்போவதில்லை. அவன் என்னிடம் முறையிட முயன்றதற்கே நான் இடங்கொடுக்கவில்லையே, எனக்கு மேற்பட்டவரிடம் என் பவிஷு வாங்கினால் நான் பொறுப்பேனா? பதினாயிரம் குடியானவர்கள் அழிவதானாலும் என் மனம் அதைவிடப் பெரிதென்று அவன் அறியவில்லையே! அவனும் அவன் குடும்பத்தின் மேலும் எவ்வளவு பழி தீர்த்தாலும் போதாதே டா.......'

என்ற சத்தம் காதில் விழவே கதாசிரியன் திடுக்கிட்டுப் போனான். 'யாருமில்லாத இப்பாழடைந்த வீட்டில்

பணக் கொழுப்பின் கொடுஞ் சொற்கள் நிரந்தரமான எதிரொலிகளாய் முழங்கிக் கொண்டிருக்கின்றனவா என்ன ?' என்று வியந்து அவ்வறையை நோக்கிச் சென்றான். அங்கோர் இருண்ட மூலையில் கந்தலும் கிழிசலுமான உடைகளணிந்த கிழவனொருவன் உட்கார்ந்திருந்தான். அவன் தாடியும் மீசையும் தலையும் நரைத்திருந்ததோடு உடம்பெல்லாம் புழுதியும் அழுக்கும் நிறைந்திருந்தது. அங்கு அவன் தவிர வேறொருவரையும் காணோம். யாரோடு அவன் பேசுகிறான் என்பது தெரியவில்லை. அவன் கண்கள் திறந்திருந்த போதிலும் எதிரில் ஒருவன் வந்து நிற்பதை உணரவில்லை. அவன் விறைக்க விறைக்க விழித்து யாருடனோ பேசிக் கொண்டே இருந்தான்.

'என்னடா பிதற்றுகிறாய்! ஒன்றுமறியாக் குழந்தையாம்! குட்டியாம்! குற்ற மற்றவையாம்! என் மானத்தை அழித்தவன் மக்களாயிற்றே! கொல்லுடா அவர்களை! என் மானத்திற்காக எவ்வளவு பேரை பலியிட்டாலும் போதாது !........'

என்று கிழவன் சொல்லிக் கொண்டே போனதைக் கண்டு, வந்தவன் திகைத்து இவன் குருடனோ என்று சந்தேகித்து 'கிழவா, தனியாக நீ ஏன் பிதற்றிக் கொண்டிருக்கிறாய்' என்று கேட்டான்.

'இதென்னடா பிணக்குவியல்! இதென்ன இரத்த வெள்ளம்! குழந்தைகள் கழுத்திலிருந்து செந்நீர் வழிகிறதே! வாயில்லாப் பூச்சிகள்! அவனுக்கு என்ன கோபமடா! என்ன வெறி! அவள் பேச்சில்தான் என்ன விஷம்! அவன் கண்களின் தழலைப் பார்! நெருப்புப் பொறி பறக்கிறது!........' என்று கிழவன் மறுபடி சொல்லியதைக் கேட்ட நம் கதாசிரியனுக்கு எடுத்து வாரிப்போட்டது. 'இங்கு யாராவது கொலையுண்டார்களா? கிழவா, நீ ஏன் இப்படிப் பரிதவிக்கிறாய்?' என்று இவன் வினவி முடிக்கு முன், கிழவன்,

'ஐயையோ, அவள் சபிக்கிறாளே! அவள் வசை மொழி என் நெஞ்சைப் பிளக்கிறதே! அவன் கண்தழல் என் உடம்பை எரிக்கிறதே! அவர்களை ஈட்டியால் குத்திக் கொல்லடா! ஏன் மயங்குகிறாய்! தாமதிக்காதே! அவர்கள் உயிருடன் இருந்தால் என்னைச் சாம்பராக்கி விடுவார்கள்; சீக்கிரம் கொல்லு! ஹா! உன் ஈட்டிக் குத்து என்வரை பாய்கிறதே! அவர்கள் இறந்தும் என் வேதனை நிற்க வில்லையே! வீடெல்லாம் காடாய் விட்டது. என் மனைவியைக் காணோம்! அவள் தோழிகள் எங்கே? வேலையாட்கள் ஓடி விட்டார்கள். ஐயோ! எல்லாம் அவள் சாபந்தான்!' என்று கடைசியாக ஓலமிடத் தொடங்கினான்.

கிழவன் செவிடனாயிருக்கலாமோ என்று எண்ணி வந்தவன் அவன் தோளைப் பிடித்தசைத்து,

'யாருமில்லாத இத் தனி வீட்டில் நீ ஏன் இப்படிக் கதறியழுகிறாய்?' என்று கேட்டதற்கு அவன்,

'யாருமில்லையா! செத்த பிணங்களும், கொலையாளிகளும், கணக்கற்ற ஜனங்களும் என்னைச் சூழ்ந்து நின்று பழிக்கிறார்களே! தனியாயிருக்க அவர்கள் என்னை விட்டால் தானே! அவர்களிடமிருந்து எப்படித் தப்புகிறது என்பது எனக்குத் தெரியவில்லையே!" என்றான்.

'நீ தனியாய்த்தான் இருக்கிறாய்; உனக்கு ஏதோ புத்தி பிரமம். வெளியே போவோம் வா. சூரிய ஒளியும், நீல வர்ணமும், பசுந் தரையும், இனிய காற்றும் உன் பிரமத்தைப் போக்கும்.'

'என்னால் எப்படி வர முடியும்? இங்குக் கட்டுண்டு கிடக்கிறேன்! இக் கட்டுகளோடு என்னை வெளியாரும் பார்த்துச் சிரிக்க வேண்டுமா? இன்று ஏன் என்னை நீ வெளியே அழைக்கிறாய்? தினம் போல சோற்றைப் போட்டு விட்டுப் போயேன்!' என்று ஆள் யாரென்று தெரியாமல் சொன்னான் கிழவன்.

இதைக் கேட்டதும், சரி, இங்கு இவனுக்கு யாரோ சோறிட வருகிறார் போலிருக்கிறது. அவரைக் கேட்டால் விஷயம் விளங்கலாம் என்று கதாசிரியன் நினைக்கையிலேயே சோற்று மூட்டையும் சட்டியில் தண்ணீரும் கொண்டு ஒரு சிறுவன் வந்துநின்றான்.

கிழவன் சோறுண்ணும் போதும் தண்ணீர் குடிக்கும் போதும் கூட வாய்க்கு வந்தபடி திட்டிக் கொண்டு, விடாதே! குத்து! கொல்லு! ஐயோ, என் உள்ளம் வெடிக்கிறதே! உடல் எரிகிறதே! என்று வாயோயாது சொல்லிக் கொண்டிருந்தான். சிறுவன் வீடு திரும்பும் போது கதாசிரியனும் அவனைத் தொடர்ந்து, 'இவன் யார்? ஏன் இப்படிப் புலம்புகிறான்!' என்று கேட்க, அவன், 'எனக் கொன்றும் தெரியாது. நான் 'இக் கேயுரா' குடும்பத்து வேலையாள். இப்பொழுதிருப்பவர் பாட்டன், காலம் சென்றபோது தம் மகனோடு, 'இக்கிழவன் எனக்கு வேண்டியவன், ஒரு வேளை சோறுவது அவனுக்கு விடாது போட்டு வா' என்றனராம். அதன்படி இப்பொழுது நடந்து வருகிறது' என்றான்.

இருவரும் 'இக்கேயுரா' வீடடைந்ததும், புதிதாக வந்தவன் வீட்டுப் பேரப்பிள்ளை அழைத்துக் கிழவனைப் பற்றிய விவரம் அறிய விரும்பிய போது, தனக்கும் அதிகமாக ஒன்றும் தெரியாது, தன் பாட்டனார் எழுதி வைத்த சுவடி யொன்றில் அதைப் பற்றிய விவரமிருப்பதாகக் கேள்வி என்று சொல்லிக் காகிதக் கட்டு ஒன்றைக் கொண்டு வந்து வைத்தான்.

அவைகளிலிருந்து சில குறிப்புகளை கதாசிரியன் வரைந்து கொண்டான்.

II. காதலர்கள்

'இன்பா' ஏரி, குன்றுகளுக்கிடையே படம்விரித்த பாம்புபோலே வளைந்து வளைந் திருக்கிறது. அங்கோர் தோணித் துறைக் கருகில் கொட்ஜா கிராமம். நல்ல நீர்வளத்தோடு செழுமையான வயல்களும் விரிந்த புல் தரைகளும் இதில் இருந்தன. இதன் தலைவன் ஸோயெமோன் நல்ல தயாளு. எளியவர்க் குற்றதுணை. நல்ல குடியானவனை ஜிம்பெய் கடனில் ஆழ்ந்து தவித்துக் கொண்டிருந்தான். ஸோயெமோன் அக் கடன்களைத் தானே கொடுத்து 'இன்பா' ஏரியில் தோணி செலுத்துபவனாக அவனை அமர்த்தினான்.

இக் கிராமத் தலைவனுக்கு, த்ஸுதா ஒரே மகள். வெகு செல்வமாக வளர்ந்து வந்தாள். நல்ல புத்திசாலி, சுறுசுறுப்புடையவள். எல்லாக்கிராமப் பெண்களோடும் வித்தியாச மின்றி விளையாடி வருவாள். தன் வீட்டுவேலைகளையும் தானே செய்வாள். தந்தைக்கு அவளிடம் வெகு பிரியம். ஒரு நாள் ஸோயெமோன் ஸக்கூரா நகரில் புச்சோஜி (புத்தர்) கோயிலுக்குச் சென்ற போது அதில் பூஜை செய்து வந்த கோஜென் என்பவன் தமக்கை மகனை ஸொகோரோ என்னும் சிறுவனைக் கண்டான். இவனுடைய அடக்க ஒடுக்கங்களைக் கண்டு மகிழ்ந்து, மாமன் அனுமதி பெற்றுத்தன் கிராமத்திற்கு அழைத்து வந்து இவனைத் தன் வீட்டில் வைத்துக்கொண்டான். தன் மகள் ஒப்பினால் இவனை மணந்து

கொள்ளட்டும்; இல்லா விட்டால் சகோதரனைப்போல் வீட்டிலிருக்கட்டும் என்பது அவன் எண்ணம்.

த்ஸுதாவுக்கும் ஸோகோரோவுக்கும் 'கண்டதும் காதல்' உண்டாகா விட்டாலும் நாளுக்கு நாள் அவர்களுக்குள் நட்பும், மதிப்பும், அன்பும் வளரலாயின. அது கடைசியாகக் காதலாய் மாறியது அவர்களுக்குத் தெரியவே இல்லை.

ஒரு நாள் வஸந்த காலம். மாலைப் பொழுது. வீட்டின் பின்புறத்தில் விசாலமான தோட்டத்தில் ஒரு சலவைக் கல் மேல் தான் கொய்த புஷ்பங்களைத் தொடுத்துக் கொண்டு த்ஸுதா வானில் சூரியன் அஸ்தமிப்பதை நோக்கி நின்றாள். அவன் தன் பல்லாயிரம் கைகளால் வாரியிறைத்து வந்த எண்ணிறந்த வர்ண ஒளியில் சின்னஞ்சிறு மேகக் கூறுகளும் ஓர் அற்புதமான அழகு பெற்றுத் திகழ்ந்தன.

இம் மகத்தான காட்சியை நோக்கின வண்ணமே அவள் சிந்தையில் ஆழ்ந்தாள். அருகில் தோழி வந்து நின்றது கூட அவளுக்குத் தெரியவில்லை, தன் கண்களைப் பொத்தவே, அக் கைகளையும் வளையல்களையும் தொட்டுப் பார்த்து, 'போதும். மோம்ஜி, கையை எடு' என்றாள்.

'த்ஸுதா, என்னைவிட வயதில் குறைந்தவளான நீ திடீரென்று என்னைவிட ஐந்து வருஷம் பெரியவளாய் விட்டவள்போலிருக்கிறாயே! எங்களோடு விளையாட வருவதில்லை. ஒதுங்கி தனித்திருந்து யோசனை செய்வதில் விருப்பம் கொள்கிறாய். இனி நாங்கள் உனக்கு வேண்டாம் போலிருக்கிறது?'

'வேண்டாமென்று யார் சொன்னது? அதுவும் இவ்வளவு நன்றாகக் கோலம் செய்து கொண்டு வந்திருக்கிற உன்னைச் சொல்வார்களா? உன் குறும்பு இருக்கட்டும். அதோ மறையும் சூரியன் வானத்தை எப்படி அலங்கரிக்கிறான் பார். தனக்கு முடிவு வரும் தருணத்தில் தன் முழுத்திறமையையும் காட்ட முயல்கிறான் போலே இல்லையா?' என்றாள் த்ஸுதா.

'ஆமாம் உண்மைதான். அழுகிப் போவதற்கு முன்தான் பழங்கள் தம் முழுச் சுவையையும் தருகின்றன. அவ்வளவு தூரம் போவானேன், கன்னிகைகளின் கவர்ச்சித் திறமை எப்பொழுது பூர்த்தி யடைகிறது தெரியுமா? விவாக காலத்திற்கு முன்தானே?' என்றாள் மோம்ஜி.

'இம் மனோகரமான காட்சிக்கிடையே உன் இனிய குரலில் நீ இவ்வழகிய உண்மையை வெளியிடுவதனால் உனக்குக் கலியாணம் சீக்கிரத்திலேயே நடக்கும் போலிருக்கிறது' என்றாள் த்ஸுதா சிரித்துக் கொண்டே.

'நடந்தால் நடக்கட்டும். உனக்கு நான் ஒன்று சொல்லுகிறேன் கேள். ஒரே மகளுடைய ஒருவர் தம் வீட்டில் ஒரு சிறுவனை வளர்க்கிறார். அவருக்கும் கிராமத்தாருக்கும் அவன் மேல் நல்ல மதிப்புண்டு. பெண்ணும் அவன் நற் குணங்களை மெச்சுகிறாள். இந்தச் சந்தர்ப்பத்தில் தந்தை அவனை மருமகனாக்கிக் கொள்ள விரும்பினால் அவ் விவாகம் நடக்குமா நடக்காதா?' என்று மோம்ஜி அவளைஉன்னிப்பாய்ப் பார்த்துக் கொண்டே கேட்டாள்.

'அப் பெண்ணின் மனோ பாவம் எனக் கெப்படித் தெரியும்?'

'அவள் நிலைமையில் நீ இருந்தால், அப்போ?'

'என் தந்தை சொற்படி நடப்பேன்,' என்றாள் த்ஸுதா.

'ஆமாம்,பழம் நழுவிப் பாலில்விழுந்ததுபோலவே நீ முழு மனதுடன்

ஆசைப்படுவதையே உன் தந்தையும் விரும்புகிறார். அதனால் அவர் சொற்படி நடப்பது கஷ்டமில்லை.'

'நான் ஆசைப்படுவது எப்படித் தெரியும் உனக்கு?'

'அகத்தினழகு முகத்தில் தெரியாதா? உன் செயல் ஒவ்வொன்றும் அதைக் காட்டுகிறது. விளையாட்டிலிருந்த ஊக்கத்தை வீட்டில் பொருள்களை ஒழுங்காக அமைப்பதிலும், அறைகளையும் சுவர்களையும் புஷ்பங்களாலும் தளிர்களாலும் அழகுபடுத்துவதிலும் இப்பொழுது காட்டுகிறாய். இதை ஒரு தனிக் கலையாக்கி இருக்கிறாய்!'

'நம் ஜப்பானியப் பெண்கள் இதில் கைதேர்ந்தவர்கள் என்பது உலகப் பிரசித்தமாயிற்றே. பூஜை அறைகளையும் மனோகரமாக்குவது நமக்கோர் தனிப்பட்ட இயற்கைக்குணமென்றல்லவா எண்ணுகிறார்கள். இதில் என்ன அதிசயம்?'

'இதில் உனக்குத் திடீரென்று அளவிறந்த ஊக்கம் பிறந்ததுதான் அதிசயம்' என்றாள் மோம்ஜி புன்சிரிப்போடு.

'செய்வதைத் திருந்தச் செய்வதில் எனக்குச் சற்று அதிக ஊக்கம் பிறந்திருப்பது உண்மைதான். அதனால் என் செய்கைத் திறனும் வளர்ந்து வருகிறது. அதைத்தான் பெரியோர்கள் யோகம் என்றும் கூறுவர்' என்றான்.

'அதைக் காதலென்றும் சொல்லலாம். நம் பொருட்டு ஒன்றைச் செய்து கொள்ளும் போது அது சற்றேறக் குறைய இருந்தாலும் நாம் திருப்தியடைகிறோம். காதல் பிறந்தபின் நாம் செய்வதெல்லாம் மற்றொருவர் திருப்திக்காக. அதை எவ்வளவு சீராகச் செய்தாலும் அதில் ஏதாவது குற்றம் குறை ஏற்படக் கூடுமோ என்று அச்சத்தோடு மேலும் மேலும் சீர் படுத்த முயல்கிறோம். ஆனால் சுகமாய் வாழ்ந்து வரும் காதலர்களிடையே நமது நற்குணங்களும் செய்கைத் திறனும் அதிகமாக ஓங்குவதில்லை. கஷ்டங்கள் ஏற்பட ஏற்பட காதல் இவ்வந்தி சூரியனைப் போலே தன் முழு அழகையும் பெருமையையும் காட்டி விடுகிறது' என்று தனக்கப்படியொரு சந்தர்ப்பம் கிடைக்குமா என எதிர் பார்ப்பவள் போலே த்ஸுதா சொன்னாள்.

'காதலுக்குக் கஷ்டங்கள் நல்ல உரை கற்கள் தான். ஆனால் எளியோராகிய நாம் அதை அதிகமாக உரைத்தால் நமது சொற்ப பொன் போலே சீக்கிரம் தேய்ந்து ஒன்றுமில்லாதாகி விடும். பெரும் பணக்காரர்க்கும் உயர் பதவியிலிருப்பவர்க்கும் உரைக்க உரைக்க அது ஒளி வீசக் கூடும்' என்று அதன் பெருமையை உணராதவன் போலே மோம்ஜி சொன்னான்.

எளியவர்க்கும் காதலின் பெருமைக்கும் வெகு தூரம் என்று தன் தோழி எண்ணியது த்ஸுதாவுக்குச் சகிக்கவில்லை. அது தன் மனதைச் சுருக்கென்று குத்தியது போல உணர்ந்து அவள்,

'அப்படி நீ எண்ண வேண்டாம். பெருங்குணங்கள்—அதிலும் காதலுக்குத் தன்னையே பலியிடச் செய்யும் பெருங்குணங்கள்—உயர் பதவியினரின் ஏக போகமல்ல; சில குலங்களில் மட்டும் ஒதுங்கி நிற்பவையுமல்ல. சந்தர்ப்பம் சரியாயிருந்தால் சாமானிய குடிகளிடத்தில் கூட வெகு மேன்மையோடு அவை திகழும்' என்றான்.

'நீ சொல்வதுண்மைதான். தாழ்ந்த பதவியிலிருப்பவர்கள் ஆபத்துக்காலங்களில் தம் பெருந்தன்மையைக் காட்ட

இல்லையா? எத்தனை ஸ்திரீகள் தம் கணவர்க்காகவும் தம்மக்களுக்காகவும் பாடுபடும் போது அற்புதமான வீரத்தனத்தை வெளியிட்டிருக்கிறார்கள்.'

'உயர் குணங்கள் ஒவ்வொருவரிடத்திலும் இருக்கத்தான் செய்கிறது. அவைகளைச் சமயம் நேர்ந்த போது வளர்க்க வேண்டும். மனிதர்க்குள் தாரதம்மியம் இதில் தான் வெளியாகிறது' என்றாள் த்ஸூதா.

ஃ ஃ ஃ

ஸொகோரோ சுபாவத்திலேயே சங்கோசப் பேர்வழி. உயர் பதவிச் சிறுவர்கள் மற்றவர்களோடு சகஜமாய்ப் பழகி வளர்வதில்லை; அதுவும் தம் பதவியி லிருந்து நழுவி விட்டால் அவர்களுக்கு அகம்பாவம் பின்னும் அதிகரித்து விடுகிறது. நீரிலிருந்து ஏற்பட்ட மீன் போலே துடிப்பார்களே யொழிய தம் மனோபாவங்களை மாற்றிக் கொண்டு தம் நிலைக் கேற்றபடி ஒழுகக்கற்பதில்லை. ஸொகோரோ இந்த வகுப்பில் சேர்ந்தவனன்று. ஆனாலும் இதன் சுவடுகள் அவனிடம் சிற்சில இல்லாமல் இல்லை. தன் கவுரவத்திற்குக் குறை நேராதபடி பாதுகாத்தான். தன்னை இழிவு படுத்தும் செய்கையினால் என்ன லாபம் கிடைப்பதானாலும் அதைச் செய்யான்.

த்ஸூதா மேல் தனக்கு ஏற்பட்ட காதலை அவன் ஆரம்பத்திலேயே அறிந்து கொண்டான். ஆனால் அதை எப்படி வெளியிடுவது? பதவி யிழந்து செல்வ மற்று அண்டி வாழும் இவன் எப்படி அக் கிராமத் தலைவன் மகளை மணப்பது! வெளி நாடுகளில் போய்ப் பொருள் சம்பாதித்து வந்தால் அப்பொழுது அவள் விருப்பத்தை அறிய முயலலாம். இங்கேயே இந் நிலை இருந்தால் அவளைக் கேட்கக்கூட வாயெழாது. இப்படி ஆலோசித்துக் கொண்டு ஒரு நாள் ஸொயெமோனை அணுகித் தான் வெளி நாடு போய்ப் பொருள் சம்பாதிக்க விரும்புவதாக அவன் சொன்னான்.

'நீ ஏன் கவலைப் படுகிறாய்? உனது நன்மையை நானே கவனிப்பேன். இவ்வளவு காலம் உன்னை என்னிடம் வைத்துக் கொண்டு கடைசியில் உன்னை ஒன்று மில்லாமல் விட்டு விடுவேனோ?' என்று ஸொயெமோன் கூறியதற்கு,

'இல்லை; நானாகவே முயன்று ஒரு பதவி பெற்றால் கவுரவமாக இருக்கும் என்று நினைத்து உம்மிடம் விடை பெற விரும்புகிறேன்' என்று தந்தையிடம் பணிவுடன் கூறும் மகனைப் போலே ஸொகோரோ பதிலளித்தான்.

'நீ கவுரவமாய் வாழ வேண்டுமென்றுதான் நானும் விரும்புகிறேன். என் மகள் இசைந்தால் நீ இவ் வீட்டிலேயே அப்படி இருக்கலாம். இல்லாவிட்டால் உனக்குத் தக்க ஏற்பாடு வேறு செய்கிறேன். நீ அஞ்ச வேண்டாம்' என்று ஸொயெமோன் சொன்னதைக் கேட்டு ஸொகோரோ மகிழ்ச்சி யடைந்தான். தன் எதிர்காலம் த்ஸூதாவைத்தான் பொறுத்திருக்கிறது என்பது தெளிவுபடவே அவள் என்ன எண்ணங் கொண்டிருக்கிறாளோ என்ற கவலை எழ ஆரம்பித்தது. ஒரு நாள் தோட்டத்தில் அவள் தனியாகப் பூக்கொய்து வருகையில் அவளருகில் சென்று, 'நாம் இருவரும் ஒன்றாக இவ் வீட்டில் வெகு காலமாக இருந்தும் இன்று நான் உன்னிடம் சொல்ல விரும்புவதை இதுவரை வெளியிடத்துணியவில்லை. நான்வெளியூர் சென்று சம்பாதித்து வந்த பிறகு என் காதலை உன்னிடம் வெளியிட எண்ணினேன். உன் தந்தை என்னை வெளியனுப்ப மறுக்கிறார். உனது நோக்கத்தையும் அறிந்து கொண்ட

பிறகு நான் செய்ய வேண்டியது தெளிவுபடுமாகையால் நீ உன் மனதிலுள்ளதைக் கூறும்படி வேண்டுகிறேன்' என்றான் ஸொகோரோ.

'நான் ஒன்றுமறியாதவள். என்னை ஒரு பொருளாக எண்ணி நீர் வந்து கேட்பது உமது பெருந் தன்மையைக் காட்டுகிறது. என் தந்தை சொற்படி நடப்பவள் நான். அவர் விருப்பத்திற்கு எதிர்த்துச் சொல்ல நான் யார்?' என்று தலை குனிந்த வண்ணம் தன் மழலைச் சொற்களைப் பொழிந்தாள்.

'உன் தந்தையின் நோக்கத்தை அறிந்த பின்தான் உன்னை அணுகினேன். நீ மறுப்பதில்லை என்பதைக் கேட்டு எனக்குப் பரம சந்தோஷம்' என்று சொல்லிப் பெரு மகிழ்ச்சியோடு தன் அறை வந்து சேர்ந்தான்.

த்ஸுதாவும் முக மலர்ச்சியோடு அவன் மறையும் வரை கடைக் கண்ணால் பார்த்திருந்தாள்.

III கடமை எது?

ஹொட்டா பிரபு ஸக்கூரா மாகாணத் தலைவராயிருந்தவரை குடிகளுக்குப் பல நன்மைகள் செய்து வந்தார். பள்ளிக் கூடங்கள், வைத்தியசாலைகள் குடி நீர் வசதிகள் போன்ற பல குடிகளுக்கு நன்மை பயக்கக் கூடியவைகளை செய்து வைத்தார். முறைப்படி யுள்ள தீர்வைகளுக்கு மேல் ஒரு சிறிதும் அவர் விரும்பவில்லை. இப்படிச் செய்து வந்ததனால் நல்ல ஆட்சித் திறமை யுடையவர் எனப் பெயர் பெற்று நாட்டுத் தலைவரான ஷோகனுடைய மந்திர சபைக்கு அங்கத்தினராக்கப் பட்டார். இவருடைய பெருமையினாலேயே இவர் மகன் மஸனொபு என்பவனும் இவருக்குப் பின் இவ்வுயர் பதவியைப் பெற்றான். இவன் தலைமை வகித்த சில வருஷங்களுக்குள் பல மாறுதல்கள் ஏற்படலாயின. ஸொயெமோன் இறந்த பின் ஸொகோரோ அக் கிராமத் தலைவனானான். த்ஸுதா அவனுக்கு நான்கு ஆண் மக்களைப் பெற்றாள். சிறு வயதிலேயே குழந்தைகள் நல்ல புத்திசாலிகள் என்பது விளங்கிற்று. தாய் தந்தையர் அன்பு பெற்று வெகு செல்வமாய் வளர்ந்தார்கள். ஸொகோரோவும் தன் கிராமத்திலும் வெளி கிராமங்களிலும் குடியானவர்களிடத்தில் நல்ல பெயர் வாங்கி, அவர்களால் நன்கு மதிக்கப் பட்டு, கவுரவமாய்க் காலம் கழித்து வந்தான். மஸனொபு தன் தந்தையைப் போல கிராம நிர்வாகத்தைத்தானே நேரில் கவனியாது ஒரு காரியஸ்தனிடம் விட்டுத்தான் பெரும்பாலும் டோக்கியோவிலேயே வசித்து வந்தான். காரியஸ்தன் அயோக்கியனானபடியால் எஜமானன் பெயரைக்கெடுத்துத்தான் பணம் சம்பாதித்துக் கொள்ள முயன்றான். மாகாணத்தில் தான் இட்டது சட்டமாயிருக்கவே குடியானவர்கள் மீது முறைப்படியுள்ள தீர்வைகளுக்குமேல் ஐந்திலொருபங்கு அதிகமாக உயர்த்தினான். வீண் ஆடம்பரச் செலவுக்குப் பணம் வேண்டியிருந்தபடியால் மஸனொபு இதற்கு இணங்க வேண்டியிருந்தது.

அந்நாட்களில் மாகாண அதிகாரிகளுக்குத்தீர்வைகளை உயர்த்தும் உரிமை இருந்தது. இப்படி உயர்த்துவதைப் பற்றி குடியானவர்கள் மாகாணத் தலைவனுக்கு முறையிட வேண்டுமானால் கீழதிகாரிகள் மூலமாகத்தான் தமது மனுவை அனுப்ப வேண்டும். அவர்கள் அம் மனுவைத் தலைவனிடம் அனுப்புகிறார்களா இல்லையா என்பதை அறிவது கூட கஷ்டம். தலைவனிடம் நேரில் குடியானவர் யாரும் முறையிடலாகாது. அப்படி ஒருவன் செய்யத் துணிந்தால் அவ

னுக்குத் தண்டனை சிரச்சேதம் தான். சட்டம் இவ்விஷயத்தில் வெகு கண்டிப்பாக இருந்தது.

இதற்குப் பயந்து பல குடும்பங்கள் இவ்வதிக வரிகளைத் தாங்காது தம் வீடு வாசலைத் துறந்து வேறு மாகாணங்களில் போய்க் குடியேறின. தங்கியிருந்தவர்கள் வரிகளைக் கொடுக்க முடியாமையினால் பாக்கி அதிகரித்து வந்தது.

இவ்விஷயத்தில் கிராமத் தலைவர்கள் பாடு வெகு கஷ்டமாய் விட்டது. ஒரு புறம் குடிகளின் கூக்குரல்; மற்றொரு புறம் அதிகாரிகளின் நிர்ப்பந்தம். என்ன கொடுமை யிழைத்தாவது வரி வசூலிக்க வேண்டும் என்று இவர்கள் வற்புறுத்தினார்கள்.

காரியஸ்தனிடம் இது பற்றி முறையிட்ட போது அவன் தான் ஒன்றும் செய்ய இயலாது என்று சொன்னதின் பேரில் குடியானவர்கள் ஒன்று கூடி மாகாணத் தலைவனிடம் போய் தம் குறைகளைச் சொல்லிக் கொள்வதென முனைந்தார்கள். ஸொகோரோவும் ஆறு கிராமத் தலைவர்களும் முன் வந்து, 'நீங்கள் இவ்வளவு பேர்களும் கும்பலாய்ச் சென்றால் நாட்டில் பெருங் குழப்பம் ஏற்படும். பல குடும்பங்கள் அதனால் வீணாய்க் கஷ்டப் பட நேரும். ஆகையால் நீங்கள் அமைதியாய் வீடு போய்ச் சேருங்கள். உங்களுக்காக நாங்கள் போய் இயன்றதைச் செய்கிறோம்' என்று சொல்லி அவர்களை அனுப்பி விட்டு, தாங்கள் ஏழு பேரும் டோக்கியோ நகர் வந்து சேர்ந்தார்கள்.

அங்கு மூன்று மாத காலம் தங்கியிருந்து வெகு முயன்றும் மஸனேபு பிரபுவின் பேட்டி கிடைக்க வில்லை. வந்தவர்களிற் பலர் மனந்தளர ஆரம்பித்தார்கள். அதுகண்டு ஸொகோரோ,

'நீங்கள் ஏன் இப்படி மனந்தளர்கிறீர்கள்! நாம் பெரியதொரு காரியம் செய்தோமே, அதை நீங்கள் பொருட் படுத்த வில்லையே! நாட்டில் குழப்பமுண்டாக்காதபடி குடியானவர்களைத் திருப்பி அனுப்பினோமே! ஆயிரக் கணக்கான குடிகள் நம்மை நம்பி நம் பேச்சுப்படி நல் வழியில் நடக்கத் தயாராகி இருப்பது விளங்கவில்லையா? மேலும் நாட்டில் குழப்பம் நேர்ந்தால் முதல் கஷ்டம் குடிகளுக்குத்தானே! உண்ண உணவின்றி நிற்க நிழலின்றி அவர்கள் தவிக்கும் போது அதிகாரிகள் மேல் விழுந்து பின்னும் அவர்களை நசுக்குவார்கள். பொதுஜன நண்பர்களான நாம் இதற்கிடமில்லாமல் செய்தோமே இது ஒரு நல்ல வெற்றியல்லவா?' என்றான்.

'இது ஒரு வெற்றி தான். ஆனால் அவர்கள் குறை அப்படியே தானே இருக்கிறது! இது தான் எங்கள் வருத்தம்' என்றார்கள்.

'வருந்தி என்ன பயன்? மனம் தளருவதைத் தவிர எடுத்த காரியம் கைகூடுகிறதா இல்லையா? இப்பிரபுவினிடம் இன்னும் முயன்று பார்ப்போம், அது பலிக்கா விட்டால் வேறு வழியை நாடுவோம்' என்று தைரியம் சொல்லி பிரபுவின் மாளிகைக்கு அவர்களை மறுபடி அழைத்துச் சென்றான். அன்று நல்ல வேளையாய் அங்கு இக்கேயுரா என்னும் உத்தியோகஸ்தர் ஒருவர் இருந்தார். அவர் இவர்கள் மீது இரக்கங் கொண்டு,

'உங்கள் தீர்வைகளை உயர்த்தியதைக் குறைப்பதற்காக நீங்கள் படும் பாடு இங்கு எல்லாருக்கும் தெரியும். தீமை விதைத்தால் தீமை விளையும்; நன்மை விதைத்தால் நன்மை விளையும் என்பது இன்றைக்கும் பொய்யன்று.

இவ்வுலகில் நன்மையும் தீமையும் கலந்து காணப்பட்டாலும் தெய்வத்தின் முன்னிலையில் அவை வேறு பட்டே நிற்கும். நீங்களோ கஷ்டப் பட்டு வெகு தூரம் வந்திருக்கிறீர்கள். எதையும் ஆலோசித்துச் செய்யுங்கள்' என்று நல்லதனமாய் அவர்களிடம் பேசி அனுப்ப முயன்றார்.

இந்த உத்தியோகஸ்தர் நல்லவரா யிருக்கிறார். சற்று நாம் பிடிவாதம் செய்தால் நம் மனுவைப் பிரபுவிடம் சேர்ப்பார்என்றுஎண்ணிஸொகோரோ தவிர மற்ற ஆறு பேர்களும்,

'நாங்கள் வீடு திரும்ப மாட்டோம். இங்கிருந்து நாங்கள் அசையப் போவ தில்லை' என்று வற்புறுத்தினார்கள்.

ஸொகோரோ அவர்களுக்குச் செய்த சமிக்ஞை மேல் உத்தியோகஸ் தருக்கு வந்தன மளித்து எல்லோரும் விடுதிக்குத் திரும்பினார்கள். அங்கு வந்ததும், 'நமது எண்ணம் கை கூடும்போது நீ அதைக் கெடுத்து எங்களை அழைத்து வந்து விட்டாயே. இன்னும்சற்றுப்பிடிவாதமாயிருந்தால் நம் மனுவை அவர் பிரபுவினிடம் சேர்த்திருப்பாரே' என்று முணு முணுத்தார்கள்.

'நீக்கள் சொல்வ துண்மைதான். சற்றுப்பிடிவாதம்செய்தால் நமது மனு பிரபுவிடம் சேர்ந்திருக்கும். ஆனால் அதில் எவ்வித பயனும் இராது. இவ் வுத்தியோகஸ்தர் பேச்சிலிருந்து நம் தீர்வைகள் உயர்த்தப் பட்ட செய்தி பிரபுவுக்குத் தெரியுமென்று ஏற்பட வில்லையா? அப்படி யிருக்க அவரிடம் முறை யிட்டு என்ன பயன்? என்று தான் உங்களை அழைத்து வந்து விட்டேன்' என்றான் ஸொகோரோ.

'ஒன்றும் பயனிராதுதான். ஆனால் நமது கடமையைச் செய்ததாக இருக்குமே என்று நாங்கள் எண்ணினோம்' என்றார்கள்.

'நமது கடமை பிரபுவிடத்தில் முறை யிடுவதன்று, குடியானவர் குறைகளைத்தீர்க்கமுயல்வதே யாகும்' என்றான் ஸொகோரோ.

'அதற்குச் செய்ய வேண்டியது வேறென்ன இருக்கிறது?'

'நாமோ உயிர் துறக்க ஸித்தமா யிருக்கிறோம். நமக்குள்ளது ஒரு உயிர் தான். அதை நாய்களின் உயிர்போலே அற்ப விஷயங்களுக்காக அதை வீசி எறியலாகாது. பயன் படக்கூடிய வழி யில் செல்லுகையில் உயிர் துறக்க வேண்டி யிருந்தால் அதை பலியாகக் கொடுக்கப்பின்வாங்கலாகாது.பலியிட அவசிய மில்லாதபோது அதைக் காப் பதுதான் தீரத்தனம். உயிர் விட முனைந்து விட்டோமே என்று மனம் பதறி அதை வீணுக்குவது கோழைத் தனமாகும். அநேகமாய்க் கொடுமை இயற்றுபவர்கள் இக்கோழை மன முடையவர்களே. தீரர்கள் கொடுமை இழைக்க எப்பொழுதும் ஒத்துக் கொள்ள மாட்டார்கள்' என்று ஸொகோரோ உள்ள நிலைமையைத் தெளிவாக விளக்கினான்.

'இப்பொழுது நாம் செய்ய வேண் டியதென்ன?' என்று கேட்டார்கள்.

'இந்தப் பிரபுவுக்கும் தலைவரான ஷோகனிடம் நம் மனுவைக் கொடுப் பதுதான். நம் தீர்வைகளை அளவு கடந்து உயர்த்திய செய்தி அவருக் குத் தெரியாது' என்று ஸொகோ ரோ சொன்னதைக்கேட்டு அவர்கள் வியப்பும் நடுக்கமுங் கொண்டு, ஹா! ஷோகனிடத்திலா! என்ன துணிச் சல்! இதை யாரும் நினைக்கக்கூட பயப்படுவார்களே! நம்மால் எப்படிச் செய்ய முடியும்?' என்றார்கள்.

'நீங்கள் இதற்கு இப்படி பிரமித்து விழிக்கலாமா? உயிர் துறக்க முனைந் துள்ள நமக்கு எவ்வளவு பெரிய அதி காரியானல் என்ன? இது வரை

யாரும் துணிந்திரா விட்டால்தான் என்ன? தலைக்குமேல் வெள்ளம் ஒரு சாண் போனால் என்ன, முழம்போனாலென்ன? எடுத்த வேலை முடிகிறதா என்று பார்க்க வேண்டிய தொன்று தான் நமக்கு முக்கியம். ஷோகன், தம்வரை எட்டின குடிகள் குறையைத் தீர்க்காவிட்டால் நாடு முழுவதும் குழப்பம் ஏற்படக்கூடும்என்று அஞ்சி நியாயம் வழங்கும்படிச் செய்வார்' என்று ஸொகோரோ தக்க காரணங்களை எடுத்துக் காட்டவே மற்ற ஆறு பேரும்

'ஆனால் சரி, நாம் உடனே புறப்படுவோம்' என்றார்கள்.

'அவசரப்பட வேண்டாம். நாம் ஏழு பேரும் கும்பலாய் ஷோகனிடம் செல்வது சாத்தியமன்று. நம்முள் யாராவது ஒருவன்தான் போகவேண்டும். மற்றவர்கள் வீடு திரும்புதல் நலம்' என்றான் ஸொகோரோ.

அது கேட்டு சிபா கிராமத் தலைவனான ஜூஜோ

'எனக்கு வயதாகி விட்டது. இம்மாதிரி சந்தர்ப்பம் எனக்கினி கிடைக்காது. ஆகையால் ஷோகனிடம் நான் போய் மனுவைக் கொடுக்கிறேன்' என்றான்.

'இது கிழவனாலாகக் கூடிய தன்று. இதற்கு தேக வலிமையும் சுறு சுறுப்பும் அவசியம். அதற்குத் தகுந்தவன் நான்தான். ஆகையால் நான் போகிறேன்' என்றான் ஹஜ்ஜூமோ என்பவன்.

அத்தருணத்தில் அங்கு வந்திருந்த ஸொகோரோவின் மாமனான கோஜென்,

'இந்த யோசனை முழுவதும் செய்தவன் ஸொகோரோ வானபடியால் இதைச் சரிவர நிறைவேற்றத் தகுதியுடையவன் அவனே' என்றான்.

'நண்பர்களே! என் மாமா சொல்வதுதான் சரி, இதை எனக்கு விட்டு நீங்கள் ஊர் போய்ச் சேருங்கள். நான் வேலையை முடித்துவருகிறேன்' என்று சொல்லி மனமில்லாத அவர்களைக் கட்டாயப் படுத்தி ஸொகோரோ திரும்பச் செய்தான்.

பிறகு அவன் தனியாக இருக்கையில் தன் மனைவி மக்கள் ஞாபகம் வந்தது. தனக்குப் பின் அவர்கள் கதி என்னவாகுமோ வென்று ஏங்கினான். தன் மாமன் அவர்களைக் காப்பாற்றக் கூடும். ஆனால் தன்னுடைய குற்றத்திற்காக இரக்கமற்ற அதிகாரிகள் தன் மனைவிக்கும் மரண தண்டனை விதித்தால் என் செய்வது என்ற எண்ணம் உண்டாகவே அவன் உடல் நடுக்க முற்றது.

என்ன நேர்ந்தாலும் சரி, எடுத்த காரியத்தை முடித்தே தீர வேண்டும். நம் ஒரு குடும்பத்தைப் பார்த்தால் போதுமா? பல குடும்பங்கள் பரிதவித்துக் கொண்டிருக்கின்றனவே! நம் மனைவிக்கு இவ் வாபத்து நேரா வண்ணம் வழி செய்வோம். நேராக இப்பொழுது வீடு சென்று மனைவி மக்களிடை கடைசியாக விடை பெற்று வந்து எடுத்த வேலையை முடிப்பதே சரி என்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டு ஸொகோரோ கொட்ஜூ கிராமம் நோக்கிப் புறப்பட்டான்.

> உலகத்திலுள்ள எல்லா ஜாதியாரையும் ஷாங்காய் நகரத்தில் பார்க்கலாம். ஜப்பானியர் ஆக்ரமிப்புக்கு முன்னர், இங்கே, 6,600 பிரிட்டிஷார், 3,017 ருஷ்யர்கள் 2,000 அமெரிக்கர், 1,000 ஜெர்மானியர், இப்படி பல ஜாதியாரும் வசித்தார்கள்.

மாஜி கெய்ஸர் எப்படி வாழ்கிறார்?

—எச். ஜே. ஜி.

இருபது வருஷங்களுக்கு முன்னர் வரை சுமார் ஆறு கோடி ஜனங்களுக்கு அரசனாயிருந்து, ராணுவ மிடுக்குடன் ஏக சக்ராதிபத்யம் செலுத்தி வந்த கெய்ஸர், இப்பொழுது, டோர்ன் என்ற கிராமத்திலே அமைதியாக வசித்துக் கொண்டிருக்கிறார். இந்த அமைதியை இவரே தேடிக் கொண்டாரா அல்லது தேடிக் கொள்ளச் செய்யப்பட்டாரா வென்பது வேறு கேள்வி.

டோர்ன் என்பது ஹாலந்து தேசத்திலுள்ள ஒரு சிறிய கிராமம். உட்ரெட்ச்ட் என்ற நகரத்திலிருந்து ஒரு மணி தூரத்தில் இஃது இருக்கிறது. இங்கே லாங்ப்ராகெர்வெக் என்ற ஒரு வீதிக்குள்ளே நுழைந்து சுமார் 250 கஜ தூரம் போனால், ஒரு பெரிய தோட்டத்திற் குள்ளே சிவப்புக் கட்டிடம் ஒன்று தோன்றும். இதுதான் கெய்ஸர் வசிக்கிற இடம். சுமார் பத்து ஏக்ரா விஸ்தீரண முள்ள இந்தத் தோட்டத்தைச் சுற்றி ஆழமான அகழி வெட்டப்பட்டிருக்கிறது. ஐந்தரை அடி உயரமுள்ள முள் கம்பி வேலியும் போடப்பட்டிருக்கிறது. தோட்டத்திற்கு முகப்பில் பச்சை வர்ணம் பூசிய ஒரு மர வீடு இருக்கிறது. இது வாயிற் காப்போன் தங்குமிடம்.

தோட்டத்திற்குள் உயர்ந்து வளர்ந்த மரங்கள் இருக்கின்றன. ஆனால் அதில் புஷ்பச் செடிகளே இல்லை. ஓர் ஏரி இருக்கிறது. சிறிய மாதா கோவில் ஒன்று, அறுக்கப்பட்ட மரத் துண்டுகளைச் சேகரித்து வைக்கும் கிடங்கு, சிப்பந்திகள் வசிப்பதற்குத் தனித் தனி வீடுகள் முதலிய பலவும் இங்கு இருக்கின்றன.

கெய்ஸர், இங்கும் ராஜ தோரணையிலேதான் வசிக்கிறார். ஓர் அரசனுக்குரிய எல்லாப் பரிவாரங்களும் இவரிடத்தில் இருக்கின்றன. தோட்டத்தின் மத்தியிலுள்ள கெய்ஸரின் வீடு இரண்டு மாடிகளை யுடையது. இதன் மீது பச்சைப் பசேலென்று கொடிகள் படரவிடப்பட்டிருக்கின்றன. இந்தப் பெரிய கட்டிடத்தை ஒட்டினாற்போல் ஒரு சிறிய கட்டிடம் இருக்கிறது. இதில் கெய்ஸரின் இளைய சம்சாரத்தின் குழந்தைகள் வசிக்கின்றன.

முன்னே பெர்லின் அரண்மனையில் வசிக்கிறபோது எப்படி அரண்மனைக் காரியங்கள் நடைபெற வேண்டுமென்று கெய்ஸர் விரும்பினாரோ அப்படியேதான் இங்கும், ஒழுங்காகக் காரியங்கள் நடைபெற வேண்டுமென்பதில் மிகவும் கண்டிப்பாக இருக்கிறார்.

வீட்டுக்கு வெளியே இருக்கிறபோது, கெய்ஸருக்கு மரங்களை ரம்பங் கொண்டு அறுப்பதும், கோடரி கொண்டு வெட்டுவதும் பொழுது போக்கு வேலைகள். வீட்டுக்குள்ளே இருக்கிறபோது, சீதோஷ்ணக் கருவியொன்றை வைத்துக் கொண்டு, அன்றாட சீதோஷ்ண நிலையை அளந்து பார்ப்பதிலே பொழுது போக்குவார்.

கெய்ஸரின் அன்றாட வேலைகள் என்ன வென்பதைச் சிறிது கவனிப்போம். குளிர் காலத்தில் ஐந்து மணிக்கு எழுந்து விடுகிறார். இவருடைய படுக்கையறைக்கு அருகாமையில் ஒரு வேலையாள் இராத்திரியில் நித்திரை செய்வான். அவன், தினந்தோறும் இவரை எழுப்பி விடுவான். எழுந்தவுடனே, கோடைகாலமா யிருந்தால்

பச்சைத் தண்ணீரிலும், மற்றக் காலங்களில் கொஞ்சம் வெது வெது என்று இருக்கிற நீரிலும் ஸ்நானம் செய்து விடுகிறார். உடனே ஒரு கோப்பை காபி. பின்னர் தோட்டத்திலேயோ, கிராமத்திலேயோ கொஞ்ச நேரம் உலவுவார். அப்படி கிராமத்திற்குள்ளே உலவச் செல்கிறபோது, பைபிளிலிருந்து ஓர் அத்தியாயத்தை உரக்கப் படிப்பார்.

பிரார்த்தனை முடிந்ததும் காலை ஆகாரம். ஒரு வித ஆடம்பரமுமில்லாமல், சாதாரண முறையிலேயே உணவு பரிமாறப் படுகிறது. பின்னர், காரியதரிசிகள் வந்து, அன்றுடம் வந்த தபால்களைப் பிரித்து வைக்கிறார்

இதுதான் கெய்ஸர் வசிக்கிற வீடு

செங்கோல் பிடித்த கையினாலே கட்டை வெட்டுகிறார் கெய்ஸர்!

கிராமவாசிகளுடன் கொச்சையான டச்சு பாஷையில் ஏதேனும் பேசுவார். இதற்குள் மணி எட்டாகிவிடும்.

சரியாக எட்டு மணிக்கு ஒரு மணி அடிக்கப் படுகிறது. உடனே, வீட்டிலுள்ளவர்கள் அத்தனை பேரும் விருந்தாளிகள் உள்பட, தோட்டத்திற்குள்ளேயிருக்கும் மாதா கோயிலில் வந்து கூடுவார்கள். அங்கே கெய்ஸர், கள். இன்னொருவர், பத்திரிகைகளில் காணப்பெறும் முக்கியமான செய்திகளைச் சொல்கிறார். கெய்ஸரிடத்தில் மொத்தம் ஐந்து காரியதரிசிகள் வேலை செய்கிறார்கள் என்றால் இவருக்குத் தினம் எத்தனை தபால்கள் வருமென்பதை நாம் சொல்லத் தேவையில்லை.

கெய்ஸர் முக்கியமாக, இத்தலியில்

முஸோலினி என்ன செய்கிறார் என்பதைப் பற்றியும், சீனாவில் என்ன நடைபெறுகிற தென்பதைப் பற்றியும் அதிக அக்கரையோடு கவனிக்கிறார். இந்த வேலை முடிந்ததும், காரியதரிசிகள் அனைவரும் அறையை விட்டு வெளியே போய் விடுகிறார்கள். கால் மணி நேரம் கெய்ஸர் தியானத்தில் இருப்பார். பிறகு, பிரதம காரியதரிசி மட்டும் வந்து 'சக்ரவர்த்தியினுடைய உத்திரவு என்னவோ?' என்று கேட்பார். கால நிலை சௌகரியமாயிருந்தால், வெளியிலே சென்று கட்டை வெட்டுவார்; புல் சீவுவார்; அல்லது தோட்ட வேலை ஏதேனும் செய்வார். வீட்டிலே அடுப்புக்கு கொஞ்சம் அதிகமான கட்டை தேவையாயிருந்தால், கொஞ்ச தூரம் மோட்டாரில் சென்று, கட்டை வெட்டிக்கொண்டுவந்துவீட்டில் சேர்ப்பார்.

கெய்ஸர் சாதாரணமாக, முன் பக்கத்து கேட் (Gate) வழியாக வெளியே போவது மில்லை. உள்ளே நுழைவது மில்லை. தமக் கென்று தனியாக ஒரு கேட் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார். தம் கையாலேயே இதை இவர் நிர்மாணித்தார். இது இரும்பினால் செய்யப்பட்டது. இந்த கேட்டுக்கு மேல் ஜெர்மானிய முடியும் டப்ளியு (W) என்ற எழுத்தும் பொறிக்கப்பட் டிருக்கின்றன.

முடி துறந்த பிறகு கெய்ஸர், ஹெர்மீனா என்ற ராஜ வமிசத்துப் பெண் ணொருத்தியை இரண்டாவது மனைவியாக விவாகஞ் செய்து கொண்டிருக்கிறாரல்லவா? இவருக்கு கெய்ஸரின் என்று பெயர். இந்த அம்மாளுக்கு போட்டோ சட்டங்களை வாங்கிச் சேகரிப்பதிலே அதிக பிரியம். கிராமத்துக் கடைகளில் சென்று, விதவிதமான போட்டோ சட்டங்களை வாங்கிப் போட்டு வைக்கிறாள்.

கெய்ஸர், கட்டை வெட்டும் வேலையை முடித்துக் கொண்டு 11-30 மணிக்கு வீடு வந்து சேருகிறார். பின்னர் தன் உடையை மாற்றிக்கொண்டு தமக்குப் பிரியமான சீதோஷ்ணக் கருவியிலே மனஞ் செலுத்துகிறார்.

பகல் ஒரு மணிக்கு இடைப் போஜனம் பரிமாறப் படுகிறது. கொஞ்சம் சூப், உருளைக்கிழங்கு இவைகள்தான் இடைப் போஜன ஆகாரம். பிறகு தம் படுக்கை யறைக்குச் சென்று, மூன்று மணிவரைக்கும் நன்றாகத் தூங்குகிறார்.

மூன்றரை மணிக்கு, ஜெர்மனியிலிருந்து யாராவது வந்திருந்தால் அவர்களுக்குப் பேட்டி கொடுத்துப் பேசுகிறார். அப்படி ஜெர்மானியர் ஒருவரும் வரவில்லை யென்றால், டச்சுக்காரர் யாராவது வந்தால் அவர்களைக் கண்டு பேசுகிறார்.

சரியாக ஏழு மணிக்கு இராப்போஜனம் பரிமாறப் படுகிறது. கெய்ஸரின் இரண்டாவது மனைவிக்கு ஐந்து குழந்தைகள் இருக்கின்றன. இவர்கள், கெய்ஸரிடத்தில் நெருங்கிப் பழகுவதைக் காணோம். இவர்கள் தனியாகவே உண்பதும் உறங்குவதுமாயிருக்கிறார்கள். இராப் போஜனம் முடிந்தவுடன் கொஞ்ச நேரம் கூட இருக்கப் பட்டவர்களுடன் பேசிக்கொண்டிருந்துவிட்டு, சரியாக பதினொரு மணிக்குப் படுக்கைக்குப் போய்விடுகிறார். உலகத்திலே அன்றாடம் என்ன நடை பெற்று வருகிற தென்பதை கெய்ஸர் கூர்மையாகக் கவனித்துக் கொண்டு வருகிறார். ஜெர்மனியின் உள் நாட்டு விஷயங்களில் இவர் சிறிதும் தலையிடுவ தில்லை.

கெய்ஸருக்கு இப்பொழுது 80 வயது நடக்கிறது. ஆனாலும் சுறுசுறுப்பாகவும் உற்சாக மாகவும் இருக்கிறார்.

பூலோகத்தின் வயதென்ன ?

—"விஞ்ஞான போதகர்"

கடந்த மாத "ஜோதி"யில் பூமியை நிறுத்துப் பார்த்தோம். அதனைத் தொடர்ந்தாற்போல் பூமியின் வயதைத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசிய மல்லவா ?

பூலோகம் மிகவும் முதிர்ந்த வயதையுடையதாயினும் பெரு ஆச்சரியப்படத் தக்க சரித்திரத்தையுடைத்தாயிருக்கிறது. அதன் உண்மை உற்பத்தி தெளிவாகத் தெரிந்துகொள்ளக் கூடாமலிருந்த போதிலும் பூலோக ரஸாயன-பிரகிருதி சாஸ்திரங்களைப் பற்றிய ஆராய்ச்சிகள் அதிகரிக்க அதிகரிக்க அநேக உண்மை இரகசியங்கள் தெற்றெனத் தெளிவாயின.

பூமியில் புதைந்த பாறைகளில் தோன்றும் சமுத்திர அலைகள் போன்ற குறிகளும், பலவித வெடிப்புகளும், மண்ணில் அமிழ்த்தப் பட்ட அடையாளங்களும், தண்ணீரால் தேய்த்து உருவாக்கப் கப்பட்ட கூழாங் கற்களும், உருண்டையாக் கப்பட்ட மணற் தூசுகளும், பலவிதக் களிமண் களும், சுண்ணாம்புக் கற்களும், பழம் பாறைகளில் அமிழ்ந்து கிடக்கும் பலவித உயிர்களின் அங்கக் கட்டு

களும், பூலோகத்தின் பூர்வோத்தி ரத்தைப் புகைப்படம் போல் புகலா நிற்கின்றன.

விட ஏற்பட்டதாம். அவ்விதமாகப் புதிதாக ஏற்பட்ட பாகங்களில் ஒன்று பூலோக மெனக் கருதப்படுகிறது.



பழம் பாறைகளில் அமிழ்த்தப்பட்ட உயிர்களின் அங்கக்கட்டுகள்.

பூலோக உற்பத்தி எப்படி ?

சூரியன் ஓர் பிர்மாண்ட மான நட்சத்திரமாக விருந்த போது அதினின்று பூலோகம் பிறந்ததென அறியக் கிடக் கிறது. முற் காலத்தில் சூரி யனேவிட மிகப்பெரிதாயிருந்த மற்றொரு உருவம் சூரியனை அடுத்துப் போய்க் கொண்டி ருந்தபோது, ஒன்றுக் கொன் று இழுக்குஞ் சக்தியினுல் உருவத்தில் கொஞ்சம் சிறிதா யிருந்த சூரியன் தனது உரு வம் அகன்று கொடுக்க ஏற் பட்டு, அப் பெரிய நட்சத் திரம் கடந்துபோன பிறகு சூரியன் முன் போலத் தனது உருவத்தை யடைந்த காலே யில் அதினின்றும் பாகங்கள் அகன்று அந்தரத்திலே சுழன் றுகொண்டு தனியாகத் தங்கி



தண்ணீரால் தேய்த்து உருவாக்கப்பட்ட பாறைத்தூண்கள்.



பூமி சூரியனின்று பிரிந்து உருவான விதம்

இப் பூலோகம் முதலில் தகிக்கக் கூடிய வாயு பதார்த்தமாயிருந்து அதின் உஷ்ணம் பல பக்கங்களிலும் பறந்து செல்லச் செல்ல—குளிரக் குளிர—உஷ்ணமான ஜல பதார்த்தமாக மேல் பாகம் மாறிக் கடைசியில் அதிகம் குளிர்ந்து திட பதார்த்தமான தெனக் கூறப்படுகிறது. ஆகவே இன்றும் பூமியின் உட்பாகம் பெரும் உஷ்ணம் பொருந்தியதாகவே யிருக்கிறது. பூமியின் குளிர்ந்த திட பதார்த்தம் மேல் பரப்பிலிருந்து சுமார் 40 மைல் ஆழம்வரை யிருக்கும். அதற்கப்பால் உஷ்ணம் அதிகரித்துக் கொண்டே போய் மத்தியில் ஜ்வாலை கொழுந்து விட்டெரிந்து கொண்டிருக்கிற தெனக் கூறப்படுகிறது.

பூலோகம் பூர்த்தியான விதம் யாது ?

பூலோகத்தைச் சுற்றி சுமார் 100 மைல் உயரம் வரைதான் நாமறிந்த காற்று பரவி நிற்கிறது. அதற்கப்பால் வாயுவே யில்லை யெனத் தெரிகிறது. அவ்வாறு ஏதேனுமிருந்தால் நாமறிந்து அனுபவிக்கும் வாயுவைப் போலல்லாது வேறு வகையான வாயுவிருக்கலாம். விண்வீழ் கொள்ளிகள் (Meteors) அந்தரத்திலிருந்து பூமியை நாடி தினம் சுமார் 2 கோடி பாய்ந்து விழுகின்றன. இந்த விண்வீழ்



விண் வீழ் கொள்ளி பூமியை நாடி ஓடி வருந்தோற்றம்.



பூமியை யடைந்த விண் வீழ் கொள்ளிகளில் ஒன்று

கொள்ளிகள் முன்பு உலக உற்பத்தியான போது ஏற்பட்ட சிறு துண்டுகளாகவாவது அல்லது மற்ற கிரகங்களின் சிறு பாகங்களாக விருக்கலாம். இவைகள் ஒவ்வொன்றும் ஓர் அங்குல நீளத்துக்குமேலில்லை. இவைகள் பூலோகத்தை யடுத்து அதாவது 100 மைல் தூரத்திற்குள் வந்தவுடன் ஒரு விநாடிக்குச் சுமார் 9-லிருந்து 47 மைல் தூரம் வீதம் பாய்ந்தோடுவதால் அவைகளில் அநேகம் நெருப்புப் பிடித்து எரிந்து பூமியில் சாம்பலாக வந்து சேர்கின்றன. இவ்விதம் சாம்பலாகப் போகாமலே அநேகம் நெருப்புப் பிடித்து எரிந்து பூமியில் சாம்பலாக வந்து சேர்கின்றன. இவ்விதம் சாம்பலாகப் போகாமலே அநேக விண்வீழ் கொள்ளிகள் பூமியை வந்தடைகின்றன. இவைகள் சராசரி குறைந்தது ஒன்று வீதம் பூமியில் வந்து சேருகின்றன. இப்படி வந்து சேரும் கொள்ளிகளில் பூமியில் காணப்படும் சுமார் 29 வீதமான உலோக அம்சங்கள் காணப்படுகின்றன. அதனோடு பூமியில் இதுவரை காணப்படாத 6 உலோகக்கலப்புடைய வஸ்துக்கள் காணப்படுகின்றனவாம்.

பூமி விண்வீழ் கொள்ளிகள், சூரியன், சந்திரன் மற்றும் இதர வின்மீன்கள் (நட்சத்திரங்கள்)யாவும் ஒன்றுக் கொன்று சம்பந்தப் பட்டவைகளே. சூரியன் குறுக்காக 8,66,400 மைல் நீளமானது. பூமி 7,918 மைல். சந்திரன் 2,162 மைல் நீளமானது. பூமியும், சந்திரனும் சூரியனின் நெருங்கியபந்துவெனக்கூறலாம். பூமியின் வஸ்துக்கள் பொதுவாக ஜலத்தைவிட $5\frac{1}{2}$ பங்கு அதிகமாகவும், சந்திரன் $3\frac{1}{2}$ பங்கு அதிகமாகவும், சூரியன் $1\frac{1}{2}$ பங்கு அதிகமாகவும் கனமா யிருக்கின்றன. சூரியனின் வஸ்துக்கள் பெரும்பாலும் உஷ்ணமாய் வாயுமயமா யிருப்பதால் குளிர்ந்து திடமான பூமியைவிட இலேசாகக் காணப்படுகிறது.

பூமி தன்னைத்தானே சுற்றுவதோடு சூரியனையும் சுற்றி வருகிறது. உண்மையில் சகல மீன்களும் சூரியனை மத்தியில் வைத்துச் சுற்றி வருகின்றன. இவைகள் ஒன்றுக் கொன்றேற்பட்ட இழுக்குஞ் சக்தியால் ஒன்றையொன்று இழுத்தவண்ணமாகத் தங்கள் தங்கள் ஸ்தானங்களிலிருந்து சுற்றிக்கொண்டு வருகின்றன. பூமி தன்னைத்தானே சுற்றும்போது விநாடிக்கு $18\frac{1}{2}$ மைல் வீதம் சுற்றுகிறது. சூரியனைச் சுற்றும்போது மணிக்கு 60,000 மைல் வீதம் சுற்றிச் செல்லுகிறது. சூரியனும் தன்னைத்தானே 25 நாட்களில் ஒரு முறை சுற்றிக் கொள்ளுகிறது. பூமி 6590×10^{18}

டன் (6,590,000,000,000,000,000 டன்) கனமான தென்றும் சூரியன் 1983×10^{30} கிராம் (1 டன் = 454 கிராம்) கனமாயிருக்கிறதென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அதாவது சூரியன் பூமியைவிட சுமார் 320 000 பங்கு அதிகக் கனமாயிருக்கிறது.

பூலோகம் வடதென் துருவங்களில் கொஞ்சம் தட்டையாயிருக்கிறது.

மத்திய ரேகையில் பூமியின் குறுக்களவு 7927 மைல்

வடதென் துருவமாய் பூமியின் சுற்றளவு 7900 மைல்

மத்திய ரேகையில் பூமியின் சுற்றளவு 24902 மைல்

வட தென் துருவமாய் பூமியின் சுற்றளவு24860 மைல்

பூலோகத்தில் தண்ணீர் பாகம் 139443800 சதுர மைல்

பூலோகத்தில் தரைப்பாகம் 57487300 சதுர மைல்

மொத்தம் பூலோகத்தின் மேற்பரப்பு 196931100 சதுர மைல்

பூமியின் மிக உன்னதமானது ஹிமாலயத்தின் உச்சியாகிய எவரெஸ்ட் என்ற சிகரம். அது பூமி மட்டத்திற்குமேல் 29,141 அடி உயரமானது. சமுத்திரத்தில் மிகவும் ஆழமானது பசிபிக் சமுத்திரம். பில்லிப்பைன் தீவுகளுக்குச் சற்று கிழக்கில் 35,430 அடி ஆழமானது. அதற்கடுத்த ஆழமான பாகம் அத்லாந்து சமுத்திரம். போர்டோரிக்கோ வென்ற இடத்திற்குச் சற்று வடக்கில் 28,300 அடி ஆழமானது. ஆனால் சமுத்திரத்தில் மனிதன் 2200 அடி ஆழம்வரை சென்று வந்திருக்கிறான். பூமியைத் துளைத்து மனிதன் 7630 அடி ஆழம்வரை சென்றிருக்கிறான். தென்னாப்பிரிக்காவின் தங்கச் சுரங்கம் மேற்கூறிய ஆழமாயிருக்கிறது. இதுவே உலகத்தில் மனிதன் சென்றுள்ள ஆழமான பாகம். இங்கே வெகு உஷ்ணமாயிருப்பதால் மனிதன் இருந்து வேலை செய்ய தினத்தோறும் 4 டன் பனிக்கட்டி உபயோகித்து உஷ்ணத்தைத் தணித்து வருகிறார்கள். வாயு மண்டலத்தில் மனிதன் சென்று வந்துள்ள உயரம் 53,153 அடி. ஆகவே பூமி மட்டத்திற்கு மேல் வாயு மண்டலத்தில் 53153 அடி உயரம் வரையும், பூமியைத் துளைத்து 7630 அடி ஆழம் வரையும், தண்ணீருக்குள் 2200 அடி ஆழம் வரையும் மனிதன் நேரில் சென்று வந்திருக்கிறான்.

பூமி அமைப்பின் மாறுபாடுகள் ஏன்?

சேம்பர்லேயன், மூல்டன் (T. C. Chamberlain and F. A. Moulton 1905) என்ற ஆராய்ச்சிக்காரர்களின் அபிப்பிராயப்படி பூலோகம் அதின் மத்திய தகிக்கும் பாகத்தைத் தவிர (இப் பாகத்தின் குறுக்களவு மாத்திரம் 4346 மைல்) மற்ற மேல் பாகமெல்லாம் அந்தரத்தினின்று விழும் விண்வீழ் கொள்ளி

கள் போன்றவைகளால் கட்டப்பட்டிருக்கிறதென அறியக் கிடக்கிறது. ஆனால் பூமியின் மீதி தினம் குறைந்தது, ஒரு விண்வீழ் கொள்ளி வந்து சேருகிறதென்று முன்பு கூறினோம். ஆகவே இவ்விதம் விழும் வற்றால் பூமியின் மேற் பாகம் உண்டாக்கப்பட்டதென்றால் பூலோகத்தின் வயது அளவற்றதாயிருக்க வேண்டுமல்லவா?

பூலோகம் தனது தந்தை சூரியனின்று பிரிந்து வளர்ந்து கொண்டே வரும் போது பலவிதத் தோற்றங்களுடன் திகழ்ந்திருக்க வேண்டும். ஒவ்வொரு சமயமும் வெவ்வேறு விதமான மலை உருவங்களும், சமுத்திரங்களும், ஏரிகளும், குளங்களும், தாவர வர்க்கங்களும், மிருக வர்க்கங்களும் இருந்திருக்க வேண்டும். அக் காலங்களின் தாவர வர்க்கங்களும் மிருகம், பட்சி முதலிய வர்க்கங்களும் பூமியின் மாறுதல்களில் சேர்ந்து மண்ணோடு ஒன்றாக்கப் பட்டு வந்திருக்க வேண்டும். மேலும் காலாகாலங்களில் பூமியின் மேற் பாகம் ஆறுகளால் கரைக்கப்பட்டு சமுத்திரங்களில் கொண்டு சேர்க்கப்பட்டும், தண்ணீரோடு கலந்து ரஸாயன மாறுதலை யடைந்து மாற்றப்பட்டும் வந்திருக்கிறது. உலகத்தில் பல (சுமார் 8000) நதிகளின் நீரைப் பரிசோதித்துப் பார்த்து அவைகளால் கொண்டு செல்லப்படும் தூசு முதலியவற்றை ஆராய்ந்ததில் உலகத்தின் ஒரு அடி உயரத்தை நதிகள் சுமார் 30,000 வருடங்களில் கரைத்துவிடக் கூடுமெனக் கூறப்படுகிறது.* இவ்விதமாகக் கரைக்கப்பட்டுப் போவதில் ஒரு வகையில் மண், கல் இவைகள் சமுத்திரத்திற்குக் கொண்டு போகப்படுகின்றன. மற்றொரு வகையில் பூமியின் வஸ்துக்கள் ரஸாயன மாறுதலடைந்து காணப்படாமற் போய் விடுகிறது. இவ்வாறு ரஸாயன மாறுதல் வகையில் மாத்திரம் உலகத்தின் ஒரு அடி உயரம் சுமார் 8600 வருஷங்களில் கரைந்து மறைந்து விடுகிறதாம்.

பூலோகம் சமுத்திரப் பரப்புக்கு மேல் சராசரி சுமார் 2300 அடி உயரமாயும், சமுத்திரம் 13,000 அடி ஆழமாயு மிருக்கின்றன. நதிகளால் பூமியின் மேல் பாகம் ரஸாயன மாறுதலடைந்தால் 8600 வருஷங்களில் உலகம் ஒரு அடி உயரம் குறைக்கப்படுமென்றோம். அதே விகிதப்படி உலகம் சமுத்திரப் பரப்பு மட்டமாக்க சுமார் 19,780,000 வருஷங்களாகும். இவ்வித மாறுபாடுகளொருபுறமிருக்க மற்றொரு மாறுபாடுமுளது. பூமியின் உட்பாகத்தின் உஷ்ணம், ஜல பதார்த்தம் வாயு பதார்த்தங்கள் முதலியவைகள் திடீர் திடீரென்று பலவித மாறுதல்களை யடைவதால் பூமி ஒரு இடத்தில் பூகம்பத்தோடும், பூகம்ப மேற்படாமலும், உயர்த்தப் பட்டும், மற்றோரிடத்தில் தாழ்த்தப்பட்டும், வளைக்கப்பட்டும் அநேக விதமான அமைப்புகள் உண்டாக்கப்பட்டு வந்திருக்கின்றன. இவ்விதமாகப் பூமியின் மேற் பாகம் புதிய மாறுதலை யடைந்து கொண்டேயிருக்க நதிகளும் அவைகளைக் கரைத்துக் கொண்டே யிருக்கிறது.

உலகத்திலேயே வெகு ஆழமாகப் பாய்ந்தோடுவது கோலராடோ என்னும் நதி. இது அமெரிக்காவில் மேற்கு பாகத்தில் அரிஜோனு என்ற பாகத்தில் மிகவும் உறுதியும், பழமையுமான கற்பாறைகளைச் சுமார் ஒரு மைல் ஆழம் துளைத்துச் செல்லுகிறது.

படத்தில் கொலராடோ நதியின் பள்ளத் தாக்கின் ஓரத்தில் ஒரு சிவப்பு இந்தியன் நின்று கொண்டிருக்கிறான்.

---

* F. W. Clerke 1924

கொலராடோ பள்ளத்தாக்கு

கிடைத்த ஆதாரங்களைக்கொண்டு நிர்ணயிக்க முயலுவோம்.

சமுத்திரத்திலுள்ள உப்பு வகை யாவும் ஆயிரக்கணக்கான ஆறுகளால் பூமியிலுள்ள பாறைகளிலிருந்து கரைத்துக் கொண்டேகிச்சேர்க்கப் பட்டவைகள். உலகத்தின் சுமார் முக்கால் பாகம் சமுத்திரமா யிருப்பது யாவருமறிந்த விஷயம். உலகத்தைப் பரப்பி நிற்கும் சமுத்திரத்தில் சுமார் 1,180,000,000,000,000.000 டன் ஜலமுள்ளதென கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது.‡ சமுத்திரத்தின் ஜலம் 100 டன்னில் 108 டன் உப்பையுடையதா யிருப்பதாகவும் கூறப்படுகிறது. ஆகவே சமுத்திரங்களில் சுமார் 12,600 000.000,000,000டன் உப்பு வகை யிருக்க வேண்டும். மேலும் ஆறுகள் வருஷத்திற்கு பூமியிலிருந்து சுமார் 35,000,000 டன் உப்பை சமுத்திரத்திற்குக் கொண்டு செல்லுகின்றனவாம்.¶ ஆகவே சமுத்திரத்திலுள்ள மொத்த உப்பை ($12,600\times12^{12}$ டன்) 35,000,000 டன்னால் வகுத்தால் 360.000,000 வருஷங்கள் வருகின்றன. இவ் வருஷங்கள் சமுத்திரம் உண்டான காலத்தைக் குறிக்கிறது.

ஆனால் ஆறுகள் வருஷா வருஷம்

இவ்விரண்டு படங்களிலும் நதிகள் பாறைகளைக் குடைந்து குகைகளாக்கி வைத்திருப்பதைப் பார்க்கலாம்.



சமுத்திரத்தின் வயதென்ன ?

இதுகால் பூலோகம் உண்டான விதத்தைப் பற்றி வெகு சுருக்கமாகக் கவனித்தோம். இப்பொழுது அது உண்டான காலத்தை நமக்குக்

‡ J Joly of Dublin (1899)

¶ A. Holmes 1927



ஒரே அளவுடன் உப்புகளைச் சமுத்திரங்களில் கொண்டு சேர்க்கின்றனவென்று வைத்துக் கொண்டே மேலே குறித்த வருஷங்கள் கணக்கெடுக்கப் பட்டிருக்கின்றன. இது தவறான கொள்கையாகும். ஏனெனில் முற்காலத்தில் பூமி சமுத்திரப் பரப்புக்கு மேல் குறைவான உயரமாயும், அதிக விசாலமாயு மிருந்திருப்பதால் தற்காலத்து ஆறுகள் பூமியின் உப்புகளைக் கரைத்துக் கொண்டு போகும் அளவு முற்காலத்தைவிட அதிகமா யிருக்க வேண்டும். ஆகவே சில ஆராய்ச்சிக்காரர்கள் முன் குறிப்பிட்ட 360,000,000 வருஷங்களை ஐந்தால் பெருக்கினால் இவ் வித்தியாசம் ஒழுங்காக்கப் படுகிறதென்று கூறுவதால்* சமுத்திரம் சுமார் 360,000,000 × 5 = 1,800,000,000 வருஷங்களுக்கு முன் ஏற்பட்டிருக்க வேண்டுமென்று சொல்ல வேண்டும். பூலோகத்தின் மேல் பாகம் உண்டான போதே சமுத்திரப் பள்ளங்கள் ஏற்பட்டிருக்க வேண்டுமானதால் பூலோகத்தின் மேல்பாகம் உண்டாகி சுமார் 1,800,000,000 வருஷங்கள் சென்றிருக்க வேண்டும்.

* J. W. Gregory 1921

உட்பாகம் உண்டான காலம் யாது?

பூலோகத்தின் மேற்பாகம் உண்டாகிக் கடந்துபோன வருஷங்களை ஒருவாறு கணக்கெடுத்தோம். இனி அதனையே மற்றொரு மிகவும் நிச்சயமான ஆராய்ச்சியினால் கணக் கெடுப்பதோடு உட் பாகம் அதாவது கொழுந்துவிட்டெரிந்து கொண்டிருக்கும் மத்திய பாகம் ஏற்பட்டு எத்தனை வருஷங்களாகின்றனவென்றும் ஆராய்வோம்.

உலகில் உள்ள பழம் பாறைகளில் காணப்படும் யுரேனியம், தோரியம், ரேடியம், ஆக்டினியம் என்ற மிகவும் கனமான உலோக வகைகள் மிகவும் ஆச்சரியப் படத் தக்கதாக நடந்து கொள்ளுகின்றன. ரேடியம் என்பது திடீர் திடீரென்று தனது பாகத்தின் வெகு சிறிய அளவை வெளியில் வெகு வேகமாய்ப் பீரங்கிக் குண்டு போல் அனுப்புகிறது. அவ்வாறு அனுப்பிய பிறகு தானே சிறிது வேறொரு வகை உலோகமாக மாறி விடுகிறது. இவ்விதமாகத் திடீர் திடீரென்று எப்தலை அது எவ்விடத்தில் எவ்விதமா யிருக்க போதிலும், மற்றும் எவ்விதக் காரணத்தாலும் தடுக்க முடியாது. இவ்வாறு எய்து, எய்து மாறிக்கொண்டே போய் கடைசியில் ஈயமாக மாறி விடுகிறது. (முன்பு இதனைத் தங்கமென அறியாது கருதினர்) இவ்வுலோகத்தினின்றும் விடுபட்டோடும் சிறிய சிறிய பாகத்திற்கு 'ஹீலியம்' எனப் பெயர். இது ஒரு வினாடிக்கு 8,800 மைல் வீதம் வேகமாய் விடுபட்டோடுகிறது. ஆனால் இதின் வேகம் சுமார் 2 அல்லது 3 அங்குலத்திற்குள் குறைந்து தன் சக்தியை இழந்து விடுகிறது.

இது விஷயத்தில் இவண் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது இவ்வுலோகங்கள் வெடித்து வெடித்து

எய்து மாறிக் கொண்டே போகுங் குணம் எவ்வகையாலும் தடுக்க முடியாதது ஒன்று. இவ்விதமாகப் படிப்படியாக மாறி ஈயமாவது எக் காலத்திலும் எவ்விடத்திலும் ஒரே விதம் என்பது மற்றொன்று. ஆகவே யுரேனியம் மாறுதலடையும் கால விதத்தையும், வெகு பழமையான பாறையிலுள்ள மொத்த யுரேனியம் இவ்வளவென்று கண்டால் அப் பாறையின் வயதை அதாவது பூமியின்மேல் பாகம் உண்டாகி முடிந்த காலத்தைக் கணித்து விடலாம்.

யுரேனியத்தினின்றும் வெளிப்படும் ஹீலியம் அநேகமாக யுரேனியத்தை யுடைய பாறையிலேயே சார்ந்து விடுவதால் அந்த ஹீலியம் எவ்வளவிருக்கிறதென்று கண்டு கொண்டு அப் பாறையின் வயதை நிர்ணயிக்க முடியும். இதனைக்கொண்டு லார்டு ரேலேய் என்பவர் பழம் பாறை யொன்றின் வயதை 570,000,000 வருஷங்களென ஆராய்ந்தார். ஆனால் யுரேனியத்திலிருந்து வெளியாகும் ஹீலியம் முழுதும் அப் பாறையில் தங்கி விடாததால் இக் கணக்கு வெகு சொற்பமானதாக வேண்டும். இதை விடுத்து யுரேனியம் கடைசியாக மாறும் ஈயத்தின் அளவைக் கண்டு கணக்கெடுத்தால் அதை உண்மையெனச் சந்தேக மில்லாமல் கொள்ளலாம். ஏ. ஹோல்ம்ஸ் (A. Holmes) என்பவர் 1927ல் ஒரு ஒரு வருஷத்தில் 1,000.000 கிராம் யுரேனியம் $\frac{1}{7400}$ கிராம் ஈயமாக மாறி விடுகிறதெனக் கண்டு பிடித்திருக்கிறார். ஆகவே பண்டைக்காலத்து யுரேனியப் பாறைகளிலுள்ள ஈயத்தின் அளவைக் கண்டு அப் பாறையின் வயதைக் கணித்துவிடலா மல்லவா? 1930-ஆகஸ்ட் மாதம் ஏ. எப். கோவரிக் (Prof A. F. Kovarik) என்பவர் அமெரிக்கா ஏல் சர்வகலாசாலையில் உலகத்திலேயே இதுவரை அறிந்த வெகு பழமையான யுரேனியப் பாறை ஒன்றின் வயதை 1,852,000,000 வருஷங்களென (மற்றொரு அதே விதப் பாறையின் வயதை 1,465,000,000 வருஷங்களாக)க் கண்டுபிடித்திருக்கிறார். அப்பழமையின் வயதும் முன்பு நாம் சமுத்திரத்தின் உப்பைக் கொண்டு அளவிட்ட 1,800,000,000 வருஷங்களும் ஏறக்குறைய ஒத்திருப்பது நன்கு தெரிகிறது. ஆகவே பூமியின் மேல் பாகம் உண்டான காலம் இன்று நமக்குக் கிடைத்த பழம் பாறையின் வயதைத் தெரிந்த வரையில் சுமார் 1,852,000,000 வருஷங்களெனக் கூறிவிடலாம். இதைவிட வெகு பழமையான பாறையொன்றை வேறோரிடத்தில் கண்டுபிடித்து விட்டால் நாம் குறிப்பிட்ட வயது குறைவாகி விடலாம். ஆனால் இவ்வருஷம் வரை—வேறு மிகவும் பழமையான பாறை கண்டு பிடியாதவரை-மேல் குறித்த வயதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டியதாகத்தானிருக்கிறது.

பூலோகம் ஆதியிலிருந்து விண்வீழ் கொள்ளிகளால் சிறிது சிறிதாக நிறைந்து கட்டப்பட்டு வந்ததாகத் துவக்கத்தில் கூறினோம். 1926-ல் ஜெர்மனியில் பேர்லின் என்ற நகரில் எவ். பானேத் (F. Paneth) என்பவர் இதுவரை யறிந்த மிகவும் பழமையான இரும்பையுடைய விண்வீழ் கொள்ளியை (Iron meteorite) ப் பரிசோதித்து அதன் வயதை 2,600,000,000 வருஷங்களெனக் குறிப்பிட்டிருக்கிறார். ஆகவே இன்று வரை தெரிந்த வெகு பழமையான விண்வீழ் கொள்ளியைக் கொண்டு சாஸ்திர ஆராய்ச்சியால் நாமறிந்த வரை பூலோகம் பூர்வத்தில் அதின் மத்திய பாகத்திலிருந்து பெரிதாகி

வளர்ந்தவயதைசுமார்2,600,000,000 வருஷங்களென்றும் பூலோகத்தில் மேல் பாகம் பூர்த்தியாகி முடிந்து சுமார் 1,852,000,000 வருஷங்களெனவும் கொள்ளக் கிடக்கிறது. இவ்விரண்டு காலங்களின் வித்தியாசம் (உலகத்தில் வெகு பழமையான விண்வீழ் கொள்ளியின் வயதிற்கும், பழமையான யுரேனியப் பாறையின் வயதிற்குமுள்ள வித்தியாசம்) அதாவது 748,000,000 வருஷங்கள் உலகம் இவ்வுருவ நிலை பூர்த்தி யடைய ஏற்பட்ட இடைக் காலமாகும். உலக அமைப்பு பூர்த்தி யடைந்து சுமார் 2,000,000,000 வருஷங்களாவதால் பூமி தன்னைத்தானே சுமார் 730,500,000,000 தடவை சுற்றி இரவு பகல் உண்டாக்கி யிருக்க வேண்டும்.

மேலே குறித்த யுரேனியம், ரேடியங்களைக் கொண்ட ஆராய்ச்சிகளும் மிகவும் பழைய புதைந்து கல்லாய்ப் போன அங்கக் கட்டுகளும், உயிர் வர்க்கங்கள் சுமார் 1,500,000,000 வருஷங்களுக்கு முன்னிருந்து ஆரம்பித்திருக்கக் கூடுமென்றும், கல்லாயுதங்கள், புதைந்த மானிட அங்கக் கட்டுகளின் சேமிப்பு இவைகள் மானிட வர்க்கம் சுமார் 1,500,000, வருஷங்களுக்கு முன் ஆரம்பித்திருக்க வேண்டுமென்றும் கூறுகின்றன வாம்.

ஹிந்து வேதப்படி பூலோகத்தின் வயதென்ன ?

ஹிந்து வேதங்களின் கணக்குப்படி பூலோகந் தோன்றித் திகழ்ந்த வருஷங்களைக் கணக்கெடுத்தால் சாஸ்திர ஆராய்ச்சியை வெகுவாக அடுத்திருப்பதானது மிகவும் ஆச்சரியப் படத்தக்கதாயிருப்பதோடு, சாஸ்திர ஆராய்ச்சியின் பெருமையையும் நிலை நாட்டுகிறது.

அதர்வ வேதப்படி உலகந் தோன்றி 4,320,000,000 வருடங்கள் ஆயின. * மனு நூற்படி உலகந் தோன்றி நிற்கும் காலத்தை 1,000 சதுர் யுகங்களாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது. 'சூரிய சித்தன்' என்ற பண்டைய இந்திய வான சாஸ்திர நூல் பிரகாரம் ஒவ்வொரு சதுர் யுகமும் 12,000 தெய்விக யுகங்களாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது. ஒவ்வொரு தெய்விக வருஷமும் 360 சாதாரண வருஷங்களாகவும் பிரிக்கப் பட்டிருக்கிறது. மனு நூற்படி சத்யுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் இவைகள் முறையே 4800, 3600, 2400, 1200 தெய்விக வருஷங்களாகக் கூறுவது. ஆதலால்

சத்யுகம்	4,800 × 360	=	1,728,000	வருஷங்கள்
திரேதாயுகம்	3,600 × 350	=	1,296,000	,,
துவாபரயுகம்	2,400 × 360	=	864,000	,,
கலியுகம்	1,200 × 360	=	432,000	,,
			4,320,000	

* சமஸ்கிருதத்தில் உலகந் தோன்றியிருக்கும் காலத்திற்கு 'பிரம தின்' என்றும் அக்காலம் போய் உலகம் மறைந்திருக்கும் (காணப்படாமலிருக்கும்) காலத்திற்கு 'பிரம ராத்ரி' என்றும் கூறப்படுகிறது.

அதாவது ஒரு சதுர் யுகத்தின் மொத்த வருடங்கள் 4,320,000. மறுபடியும், மனு நூற்படி உலகந் தோன்றியிருக்கும் காலத்தை ('பிரமதின்' அல்லது 1000 சதுர் யுகங்கள்) 14 'மன்வந்திரங்' களாகவும் 15 'சந்தி' களாகவும் பிரிக்கப் பட்டிருக்கிறது.* ஒரு 'மன்வந்திரம்' 71 சதுர் யுகங்களாம்.

வேதச் சுருதிப் படி இப்பொழுது 7-வது 'மன்வந்திரத்' தில் 28-வது கலியுகம் நடக்கிறதாகக் கூறப் படுவதால் உலகந் தோன்றி கடந்த காலத்தைப் பின் வருமாறு கணக்கிடலாம்.

1. இப்பொழுது 7-வது 'மன்வந்திர'ம் நடப்பதால் கடந்த 6 'மன்வந்திரம்' வரை ஒரு 'மன்வந்திர'த்திற்கு 71 சதுர் யுகங்கள் வீதமும், ஒரு சதுர் யுகத்திற்கு 4,320,000 வருஷங்கள் வீதமும் கூடிய மொத்த வருஷங்கள்

6×71×4,320,000-1,840,320,000

2. இப்பொழுது 28-வ்து கலியுகம் நடப்பதால் சத்யுகம், திரேதாயுகம், துவாபரயுகம் கலியுகம் இவைகள் (ஒரு சதுர்யுகம்) 27 தடவை வந்து போயிருக்கிறது. எனவே ஒரு சதுர் யுகத்திற்கு 4,320,000 வருஷங்கள் வீதம் கூடிய மொத்த வருஷங்கள்.

27×4,320,000=116,640,000.

3. இப்பொழுது கலியுகம் நடப்பதால் இச் சதுர் யுகத்தில் சத்யுகம், திரேதாயுகம், துவாபரயுகம் இவைகளில் கடந்து போன மொத்த வருஷங்கள் 4,320,000-432,000 = 3,888,000.

(அதாவது ஒரு சதுர் யுகத்திலிருந்து மொத்த கலியுக வருஷங்களைக் கழிக்க.)

4. கலியுகத்தில் இதுவரை கழிந்து போன மொத்த வருஷங்கள் 5,039.

ஆதலால் பூலோகம் உண்டாகிக் கடந்து போன மொத்த வருஷங்கள் 1,960,853,039.

வேத நூற்படி ஆராய்ந்த உலக உற்பத்தியான வருஷமும் (1,960,853,035) சாஸ்திர ஆராய்ச்சியினால் கணக்கிட்ட உலகத்தின் மேல் பாகம் உண்டாகி முடிந்த வருஷமும் (1,852,000,000) ஏறக்குறைய ஒத்திருப்பதால் விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சிகளின் உச்சமும், உண்மையும் நன்கு புலனாகிறது. ஆகவே அதே சாஸ்திர ஆராய்ச்சியால் பூலோகத்தின் மத்திய பாகம் ஏற்பட்டு பூமியுருவாகிக் கழிந்த மொத்த வருஷங்கள் 2,600,000,000 என்பது உண்மையெனச் சந்தேகமின்றி ஒப்புக்கொள்ள ஏற்படுகிறதல்லவா?

* Vedic Magazine—vol V. No 3 P.P.162

இப்படியும் நடக்குமா?

சராசரி ஒரு மனிதனுடைய மீசையில் இருபத்தையாயிரம் மயிர்கள் இருக்கின்றன.

ஃ ஃ ஃ

எறும்புகளைக் கொன்று அவைகளிலிருந்து ஒரு வகை மதுபானத்தை உற்பத்தி செய்கிறார்கள் மெக்ஸிகோ வாசிகள்.

ஃ ஃ ஃ

ஜெர்மனியிலுள்ள கோலோன் என்ற ஊரில் ஒன்றரை லட்சம் வருஷங்களுக்கு முன்னிருந்த ஒரு பல் கண்டெடுக்கப் பட்டிருக்கிறது. இது 39 அங்குல நீளம் இருக்கிறது.

ஃ ஃ ஃ

1931ம் வருஷத்திற்குப் பிறகு ஏழு வருஷத்திற்குள், ஜப்பானியர், சீனாவில் 643,712 சதுர மைல் விஸ்தீரணமுள்ள பிரதேசத்தை ஆக்ரமித்துக் கொண்டிருக்கின்றனர்.



சீனா-ஜப்பான்

எழுதியவர்:-ஸ்ரீமான் ஏ. ஜி. வேங்கடாச்சாரி; வெளியிட்டோர்:—நவயுகப் பிரசுராலயம் லிமிடெட், 1, டக்கர்ஸ் லேன், ஜி. டி. மதராஸ்; விலை: 8 அணா; டபிள் பூல்ஸ்காப் அளவு 1x16; 356 பக்கங்கள்.

நவயுகப் பிரசுரத்தின் மூன்றாவது வெளியீடாகிய இந்த 'சீனா—ஜப்பான்' என்ற புத்தகம் தற்காலத்திற்கு மிகவும் உபயோகமானது. சீனாவின் ஆதி சரித்திரத்தையும், ஜப்பானின் பூர்வீக வரலாற்றையும் ஆரம்பத்தில்கூறி விட்டு, பிறகு, இரண்டு நாடுகளும் எங்ஙனம் ஒன்றுக்கொன்று உறுத்துப் பார்க்கத் தொடங்கினவென்பதை ஸ்ரீமான்வேங்கடாச்சாரியார் விரிவாக எழுதிக்கொண்டு செல்கிறார். உலகத்திலே மிகப் பழமையான நாகரிகம் பெற்ற நாடான சீனாவை, பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து வளர்ச்சி பெற்ற ஒரு சிறிய நாடு எப்படி விழுங்கிக்கொண்டு வரத் துணிந்ததென்பதை நமது சகோதரர்கள் அறிந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியம். அப்படித் தெரிந்துகொள்வது, நம்மை எப்பொழுதும் விழிப்புடன் இருக்கச் செய்யும். விஸ்தீரணமான எல்லையும், ஜனத்தொகைப் பெருக்கமும் ஒரு நாட்டுக்கு இருந்தால் போதும், சாசுவதமாகத் தலை நிமிர்ந்து நிற்கலாம் என்று யாரேனும் பகற்கனவு கண்டு கொண்டிருப்பாரேயானால் அவர்களுக்குச்சீனாவின் தற்போதைய அலங்கோல வாழ்வு ஒரு படிப்பினையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஸன்—யாட்—ஸென் இறந்து போன பிறகு, எப்படி சீனாவில் உள் நாட்டுக் குழப்பம் ஏற்பட்டதென்பதையும், எரிகிற இந்தக் குழப்பக் கொள்ளியை, அந்நிய நாட்டார் எப்படி ஏறத் தள்ளினர் என்பதையும் ஆசிரியர் அழகாக எடுத்துச்சொல்கிறார். அப்படியே, சீனாவில் அபினைப் புகுத்திய வரலாறு, நம்மைத் திகைக்கச் செய்கிறது. கீழ் நாடுகளைத் தங்கள் ஆதிக்கத்துக்குட்படுத்திக் கொள்ள, மேனாடுகள் என்னென்ன முறைகளைக் கையாண்டன வென்பதை இந்நூலின் பல இடங்களிலும் காணலாம்.

ஆசிரியர் வேங்கடாச்சாரியார் இந்த நூலை, விஷயங்களை வரிசைப் படுத்தி அழகாக எழுதியிருக்கிறார். இந்த நூல் இதயத்திற்குக் கிளர்ச்சியை உண்டு பண்ணாது. ஆனால் அறிவுப் பசியைத் தணிக்கும். இதுதானே தமிழ் நாட்டில் இப்பொழுது தேவை.

கிராமச் சீர்திருத்தம்

ஆசிரியர்: ஸ்ரீமான் ஏ. முத்தையா, M. A; வெளியிட்டோர்: கே. பழனியாண்டிப்பிள்ளை கம்பெனி, ஜார்ஜ் டவுன், சென்னை; விலை: ஒரு ரூபாய்; டபிள் கிரவுன் அளவு 1x16; 186 பக்கங்கள்.

காங்கிரஸ் கட்சியினர், ஏழு மாகாணங்களில் அரசாங்க நிருவாகத்தை ஏற்றுக் கொண்ட பிறகு, நமது கிராமங்கள் சிறிது நம்பிக்கை கொள்ள ஆரம்பித்திருக்கின்றன வென்று சொல்ல வேண்டும். இந்தச் சமயத்தில், கிராமங்களை எந்த வகையாகச் சீர்திருத்தி அவைகள் மூலம் நாட்டுப் பொதுவுக்கு நலம் பல தேடலாம் என்பதைப் பற்றி விளக்கி எழுதியிருக்கிறார் இந் நூலாசிரியர். சாதாரணமாகப் புள்ளி விவரங்களைப் பற்றிப் படிப்பதென்றால், பலருக்கு அது கொஞ்சம் கசப்பாகவே இருக்கும். ஆனால் இந்த நூலில் அப்படிப் பட்ட சோர்வு ஒன்றும் வாசகர்களுக்கு ஏற்படாமல், ஆசிரியர் மிக அழகான நடையில் எழுதிச் செல்கிறார். சாதாரணமாக நகரத்திலே யுள்ளவர்கள், மேடைமீதேறி நின்று கொண்டு, கிராமச் சீர் திருத்தத்தைப் பற்றி அகலம் நீளமாகப் பேசிவிடுகிறார்கள். ஆனால் கிராம வாசிகளின் கஷ்ட நிஷ்டூரங்களும், அவர்கள் எந்த விதமான நம்பிக்கையைக் கொண்டு வாழ்க்கையை நடத்துகிறார்கள் என்பதும் இவர்களுக்குத் தெரிவதே யில்லை. அப்படித் தெரிந்து கொள்ள இவர்கள் முயற்சி செய்வது மில்லை. அதனாலேயே, நமது நாட்டில் கிராமச் சீர்திருத்தம் என்பது அதிகமான ஆக்கம் பெற வில்லை. இந்த விஷயத்தில் நமது அரசியல் தலைவர்கள் விரைவினில் கவனஞ் செலுத்துதல் நல்லது. இந்த நூலைப் போன்ற இன்னும் பல நூல்களையும் தயார் செய்வித்து, கிராமத் தொண்டர்களுக்கு வழங்குதல் நலம். பள்ளிக்கூடங்களிலும் இது போன்ற நூல்களைப் பாட புத்தகங்களாக வைத்தல் அவசியம். சிறப்பாக இந்த நூல் எளிய நடையில், சிறு சிறு வாக்கியங்களாக எழுதப்பட்டிருப்பதால், இதனைப் பாட புத்தகமாக ஏற்றுக் கொள்ளத் தற்போதைய சென்னை அரசாங்கத்தார் தயங்க மாட்டார்களென்று உறுதியாக நம்புகிறோம்.

ஸ்ரீமான் முத்தையா, இது போன்ற இன்னும் பல நூல்களைத் தமிழில் எழுதி வெளியிட வேண்டுமென்று விரும்புகிறோம்.

ராஷ்ட்ரபதி சுபாஷ் சந்திர போஸ்

எழுதியவர்:-ஸ்ரீமான் அரு. காந்தி அண்ணாமலை; வெளியிட்டோர்: போஸ் பிரசுராலயம், 56, தம்புச் செட்டித் தெரு, சென்னை; டபிள் கிரவுன் அளவு 1x16, 73 பக்கங்கள்.

ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ், ஹரிபுரா காங்கிரசுக்குத் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டவுடன், அவருடைய வாழ்க்கை வரலாற்றை விவரித்துத் தமிழில் பல நூல்கள் வெளிவரத் தொடங்கியிருக்கின்றன. அவற்றுள் ஒன்று இந்த நூல். ஆசிரியர், நல்ல இனிய நடையில் ஸ்ரீ போஸின் சரித்திரத்தை எழுதியிருக்கிறார். தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவர் ஸ்ரீமான் சி. என். முத்துரங்க முதலியார் இந்நூலுக்கு ஒரு சிறப்புரை கொடுத்திருக்கிறார். அவர் குறிப்பிட்டிருப்பது போல், இந்த நூல் வேண்டிய பயனை அளிக்குமென்று நாமும் எதிர்பார்க்கிறோம்.

சுதந்திர வீரன் சுபாஷ் சந்திர போஸ்

ஆசிரியர்: ஸ்ரீமான் கே. இராமநாதன்; வெளியிட்டோர்; லோகசக்தி பிரசுராலயம், 21-A. சௌத்கூவம் ரோட், தோமஸீஸ்வரன் பேட்டை, சென்னை; விலை: நான்கு அணா; டபிள் கிரவுன் அளவு 1x16: 87 பக்கங்கள்.

'நவசக்தி' ஆசிரியர் திரு. வி. கலியாண சுந்தர முதலியார் அவர்கள், இந்நூலுக்கு அளித்துள்ள அணிந்துரையினின்று, இந்நூலாசிரியர் ஓர் இளைஞர் என்றும், தமது 'வாணாளையே நாட்டுச் சேவைக்கென அர்ப்பணஞ் செய்யத் துணிவு கொண்டுள்ளவ' ரென்றும் தெரிகின்றன. இதனாலேயே இவருடைய நடையிலும் இளமை விட்டுவிட்டுக் காட்டுகிறது. ஆசிரியர், விஷயங்களை அணிபடுத்தி வைத்து, வாசகர்களுக்குக் கோவையாக எடுத்துக்காட்ட அதிகம் முயன்றிருக்கிறார். அதற்காக இவரைப் பாராட்டுகிறோம்.

பகவான் அரவிந்தர் பத்தினியாருக்கு எழுதிய கடிதங்கள்

நூல் கிடைக்குமிடம்: 'லோகோபகாரி' காரியாலயம், சிந்தாதிரிப்பேட்டை, சென்னை; விலை: இரண்டு அணா; டபிள் கிரவுன் அளவு 1x16; 23 பக்கங்கள். இரண்டரை அணாத் தபால் முத்திரை அனுப்புவோருக்கு ஒரு பிரதி அனுப்பப்படும்.

புதுவையில் தவங்கிடக்கும் மஹான் அரவிந்தர், தமது தர்ம பத்தினியாருக்கு எழுதிய இக் கடிதங்களை மொழி பெயர்த்தவர் யாரென்று இந் நூலின் முகப்பில் காணப்படவில்லை. 'லோகோபகாரி' ஆசிரியர் ஸ்ரீமான் பரலி. சு. நெல்லையப்பராகத்தான் இருக்க வேண்டுமென்று நாம் ஊகிக்கிறோம். மொழி பெயர்ப்பு மிக நன்றாயும், அரவிந்தருடைய உள்ளத்தை அப்படியே திறந்து காட்டுவதாகவும் இருக்கிறது.

விமர்சனத்திற்கு வந்துள்ள நூல்கள்:—

ஸ்ரீரமண சந்நிதி முறை—*பாரத்வாஜி முகவைக் கண்ண முருகனார் இயற்றியது. புத்தகம் கிடைக்குமிடம்: ஏ. ஆர். கிருஷ்ணசாமி அண்ட் கோ, 43, அரண்மனைக்காரன் தெரு, சென்னை; விலை ஒரு ரூபாய்.*

MAHA YOGA or The Upanishadic Lore in the Light of the Teachings of Maharshi Ramana by "WHO"; Published by The New Light Publishing House, Pudukotah State; Price Rupee One.

பார்வைக்கு வந்துள்ள அறிக்கைகள் :—

1. *வாலாஜாபாத் ஹிந்து மத பாடசாலையின் 21-வது ஆண்டு அறிக்கை.*
2. *கோயமுத்தூர் ஜில்லா பெரிய நாய்க்கன் பாளையத்திலுள்ள ஸ்ரீராம கிருஷ்ண மிஷன் வித்யாலயத்தின் 1937ம் வருஷ அறிக்கை.*

ஜோதி—

(ஸ்ரீ ப்ரேம்சந்த் எழுதிய ஹிந்திக் கதையின் மொழிபெயர்ப்பு)

——எம். வி. வேங்கடராமன்

அன்பர் வேங்கடராமன், "ஜோதி"க்கு ஜோதியையே தமது முதல் ஆராதனையாகக் காட்டியிருக்கிருர். இவர், 'தமிழ் நாட்டின் இதிகாச விகாசத்தில்' பங்கெடுத்துக் கொண்டுள்ளவர்.

ஹிந்தி உரை நடைச் சோலையிலே ப்ரேம்சந்த் ஒரு கம்பீரமான விருட்சம். இந்த விருட்சம், மேற்பார்வைக்கு மிகச்சாதாரணமாக இருந்தாலும், இதில் பூக்கும் மலர்களை நுகர்வதற்கும், காய்த்துத் தொங்கும் கனிகளைச் சுவைப்பதற்கும் அதிக சிந்தனை சக்தி வேண்டும். வாழ்க்கையைச் சித்திரித்துக் காட்டுவதில் இவருக்கு ஈடாக யாரைச் சொல்வது? இவரையே தான்.

இந்தச் சிறு கதைக்கு ஜோதி என்று பெயரிட்டது ப்ரேம்சந்த் தான். அதனை அப்படியே தமிழ்த்தாயின் திருவடியில் ஏற்றி வைக்கிருர் அன்பர் வேங்கடராமன்.

விதவையானதும் பூடீயின் சுபாவம் மிகவும் கடூரமாகிவிட்டது. ரொம்ப எரிச்சல் உண்டாகும்போது இறந்து போன தன் கணவனுரைத் திட்டுவாள்—'இந்த தொல்லையெல்லாம் என் தலமேலே வச்சுட்டு சொஸ்தமா போயிட்டீங்க. இந்த அல்பாயுசுலே போறதாயிருந்தா கண்ணுலம் ஏன் பண்ணிக்கணும். குடிக்க கஞ்சியில்லே; இந்த அளகிலே கண்ணுலம் வேறே!' இஷ்டப்பட்டிருந்தால் அவள் வேறு கலியாணம் செய்து கொண்டிருக்கலாம். 'அஹீர்' (இடையர்)களுக்குள் இந்த வழக்கமுண்டு. பார்ப்பதற்கும் நன்ருகவே இருப்பாள். ஒன்றிரண்டு பேர் அவளை மணம் புரிந்துகொள்ளத் தயாராகவுமிருந்தனர். ஆனுல் பூடீக்கு 'பதிவிரதை' என்ற பட்டத்தை இழக்க ஆசையில்லை.

இந்தக் கோபமெல்லாம் பெரிய பையன் மோஹன்மீது இறங்கும். அவனுக்கு அப்போது பதினுறு வயது. ஸோஹன் சிறு பையன்; மைனு சின்ன பெண். இவ்விருவரானும் எந்த வேலையும் செய்ய முடியாது. இந்த மூவரும் இல்லாவிட்டால் பூடீக்குக் கஷ்டமே கிடையாது. யாருக்காவது கொஞ்சம் வேலை செய்து கொடுத்தால் சாப்பாடும் துணிமணியும் கொடுத்து விட்டுப் போகிருர்கள். இஷ்டப்பட்டால் யாரிடமாவது நிரந்தரமாகத் தங்கிவிடலாம். இப்போது அப்படி செய்தால் ஜனங்கள், 'மூன்று குழந்தைகள் இருக்கிறபோது இவள் புத்தி ஏன் இப்படி போகிறது?' என்பார்கள். மோஹன் முடிந்தவரை அவள் பாரத்தைக் குறைக்கும் முயற்சி செய்து கொண்டிருந்தான். பசுக்களுக்கும், எருமைகளுக்கும் தண்ணீர் காட்டி குளிப்பாட்டும் வேலை எல்லாம் அவனே செய்வான். ஆனுல் பூடியின் மனம் திருப்தியடையவில்லை. தினம் ஏதாவது ஒரு குற்றம் கண்டுபிடித்துக் கொண்டே இருப்பாள். மோஹனும் அவளுடைய எதிர்ப்புகளைக் கவனிக்கவே மாட்டான். கணவன் குடும்ப பாரத்தை அவள் தலைமீது போட்டு

விட்டு ஏன் இறந்தான்? இதுதான் அவள் புகார். அவனே ஒரேயடியாக நாசம் செய்துவிட்டான். அவள் என்ன சுகம் காண முடிந்தது? நல்ல சாப்பாடு, நல்ல துணி, ஏதாவது அவள் கண்டிருக்கிறளா? ஊஹூம். இந்த வீட்டிற்குள் வந்தது குட்டையிலே விழுந்ததுபோலத்தான். அவளுடைய வைதவ்ய சாதனைக்கும், விலாசப் பிரியத்திற்கு மிடையில் எப்போதும் போராட்டம் நிகழ்ந்து கொண்டே யிருக்கும். அதன் எரிச்சலில் அவளுடைய ஹிருதயத்தின் மிருதுத் தன்மை எரிந்து சாம்பலாகிவிட்டது. புருஷன் இறந்தபின் அவளிடம் ஐந்நூறு ரூபாய் மதிப் புள்ள நகைகள் இருந்தன. ஆனல் ஒவ்வொன்ருக, எல்லாம் அவள் கையை விட்டு நழுவிவிட்டன. அந்தப்பகுதியிலேயே, அவளுடைய பக்கத்து வீட்டார்கள் எத்தனையோ பேர் அவளைவிட வயதில் பெரியவர்களாய் இருக்கிருர்கள். அவர்கள் 'பளிச்' சென்று நகைகள் போட்டு மினுக்கிக் கொண்டும், கண்களில் மையிட்டுக் கொண்டும், பெரிய குங்குமப்பொட்டு வைத்துக்கொண்டும் எதிரில் வந்து விட்டால் 'பொங்கிக்கொண்டு' வரும் அவளுக்கு. ஆகையால் அவர்களுக்குள் யாராவது விதவையாகிவிட்டால் அவளுக்கு மகிழ்ச்சி உண்டாகும். அவளுக்கு உலகத்திலுள்ள ஸ்திரீகள் எல்லாரும் தன்னைப்போலவே இருக்க வேண்டுமென்ற நினைவுபோலும். நிந்தனை செய்வதில் அவளுக்குப் பரமானந்தம். வஞ்சிக்கப்பட்ட அவள் ஆசை, ஜலம் கிடைக்காததால் பனித் துளியை நக்கிச் சந்தோஷமடையும். அப்படி இருக்கும்போது மோஹனைப் பற்றின விஷயமொன்றைக் கேட்டு விட்டு அதை ரகஸ்யமாக அவளால் எப்படி வைத்துக்கொள்ள முடியும்? பால் விற்றுவிட்டு மோஹன் வீட்டிற்கு வந்ததும் பூடீ கேட்டாள், 'இப்போ காலி என்னு பேரெடுக்க கிளம்பி இருக்காப்போலிருக்கே?'

மோஹன் கேள்வி கேட்கும் பாவனையில் பார்த்து—'காலியா? என்ன சமாச்சாரம்?' என்ருன்.

'ரூபியாவோடு ஒளிஞ்சிண்டு நீ சிரிச்சு பேசி விளையாடல்லே? காலியான்னு மறுபடியும் கேக்கிறியே? வெக்கமில்லே ஒனக்கு! இங்கே பைசான்னு லாட்ரியா யிருக்கு; அங்கே அவளுக்காக வெத்திலே, சேலைக்கு சாயம், மவராசா பிள்ளே போல—!'

மோஹன் எதிர்க்கும் தோரணையில் பேச ஆரம்பித்தான்:—'அவ என் கிட்டே நாலு காசுக்கு வெத்திலே கேட்டா என்னு சொல்றது? காசு கொடுன்னு கேக்கிறதா? துணிக்கு சாயம் போட்டு தான்னு அதுக்கு கூலி கேக்கிறதா என்னு?'

'இங்கே நீதானே மவராசா. வேறே யார் கிட்டேயும் அவ ஏன் கேக்கல்லே?'

'அது அவளுக்குத் தெரியும்; எனக்கு எப்படி தெரியும்?'

'மைனர் ஆற புத்தி தோணியிருக்காப் போலிருக்கு. எப்போனுச்சு வீட்டுக்குன்னு ஒரு காசுக்கு வெத்திலே கொண்டாந்த துண்டா?'

'இங்கே வெத்திலே தின்கிறவா யாரு இருக்கா?'

'வீட்டிலே எல்லாரும் செத்துப் பூட்டாங்கன்னு நெனச்சிக்கிண்டிருக்கியா?'

'வெத்திலே திங்க ஒனக்கு ஆசையா யிருக்குன்னு எனக்கு தெரியாது'.

'ஒலவத்திலே ரூபியாதான் வெத்திலே திங்கணும், இல்லே?'

'அது அதுக்கு வயசில்லியா?'

பூடீ சீறி எழுந்தாள். அவளைக் 'கிழவி' என்பது அவளை அவமானப் படுத்துவதுபோல்; மற்றவர்களுக்கு முன்னால்எந்த தியாகத்தைக் கற்பித்து நிமிர்ந்து நடந்து கொண்டிருந் தாளோ அதை அவமதிப்பதுபோல். இந்தப் பயல்களுக்காக அல்லவா அவள் தன் வாழ்க்கை முழுவதும் தியாகம் செய்தாள்! இவர்களுக் காகத்தானே தன் இளமையை பலி யிட்டாள்! அவள் புருஷன் இறந்து ஐந்து வருஷமாகிறது; அப்போது அவளுக்கு நல்ல இளமை. மூன்று குழந்தைகள் பெற்று விட்டாலும் அவளுக்கு என்ன வயதாகி விட்டது? இஷ்டப் பட்டால் இன்றே அவள் உதட்டைச் சிவப்பாக்கி, கால்களில் 'மருதனே' பூசி, நகைகளைப் போட்டு மினுக்கிக் கொண்டு போக முடியாதா? இவ்வளவு தியாகம் செய்ததற்கு பதிலாகத்தான்மோஹன் அவளைக்கிழவி என்கிறான்போலிருக்கு! ருபியா பெரிதாகிப் போய்விட்டது அவனுக்கு! பூடீ கிழவியாகி விட் டாள்!

'ஆமா, நான் கந்தையும் கிழிசலும் கட்டிக்கிண்டு இருக்க வேண்டியவ. உங்கப்பன் சாறப்போ ருபியாவை விட எனக்கு ரெண்டு மூணு வருஷம் தான் ஜாஸ்தி. அப்படியே வேறே கண்ணாலம் பண்ணிக்கிண்டு இருந்தா உங்க கதி என்னவாயிருக்கும் இன்னு ரோசனை செஞ்சிபாரு. சட்டியே பிடிச்சிகிண்டு பிச்சே எடுப்பீங்க! ஆறு நான் சொல்லிபிட்றேன்; மறு தபா நீ அவளோடு பேசினேன்னு தெரிஞ்சிதோ அப்புறம் நீயாச்சு நானாச்சு! பாத்துக்கோ!'

பயந்து கொண்டே மோஹன் சொன்னான் :—'அவகிட்டே நான் சொல்லிப்பிட்டேனே?'

'என்ன?'

'கண்ணாலம் பண்ணிக்கிறேன் என்னு சொல்லிப்பிட்டேனே.'

'ருபியா என் வூட்டுக்கு வந்தா விளக்க மாத்தாலே அடிச்சு தொறத்துவேன். இதெல்லாம் அவ அம்மா செய்ற 'ஜாலக்கு'. அந்த செறுக்கிதான் என் மவனை கெடுக்க றவ. கம்மண்டாட்டி மூன்டை!'

துக்கத்துடன் மோஹன் சொன் னான் :—'அம்மா, செத்தே ஒன் வாயே மூடேன். நீயே ஒன்னே கெடுத்துக் கிறியே. நாலு நாள்லே மைனா கண்ணாலம் பண்ணிக்கிண்டு போய்டு வாளே. அப்புறம் ஒனக்கு ஒத்தாசை வேணுமேன்னு பாத்தேன்'.

'இன்னக்கிருந்து நீ முத்தத்திலே படு.'

'எருமை மாடெல்லாம் வெளியிலே கெடக்கட்டுமா?'

'கெடக்கட்டும்; கொள்ளேயடிச் சுக்கிட்டு போயிடமாட்டா.'

'எம்மேலே ஒனக்கு இத்தினி சந்தேவமா?'

'ஆமா!'

'அப்பிடீன்னா நான் இங்கே படுக்க மாட்டேன்.'

'என் வூட்டே விட்டு வெளியே போ!'

'ஒனக்கு இஸ்டமா யிருந்தா போயிட்றேன்.'

மைனா சமைத்தாள். மோஹன் பசியில்லே என்று சொல்லி விட்டான். பூடீ அவனைச் சமாதானப் படுத்தவர வில்லே. மோஹனின் இள நெஞ்சம் தாயாரின் பலாத்கார ஆட்சியை ஏற்க மறுத்து விட்டது. அவளுடைய வீட்டை தலைமேலே வைத்துக் கொள்ளட்டுமே! அவன் தனக்காக வேறு இடம் கொண்டு விடுகிறான். அவனுடைய உலர்ந்த வாழ்க்கையை மலரச் செய்தவள் ருபியா. விவரிக்க முடியாத ஆவலால் அவன் துடிக்கும்

போது, வாழ்க்கை கொஞ்சம் சூன்ய மாகத் தோற்ற மளித்துக் கொண் டிருந்தபோது, நவ வஸந்தத்தைப் போல் தோன்றி அவன் வாழ்க்கை யைத் தழைக்கச் செய்தவள் ருபியா. மோஹனுக்கு வாழ்க்கையில் இனிய ருசி உண்டாக ஆரம்பித்தது. ஏதாவது வேலை செய்து கொண்டிருப்பான்; ஆனால் கவனம் எல்லாம் ருபியாமீது.

அவன் யோசனையில் ஆழ்ந்து இருந்தான்.

அவளை எப்படி இப்போது சந்திப் பது? அவளிடம் 'அம்மா உன்னை பார்க்கக் கூடாது' என்று உத்தரவிட் டிருக்கிறாள் என எப்படிக்கூறமுடியும்? நேற்று ஆல மரத்தடியில் உட்கார்ந்து இருவரும் எவ்வளவு பேச்சு பேசிக் கொண்டிருந்தார்கள்! மோஹன் சொன்னான், 'ரூபா, நீ இவ்வளவு அளகா யிருக்கே; ஒன்னே எத்தி னியோ பேர் கண்ணாலம் பண்ணிக்க தயாரா இருப்பா; எனக்கு என்ன இருக்கு?' என்று.

இதற்கு ருபியா அளித்த பதில், சங்கீதத்தைப்போல் அவன் மனதில் ஒட்டிக்கொண் டிருந்தது—'மோஹன், ஒன் மேலேதான் எனக்கு ஆசை. நீ எப்படி யிருந்தாலும் ஒன்னையே கண்ணாலம் பண்ணிக்கிவேன்!' இன்று அதே ருபியாவிடம் போய் 'ஒனக்கும் எனக்கும் பொருத்தமில்லே!' என்று சொல்வதா?

ஊஹூம்; முடியாது. வீட்டைப் பற்றி அவனுக்குக் கவலையில்லை. ருபியா வோடு, அம்மாவை விட்டுப் பிரிந்து போய் தனியாக இருப்பான். இந்த இடத்திலே இல்லாவிட்டால் வேறு இடத்திற்குப் போய் விடுகிறது. இப் போது கூட ருபியா அவனை எதிர் பார்த்துக் கொண்டிருப்பாள். எவ்வ ளவு நன்றாக பீடா செய்யத் தெரிகி றது அவளுக்கு? இன்றிரவு ருபியா வீட்டிற்கு அவன் போனான் என்று தெரிந்தால் அம்மா 'உசிரையே விட்டு டுவா!? உயிரை விடட்டுமே! இம்மா திரி லட்சுமி போல மருமகள் கிடைக்கிறாளோ என்று சந்தோஷப் படக் காணோம்; ருபியா மேலே இவ் வளவு ஆத்திரம் எதற்காக என்று தெரியவில்லை. அவள் கொஞ்சம் வெற்றிலே போட்டுக் கொண்டு விட் டாளாம்; சேலைக்குச்சாயம் போட்டுக் கொண்டு விட்டாளாம்; அதுக்கு இப் படியா?

வளையல்களின் சப்தம் கேட்டது. ருபியா வருகிறாள்! ஆம்; அவள் தான்.

ருபியா அவன் தலைப் பக்கம் வந் தாள். 'மோஹன், தூங்கிட்டியா? நீ வருவே வருவேன்னு பார்த்துக் கொண்டிருந்தேன். ஏன் வரலே?'

தூக்க சாக்கு வைத்துக் கொண்டு மோஹன் பேசாமல் கிடந்தான். ருபியா அவன் தலையை அசைத்து மறுபடியும், 'மோஹன், தூங்கிட் டியா?' என்றாள்.

அந்த மிருதுவான விரல்களின் ஸ்பர்சத்தில் என்ன சித்தி இருக்கி றதோ, யாருக்குத் தெரியும்? மோஹ னின் ஆத்மா முழுவதும் உன்மத்த மாகியது. ருபியாவின் பாதங்களில் சமர்ப்பித்துக் கொள்ள விரும்புவது போல் துடிக்க ஆரம்பித்தது அவன் உயிர். வரதானத்திற்காக தேவி எதிரே நிற்கிறாள். உலகம் முழுவதும் ஆடுகிறது போலிருக்கிறது. தன் உடல் மறைந்து, ஒரு இனிய குரலைப் போல் மாறி உலகத்தின் மடியைத் தழுவிக்கொண்டு அதனோடுநர்த்தனம் செய்வது போலிருந்தது அவனுக்கு.

ருபியா மறுபடியும், 'சாமி! தூங்கி விட்டியா?' என்றாள்.

'ஆமா, கொஞ்சம் கண் மூடிகிண்டு டுத்து. இப்போ எங்கே வந்தே

ரூபா! அம்மா பாத்துட்டா போதும்; என்னே கொன்னு போட்டுடுவா'

'நீ ஏன் வரலே?'

'அம்மாளோடே சண்டே'.

'என்ன சொன்னுங்க?'

'ரூபியாவோட பேசினு உசிரே விட்டுவிடுவேன் இங்கிரு'.

'ரூபியாமேலே ஏன் இத்தினி கோவம் என்னு நீ கேக்கலே?'

'என்னத்தே கேக்கறது போ! இன்னுமே நீனும், நானும் கொஞ்சம் ஒதுங்கி இருக்கணும்'.

'என் மனசு கேக்காதே?'

'இப்பிடி பேசினு ஒன்னே அழச்சிண்டு ஓடி போயிடுவேன்'

'தினம் ஒரு தடவே என்னே பார்க்க வந்துட்டா போதும். எனக்கு திருப்தியா போயிடும்'.

'அம்மா கோவிச்சுக்குவாளே'.

'அப்படியானு எனக்கு தெரிஞ்சுட்டது. என்மேலே ஒனக்கு ஆசே இல்லே.'

'என்னலே முடிஞ்சா ஒன்னை என் உசிரிலே வச்சிண்டுடுவேன்.'

இதே சமயம் வீட்டுக் கதவு திறக்கும் சப்தம் கேட்டது. ரூபியா ஓடிப்போய்விட்டாள்.

II

மறுநாள் காலையில் எழுந்திருக்கும்போது மோஹனின் உள்ளம் ஆனந்த சாகரத்தில் திளைத்துக்கொண்டிருந்தது. ஸோஹனை அவன் எப்போதும் திட்டிக்கொண்டிருப்பது வழக்கம். ஸோஹன் சோம்பேறி; வீட்டு வேலையைக் கவனிக்கவேமாட்டான். இன்று அவன் முற்றத்தில் உட்கார்ந்து அங்க வஸ்திரத்திற்குச் சோப்பு போட்டுக்கொண்டிருந்தான். மோஹனைக் கண்டதும் சோப்பை மறைத்துக் கொண்டு ஓடிப் போவதற்காக இங்கும் அங்கும் பார்க்கத் தொடங்கினன்.

புன்சிரிப்பு செய்து கொண்டே மோஹன், 'மேவேஷ்டி ரொம்ப அழுக்கா போயிடுச்சா? வண்ணான் கிட்டே குடுத்தா என்ன?' என்றான். அவன் பேச்சில் அன்பின் வாசனை வந்தது.

'வண்ணாத்தி காசி கேக்கறு.'

'அம்மா கிட்டே காசி வாங்கிக்கிறதுதானே?'

'அம்மா சும்மா குடுத்துடுவாளா?'

'அப்பிடீன்னு நான் குடுக்கறேன்.'

அவன் ஸோஹனுக்கு முன் காசைத் தூக்கி எறிந்தான். ஸோஹனுக்கு மிகவும் சந்தோஷம். அண்ணாவும், அம்மாவும் அவனை எப்போதும் திட்டுவது வழக்கம். பல நாட்களுக்குப் பிறகு இன்றுதான் அவன் இனிமையை ருசித்தான். காசை எடுத்துக் கொண்டு துணியை அங்கேயே போட்டுவிட்டு, பசுவை அவிழ்த்துக் கொண்டு புறப்பட்டான். மோஹன், 'இருக்கட்டும்; நான் கூட்டிண்டு போறேன்' என்றான்.

ஸோஹன் அவன் கையில் கயிறைக் கொடுத்துக் கொண்டே, 'ஒனக்காவ ஜூருட்டு கொண்டாரட்டுமா?' என்றான்.

வாழ்க்கையில் முதல் தடவையாக இப்போதுதான் ஸோஹன் தன் அண்ணனிடம் அன்பாகப் பேசியது. இதன் ரகஸ்யம் என்னவென்று மோஹனுக்குப் புரியவில்லை. 'இருந்தா கொண்டா' என்றான்.

தலை மயிரை எல்லாம் விரித்துப் போட்டுக் கொண்டு முற்றத்தில் உட்கார்ந்து மைனு வீடு கட்டிக் கொண்டிருந்தாள். மோஹனைக் கண்டதும் அவள் வீட்டைக் கலைத்து விட்டு முந்தானையில் தலையை மறைத்துக் கொண்டு சமயலறைப் பக்கம் போக வாரம்பித்தாள்.

மோஹன் கேட்டான்:- 'என்ன வெளையாடிக்கிண்டிருந்தே மைனு?'

பயந்து கொண்டே மைனு, 'ஒண்ணுமில்லே' என்றாள்.

'நீ ரொம்ப நல்லா வூடு கட்றியே; எங்கே இன்னொரு வாட்டி கட்டு பாக்கலாம்.'

மைனுவின் சுருங்கின முகம் விரிந்தது. அன்பு நிறைந்த வார்த்தையிலிருக்கும் ஆகர்ஷண சக்தி அபாரமானது. அது வாயிலிருந்து வெளிக்கிளம்பியதும் எங்கும் வாசனை பரந்தது போலிருக்கிறது. கேட்டவர் உள்ளத்தில் மலர்ச்சி; பயமிருக்கும் இடத்தில் நம்பிக்கையின் வளர்ச்சி; கடுமை இருந்த இடத்தில் மென்மை. நான்கு புறங்களிலும் அறிவு பாய்கிறது. சோம்பலும், கோபமும் அகலுகின்றன. மோஹனின் ஹிருதயம் இன்று அன்பால் நிறைந்திருக்கிறது; அதிலிருந்து மணம் பரவுகிறது.

மைனு வீட்டைக் கட்டவாரம்பித்தாள்.

அவளுடைய பரந்த தலை மயிரைக் கோதிக் கொண்டே மோஹன் சொன்னான்:—'ஒன் பொம்மெக்கு எப்போ கண்ணாலம்? சாப்பாடு போடு வேல்லே? ஏதாச்சும் மிட்டாயி கெடைக்கும்.'

மைனுவின் மனம் ஆகாயத்தில் பறக்க வாரம்பித்தது. இப்பொழுது அண்ணு தண்ணீர் கேட்டால் அவள் லோட்டாவை சாம்பலால் நன்றாகத் தேய்த்துக் கொண்டுவந்து கொடுப்பாள்.

'அம்மா காசி கொடுத்தாதானே? மாப்புள்ளே தயாருதான். காசி கிடைக்காததாலே கண்ணாலத்துக்கு தடே.'

'எத்தனே வேணும் வுனக்கு?'

'ஒரு காசுக்கு 'பதாஸா' (ஒரு வகை மிட்டாய்). ஒரு காசுக்கு சாயம்; துணியெல்லாத்துக்கும் சாயம் போடணுமில்லே?'

'ரெண்டு காசு இருந்தா போதுமோ வுனக்கு?'

'ஆமா அண்ணு. நீ ரெண்டு காசு தா. என் பொம்மேக்கு ஜாம் ஜாம்னு கண்ணாலம் செஞ்சுட்றேன்.'

மோஹன் இரண்டு காலணாக்களை எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு மைனுவுக்குக் காட்டினான். மைனு பாய்ந்தாள்; மோஹன் கையை மேலே உயர்த்திவிட்டான்; மைனு அவன் கையைப் பிடித்து கீழே இழுக்க வாரம்பித்தாள். மோஹன் அவளைத் தன் தொடைமீது உட்கார வைத்துக்கொண்டான். மைனு காசு எடுத்துக்கொண்டாள். கீழே இறங்கி ஆடத் தொடங்கினாள். பிறகு தன் கூட்டாளிகளை விவாக விருந்துக்கு அழைப்பதற்காக ஓடினாள்.

அதே சமயம் பூடீ, சாணிக் கூடையைத் தூக்கிக்கொண்டு அங்கு வந்துசேர்ந்தாள். மோஹன் நின்றுகொண்டிருப்பதைப் பார்த்ததும் கடுமையான குரலில், 'இன்னும் மவாராசா காத்து வாங்கறுப்போலிருக்கு. எருமையை எப்போ கறக்கறது?'

இன்று மோஹன் முரண்டு பதில் சொல்லவில்லை. தாயார் சாணிக் கூடை தூக்கிக் கொண்டிருப்பதைக் கண்டு அதை இறக்கினான்.

'இருக்கட்டும், இருக்கட்டும். போய் எருமையைக்கற. நான் சாணி எடுத்துண்டு போறேன்' என்றாள் பூடீ.

'நீ ஏன் இத்தினே சொமே தூக்கறே? என்னே கூப்பிட்டா என்ன?'

தாயாரின் உள்ளம் வாத்சல்யத்தால் விரிந்தது.

'நீ போடாலே. ஒன் வேலேயே நீ பாக்கிறியா. என்னே வண்டா பாக்கிறே?'

'சாணி தூக்குற வேலே என்னுடது.'

'பாலு கறக்கறது யாரு?'

'அதுகூட நா தான்'

'எல்லா வேலேயும் செஞ்சுக்க நீ பெரிய மனுசனு போயிட்டாயாக்கும்?'

'சொல்றபடி செய்றேனு இல்லியான்னு பாரு'

'நா என்ன செய்றது?'

'எங்களெயெல்லாம் நீ வேலே வாங்கவேண்டியவ'.

'நா சொல்றதை யார் கேக்ரு?'

III

அன்று கடைத் தெருவிலிருந்து பாலே விற்று விட்டு வரும் போது மோஹன் வெற்றிலே, காசுக் கட்டி, பாக்கு, ஒரு சிறிய வெற்றிலேப்பெட்டி, கொஞ்சம் மிட்டாய் இவைகளே எல்லாம் வாங்கிக் கொண்டு வந்தான். பூடீ கோபமடைந்து, 'இன்னெக்கு காசி எனுமா கெடைச்சுதா? இப்படி காசே அடாவடியா செலவு செஞ்சா என்னு செய்றது?' என்ருள்.

'நா ஒரு காசுகூட செலவழிக்கல்லே. நீ வெத்திலே திம்பேன்னு முதல்லே தெரியாது.'

'இப்பதான் வெத்திலே திங்க வேண்டியது!'

'ஆமா, பின்னே என்னு? இரண்டு பசங்களெ பெத்திருக்கறவ இதுகூட செய்யப்படாதா?'

பூடியின் கடுமையான உலர்ந்த ஹிருதயத்தில் எங்கிருந்தோ கொஞ்சம் பசுமை கிளம்பி வந்தது. அவள் மைனுவுக்கும் ஸோஹனுக்கும் ஒவ்வொரு மிட்டாய் கொடுத்து விட்டு மோஹனுக்கும் கொடுக்கவாரம்பித்தாள்.

'மிட்டாயி கொளந்தேங்களுக்காவ கொண்டாந்தேன் அம்மா!'

'அப்படீன்னு நீ கௌவனு?'

'இந்த கொளந்தேங்களுக்கு முன்னுலே கிளவன்தான்.'

'ஆனு எனக்கு பின்னுலே கொளந்தேதான்.'

மோஹன் மிட்டாயியை வாங்கிக் கொண்டான். மிட்டாயை வாங்கினதும் மைனு, 'சட்'டென்று வாயில் போட்டுக்கொண்டு விழுங்கிவிட்டாள். வாயில் அதன் தித்திப்பு ருசிமாத்திரம் பாக்கி இருந்தது. மோஹனுடைய மிட்டாயியின் பக்கம் ஆவலுடன் பார்க்க வாரம்பித்தாள். மோஹன் பாதி மிட்டாயை உடைத்து அவளிடம் கொடுத்து விட்டான். இன்னொரு மிட்டாய் பாக்கி. அதை எடுத்து மோஹனிடம் நீட்டிக்கொண்டே பூடீ சொன்னுள்:- 'இவ்வளவு மிட்டாய் ஏன் கொண்டாந்தே? நீ சாப்பிடு, இந்தா.'

மோஹன் பாதி மிட்டாயை வாயில் போட்டுக் கொண்டு சொன்னுன்:—

'அது ஒம் பங்கு அம்மா.'

'நீ சாப்பிட்றதே பார்த்தாலே மிட்டாயே விட தித்திப்பாயிருக்கு.'

அவள் பாதி மிட்டாயை ஸோஹனிடமும், மற்ருரு பாதியை மோஹனிடமும் கொடுத்து விட்டு வெற்றிலேப் பெட்டியைப் பார்க்கவாரம்பித்தாள். வாழ்க்கையில் இந்த மாதிரி அதிர்ஷ்டம் அவளுக்குக் கிட்டியது இது தான் முதல் தடவை. என்ன பாக்கியம்! கணவனின் ராஜ்யத்தில் விரும்பின சுகம் மகனின் ராஜ்யத்தில் அவளுக்குக் கிடைத்து விட்டது! வெற்றிலேப் பெட்டியில் பல சிறிய அறைகள் இருந்தன. 'அடே! அதுக்கு பிடி கூட இருக்கு! இஷ்டப்பட்ட இடத்தில் மாட்டி வைக்கலாம்! மோஹன் வெளியே போனதும்

அவள் வெற்றிலைப் பெட்டியை நன்றாகத் தேய்த்து அதில் பாக்கு சுண்ணாம்பு எல்லாவற்றையும் வைத்தாள். பிறகு சாவகாசமாக ஒரு பீடா செய்து சாப்பிட்டாள். அந்த பீடாவின் ரஸம் அவளுடைய வைதவ்யத்தின் கொடுமையைக் குறைத்து விட்டாற் போலத் தோன்றியது. மனச் சந்தோஷம், செய்கையில் தாராளமாக மாறி விடுகிறது. அவள் இப்போது வீட்டில் உட்கார முடியாது. இவ்வளவு பெரிய சுகத்தை மறைத்துக் கொள்ளும் படியாக அவள் மனம் ஆழமாய் இல்லை. ஒரு பழைய கண்ணாடி கிடந்தது. அதில் தன் முகத்தைப் பார்த்துக் கொண்டாள். உதடு சிவப்பாயில்லை. வாயை மாத்திரம் சிவப்பாக்கிக் கொள்ள அவள் கொஞ்சந்தான் வெற்றிலை போட்டுக் கொண்டாள்.

தனியா வந்து சொன்னாள், 'கொஞ்சம் கவுறு குடேன் என் கவுறு அறுந்துபூட்டுது.'

நேற்றுயிருந்தால் பூடீ, கிராமம் முழுவதுக்காகத் தான் கயிறு வைத்துக் கொண்டிருக்கவில்லை என்று சொல்லியிருப்பாள். இன்று சந்தோஷமாகக் கயிறை எடுத்து நீட்டிக் கொண்டே அன்புடன் கேட்டாள், 'கொளந்தேக்கி ஒடம்பு சரியாச்சா யில்லையா?'

'தனியா துக்கமாகக் கூறினாள், 'இல்லே அப்படியே யிருக்கு.'

'தண்ணி எடுத்துக்கிண்டுவா; நா ஒங்கூட வர்ரேன்; கண்ணு கிண்ணு பட்டிருக்கோ என்னவோ?'

'யாருக்குத் தெரியுது? எந்தப் பாவியோட கண்ணோ!'

'தலெச்சங் கொழந்தேக்கு கண்ணு பட்றது சவஜம்'.

'யார் கூப்பிட்டாலும் ஓடனே மடியிலே போயிடுது. அது என்னமா சிரிக்குது தெரியுமா?'

'சில வேளேலே தாயார் கண்ணு கூட விழுந்துடும்.'

'இதென்ன புதுசாயிருக்கு! யாராச்சிம் தன் கொழந்தே மீதே கண் போடுவாளோ?'

'ஒனக்குத் தெரியாது. கண்ணு தானு பட்டுடும்'.

தனியா தண்ணீர் கொண்டு வந்ததும் பூடீ அவளோடு குழந்தையைப் பார்க்கப் போனாள்.

'நீ தனியா யிருக்கியே; வூட்டு வேலே எல்லாம் செய்ய ரொம்ப கஷ்டமா யிருக்குமே?'

'இல்லேம்மா. ருபியா வந்து கொஞ்சநஞ்சம் வேலே செஞ்சு கொடுக்கறா. அவ இல்லாட்டா நான் செத்துப் பூடுவேன்.'

பூடீக்கு மிகவும் ஆச்சரியமா யிருந்தது. ருபியா வெறும் பட்டுப் பூச்சி என்பது அவள் நினைவு.

'ருபியாவா!'

'ஆமாம்பெரியம்மா! ரொம்ப நல்லவ. ஊட்டே கூட்டிட்றா. சாமானெல்லாம் தேச்சி கொடுத்துட்றா. கொளந்தேயே கிட்டே வச்சிக்கிண்டிருக்கா. ஆபத்துன்னு யாரு நம்மை கவனிக்கிறா?'

'சிங்காரிச்சிக்கிறதுக்கே அவளுக்கு நேர மிருக்காதே!'

'அது அவா அவா ருசிக்கு தகுந்தாப்போலே. ஆனா இந்த மினுக்கி எனக்கு செஞ்சிருக்கற ஒத்தாசேயெப்பத்தி செய்றவகூட செஞ்சிருக்க மாட்டா. ராத்திரி முச்சூடும் முழிச்சிக்கிட்டு இருந்தா. காசா, பணமா அவளுக்கு நான் என்ன குடுத்துட்டேன்? அது என்னமோ அம்மா, என் உசிரு இருக்கரேவரேலே அவளை மெச்சுக்கிண் டிருப்பேன்!'

'அவ குணம் ஒனக்கு இன்னம் தெரியல்லே தனியா! வெத்திலே காசு எங்கேருந்து வருது? கரை போட்ட சேலே யாரு வாங்கித்தாரா?'

'நான் இந்த விஷய மெல்லாம் கவனிக்கிறதில்லே. சிங்காரிச்சுக்க அல்லாருக்கும்தான் ஆசேயாயிருக்கு. இந்த வயசிலேதானே அதெல்லாம் செஞ்சிக்கணும்!'

தனியா வீடு வந்து விட்டது. முற்றத்தில் உட்கார்ந்து ருபியா குழந்தையைக் கட்டிக் கொடுத்துக் கொண் டிருந்தாள். குழந்தை தூங்கிக் கொண்டிருந்தது.

தனியா, குழந்தையைக்கட்டில் மீது படுக்க வைத்தாள். பூடீ குழந்தையின் தலே மீது கை வைத்தாள். வயிற்றைத் தட்டித் தட்டிப் பார்த்தாள். நாபி மீது பெருங்காயத்தை அரைத்துப் போடும்படி சொன்னாள். ருபியா விசிறி கொண்டு வந்து அவளே விசிற வாரம்பித்தாள்.

பூடீ சொன்னாள், 'இந்தா விசிறி இங்கே கொண்டா.'

'நா விசிறினு கொறஞ்சுப் போயிடு வேனு?'

'நீ நாள் முச்சூடும் இங்கேயே வேலே செய்றே. களேச்சிப்போயிருப்பே.'

'நீங்க இத்தினி நல்லவங்களாயிருக்கீங்கோ; இங்கே அல்லாரும் வையாமே நீங்க பேச மாட்டேங்க எங்கிரு. பயந்துண்டுதான் ஒங்ககிட்ட வரலே.'

பூடீ புன் சிரிப்பு செய்தாள்.

'அவங்க சொல்றது பொய்யில்லே.'

'நா கண்ணுலே பாத்ததே சரி இம்பேனு? காதாலே கேட்டதே ஒத்துக்குவேனு?'

இன்று கூட ருபியா கண்களில் மை, வாயில் வெற்றிலே, 'கலர்'ப் புடவை சஹிதமாகத்தா னிருந்தாள். ஆனல் பூடீக்குத் தெரிந்து விட்டது, இந்த மலரில் அழகு மாத்திர மன்று மணமும் இருக்கிற தென்று. அவளு டைய மனதில் ருபியா மீது உண்டாகி இருந்த வெறுப்பெல்லாம் கரைந்து போய் விட்டது. எவ்வளவு நல்ல பெண் இவள்! எவ்வளவு லஜ்ஜையுடன் பேசுகிருள்! மிகவும் இனிமையாகப் பேசுகிருள். தற்காலப் பெண்மணிகள் தங்கள் குழந்தைகளேயே கவனிப்ப தில்லே. மற்றவர்களுக்காக யார் கஷ்டப்படப் போகிருர்கள்? இரவு முழுவதும் தனியாவின் குழந்தைக் காக விழித்துக்கொண்டிருந்தாளாமே. நேற்று நடந்த விஷயத்தை மோஹன் கட்டாயம் இவளிடம் சொல்லி இருப்பான். இன்னெரு பெண்ணுய் இருந்தால் வேறே பக்கம் முகம் திருப்பிக் கொண்டிருப்பாள்; இவள் எல்லாம் மறந்துவிட்டு வேலே செய்யத் தயாரா யிருக்கிருள். ஒரு வேளே மோஹன் இவளிடம் ஒன்றும் சொல்லவில்லேயோ என்னவோ? ஆம்; அப்படித்தான் இன்று ருபியா பூடீக்கு மிக அழகாகத் தோன்றினுள். இந்தக் காலத்தில் 'நகை நட்டு' போட்டுக் கொள்ளாவிட்டால் வேறு எப்போது அணிந்து கொள்வது? அலங்கார மனுஷ்யர்கள் இன்னெரு வர் வீடு பற்றி எரிந்தால்கூட கவனிக் கமாட்டார்கள். அதனுல்தான் அலங் காரம் கூடாது என்கிறது. ஆனல் ருபியா போன்ற பரோபகாரப் பிரா ணிகள் தாராளமாகச் சிங்காரித்துக் கொள்ளலாம்; அது அவளேப் போன் றவர்களுக்கு இன்னும் அழகாய்த் தானிருக்கும். இவளுடைய உருவத் தைப்போலவே மனதும் அழகானது என்று தெரிகிறது. பின் ஜனங்கள் அவள் அழகை ஏன் புகழமாட்டார் கள்? மற்றவர்கள் தன்னே மதிக்க வேண்டுமென்ற ஆசையாருக்கு இருக்

காது? பூடீயின் இளமை, எந்தக் காலத்திலோ மலை ஏறிவிட்டது. ஆனால் அவளை அந்த ஆசை இன்னும் விடவில்லை. யாராவது கொஞ்சம் ரஸம் நிறைந்த பார்வையை அவள் மீது செலுத்திவிட்டால் போதும், அவளுக்கு எவ்வளவு சந்தோஷம் உண்டாகிறது? அவள் கால்கள் தரையில் படாது. ரூபா சிறிய பெண்தானே!

அன்றிருந்து தினம் ஒன்றிரண்டு தடவை, ரூபியா, பூடீயின் வீட்டிற்கு வருவாள். பூடீயே, மோஹனிடம் சொல்லி ரூபியாவுக்காக ஒரு சேலை வாங்கிவரச் செய்தாள். என்றாவது ரூபா மையிட்டுக்கொள்ளாமலும் கிழிசல் புடவை கட்டிக்கொண்டும் வந்துவிட்டால் பூடீ, 'சின்னபொண்ணுங்க இப்பிடி பரதேசிச்சி போல இருக்கப்படாது, இந்த வேசம் கெளவிங்க தான் போட்டுக்கணும்' என்பாள்.

ஒரு நாள் ரூபா சொன்னாள்:—

'ஒங்களுக்கு என்ன வயசாச்சு, கெளவி என்கிறீங்களே; கண்ணை சிமிட்டினாபோதும்; எல்லா பேரும் ஒங்களை சுத்திக்கிண்டுடுவாங்கோ. எங்கப்பாகூட ஒங்க வீட்டு வாசல்லே வந்து கிடப்பாரு.'

பூடீ இனிமையான வெறுப்புடன் 'சரி, நான் ஒங்கம்மாவுக்கு சக்களத்தியா யிருக்கேன்' என்றாள்.

'அம்மாவுக்குத்தான் கிழடு தட்டி போயிடுத்தே!'

'ஒங்கப்பன் மாத்திரம் சின்ன பையனோ?'

'ஆமா, அவர் ஒடம்பு வைரம் பாஞ்ச ஒடம்பில்லே.'

பூடீ அவளை அன்புடன் பார்த்துக் கொண்டே சொன்னாள்:—'சரி, மோஹனுக்கும் ஒனக்கும் கண்ணாலம் பண்ணிடட்டுமா?'

ரூபா வெட்கிவிட்டாள். முகம் ரோஜா நிறமடைந்தது.

அன்று மோஹன் பாலை விற்று விட்டு வீட்டிற்கு வந்ததும் பூடீ, 'ஏலே! நாலு காசு சேத்துவை. ரூபாவுக்கும் ஒனக்கும் கண்ணாலம் பண்ண பேசிண்டிருக்கேன்' என்று சொன்னாள்.

டி அனன்ஸியோ

1938ம் வருஷம் மார்ச்சு மாதம் முதல் தேதி கேப்ரியல் டி அனன்ஸியோ இறந்து விட்டான். இவன் இத்தலியின் தேசீய கவி. முஸோலினியைத் தன் தலைவனாகக் கொண்டு அவனை வழி பட்டவன். ஒரு கவி, அரசியலிலே நேரடியாகச் சம்பந்தப் பட்டிருப்பதைக் காண்பது சாதாரணமாகக் கடினம். ஆனால் டி அனன்ஸியோ, இந்த இரண்டு தன்மைகளிலும் பிரகாசித்து வந்தான்.

இவன் 1863ம் வருஷம் பிறந்தவன். சுமார் அறுபது வருஷ வாழ்க்கையிலே, பத்திரிகை நிருபனாயிருந்தான்; நூலாசிரியனாயிருந்தான்; கவிகள் பாடி இத்தாலியருக்குப் புத்துணர்ச்சி அளித்தான். போர் வீரனாயிருந்து யுத்த களத்தின் அநுபவத்தை நுகர்ந்தான். தேசப் பிரஷ்டனாகி, பாரிஸ் நகரத்தில் ஐந்து வருஷம் வாழ்ந்தான்.

முஸோலினி ஆதிக்கத்திற்கு வருவதற்கு முன்னர் அவனுக்குப் பல வகையிலும் துணை செய்தான். அப்பொழுதைய அரசாங்க உத்திரவுகளுக்கு விரோதமாக இவன் ப்யும் பிரதேசத்தை ஆக்ரமித்துக் கொண்டான். 1930ம் வருஷம் முதற் கொண்டு இவன் ஒய்வு பெற்று, ரோமாபுரிக்கு அருகாமையிலுள்ள கார்டா ஏரிக் கரையில் ஒரு சிறு வீடு அமைத்துக் கொண்டு வாழ்ந்து வந்தான்.

இத்தலியின் எதிர் காலம் இத்தகையதாயிருக்க வேண்டுமென்று முஸோலினியும் இவனும் அடிக்கடி கலந்து பேசுவார்கள். முஸோலினியைக் கர்ம வீரனாக்கியது இவன்தான் என்று சொல்வதில் எவ்வளவோ உண்மையிருக்கிறது.

காங்கிரஸ் தலைவருக்கு ஒரு வேலைத் திட்டம்

—மீ. பால கணேசன்

ஹரிபுரா காங்கிரஸ் தலைவருக்கு ஒரு வேலைத்திட்டம் வகுத்துக் கொடுக்குமாறு 'உங்கள் அபிப்பிராய மென்ன?' என்ற தலைப்பில் "ஜோதி" யின் ஜனவரி, பிப்ரவரி மாத கதிர்களில் ஓர் அறிக்கை வெளியிட்டிருந்தோம். இதற் கிணங்க, ஒரு சில கட்டுரைகள் நமது பார்வைக்குக் கிடைத்தன. இவற்றில் எதுவுமே, சன்மானிக்கப் படக்கூடிய கட்டுரையாக இல்லையென்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ள வேண்டி யிருக்கிறது.

கிடைத்த கட்டுரைகளில், கீழே வெளியிடப் பெற்றுள்ள கட்டுரை ஒன்றுதான் பிரசுரிப்பதற்கு லாயக்குடையதா யிருக்கிறது. அன்பர் பால கணேசன், சன்மானிக்கப் பெற்ற கட்டுரையாகத் தமது கட்டுரை வெளியாக வில்லையென்று சோர்வு கொள்ளாமல், இது போன்ற துறைகளில் இன்னும் அதிகமாக ஈடு படுவா ரென்று எதிர் பார்க்கிறோம். தோல்விப்படிகளில் ஏறித்தானே வெற்றிச் சிகரத்தையடைய முடியும்?

காங்கிரஸ் கிராம சபைகள்

இந்தியாவின் உயிர்நாடி, ஏழு லட்சங் கிராமங்களிலிருக்கின்றதென உத்தமர் காந்திஜீ வலியுறுத்தி வருகின்றார். அவ்வுயர் கருத்தினை மெய்ப்பிக்க வேண்டின், இந்தியாவின் ஒவ்வொரு கிராமத்திலும் காங்கிரஸ் சபையமைக்க வேண்டும். 200 ஜனத்தொகைக்குக் குறையாத ஒவ்வொரு கிராமத்திலும் கட்டாயமாய்க் காங்கிரஸ் சபை தோற்றுவிக்க அகில இந்தியக்காங்கிரஸ் தலைவர் இரண்டு வருஷத்திட்டம் போட்டு அதற்குள் ஏறக்குறைய ஐந்து லட்சம் கிராமங்களில் சபைகள் ஏற்படுத்த வேண்டும். அத்துடன், கிராம அஸ்திவாரத்திலிருந்தே மாகாணக்கோபுரங் கட்டப்படுவதால், கிராம சபைகளின் அமைப்புகளையும்; அதன் நிர்வாகங்களையும், அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியிலிருந்து கால நிலைக்கொப்பத்திட்டம் வகுத்துக் கொடுப்பது மிக்க நலமாகும். ஒவ்வொரு காங்கிரஸ் சபையிலும் அவ்வூர் ஜனசங்கியையில் 100க்கு 4அங்கத்தினர்கள் வீதம் ஜாதி, மத, வகுப்பு, பால் வித்தியாசமின்றி ஸ்தானம் வகிக்க வேண்டும். முக்கியமாய்ச் சிறு பான்மையோர்களுக்கும், ஹரி ஜனங்களுக்கும் ஸ்தானம் கொடுக்க வேண்டியது அவசியமாகும். ஒவ்வொரு சபையிலும் மூன்று பேருக்குக் குறையாத பிரசார அங்கத்தினர்கள் நியமித்து மாதந் தோறும் சுற்றுக் கிராமங்களுக்குச் சென்று காங்கிரஸ் மகா சபையின் விழுமிய நோக்கையும், அரசியல், கல்வி, சுகாதாரம், ஒற்றுமை போன்ற விஷயங்களையும் பிரசங்க வாயிலாகப் பொதுஜனங்களுக்குப் போதித்து நாளடைவில் மக்களிடையே சுதந்திர உணர்ச்சியை எழுப்ப வேண்டும். இதற்கு ஏற்படும் செலவுகளை அந்தந்தக் கமிட்டி யேற்றுக் கொள்ள வேண்டும். இவ்வாறு ஜனங்களை விழிப்படையச் செய்வதால் எந்த ஓர் காங்கிரஸ் மகாசபைத் திட்டத்தையும் பொது ஜனங்கள் விருப்புடனேற்று அதன்படி நடக்கச் சித்தமாவார்கள். இங்ஙனமே, ஆக்க வேலைத் திட்டங்களை வளர்ப்பதுடன், ஜில்லாக் கமிட்டித் தலைவர்கள் மூன்று மாதத்திற் கொருமுறை கிராமங்களில் சுற்றுப் பிரயாணமும், மாகா

ணக்கமிட்டித் தலைவர்கள் ஆறு மாதத்திற் கொருமுறை மாகாண சுற்றுப் பிரயாணமும், அகில இந்திய கமிட்டி தலைவர் வருடத்திற் கொருமுறை அகில இந்திய சுற்றுப் பிரயாணமும் அவசியம் செய்தல் வேண்டும். எந்த ஓர் காங்கிரஸ் கமிட்டியிலாவது ஸ்தானம் வகிக்கும் ஒருவருக்கு அவ் வருஷத்தில் மற்ற காங்கிரஸ் சபைகளிலோ, ஸ்தல ஸ்தாபனங்களிலோ மற்றும் ஸ்தானம் கொடுக்க வேண்டுமானல் அவர் வகித்து வரும் பதவியோடு மற்றும் அதிகமாய் ஒரே ஒரு ஸ்தானந்தான் கொடுக்க வேண்டும். ஒன்றுக்கு மேலும் பதவிகள் கொடுக்க வேண்டிய அவசிய மேற்பட்டால் அவர் முக்கியமாய் ஏற்று நடத்த வேண்டிய இரண்டு ஸ்தானங்களை வைத்துக்கொண்டு மற்றவைகளை ராஜீநாமா கொடுத்துவிட வேண்டும்.

காங்கிரஸ் அங்கத்தினர்கள்

புது வருஷக் காங்கிரஸ் அங்கத்தினர்களின் தொகை இதுவரை 31 லட்சந்தான் பதிவு செய்யப்பட்டிருப்பதாக அறிகின்றோம். இக் கால காங்கிரஸ் மகா சபையின் பூரண வெற்றிக்கு இந்த அங்கத்தினர் தொகை மிக மிகக் குறைந்ததாகும். புதிய அரசியலில் பொது ஜனங்களுக்குக் கிடைத்துள்ள ஓட்டின் 3½ கோடி தொகையில் பாதியேனும் அங்கத்தினர்களா யிருக்க வேண்டியது அவசியமாகும். ஆதலால், ஒவ்வொரு வருஷமும் அங்கத்தினர் தொகை இவ்வளவு சேர்க்க வேண்டுமென்று அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் தீர்மானஞ் செய்வதுடன், அடுத்த வருஷத்தில் ஒரு கோடி அங்கத்தினர்களுக்குக் குறையாமல் சேர்க்கப் புதிய தலைவர் முன் வர வேண்டும்.

தேசத் தொண்டர் படை

தொண்டர் படையைக் காங்கிரஸ் சபை இன்னும் ஆக்கமுடன் வளர்க்க வேண்டும். புது வருஷ ஆக்க வேலைகளுள் தொண்டர் படையபிவிருத்தியை யொன்றாகக் கொண்டு கிராமங்கள் முதல் பட்டணங்கள் வரையிலும் தொண்டர் படை ஸ்தாபனம் நிறுவி ஒவ்வொரு ஊரிலும் அவ்வூர் ஜன சங்கியையில் 100க்கு 4 ஆண் தொண்டர்கள் வீதமும் 2 பெண் தொண்டர்கள் வீதமும் திரட்டி 3 வருடத் திட்டத்தில் ஒரு கோடி தொண்டர்களை இந்தியாவில் மிளிரச் செய்தல் வேண்டும். தேசத் தொண்டர் படையின் சேவைப் பொது விதியை தற்கால நிலைக்கும் அரசியலுக்கு மேற்ற வண்ணம் காங்கிரஸ் மகா சபைத் தலைவர் நிர்ணயித்துத் தொண்டர் படையை அதன்படி சேவை புரியச்செய்தல் வேண்டும்.

அகில இந்தியக் கைத்தொழிற் சங்கம்

காங்கிரஸ் மகா சபையின் ஆதரவில் 'அகில இந்திய கைத்தொழிற் சங்கம்' ஏற்படுத்தி இந்தியாவின் பல பாகங்களில் ஆங்காங்கு உற்பத்தி செய்யத் தகும் சுதேசப் பொருட்களை உண்டாக்கிப் பல கிளைச் சங்கங்கள் ஸ்தாபித்து அதன் வாயிலாய் இது போழ்து வேலையின்றித் தவிக்கும் ஏழைத் தொழிலாளர்களுக்கும், படித்த வகுப்பினருக்கும் ஊதியமளிக்க வேண்டும்.

இந்திய அரசியல்

பொதுஜனப் பொறுப்பு வாய்ந்த காங்கிரசும், 7 மாகாணப் பிரதிநிதிகளாகிய காங்கிரஸ் மந்திரிகளும் ஏக மனதாய்ப் பகிஷ்கரிக்கும் சமஷ்டி அரசியலை இந்தியாவில் நுழையவொட்

டாது தடுக்கத் தீவிர முயற்சி கொள்வதுடன், இந்தியாவிற்கு இம்மியும் நலம் பயக்காச் சமஷ்டியைச் சுதேச மன்னர்கள் வரவேற்பார்களாயின், தேசிய மகாசபையான காங்கிரஸின் நேசப்பான்மையினின்று பிரிந்தவர்களெனக் கருதப்படுவார்களென்று இப்பொழுதே ஒவ்வொரு சமஸ்தானாதிபதிகளுக்கும் காங்கிரஸ் தலைவர் நேர் அறிக்கை விடுக்க வேண்டியது அவசியமாகும். அப்படி சமஷ்டியை வலிய இந்தியர் மீது சுமத்தினால், இதுகால் அரசியலைக் கைப்பற்றியுள்ள காங்கிரஸுடனே அரசியலைப்பகிஷ்கரிப்பதுடன், சாத்வீகப் போரைத்துவக்க காங்கிரஸ் தலைவர் தயாராக வேண்டும்.

காங்கிரஸிற்குள் தனிக் கட்சிகள்

பாரத மக்களின் முற்போக்கிற்கும், தேச விடுதலைக்கும் காங்கிரஸ் மகாசபையினின்று வேறு எவ்வித ஸ்தாபனமும் இது போழ்து அவசியமில்லையென்றே கூறலாம். ஆனால், நாட்டிற்கு நலந்தரும் ஒரு திட்டத்தை ஆரம்பித்து நடத்த முயன்றும், அதைக் காங்கிரஸ் நோக்காதிருப்பின் அக்குறையை இந்தியர் ஒவ்வொருவரும் போக்க முயலவேண்டும். எப்படியெனில், அத்திட்டத்தைக் காங்கிரஸின் கருத்திற்கு அளித்து அதன் வாயிலாய்ச்செயலாற்ற முன்வரவேண்டுமேயன்றி, தனிக் கட்சிகளாக அமைத்துப் போராடுவது காங்கிரஸ் வாதிகளுக்குப் பொருத்தமற்றதாகும். ஆதலால், ஹரிபுரா காங்கிரஸ் தலைவர் இது விஷயத்தில் முக்கிய கவனம் செலுத்திக் காங்கிரஸின் பெயரால் தனிக்கட்சிகள் நிலவாது யாவும் ஐக்கியமாய் ஒரே வழியைப்பின்பற்ற ஆவன செய்வாரென்பது உறுதி.

இந்தியப் பொதுமொழி

ஹிந்தியைத் தாய்ப் பாஷையாகக் கற்பது ஓரிரு மாகாணமும், பொதுப் பாஷையாக வழங்குவது பல மாகாணங்களென்றும் நாமறிகின்றோம். ஹிந்தி தாய்ப் பாஷையாகப் போதிக்கப் படாத மற்ற காங்கிரஸ் மாகாணங்களிலும், சென்னை மாகாணத் திட்டப்படி ஹிந்தியைக் கட்டாய பாடமாகக் கற்பிக்கும்படி மற்ற காங்கிரஸ் மந்திரிச் சபைகளுக்கும் காங்கிரஸ் தலைவர் அறிவிப்பதுடன் காங்கிரஸ் மந்திரி சபையில்லாத மாகாணங்களில் ஹிந்தி பிரசார சபைகளமைத்து சுமார் ஐந்து வருடத்திற்குள் ஹிந்தி, இந்தியாவெங்கும் பொதுப் பாஷையாகப் பேசும்படி செய்தல் வேண்டும்.

தேசத் தியாகிகளின் திருநாள்.

ஒவ்வொரு மாகாணக் காங்கிரஸ் கமிட்டிகளி லிருந்தும் அம்மாகாணத்தில் காங்கிரஸ் தோன்றிய நாள் முதற்கொண்டு, தேச விடுதலைக்கும், ஒற்றுமை முன்னேற்றத் திற்கும் எவ்விதப் பாகுபாடுமின்றித் தொண்டாற்றி வந்தவரும், நன்கு புகழ்பெற்றவருமான ஒரு தலைவரின் பெயரைத் தெரிந்தெடுத்து (உயிர் நீத்தவராவது உயிருட னிருப்பவராவது) அவரின் ஜீவிய சரிதத்தை—முக்கியமாய் தேச சேவைப் பகுதியை—விளக்கி எழுதி அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும். இவ்விதம் தேர்ந்தெடுத்தனுப்பி வரும் பெயர்களை அ. இ. கா. காரியக் கமிட்டியில் ஒவ்வொரு வருஷமும் சீட்டுப் போட்டு எடுத்து அத்தலைவரின் பெயரை எல்லா மாகாணத்திற்கும் தெரிவித்து அவரின் சரிதையை எல்லா மாகாண பாஷையிலும்

வெளியிட்டுப்பிரதி வருஷமும் ஜனவரி மாதத்தில் கொண்டாடும் சுதந்தர தினத்தன்று இந்தியா முழுவதும் அத்தலைவரின் ஜயந்தி தினமாகக் கொண்டாடும்படி செய்ய வேண்டும். 20 வருஷத்திற் கொருமுறை இத் திருநாட் தலைவர்களைப் புதிதாய்த் தெரிந்தெடுக்க வேண்டும். தேசத் தின் பெயரால் இந்துக்கள் முஸ்லீம் தலைவர்களையும், முஸ்லீம்கள் இந்துத் தலைவர்களையும், மற்றவர்களையும் ஒரே நோக்குடன் ஏகமனதாய்க் கொண்டாடும் இந்தியாவின் ஏகத் திருநாளை, ஹரிபுரா காங்கிரஸ் தலைவர் வரவேற்பாரென்று கருதுகின்றேன்.

காங்கிரசும் ஜாதிப் பட்டமும்

காங்கிரஸ் மகா சபையின் அங்கத் தினர் முதல், பொறுப்பு வாய்ந்த ஸ்தா னம் வகிக்கும் தலைவர்கள் வரை தங் கள் பெயருடன் எவ்வித ஜாதி மதப் பட்டங்களையும் சேர்க்காது முழு விலாசப் பெயருடன் சொல்லியும், எழுதியும் வரவேண்டும். அவசிய மானல் தற்காலத் தொழிலின் பெய ரைத் தம் பெயரின் கீழ் குறிப்பிட லாம். இம்முறையைப் புதிய சகாப் தக் காங்கிரஸ் தலைவர் தனதாட்சி யில் கையாள வேண்டுகிறேன்.

காங்கிரஸ் சுதந்திரப் பரிசு

இந்தியாவின் பூரண சுதந்திரத் திற்கும், மக்களின் ஒன்று பட்ட வாழ்க்கைக்கும், ஆத்மார்த்தீகமாய் உலகத்தோ டியங்கி வாழும் உன்னத மார்க்கத்திற்கும் காங்கிரஸ் கொடி யின் கீழ் சேவை புரிந்து வரும் இந் தியப் பெரியார்களை இந்தியாவிற்கும் உலகிற்கும் அறிமுகப் படுத்தி வைக்க வேண்டியது காங்கிரஸ் மகா சபை யின் கடமையாகும். மேற் கூறிய வாறு, மனித சமூகத்திற்கு நல்வழி காட்ட முன்நிற்கும் இந்தியத் தலை வர் ஒருவருக்கு ஒவ்வொரு வருஷ மும் காங்கிரஸ் மகா சபையிலிருந்து ‘காங்கிரஸ் சுதந்திரப் பரிசு’ என்று ஒரு பரிசை வழங்கிவர வேண்டும்.

புதிய காங்கிரசும் பொது ஜனங்களும்

புது வருஷ காங்கிரஸ் கூடி நடை பெற்றதும் அங்கு நிறைவேறின தீர்மானங்களையும், அதற்கிணங்கப் பொது ஜனங்கள் வேலை செய்ய வேண்டிய முக்கிய கருத்தினையும், அவ்வருஷத்திய காங்கிரஸ் தலைவர், காரியக் கமிட்டித் தலைவர்கள், அங் கத்தினர்கள், அகில இந்திய காங்கி ரஸ் காரியக் கமிட்டி மெம்பர்கள், மாகாணத் தலைவர்கள், இத்தனை மாகாணங்களில், இத்தனை ஜில்லாக் களாய்ப் பிரித்து நிர்வகிக்கப் படுகிற தென்ற விவரங்களும், இது வரை இத்தனை ஊர்களில் காங்கிரஸ் சபைகள் தோன்றியுள்ளன வென்ற முழு விவரங்களுடன் ஒவ்வொரு மாகாண பாஷையிலும் புத்தக ரூப மாய் வெளியிட்டு விற்பனை செய்வ துடன், புத்தகம் வாங்கிப் படிக்க இயலாதவர்களுக்கு இலவசமாய் வழங்கினல், காங்கிரஸ் மகாசபையை யாவரும் நன்கறிய ஏதுவாயிருக்கும்.

மக்களிடையே சுதந்திர உணர்ச்சி யைப் பரப்பி, இந்தியாவைப் பூரண சுதந்தரத்திற் கழைத்தேகக் காங் கிரஸ் மகாசபைத் தலைவர் இன்னும் பல ஆக்கவேலைத் திட்டங்களை வகுத்து இந்திய விடுதலையை விரை வில் காண்பாரென நம்புகின்றேன்.

அன்றாட உலகம்



1938

ஜனவரி

27 பிரபல தனவந்தரும் சிறந்த கொடையாளியுமான நவாப் அப்துல் ஹக்கீம் காலமானார்.

28 இன்று நடைபெற்ற சென்னை ஐரோப்பிய சங்க வருஷாந்தக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த மிஸ்டர் லாங்லி, காங்கிரஸ் மந்திரிகளின் திறமையைக் கண்டு வியந்தார்.

பண்டித ஜவஹர்லால்நேரு, எல்லைப்புறமாகாணச்சுற்றுப் பிரயாணத்தை முடித்துக் கொண்டு லாகூருக்கு வந்து சேர்ந்தார்.

பிப்ரவரி 1ந் தேதிக் குள்ளாக எல்லைப் புற மாகாணத்தின் எல்லா முனிசிபாலிட்டிகளிலும் நியமனம் பெற்ற அங்கத்தினர் அனைவரும் ஸ்தானங்களைக் காலி செய்துவிட வேண்டுமென்று எல்லைப்புற காங்கிரஸ் சர்க்கார் தாக்கீது விடுத்தனர். எல்லாரும் ராஜீநாமா சமர்ப்பித்து விட்டார்கள்.

29 லோத்தியன் பிரபு ஆகாயக் கப்பலில் லண்டனுக்குப் பயணமானார்.

கிரேக்க சர்க்காரைக் குறை கூறியதற்காக பல கிரேக்கத் தலைவர்களை, அத்தேச சர்வாதிகாரி ஜெனரல் மெடாகஸ், ஒரு வருஷ தீவாந்திர வாசத்துக்கு அனுப்பி விட்டார்.

சீனவுக்கு எதிரிடையாக உபயோகிக்க யுத்த ஆயுதங்கள் தயாரிப்பதற்கென்று நினைத்து, மார்சேல்ஸ் துறைமுகத் தொழிலாளர்கள் 50 டன் அலுமினிய உத்தலாகத்தை ஜப்பானிய கப்பலில் ஏற்ற மறுத்து விட்டார்கள்.

30 ஸ்வாமி விவேகானந்தரின் வருஷாப்திகம் இன்று இந்தியாவிலும் இதர வெளியிடங்களிலும் அவரது பக்தர்களால் கொண்டாடப் பெற்றது.

மத்திய மாகாணத்தில் ஒரு ஐ. சி. எஸ்' உத்தியோகஸ்தராயிருந்த எச். வி' காமத் என்பவர், தமது பதவியை ராஜீநாமா செய்து விட்டார்.

ஈரானும் ஜப்பானும் பரஸ்பர ஒத்துழைப்புக்கு அந்தரங்கமான முயற்சியிருந்து வருவதாக ஜப்பானிய வெளிதேச மந்திரி சொன்னார்.

31 சென்னை அசெம்ப்ளியில் 'வந்தே மாதரம்' பாட்டுப் பாடுகையில் முஸ்லீம் அங்கத்தினர்கள் ஆட்சேபித்து வெளியேறினர்.

பிப்ரவரி

1 எண்டிமியோன் என்ற ஒரு பிரிட்டிஷ் கப்பல், ஜிப்ரால்டருக்கு அருகாமையில் மூழ்கடிக்கப் பட்டது.

பல சுதேச சமஸ்தானங்களிலிருந்து இந்தியா அரசாங்கத்திற்குக் கடனாக வர வேண்டிய தொகை சுமார் $13\frac{1}{4}$ கோடி ரூபாய் என்று இந்தியா சட்டசபையில் ஸர் ஜேம்ஸ் கிரிக் கூறினார்.

பொதுக் கோயில்களில் ஹரிஜனங்கள் செல்வதில் சட்டரீதியாக எவ்வித தடையுமில்லையென்ற மசோதா இன்றைய பம்பாய் அஸெம்ப்ளியில் நிறைவேற்றப் பட்டது.

ஸ்பெயின் யுத்தத்தில் பிராங்கோ கட்சிக்கு இத்தலி அதிகமான ஆதரவு அளித்து வருவதைக் கண்டித்து ஸ்பெ

யின் அரசாங்க ஸ்தானீகர் இன்று பிரிட்டிஷ் அரசாங்க அந்நிய நாட்டுக் காரியாலயத்திற்கு ஒரு தாக்கீது கொடுத்தார்.

இந்தியாவில் சமஷ்டி அரசாங்கம் கூடாதென்ற தீர்மானம் சென்னை அஸெம்ப்ளியில் நிறைவேறியது.

2 கடன் சுமை நிவாரண மசோதா இன்று சென்னை மேற்சபையில் நிறைவேறியது. யாராவது பெரியவர்கள் இறந்து விட்டால், அவர்களுடைய ஞாபகார்த்தமாக நகரசபைக் கூட்டத்தைத் தள்ளிவைக்கக் கூடாதென்றும், நகர சபைக் காரியாலயங்களை மூடக் கூடாதென்றும் கல்கத்தா நகர சபையில் ஓர் தீர்மானம் நிறைவேறியது.

தன்னை எதிர்க்கும் ஜப்பான் மீது பகிஷ்கார உத்திரவு போட வேண்டுமென்று சீனா, சர்வ தேச சங்கத்திற்கு விண்ணப்பம் செய்து கொண்டிருந்தது. சீனாவுக்கு ஆதரவளிப்பதாகச் சர்வதேச சங்கம் ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

டாக்கா சிறையிலுள்ள அரசியல் கைதிகள் பலரும் இன்று உண்ணாவிரதமிருக்க ஆரம்பித்தார்கள்.

3 காங்கிரஸ் காரியக் கமிட்டி கூட்டம் இன்று வார்தாவில் கூடியது.

பாட்னா சிறையிலுள்ள மூன்று அரசியல் கைதிகள் இன்று முதல் உண்ணாவிரத மிருக்கத் தொடங்கினார்கள்.

சைனாவின் வடபாகத்தில் ஜப்பானிய ஆகாய விமானங்கள் ஏராளமான வெடிகுண்டுகளை வீசியெறிந்து அதிகமான சேதத்தை உண்டு பண்ணிவிட்டன.

கௌரவப்பட்டங்கள் ஒன்றும் வழங்கக் கூடாதென்று இன்று மத்திய மாகாண சட்ட சபையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

கோலாலம்பூர் 'தமிழ் நேசன்' ஆசிரியராயிருந்த திரு. கே. நரசிம்ம ஐயங்கார் இன்று மரண மடைந்தார்.

சமஷ்டி அரசியலை எதிர்த்துப் போராடுவதென்று இன்றைய காங்கிரஸ் காரியக் கமிட்டியில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

இதுகாறும் ஜெர்மன் ராணுவ தளகர்த்தராயிருந்த வான் ப்ளாம்பெர்க் தமது பதவியை ராஜீநாமா செய்து விட்டார். அவருடைய பதவியை ஹிட்லர் ஏற்றுக் கொண்டார். இன்னும் சில தளகர்த்தர்களும் விலகிக் கொண்டார்கள்.

அரசாங்க ஆதரவு பெற்றிருக்கும் கைத்தொழில் ஸ்தாபனங்களில் இன்னும் அதிகமான இந்தியர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்ற தீர்மானம் இந்தியா சட்ட சபையில் நிறை வேறியது.

5 சுதேச சமஸ்தானப் பிரஜைகள் நடத்தும் போராட்ட விஷயத்தில் காங்கிரஸ் நேரடியாகத் தலையிட்டுக் கொள்ள வேண்டியதில்லையென்று இன்றைய காங்கிரஸ் காரியக் கமிட்டி கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேறியது.

ஸ்பெயின் யுத்தத்தில் பிராங்கோ கட்சியினருக்குச் சுமார் நூறு மைல் விஸ்தீரணமுள்ள பிரதேசம் சேர்ந்திருக்கிறது.

6 உண்ணாவிரத மிருக்கும் அரசியல் கைதிகளை இன்று பீஹார் பிரதம மந்திரி, ஹாஸரிபாக் சிறையிலே கண்டு பேசினார்.

யுத்த தளவாடங்களை வரையறுக்கும் விஷயத்தில் தங்களுக்குப் பூரண சம்மதம் என்றும் அது விஷயத்தில் தாங்கள் ஒத்துழைக்கத் தயாரா யிருப்பதாகவும் அமெரிக்காவின் சார்பாக திரு. ஹல் கூறினார்.

ஆகாகானுடைய தாயார் பாக்தாத் நகரத்தில் காலமாகி விட்டார்.

7 ஹாஸரிபாக் சிறையில் உண்ணாவிரத மிருந்த கைதிகளை பீஹார் பிரதம மந்திரி கண்டுபேசியதன் பேரில் அவர்கள் உண்ணா விரதத்தை நிறுத்திக் கொண்டார்கள்.

எட்டு வருஷ காலம் காப்பிலே வைக்கப் பட்டிருந்த ஹிமான்ஷு குமார் போஸ் என்ற இளைஞர் இன்று கல்கத்தா ஆஸ்பத்திரி யொன்றில் இறந்து போனார்.

பதினைந்து தினங்கள் வரை பொதுக்கூட்டங்கள் கூடக் கூடா தென்றும், ஆயுதங்களை எடுத்துச் செல்லக் கூடாதென்றும் கான்பூரில் 144 தடை யுத்திரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது.

கொச்சி சமஸ்தானத்திலுள்ள கோயில்களை ஹரிஜனங்களுக்குத் திறந்துவிட வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்துவதற்காக எர்ணாகுளத்தில் ஆலயப் பிரவேச மகாநா டொன்று திரு. கேளப்பன் தலைமையில் கூடியது.

எண்டிமியோன் என்ற பிரிட்டிஷ் கப்பல் மூழ்கடிக்கப் பட்டதன் சம்பந்தமாக அந்நிய நாட்டு மந்திரி ஈடன் பார்லிமெண்டில் பேசுகையில் பிரிட்டனுடைய பொறுமைக்கு ஓர் எல்லையுண்டு என்பதை தளபதி பிராங்கோ அறிய வேண்டுமென்று கூறினார்.

ஹமீர்பூர் ஜில்லாவில் கூடிய கிருஷிகர் மகாநாட்டில் ஐ. மாகாண பிரதம மந்திரி பேசுகையில், கிருஷிகர்கள் காங்கிரஸோடு ஒத்துழைக்க வேண்டுமென்று கூறினார்.

8 ஏடனைச் சுற்றியுள்ள அரேபியப் பிரதேசங்களிலுள்ள ஜனங்களிடையே அமைதி நிலவும்படி செய்வதற்காக ஆகாய விமானங்களிலிருந்து குண்டுகளைப் போட வேண்டியது அவசியமாயிருக்கிறதென்று காமன்ஸ் சபையில் குடியேற்ற நாட்டு மந்திரி கூறினார்.

இலங்கை சட்ட சபையின் உப தலைவரைப் பற்றி ஆட்சேபகரமாக எழுதியதால் கொழும்பில் வெளியாகும் 'டைம்ஸ் ஆப் ஸிலோன்' என்ற பத்திரிகையின் நிருபர் சட்ட சபைக்குள் பிரவேசித்து ரிபோர்ட் செய்ய அநுமதிக்கப்படக் கூடாதென்று இலங்கை சட்ட சபையில் ஒரு தீர்மானம் நிறைவேறியது.

தற்போதைய கிரீஸ் தேசத்தின் அரசனுடைய அம்மான் நிகோலாஸ் என்பவர் இன்று ஏதன்ஸ் நகரத்தில் காலமானார்.

9 ஆமதாபத்தில் இன்று திரு. எம். என். ராயின் தலைமையில் நடை பெற்ற தீவிர இளைஞர்கள் மகா நாட்டில், திரு. ராயைப் பேச வொட்டாதபடி தடை செய்யச் சில முயற்சிகள் செய்யப்பட்டன. ஆனால் அவர் கூச்சலை அடக்கி விட்டுப் பேசினார்.

இப்பி பக்கிரியை, மாதா கேல் பிரதேசத்திலிருந்து விலக்கிவிட வேண்டுமென்று இந்தியா அரசாங்கத்தார், மேற்படி பிரதேச வாசிகளுக்கு ஓர் எச்சரிக்கைக் கடிதம் அனுப்பியிருக்கின்றனர்.

10 அரசாங்க உத்தியோகஸ்தர்கள், உத்தியோகத்திலிருந்து விலகுகிற போது, அவர்களுக்கு எவ்வித பிரிவுபசார விருந்துகளும் நடத்தக் கூடாதென்று பம்பாய் அரசாங்க அறிக்கை யொன்று கூறுகிறது.

ஹரிபுராவில், மகாத்மா காந்தி, சுதேசி பொருட் காட்சியைத் திறந்து வைத்தார்.

எவரெஸ்ட் சிகரத்தைச் சென்று பார்க்க, இங்கிலாந்திலிருந்து மற்றொரு கோஷ்டியினர் பம்பாய் வந்து இறங்கினர்.

அமெரிக்காவிலுள்ள சான் பிரான்ஸிஸ்கோ பிரதேசத்தில் இன்று பெரிய புயற் காற்றடித்தது. அதிக சேதம்.

கோகா என்பவரைத் தலைவராகக் கொண்ட ருமேனிய மந்திரிச் சபை ராஜீநாமா செய்து விட்டது.

பெஷாவர் கண்டோன் மெண்டு தேர்தலில் அபேட்சகர்களாக நின்ற நான்கு காங்கிரஸ் வாதிகளும் வெற்றி பெற்றார்கள்.

10 ஆங்கிலோ இத்தாலிய ஒப்பந்த சம்பந்தமாக லண்டனில் கவுண்ட் கிராண்டியும், ஈடனும் ஒரு மணி நேரம் கலந்து பேசினார்கள்.

11 திருவாங்கூர் சமஸ்தானத்து ராணுவத்தில் நாடார்களையும் கிறிஸ்தவர்களையும் சேர்த்துக்கொள்வதென்று திருவாங்கூர் அரசாங்கத்தார் உத்திரவு பிறப்பித்திருக்கின்றனர்.

வட அயர்லாந்து பார்லிமெண்டுக்கு நடை பெற்ற தேர்தலில் யூனியனிஸ்ட் கட்சிக்கு 35 ஸ்தானங்கள் கிடைத்திருக்கின்றன. மற்றக் கட்சியினருக்கு மொத்தம் 13 ஸ்தானங்களே கிடைத்திருக்கின்றன.

கான் அப்துல் கபார்கான் இன்புளுயென்ஸா ஜுரத்தினால் படுத்துக்கொண்டிருக்கிறார்.

மஞ்சூரியாவில் பொதுவுடைமைப் பிரசாரஞ் செய்ததற்காக ஜப்பானிய அதிகாரிகள் 85 பேரை மரண தண்டனைக்குட் படுத்தினர்.

வங்காளச் சட்டசபையின் காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்கள், தங்கள் சம்ப

ளத்தில் பாதியை காங்கிரஸ் தேர்தலுக்குக் கொடுப்பதென்று தீர்மானித்திருக்கின்றனர்.

12 வைத்தியக் கல்வி ஒரே தரத்தினதாயிருக்க வேண்டுமென்பதற்காக, வைத்தியப் பள்ளிக்கூடங்களை யெல்லாம் கலைத்து விட வேண்டுமென்று சென்னை அரசாங்கத்தார் உத்திரவு செய்திருக்கின்றனர்.

அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்யுமாறு மைசூர் அரசாங்கத்தார் உத்திரவு செய்திருக்கின்றனர்.

ஆஸ்திரியா-ஹங்கேரியின் தலைவராகிய டாக்டர் ஷூஷ்நிக்கும் ஜெர்மன் தலைவராகிய ஹிட்லரும், இன்று, ஹிட்லரின் இருப்பிடத்தில் இரண்டு நாடுகளுக்கும் இருக்கவேண்டிய சம்பந்தத்தைப்பற்றிப் பேசினார்கள்.

லண்டனில் கூடிய சர்வதேச மகாநாடொன்று, சீனாவின் மீது ஜப்பான் தொடுத்திருக்கும் போரைக் கண்டித்தும், ஜப்பானிய சாமான்களைப் பகிஷ்காரஞ் செய்ய வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றின.

13 ஹரிபுரா காங்கிரஸுக்குச் செல்லும் வழியில் ஸ்ரீ போஸ் இன்று பம்பாய் வந்து சேர்ந்தார்.

தென்னாப்பிரிக்காவில் இந்தியா அரசாங்க ஏஜெண்டாயிருந்த ஸர் ரிஸா அலி, தம் குடும்பத்துடன் இன்று டர்பனைவிட்டு இந்தியாவுக்குப் புறப்பட்டார்.

ஸ்ரீ போஸ் இன்று ஹரிபுராவில் பெரிய ஊர்வலத்துடன் வரவேற்கப்பட்டார்.

கோரக்பூரில் மறுபடியும் 144-வது தடையுத்திரவு அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது.

பர்மா சட்டசபையிலுள்ள இந்திய அங்கத்தினர்கள் இரண்டு கட்சியினராகப் பிரிந்து, தனித்தனி தலைவர் முதலிய உத்தியோகஸ்தர்கள் நியமித்துக்கொண்டார்கள்.

14 காங்கிரஸ் காரியக் கமிட்டி கூட்டம் இன்று ஹரிபுராவில் கூடி அ. இ. காங்கிரஸ் கமிட்டியின் வரவு செலவுக் கணக்குகளை அங்கீகரித்தது.

மகாத்மா காந்திக்கு இன்று ரத்தக் கொதிப்பு அதிகமாயிருந்தது. டாக்டர்கள் பரிசோதித்து, ஓய்வு வேண்டுமென்று கூறினர்.

நரேந்திர மண்டலத்தின் நிரந்தரக் கமிட்டியின் கூட்டம் இன்று புது டெல்லியில் கூடியது.

இந்தியா சட்டசபையில் 1938-39-ம் வருஷத்து ரெயில்வே-வரவு செலவுத் திட்டம் ஆஜர்படுத்தப்பட்டது.

15 அஸ்ஸாம் சட்ட சபையில் இன்று 1938-39ம் வருஷத்து வரவு செலவுத் திட்டம் ஆஜர் படுத்தப்பெற்றது.

அரசியல் கைதிகளை விடுதலை செய்யும் விஷயத்தில், கவர்னர்கள் தலையிட்டார்கள் என்ற காரணத்திற்காக, பீஹார் மாகாண மந்திரிச் சபையும், ஐக்கிய மாகாண மந்திரிச் சபையும், ராஜீநாமா செய்து விட்டன.

சீன-ஜப்பான் யுத்தத்தில் மஞ்சள் நதிக்கு வடக்கே, சீனர்கள் ஒரு லட்சம் துருப்புகள் அணிவகுத்து வைத்துக் கொண்டு ஜப்பானைத் தீவிரமாக எதிர்க்க உறுதி கொண்டனர்.

வங்காள கவர்னர், பர்த்வான் ஜில்லாவிலுள்ள சில கிராமங்களைச் சென்று பார்வையிட்டார்.

மந்திரிச் சபை ராஜீநாமா செய்ததை முன்னிட்டு, பீஹார் கவர்னர் தமது சுற்றுப் பிரயாணத்தை ரத்து செய்து விட்டார்.

காங்கிரஸுக்கு வாழ்த்துக் கூறி சென்னை நகர சபை ஒரு தீர்மானம் நிறைவேற்றியது.

16 சாரதா சட்டத்தில் சில முற்போக்கான சீர்திருத்தங்கள் செய்ய வேண்டுமென்று இந்தியா சட்டசபையில் ஸ்ரீ தாஸ் கொண்டு வந்த மசோதாவை எதிர்க்கு முகத்தான் சில வைதிக ஹிந்துக்களும் முஸ்லீம்களும் இந்தியா சட்டசபைக் கட்டிடத்தின் முன்னர் ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

பீஹார், ஐ. மாகாண மந்திரிச் சபை விஷயமாக கவர்னர் ஜெனரல் தலையிட்டதைக் குறித்து ஏற்பட்ட நெருக்கடி

சம்பந்தமாக மகாத்மா காந்தி ஹரிபுரா விலிருந்து ஓர் அறிக்கை விடுத்தார்.

ஹரிபுராவில் வித்தல்பாயின் உருவச் சிலையை ஸ்ரீ போஸ் திறந்து வைத்தார்.

ஹரிபுரா சுதேசி பொருட்காட்சியில் மகாத்மா காந்தி மற்றொரு முறை பேசினார்.

மந்திரிச் சபை ராஜீநாமாச் செய்து விட்டதனால், பீஹார் அட்வோகேட்-ஜெனரல் திரு. பலதேவ சாஹேபும் ராஜீநாமா செய்துவிட்டார்.

புதிய அ. இ. கா. கமிட்டி ஹரிபுராவில் கூடியது.

காங்கிரஸ் நடவடிக்கைகளை ரேடியோ மூலம் வெளியிட முதலில் இந்திய அரசாங்கத்தார் சம்மதித்திருந்தனர். ஆனால் இன்று அந்த ஏற்பாட்டை ரத்து செய்துவிட்டனர்.

குவெட்டாவில் மறுபடியும் பூகம்ப அதிர்ச்சி.

சிந்து மாகாணச் சட்டசபைத் தலைவர் இறந்துவிட்டார்.

17 உதகமண்டலம் பாங்கிக் கொள்ளை வழக்குச் சம்பந்தமாகத் தண்டிக்கப்பட்ட நித்தியானந்தம் என்பவர் சென்னை அரசாங்கத்தினரால் விடுதலை செய்யப்பட்டார்.

லார்ட் சாமியல் ஹரிபுராவுக்கு வந்தார்.

வங்காளச் சட்டசபையில் 1938-39-ம் வருஷத்து வரவு-செலவு திட்டம் ஆஜர் படுத்தப்பெற்றது.

அஸ்ஸாம் மாகாண சட்டசபைத் தலைவர் இன்று காலமாகிவிட்டார்.

ராஜதந்திரியும் பவநகர் சமஸ்தான ரீஜெண்டாகவுமிருந்த ஸர் பிரபா சங்கர் பட்டாணி தமது 76 வயதில் காலமானார்.

மந்திரிச் சபையின் ராஜீநாமாவைப் பற்றி ஐ. மாகாண அரசாங்கத்தார் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர்.

தகுதியில்லாதவர்கள் என்று சொல்லி 24,000 உத்தியோகஸ்தர்களை ருமேனிய அரசாங்கத்தார் விலக்கிவிட்டனர்.

18 சென்னை கவர்னரின் மனைவி இன்று சென்னையினின்று பர்மாவுக்குப் பிரயாணமானார்.

பீஹார், ஐ. மாகாண மந்திரிச் சபை ராஜீநாமா நெருக்கடியைப்பற்றி இன்று மகாத்மா காந்தி, 'லண்டன் டைம்ஸ்' பத்திரிகை நிருபருக்கும், 'டெயிலி ஹெரால்ட்' பத்திரிகை நிருபருக்கும் பேட்டி கொடுத்துப் பேசினார்.

ஸ்பெயின் யுத்தத்தில், மாட்ரிட் நகரத்தில்மட்டும் ஆறுயிரம் நிரபராதிகள் இறந்திருக்கின்றனர் என்று ஓர் அறிக்கை கூறுகிறது.

பீஹார் மாகாணத்திலுள்ள எல்லா ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டுகளும் கவர்னரை பாட்னாவில் வந்து சந்திக்க வேண்டுமென்று பீஹார் அரசாங்க அறிக்கையொன்று கூறுகிறது. மந்திரி சபை ராஜீநாமா விஷயத்தைப்பற்றி ஆலோசிப்பதற்கு என்று சொல்லப்படுகிறது.

பீஹார் சட்டசபை 24-2-38-ல் கூட்டுவதாக இருந்தது. அதைக் கவர்னர் ரத்து செய்துவிட்டார்.

சீனாவில் இதுகாறும் ஜப்பானிய தளகர்த்தராக இருந்த தனட்டு மாட்சுயி திருப்பியழைக்கப்பட்டார். அவருக்குப் பதில் ஷுன்ருகோ ஹாடா என்பவர் நியமிக்கப்பட்டார்.

19 இன்று மாலை 51-வது இந்திய தேசிய காங்கிரஸ் ஹரிபுராவில் கூடியது. ஸ்ரீ போஸ், தமது தலைமைப் பிரசங்கத்தைச்செய்தார்.

20 51-வது காங்கிரஸின் இரண்டாவது நாள் கூட்டம்.

பிரிட்டிஷ் அரசாங்க அந்நியநாட்டு மந்திரியான அந்தோனி ஈடன் ராஜீநாமா செய்துவிட்டார்.

ஜெர்மன் பார்லிமெண்டான ரீச்ஸ்டாக் சபை இன்றுகூடியது. ஜெர்மனிக்கு குடியேற்ற நாடுகள் தேவை என்பதை வற்புறுத்தி ஹிட்லர் பேசினார்.

ஹரிபுராவில் ஏழாவது ராஷ்ட்ர பாஷா சம்மேளனம் யமுனாலால் பஜாஜின் தலைமையில் கூடியது.

21 51வது காங்கிரஸின் மூன்றாவது நாள் கூட்டம். இரவு பதினொரு மணிக்குக் காங்கிரஸ் முடிந்தது.

சென்னை அரசாங்கத்தார், சென்னைச் சிறையிலிருந்தும் கோயமுத்தூர் சிறையிலிருந்தும் சுமார் 135 கைதிகளை விடுதலை செய்தனர்.

நாகபுரி எம்ப்ரஸ் மில்லில் சுமார் 7000 தொழிலாளர்களின் சத்தியாக்கிரக வேலை நிறுத்தம்.

இந்தியாவின் ஏஜெண்டாக பர்மாவில் திரு. சத்திய நாதன் நியமிக்கப்படுவாரென்று இன்று அறிவிக்கப்பட்டது.

அந்தோனி ஈடனுடைய ராஜீநாமாவைப் பற்றிப் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் வாதம் நடைபெற்றது.

லண்டனில் இந்தியப் பொருட் காட்சி ஆரம்பமாயிற்று. மேரி ராணியார், இந்தியத் தொழில் திறமையை வியந்து பாராட்டிப் பல பொருள்களை வாங்கினார்.

சென்னைக் கவர்னரின் மனைவி ரங்கூன் வந்து சேர்ந்தார்.

21 ருமேனியாவில் இன்று புதிய அரசியல் திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது.

22 மகாத்மா காந்தி, அன்னை கஸ்தூரி பாயுடன் இன்று ஹரிபுராவினின்று புறப்பட்டார்.

புதிய காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினர்களின் பெயர்கள் இன்று அறிவிக்கப்பட்டன.

வடமேற்கு எல்லைப் புற மாகாண அரசாங்கத்தார், கோடை காலத்தில், மலைவாசத்திற்குச் செல்வதில்லையென்று தீர்மானித்தனர். கவர்னரும் பிரதம காரியதரிசியும் மட்டும் செல்வார்கள்.

ஹங்கேரியில் இருந்த நாஜீ கட்சி கலைக்கப்பட்டது.

அலிபூர் சிறையில் உண்ணாவிரத மிருந்த 62 கைதிகள் மீண்டும் ஆகார மெடுத்துக் கொள்ள ஆரம்பித்தனர்.

பிரெஞ்சு மந்திரிச்சபை மறுபடியும்மாற்றியமைக்கப்பட்டது.

23 ஸ்பெயின் யுத்தத்தில் டெருயல் என்ற பிரதேசத்தை பிராங்கோ கட்சியினர் கைப்பற்றிக் கொண்டு விட்டனர். சுமார் மூவாயிரம் பேர் கைது செய்யப்பட்டனர்.

ஜப்பானியத் துறை முகத்தில் தங்கியிருந்த ஒரு சோவியத் கப்பலை, ஜப்பானியர் கைப்பற்றிக் கொண்டு விட்டனர்.

தென்னாப்ரிக்காவில் இந்தியா அரசாங்க ஏ ஜெ ண் டா க திரு. பி. ராமராவ் ஐ. சி. எஸ். நியமிக்கப்பட்டார்.

இரண்டு சீன ஆகாய விமானங்கள், போர்மோஸா தீவிலுள்ள இரண்டு நகரங்களின் மீது குண்டுகள் பொழிந்தன. நாற்பது ஜப்பானிய ஆகாய விமானங்கள் அழிக்கப்பட்டதாகச் சொல்லப் படுகிறது.

ஆங்கிலோ-ஐரிஷ் வியாபார ஒப்பந்தம் சம்பந்தமாக இன்று லண்டனில் சம்பாஷணைகள் தொடங்கின.

24 பர்மா சட்ட சபையில் 1938-39ம் வருஷத்து வரவு செலவுத் திட்டம் ஆஜர் படுத்தப் பெற்றது,

வட பிரான்சிலுள்ள உலோகத் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள், அதிகக் கூலி வேண்டுமென்று சொல்லி வேலைநிறுத்தம் செய்தார்கள்

ஷாங்காய் நகரத்திலுள்ள ஓர் அமெரிக்க பத்திரிகாலயத்தின் மீது வெடி குண்டு எறியப்பட்டது.

அந்தோனி ஈடனின் ராஜீநாமாவைப் பற்றி லார்ட்ஸ் சபையில் வாதம் நடைபெற்றது.

25 பீஹார், ஐ, மாகாண மந்திரிச் சபை ராஜீநாமா நெருக்கடி சமரஸமாகத் தீர்ந்து விட்டது. மந்திரிகள் தங்கள் பதவிகளை மீண்டும் ஏற்றுக் கொண்டார்கள்.

லார்ட் ஹாலிபாக்ஸ் (லார்ட் இர்வின்) பிரிட்டிஷ் அந்நிய நாட்டு மந்திரியாக நியமனம் பெற்றார்.

26 1938—39ம் வருஷத்து இந்தியா அரசாங்க வரவு செலவுத் திட்டத்தை இன்று இந்தியா சட்டசபையில் ஸர் ஜேம்ஸ்கிரிக் ஆஜர் படுத்தினார்.

ஜெர்மன் அரசாங்கத்துக்கு விரோதமாக எந்தப் பத்திரிகையும் எழுதக் கூடாதென்று ஆஸ்திரியா—ஹங்கேரிய அரசாங்கத்தார் ஓர் உத்திரவு பிறப்பித்திருக்கின்றனர்.

காங்கிரஸ் காட்சிகள்

("ஜோதி" நிருபர்)



இந்தத் தொண்டர்களின் தொண்டில்லாமற் போனல் காங்கிரஸ் சிறப்பாக நடந்திருக்குமா?



இந்தப்பெண் குழந்தைகளுக்குத் தொண்டு செய்வதிலே என்ன ஆர்வம்?

சுதேசிப் பொருட்காட்சிக்கு முன்னே.

ஆர அமர இருந்து காந்தியடிகள் சுதேசிப் பொருட் காட்சியைத் திறந்து வைத்துப் பேசுகிறார்.

சுதேசிப் பொருட் காட்சியில் ஸ்ரீமதி மீராபென்.

சில நண்பர்களுடன்; என்ன அம்மா, இவ்வளவு குதூகலம்!

வித்தல் நகரத்தில் தங்கியிருந்தபோது காந்தியடிகள் பிரார்த்தனை செய்த இடம்



இந்த மாட்டு வண்டிகளைப் பார்க்கையில் இது கிராம காங்கிரஸ் என்று தெரியவில்லையா?

காங்கிரஸைக் காண வரும் கிராம வாசிகள்.

ஜனங்கள் பல இடங்களிலும் எவ்வளவு ஆவலாகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள்?





தலைவரை வரவேற்க ஆயிரம் தொண்டர்கள் அணி வகுத்து நிற்கின்றனர்.



தொண்டர் அணி வகுப்பில் சிறு பெண்ணைப் பாருங்கள் !



இந்த ரதத்தில்தான் தலைவர் ஊர்வலமாக வந்தார்.

ஸ்ரீ போஸ், விஷயா லோசனைக் கமிட்டிக் கூட்டத்தில் என்னென்னமாதிரி வாதங்கள் நடைபெறும் என்று யோசித்துக் கொண்டிருக்கிறாரா?



இங்குதான் விஷயாலோசனைக் கமிட்டி கூட்டம் நடைபெற்றது.

விஷயாலோசனைக் கமிட்டி (16-2-38) கூட்ட ஆரம்பத்தில் 'வந்தேமாதர' கீதம் பாடும் பொழுது.



கமிட்டிக் கூட்டம் நடைபெறும் காட்சி.

தலைவர்கள் இருவர் இருவராக
காங்கிரஸ் மேடைக்கு
வருகிறார்கள்.

51—வது காங்கிரஸ்



இஃதென்ன ஜன சமுத்திரமா? காங்கிரஸ் நடைபெறுகிறபோது.



தமிழ் நாட்டிலிருந்து வந்திருந்தவர்களில் சிலர்.



தமிழ் நாட்டுப் பிரதிநிதிகள் விடுதியில் சர்தார் வேதரத்தினம்—ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார்—சா. கணேசன்.

உபசரணைக் கூட்டத்தினர்.

ஹரிபுரா காங்கிரஸைச் சிறப்பாக நடத்தி வைத்தவர்கள் இவர்கள்தான்.

மத்தியில் இருப்பவர் சர்தார் படேல்

இவர்கள் யார் தெரிகிறதா? ராஷ்டிரபதி போஸைப் பெற்றெடுத்த பாக்கியசாலிகள்.

ஜானகி நாத் போஸ் **பிரபாவதி தேவி**

'ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும், தன் மகனைச் சான்றோனெனக் கேட்ட தாய்'.

பிரபாவதி தேவி, கேட்டது மட்டுமல்ல; தன் மகனைச் சான்றோனெனக்காணவும் பெற்றாள் ஹரிபுராவில்.

51-வது இந்திய தேசீய காங்கிரஸ்

இடம்: குஜராத் மாகாணத்தில் தப்தி நதியின் கரையில் ஹரிபுரம் என்ற கிராமத்தில். மாதி என்ற ரெயில்வே ஸ்டேஷனுக்குப்பதிஞெரு மைல் தூரம். மூங்கிலாலேயே நிர்மாணிக்கப்பட்ட இந்த இடம் 'வித்தல் நகரம்' என்ற பெயரால் அழைக்கப்பட்டது.

காலம்: 1938ம் வருஷம் பிப்ரவரி மாதம், 19, 20, 21ந் தேதிகளில். இதற்கு ஒரு வாரத்திற்கு முன்னிருந்து காரியக் கமிட்டிக் கூட்டமும் அ. இ. கா. க. கூட்டமும் தினந்தோறும் நடைபெற்று வந்தன.

விஜயஞ் செய்திருந்தவர்:

தலைவர்களில் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார், பாபு ராஜேந்திர பிரசாத், கான் அப்துல் கபார்கான் ஆகியவர்களைத் தவிர மற்ற எல்லாத் தலைவர்களும் ஆஜராயிருந்தார்கள்.

ஜனங்களில், காங்கிரஸ் ஆரம்ப தினத்தில் சுமார் 4 லட்சம் பேர் ஆஜராயிருந்தனர்.

காங்கிரஸை யொட்டி நடைபெற்ற சம்பவங்கள்:

10-2-38-சுதேசி பொருட் காட்சி. மகாத்மா காந்தி திறந்து வைத்தார்.

19-2-38-காலை தேசீயக் கொடியேற்ற விழா. சுமார் ஒரு லட்சம் ஜனங்கள் ஆஜர். ஸ்ரீ போஸ் கொடியேற்றி வைத்தார்.

19-2-38-அகில இந்திய ஒதுக்கப்பட்ட பிரதேச வாசிகளின் மகாநாடு—அறிஞர் என். ஜி. ரங்கா, தலைவர்.

,, ஹரி ஜனங்களின் மகாநாடு—திரு. வி. ஐ. முனுசாமி பிள்ளை, தலைவர்.

20-2-38-ஸ்ரீ யமுனா லால் பஜாஜின் தலைமையில் ராஷ்ட்ரபாஷா சம்மேளனம்.

சில புள்ளி விவரங்கள் :

காங்கிரஸைப் பார்க்கச் சுமார் 5 லட்சம் ஜனங்கள் வந்திருந்தார்கள்.

வித்தல் நகரத்தை நிர்மாணிக்க, செலவு சுமார் 7½ லட்சம் ரூபாய்.

வேளைக்கு 800 மணங்கு அரிசி சமைக்கப்பட்டது.

உத்தியோகஸ்தர்கள் :

தர்பார் கோபால் தாஸ் தேசாய்-உபசரணைக் கூட்டத்தலைவர்

கன்யாலால் என். தேசாய்—பொதுக்காரியதரிசி

கல்யாண்ஜி வி. மேத்தா
ஷண்முகலால் ஜி. ஷா
நரஹரி பரேக்
ஜீவன் லால் திவான்
} கூட்டுக் காரியதரிசிகள்

டாக்டர் சந்துலால் தேசாய்—சுகாதார அதிகாரி

ஹரிவதன தாகோர்—தொண்டர் படைத்தலைவர்

ஸ்ரீமதி மிருதுளா பென்—ஸ்திரீ தொண்டர் படைத்தலைவர்

கொடியேற்ற விழா

சுமார் ஒரு லட்சம் ஜனங்கள் குழுமி யிருக்க 19—2—38 காலை ஹரிபுராவில் ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ் தேசியக் கொடியை ஏற்றி வைத்து ஒரு பிரசங்கம் செய்தார். அது வருமாறு:—

நமது தேசீயக் கூட்டம் ஒவ்வொன்றிலும் இந்தக் கோடியேற்ற விழா ஒரு முக்கியமான இடம் பெற்றிருக்கிறது. நாம் போராட்டத்திலே இருக்கிறோமென்பதையும், இதில் வெற்றிகாணும் உறுதி நமக்கு இருக்கிறதென்பதையும் இந்தக் கொண்டாட்டம் நமக்கு நினைவூட்டுகிறது. உலகத்திலுள்ள ஒவ்வொரு சுதந்திர நாடும் தனக்கென்று தனிக் கோடியொன்றை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு நாட்டின் பெருமையை நேர்முகமாக அறிவிக்கும் ஓர் அடையாளமாகவே இந்தக் கொடி போற்றப்பட்டு வருகிறது.

தங்கள் நாட்டுக் கொடியின் கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காக ஒவ்வொரு நாட்டிலும் உயிர் துறந்த வீரர்கள் பலர் இருக்கின்றனர். இவர்களைப்பற்றிச் சரித்திரங்கள் புகழ்ந்து கூறுகின்றன. எந்த மூவர்ணக்கொடியை நாம் மதித்துப் போற்றுகிறோமோ, அதனைக் காப்பாற்றும் பொருட்டு, நமது போராட்ட சரித்திரத்திலும் எத்தனையோ சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன.



இந்தச் சுதந்திரக்கோடியானது நமக்கு ஊக்கத்தை அளிக்கிறது. நமது லட்சியத்தை நாடி முன்னே செல்லுமாறு நம்மை ஊக்குவிக்கிறது. நமது லட்சியத்தை நாம் இன்னும் அடையவில்லையென்பது உண்மைதான். ஆனால் இந்தச் சுதந்திர பாதையில் நாம் வெகு தூரம் வந்து விட்டோமென்றும், நமது லட்சியத்திற் கருகாமையில் இருக்கிறோமென்றும் உங்களுக்கு உறுதி கூற விரும்புகிறேன். நம்மிடத்திலே உறுதியிருக்கிறது; ஆவல் இருக்கிறது. லட்சியத்தை விரைவிலே அடைவோம். நம்மை யாரும் தடை செய்ய முடியாது; எதுவும் தடை செய்ய முடியாது.

நமது தேசீயக்கொடிக்கு எவ்வித பங்கமும் ஏற்படாமலிருக்கும் பொருட்டு நாம் அநேக தியாகங்களைச் செய்திருக்கிறோம். ஆனால், நமது அபிலாஷைப் படிகளின் மீதேறி, சுதந்திரசிகரத்தின் மீது இந்த மூவர்ணக் கொடியை ஜய கோஷத்துடன் நாட்டுவதற்குள் இன்னும் எத்தனையோ தியாகங்களைச் செய்ய வேண்டும்.

இந்தக்கொடியேற்ற விழாவை நாம் ஏன் பிரதி வருஷமும் கொண்டாடு கிறோம்? நமது லட்சியத்தை அடையும் பொருட்டு, அந்த லட்சியத்தின் பிரதிநிதியாக இருக்கும் இந்த மூவர்ணக் கொடியைக் காப்பாற்றும் பொருட்டு, துன்ப மனுபவிக்கவும் தியாகஞ் செய்யவும் நாம் தயாராயிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்வதற்காகவே இந்த விழா நடைபெறுகிறது. நமது தாய்நாடு, இந்தியா, சுதந்திரம் அடையவேண்டுமென்பதற்காக, தாயின் சேவடியிலே நூறு யிரக்கணக்கான பேர், சென்ற சில ஆண்டுகளில் தங்கள் உயிரை அர்ப்பணஞ் செய்திருக்கிறார்கள். அவர்களுக்குப் பின்னால் தங்கி விட்ட நாம், அவர்களுடைய வாரிசுகளாகிய நாம், நிறைவேறாத அவர்களுடைய கனவுகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டும், அவர்களுடைய ஞாபகார்த்தமாகவும், நம்மிடத்திலுள்ள சிறந்ததனைத்தையும் ஒப்புக்கொடுக்க இந்த இடத்திலே நாம் சங்கற்பம் செய்துகொள்வோம்.

நமக்கு முன்னால் பெரிய போராட்டம் இருக்கிறதென்பதை நான் எல்லா வகையிலும் உணர்கிறேன். இப்பொழுது பீஹாரிலும் ஐக்கிய மாகாணத்திலும் ஏற்பட்டுள்ள நெருக்கடி அந்த இரண்டு மாகாணங்களைப் பொறுத்த விஷயமல்ல. நாடு முழுவதும் ஒரு பெரிய போராட்டத்தில் இறங்குவதற்கு இதனை ஒரு சூசகமாகவே நாம் கொள்ளவேண்டும். இந்த நெருக்கடியைத் தேசம் எப்படி சமாளிக்க வேண்டுமென்பதற்குக் காங்கிரஸ் வழி காட்டும். இந்த மேடை மீது நின்றுகொண்டு உங்களை நான் கேட்டுக் கொள்வதென்னவென்றால், நமது தேச சரித்திரத்தின் நெருக்கடியான இந்தச் சந்தர்ப்பத்திலே, காங்கிரஸின் வேண்டுகோளுக்கிணங்கி ஒன்றுபட்ட உள்ளத்தோடு நீங்கள் அனைவரும் காங்கிரஸ் காட்டும் வழியில் செல்லவேண்டுமென்பது தான்.

இன்று, இந்தப் புனிதமான சந்தர்ப்பத்திலே, நமது லட்சியத்தை அடைகிறவரை போராடுவோம் என்றும், அது வரையில் ஓய்வு கொள்ள மாட்டோம் என்றும், சோர்வு கொள்ளமாட்டோமென்றும் நாம் செய்து கொண்டுள்ள பிரதிக்ஞையைப் புதுப்பித்துக் கொள்வோமாக. இந்தத் தெய்விக க்ஷேத்திரத்திலே, இந்த மகத்தான ஜனத்திரளின் சந்நிதானத்திலே, நீல நிர்மல ஆகாயத்தில் நமது லட்சியத்தின் சின்னமா யிலங்கிக் கொண்டிருக்கும் இந்த மூவர்ணக் கொடியின் நிழலிலே, பூரண சுதந்திரம் பெற நாம் செய்துகொண்டுள்ள சங்கற்பத்தைப் புதுப்பித்துக் கொள்வோமாக. வெற்றி நமதாகிற வரையில், இடையிலே வழிதவறமாட்டோம் என்றும் உறுதி கொள்வோமாக. நமது இயக்கத்தை வலுப்படுத்துவோம். நமது முயற்சிகளை பன்மடங்காக்குவோம். நாம் ஒன்றுபட்டு நிற்போம். அப்பொழுதுதான் நாம் திறமையாகப் போராட முடியும். நமது சுயராஜ்ய லட்சியத்தையும் விரைவில் அடைய முடியும். நாம் இப்பொழுது செய்துகொண்ட சங்கற்பத்தின் அறிகுறியாக, நமது சுதந்திர இயக்கத்தின் சின்னமாக இந்தத் தேசியக் கொடியை ஞாபகத்தில் வைத்துக் கொள்வோம். கொடியின் பெயரால் ஜெய கோஷம் செய்வோம். சகோதரர்களே! நாம் சுதந்திரமாக இருக்கச் சங்கற்பித்துக் கொண்டுவிட்டோம். அந்தச் சங்கற்பத்தைக் காப்பாற்றுவோம். எல்லோரும்சேர்ந்து ஒரு குரலில் 'வெல்க மணிக்கொடி' என்று ஒலிப்போம்.

தர்பார் கோபால் தாஸ் தேசாய் கத்தியவார் மாகாணத்திலுள்ள ஒரு சிறிய சமஸ்தானாதிபதியாகப் பிறந்தார். ஆனால் இளமையிலிருந்தே ஏழைமக்களுக்குத் தொண்டு செய்தலே கடவுள் பணியெனக்கொண்டார், இதனால் காந்தியடிகளின் ஆன்மசக்தி இவரை எளிதில் கவர்ந்தது. 1920 ம் வருஷத்தி லிருந்து தமது செல்வம், செல்வாக்கு எல்லாம் துறந்து, போர்ஸாத் கிராமத்தில், குடியானவர்கள் மத்தியில் ஒருகுடியானவனைப் போல் வாழ்க்கையை நடத்திவருகிறார். இதற்காக இவர் அதிகாரிகளிடத்தில் பட்ட சிரமம் கொஞ்ச நஞ்சமல்ல. இவருடைய சமஸ்தானம் பறிமுல் செய்யப்பட்டது, மனைவி, மகன், நாட்டுப் பெண் முதல் சக குடும்ப சமேதராய்ப் பல முறை சிறை சென்றார். ஆனாலும் முகத்திலே என்ன புன்சிரிப்பு பாருங்கள்!

உபசரணைக் கூட்டத் தலைவர் பிரசங்கம்.

சகோதரப்பிரதிநிதிகளே!

நான் ஒரு சாதாரணத்தொண்டன். என்னை ஏன் உபசரணைக் கூட்டத் தலைவனாகப் போட்டிருக்க வேண்டுமென்பது எனக்குத் தெரியவில்லை. குஜராத்திலே பொதுவான பழக்கம் ஒன்று இருக்கிறது. ஒழுங்குக்குக் கட்டுப்பட்ட போர் வீரர்களாகிய நாங்கள், எங்கள் தலைவர் ஆணைப்படி நடக்கவேண்டும்என்பதுதான் அந்தப் பழக்கம். சர்தார் வல்லபாயை உங்களெல்லாருக்கும் நன்கு தெரியும். அவருடைய உத்திரவு என்ன தெரியுமா? பேசுந் தொழிலையெல்லாம் அவருக்கு விட்டுவிட்டு, நாம் அமைதியாக இருந்து தொண்டு செய்ய வேண்டுமென்று அவரதுஉத்திரவுகூறுகிறது. ஆதலால் இங்கே நான் ஏன் எழுந்து நிற்கிறேனென்றால் அவருடைய-அந்தத் தலைவருடைய—உத்திரவுக்கிணங்கித்தான். அரசியல் விஷயமாகவோ வேறெந்த விஷயமாகவோ ஒரு பிரசங்கம் செய்வதற்கு நான் இங்கே எழுந்து நிற்கவில்லை. அரசியல்சம்பந்தமாக என்ன சொல்ல வேண்டுமோ அதைத் தலைவர் சொல்லுவார். குஜராத் மாகாணத்தின் சார்பாக உங்களனைவரையும் வரவேற்பதே எனதுவேலை. அப்படிச் செயலாற்றுவதிலேயே மனமுடைய குஜராத்தின் சார்பாக உங்களை வரவேற்கிறபோது, செயல் முறைக்கு உகந்த ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

1921-ம் வருஷத்து வேலைத் திட்டம்

1921-ம் வருஷம் காங்கிரஸ் வகுத்த வேலைத் திட்டத்தைப்பற்றி என்னுடைய கருத்தென்னவென்பது எல்

லாருக்கும் தெரிந்த விஷயந்தான். அதன் சில்லரை அம்சங்களிலே பின்னர் சில மாறுபாடுகள் செய்யப்பட்டிருக்கலாம். அங்ஙனம் மாறுபாடடைந்திருப்பினும், அந்த வேலைத் திட்டம் ஒன்றுதான், நாம் சுதந்திரம் பெறுவதற்குத் துணை செய்யப் போகிறதென்று உறுதியாக நம்புகிறேன். நமது போராட்டத்தின் ஆரம்ப தசையில் சத்தியமும் அஹிம்சையும், இவற்றின் பரிணாமமாகிய நிர்மாண வேலைத் திட்டமும் பெரிதும் துணை செய்தன. போராட்டத்தின் இடைக் காலத்திலேயுள்ள இப்பொழுதும், அது துணை செய்து வருகிறது. சுதந்திர பாதையின் முடிவைக் காணும் நிலையில், கடவுளின் அருளால் இப்பொழுது இருக்கிறோம். இந்தக் காலத்திலும் அவை என் துணை செய்யமாட்டா? இந்த அடிப்படையான தத்துவங்களில் நம்பிக்கை கொண்டவன் என்ற முறையிலும், பணி செய்யும் போர் வீரன் என்ற முறையிலும் நான் உங்கள் அனைவரையும் இந்தத் தபதி நதி தீரத்திலே வரவேற்கிறேன்.

கிராம காங்கிரஸ்

சென்ற வருஷ முதல், கிராமங்களில் காங்கிரஸை நடத்துவதென்று ஆரம்பித்திருக்கிறோம். பெய்ஸ்பூருக்கு முதல் கௌரவம் கிடைத்தது. அங்கே பெற்ற அநுபவம், இங்கே நமக்குத் துணையாயிருந்து வந்திருக்கிறது. அந்த அநுபவத்தை எவ்வளவு தூரம் பயன் படுத்திக்கொண்டிருக்கிறோம் என்பதை நான் அறியேன். ஆனால், இங்கே நீங்கள் காண்பதெல்லாம் நூற்றுக் கணக்கான தொண்டர்களின் உழைப்பின் பலன். இந்தத் தொண்டர்களிலே இருவர் தங்கள் உயிரையும் இதிலே அர்ப்பணம் செய்து விட்டார்கள். அவர்களில் ஒருவராகிய பண்டித கரேயின் பிரிவுக்கு குஜராத் மட்டுமல்ல, இந்தியா முழுவதும் கண்ணீர் விடுகிறது. இங்கே, செய்யப்பட்டுள்ள வேலையில் என் பங்கு மிகவும் சொற்பந்தான், எங்களுடைய உழைப்பு எவ்வளவுதூரம் வெற்றிபெற்றிருக்கிறது என்பதைப்பற்றிச்சொல்ல நான் அருகனல்லன். இந்தக் காங்கிரஸ் முடிந்த பிறகு எங்கள் உழைப்பின் மீது தீர்ப்புக் கூற வேண்டியவர்கள் நீங்கள்தான். எனது இன்றைய கடமையெல்லாம் குஜராத்தின் சார்பாக உங்களை இதய பூர்வமாக வரவேற்பது தான். நாங்கள் ஏதேனும் சரித்திரத்தை உண்டு பண்ணியிருப்போமானால், அந்த உற்பத்தியில் அதிகமான பங்கெடுத்துக் கொண்ட பார்டோலி, ராஸ் கிராம வாசிகளின் சார்பாகவும் உங்களை நல்வரவேற்கிறேன். அப்படி 'வரவேற்கிறபோது உங்களை நான் வேண்டிக் கொள்வது என்னவென்றால் 'எங்களுடைய குறைகளைப் பொறுத்துக் கொள்ளுங்கள். எங்களால் செய்து கொடுக்க முடிந்த சௌகரியங்களோடு திருப்தி யடையுங்கள். எங்களால் தவிர்க்க முடியாத சில அசௌகரியங்கள் இங்கே இருக்குமானால் அவற்றைப் பொருட் படுத்தாதீர்கள்' என்பது தான். எவருடைய வாழ்க்கை, தியாகத்தினாலும், தொண்டினாலும் துன்பம் அநுபவிப்பதனாலும் புனித மடைந்திருக்கிறதோ அவரைத் தலைவராகப் பெற்றுள்ள பாக்கியம் இப்பொழுது நமக்குக் கிடைத்திருக்கிறது. இதற்கு முன்னர் குஜராத்திலே நடைபெற்ற மூன்று காங்கிரஸ்களுக்கும் எந்த மாகாணம் தலைவர்களைத் தந்து உதவியதோ, அந்த மாகாணத்திலிருந்துதான் அவர் வந்திருக்கிறார். இந்தியாவிலுள்ள மாகாணங்களில் அந்த மாகாணத்

தலைவர் பிரசங்கம்

அவைத்தலைவரே, தோழர்களே,

அடுத்த ஆண்டுகளுக்கு இந்திய தேசிய காங்கிரஸின் தலைவனாக என்னைத் தெரிந்தெடுத்துக் கௌரவப் படுத்தியதற்கு நான் பெரிதும் நன்றி உள்ளவனாயிருக்கிறேன். இந்த மகத்தான கௌரவத்திற்கு நான் முற்றிலும் தகுதியுடையவன் என்று ஒரு கணமேனும் நினைக்கக் கூடிய அவ்வளவு தற்பெருமை கொண்டவன் அல்லன் நான். உங்களுடைய தயாளத்தின் அடையாளமாகவே இதனை நான் கருதுகிறேன். நமது நாட்டு இளைஞர்களை நீங்கள் பாராட்டுகிறீர்கள் என்பதன் அறிகுறியாகவே இதனை நான் கொள்கிறேன். நமது தேசியப் போராட்டத்துக்கு அந்த இளைஞர்களுடைய ஒன்றுபட்ட தியாகம் துணை செய்திராவிட்டால் நாம் இப்பொழுது உள்ள நிலையிலே இருக்க மாட்டோம். நமது தாய் நாட்டு மணி வயிறு வாய்த்த புத்திரர்களாலும், புத்திரிகளாலும் அலங்கரிக்கப் பெற்ற இந்த மேடை மீது அச்சத்தோடும் நடுக்கத்தோடும் ஏறி நிற்கிறேன். என்னுடைய குறைகள் பலவற்றையும் நான் உணர்ந்திருக்கிறேன். ஆதலின், உங்களுடைய அன்பினாலும் ஆதரவினாலும் எந்த ஒரு பெரிய பதவியை வகிக்கும்படி நீங்கள் பணித்திருக்கிறீர்களோ அந்தப் பதவிக்கு இயைய நடந்து கொள்வேன் என்று நம்புகிறேன். அதுவே என் பிரார்த்தனையு மாகும்.

தான்—அந்த வங்காளந்தான்—தியாகத்தில் முதற் பரிசு பெறுதற்குரியது. நமது தலைவருடைய தலைமையின் கீழ் நமது லட்சியத்தை நாடி அணிவகுத்துச் சென்று நமது இதிகாசத்திலே இன்னும் பல கீர்த்திப் படலங்களைச் சேர்ப்போம் என்று நம்புகிறேன். அதுவே என் பிரார்த்தனை.

சுபாஷ் பாபு, தலைமை ஆசனத்தில் அமருங்கள்.

ஸ்வரூப ராணி

தொடக்கத்தில் ஸ்ரீமதி ஸ்வரூப ராணி நேரு, ஆச்சார்ய ஜகதீஸ சந்திர போஸ், டாக்டர் சரத் சந்த்ர சட்டர்ஜீ ஆகியோர் இறந்து போனதைக் குறித்து நாம் பெரிதும் துக்கிக்கிறோம் என்பதை உங்கள் சார்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன். ஸ்ரீமதி ஸ்வரூப ராணி நேரு அவர்கள்

பண்டித மோதிலால் நேருவினுடைய தர்ம பத்தினியாகமட்டுமில்லை. பண்டித ஜவஹர்லால் நேருவின் தாயாராகவும் இருந்தார். இந்தியாவின் சுதந்திர லக்ஷியத்துக்காக அவர் பட்ட கஷ்டங்கள்—செய்த தியாகங்கள்—ஆற்றிய தொண்டுகள் முதலியவற்றைக் குறித்து எந்தத் தனி மனிதனும் பெருமை யடையக் கூடும். அவரோடு சேவை செய்தவர்கள் என்ற முறையில் அவருடைய மரணத்துக்கு துக்கிக்கிறோம். பண்டித நேருவுக்கும், அவருடைய குடும்பத்தாருக்கும் நமது மனப் பூர்வமான அநுதாபம் உரியதாகுக.

ஜகதீஸ சந்திரர்

தற்கால விஞ்ஞான உலகத்திலே இந்தியாவுக்கு ஒரு கௌரவமான பதவியை வாங்கிக் கொடுத்த பெரியோர்களில் முதன்மையானவர் என்ற முறையில் ஆச்சார்ய ஜகதீச சந்திர போஸுக்கு நாம் என்றும் நன்றி யுடையவர்கள். அவர் உள்ளும் புறமும் ஒத்த ஒரு தேசீய வாதி. விஞ்ஞானத்திற்கு மட்டு மல்ல, இந்தியாவுக்கும் அவர் தம் வாழ்க்கையை அர்ப்பணம் செய்தார். இந்தியா இதனை அறிந்திருக்கிறது; அதற்காக நன்றியும் பாராட்டுகிறது. ஸ்ரீமதி போஸுக்கு நமது உள்ளம் நிறைந்த அநுதாபத்தைச் செலுத்துவோமாக.

சரத் சந்த்ரர்

டாக்டர சரத் சந்த்ர சட்டர்ஜீயின் அகாலமரணத்தினால் இந்தியா, தனது இலக்கிய வானத்திலிருந்து ஒரு பிரகாசமான நக்ஷத்திரத்தை இழந்து விட்டது. வங்காளத்திலுள்ள ஒவ்வொரு வீட்டிலும் அவர் பெயரை அறிவர். அதனோடு இந்தியாவின் சாஹித்திய உலகத்திலும் அவர் புகழ் நிரப்பிக் கொண்டு வந்தார். சரத் பாபு ஒரு புலவனாக மட்டும் இருந்து பெருமை பெற வில்லை; தேச பக்தராக இருந்து அதை விடப் பெருமை பெற்றார். அவருடைய மரணத்தினால் இன்று வங்காள காங்கிரஸ் சிறிது ஏழ்மையையே அடைந்திருக்கிறது என்று சொல்ல வேண்டும். அவருடைய குடும்பத்தாருக்கு நமது துக்கத்தைத் தெரிவிப்போமாக.

மற்ற தியாகிகள்

சென்ற ஆண்டு பெய்ஸ்பூரில் காங்கிரஸ் கூடியதற்குப் பிறகு, தேசப் பணியிலே உயிர் விட்ட பலருடைய ஞாபகார்த்தமாகத் தலை வணங்குகிறேன். சிறப்பாக, சிறையிலோ, பாதுகாப்பிலோ, விடுதலை யடைந்த பின்னரோ இறந்து போனவர்களைக் குறிப்பிட விரும்புகிறேன். முக்கியமாக டாக்கா மத்திய சிறையிலே உயிர் துறந்த அரசியல் கைதியாகிய ஹரேந்த்ர முன்ஷி என்பாரை உங்களுக்கு நினைவு படுத்தல் அவசியம். இவர் சமீபத்தில் உண்ணாவிரத மேற்று உயிர் விட்டார். இதைப் பற்றி அதிகமாகச் சொல்வதற்கு என் மனப் புண் இன்னும் மாற வில்லை. உங்களை நான் கேட்ப தெல்லாம் என்ன வென்றால், ஜதீன் தாஸ், சர்தார் மஹா வீரசிங், ராம கிருஷ்ண நாமதாஸ், மோகித மோகன மைத்திரா, ஹரேந்த்ர முன்ஷி முதலிய உத்தம ஆத்மாக்கள் இந்த வாழ்விலே வெறுப்புக் கொண்டு இதனை முடித்துக் கொள்வதிலே விருப்புக் கொண்டனர் என்றால், எங்கேயோ, ஏதோ பழுதுபட்டிருக்க வேண்டும் அல்லவா என்பதுதான்.

ஏகாதிபத்தியங்கள் சென்ற வழி

மானிட ஜாதியின் சரித்திரத்தைப் பொதுவாக நோக்குவோம். முதலிலே நமக்குப் படுவது என்ன?

ஏகாதிபத்தியங்களின் வாழ்வு. பின்னர் அவைகளின் தாழ்வு; கீழ் நாட்டிலேயாகட்டும், மேனாட்டிலேயாகட்டும், இந்த ஏகாதிபத்தியங்கள் படிப்படியாக விரிந்து ஓர் உன்னத நிலையை யடைந்து, பின்னர் படிப்படியாகச் சுருங்கி இருந்த இடம் தெரியாமலே போயிருக்கின்றன. சில சமயங்களில் மரணத்தையும் அடைந்திருக்கின்றன. முற்காலத்து ரோம ஏகாதிபத்தியத்தைப் பாருங்கள். தற்காலத்துத் துருக்கி, ஆஸ்திரியா—ஹங்கேரி ஏகாதிபத்தியங்களைப் பாருங்கள். மேலே கூறிய நியதிக்கு இவை சரியான உதாரணங்கள். இந்தியாவில் தோன்றிய மௌரிய, குப்த, மொகலாய ஏகாதிபத்தியங்கள் இந்த விதிக்குப் புறம்பாகவில்லை. இந்த உதாரணங்கள் நம் கண்முன் நிற்கின்றபோது, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு மட்டும் தனியான ஒரு தலைவிதி ஏற்பட்டிருக்கிறதென்று யாரேனும் கூறத் துணிவரா? இந்த ஏகாதிபத்தியம் இப்பொழுது சரித்திரத்தின் நான்கு மூலைச் சந்தியிலே நிற்கிறது. ஒன்று, மற்ற ஏகாதிபத்தியங்கள் சென்ற வழியிலே இதுவும் சென்றுவிட வேண்டும்; அல்லது சுதந்திர ராஜ்யங்கள் பல சேர்ந்த ஒரு சமஷ்டியாகத் தன்னை மாற்றிக்கொள்ள வேண்டும். இரண்டு வழிகளும் அதற்குத் திறந்து விடப்பட்டிருக்கின்றன. 1917-ம் வருடத்தில் ருஷ்ய ஜார் ஏகாதிபத்தியம் சிதைந்துபோயிற்று. ஆனால் அந்தச் சிதைவின்மீது சோவியத் குடியரசு தோன்றியது. ருஷ்ய சரித்திரத்திலிருந்து கிரேட் பிரிட்டன் ஒரு பாடம் கற்றுக்கொள்ள இன்னும் அவகாசமிருக்கிறது அஃது அப்படிச் செய்யுமா?

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம்

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் என்பது அரசியல் அம்சங்கள் பலவற்றின் கலப்பு; விநோதமான கலப்புங்கூட. சுதந்திர நாடுகள், ஓரளவு சுதந்திரம் பெற்ற நாடுகள், சுயேச்சாதிபத்தியம் பெற்ற குடியேற்ற நாடுகள் பலவும் இதில் கலந்திருக்கின்றன. சட்ட ஞானத்தைக் கொண்டும், மானிட அறிவைக் கொண்டும் இந்தக் கலப்பை ஒரு சிறிது காலம் கில் நிறுத்தி வைக்கலாம்: ஆனால் எப்பொழுதும் முடியாது. புற சக்திகளின் ஆதிக்கம் ஒருபுறமிருக்கட்டும்; உள்ளுக்குள்ளேயே யிருக்கும் முரண்பாடுகள் காலாகாலத்தில் நீக்கப்பெறுவிட்டால் இந்த ஏகாதிபத்தியம் தனது சுமை தாங்காமல் சிதறிப்போதல் நிச்சயம். ஆனால் இந்தப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தைரியமாக, சுதந்திர நாடுகள் அடங்கிய ஒரு சமஷ்டியாகத் தன்னை மாற்றிக்கொண்டு விடுமா? பிரிட்டிஷ் ஜனங்கள்தான் இந்தக் கேள்விக்குப் பதில் கூறவேண்டும். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். பிரிட்டிஷ் ஜனங்கள் தங்களுடைய நாட்டிலே சுதந்திரமுடையவர்களா யிருந்தால்தான்—அதாவது கிரேட் பிரிட்டன் அபேதவாத அரசாங்கமாக மாறினால்தான்- இந்த மாற்றம் ஏற்படுவது சாத்தியம். கிரேட் பிரிட்டனை ஆளும் முதலாளி வர்க்கத்துக்கும், குடியேற்ற நாடுகளுக்கும் பிரிக்க முடியாத ஒரு தொடர்பிருக்கிறது. 'பல சமுதாயங்களையும் அடிமைப்படுத்தி வைப்பதன் மூலமாகத்தான் கிரேட் பிரிட்டனிலுள்ள பிற்போக்குக் கட்சி வலுவடைகிறது' என்று ஒரு காலத்தில் லெனின் கூறினார். குடியேற்ற நாடுகளையும் மற்றப் பிரதேசங்களையும் சுரண்டுவதனாலேயே பிரிட்டிஷ் முத

லாளி வர்க்கம் ஜீவித்துக்கொண்டிருக் கிறது. இந்தக் குடியேற்ற நாடுக ளுக்கு விமோசனம் கிடைத்தால் அது பிரிட்டிஷ் முதலாளி வர்க்கத் தின் ஆணி வேரைக் கல்லுவதாகும். அப்பொழுதுதான் அந்த நாட்டிலே அபேதவாத அரசாங்கத்தை ஸ்தா பிக்க முடியும். இதனுல் விளங்குவது என்ன? குடியேற்ற நாடுகளுக்கு விமோசனத்தை வாங்கிக் கொடுக்கா விட்டால் கிரேட் பிரிட்டனில் அபே தவாத சமுதாயம் ஏற்படாதென்பது நிச்சயமாகிறதல்லவா? இந்தியாவினு டையவும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத் திற்கு அடங்கியுள்ள மற்ற நாடுக ளுடையவும் அரசியல் சுதந்திரத் திற்காகப் போராடிக் கொண்டிருக்கிற நாம், அதே சமயத்தில் பிரிட்டிஷ் ஜனங்களுடைய பொருளாதார விமோசனத்திற்கும் போராடுகிறவர் களாயிருக்கிறோம்.

பிரித்து ஆளும் தந்திரம்

பிரித்தாளும் தத்துவத்தை அடிப்ப டையாகக் கொண்டுதான் ஒவ்வொரு ஏகாதிபத்தியமும் வாழ முற்படுகிற தென்பது எல்லோரும் அறிந்த உண்மை. ஆனுல் உலகத்திலே உள்ள எந்த ஏகாதிபத்தியமாவது இந்தத் தத்துவத்தை கிரேட் பிரிட்டனைப் போல் அவ்வளவு திறமையாகவும், ஒழுங்காகவும், கடுமையாகவும் அனு ஷ்டானத்திற்குக் கொண்டுவந்திருக்கி றதா என்று நான் சந்தேகிக்கிறேன். இந்தத் தத்துவத்தின் வழிபற்றித் தான், ஐரிஷ் மக்களுக்குச் சுதந்திரம் அளிக்கப்படுவதற்கு முன்னர், அயர் லாந்திலிருந்து அல்ஸ்டர் மாகாணம் தனியாகப் பிரிக்கப்பட்டது. அப்ப டியே பாலஸ்தீனியர்களுக்கு ஏதே னும் அதிகாரம் அளிக்கப்படுமானுல், அதற்கு முன்னரே அராபியர்களிலி ருந்து யூதர்கள் பிரிக்கப்படுவார்கள். அதிகாரத்தை வேறு ஒருவர் கைக்கு மாற்றுவதற்கு ஈடாக இந்த உட்பிரி வினை அவசியமாக இருக்கிறது. புதிய இந்திய அரசியல் சட்டத்திலே இந்த பிரிவினைத் தத்துவம் வேறு ஒரு வடி வில் தோன்றிக் காட்சியளிக்கிறது. இந்தியாவிலுள்ள பல வகுப்பினரை யும் தனித்தனியாகப் பிரித்து வைக் கும் முயற்சியை இந்தச் சட்டத்தில் காணலாம். சமஷ்டித் திட்டத்திலே சுயேச்சாதிகாரமுள்ள சமஸ்தானாதி பதிகளும், பிரிட்டிஷ் இந்தியாவிலி ருந்து ஜனநாயக முறையில் தெரிந் தெடுக்கப்பட்ட ஜனப்பிரதிநிதிகளும், எதிருக்கெதிராக நிறுத்திவைக்கப் பட்டிருப்பதைக் காணலாம். பிரிட்டிஷ் இந்தியாவின் எதிர்ப்பினுலோ, சமஷ் டித் திட்டத்தில் சேரமாட்டோ மென்று சமஸ்தானாதிபதிகள் மறுப்ப தினுலோ, இந்தப் புதிய அரசியல் சட்டம் நிராகரிக்கப்படுமானுல், இந்தி யாவைப் பிரித்து, விட்டுக்கொடுத்த அதிகாரத்தை ஈடுபடுத்திக் கொள்ள, பிரிட்டிஷாரின் சூழ்ச்சித் திறனுனது வேறொரு வழிகோலும் என்பதில் ஐயமில்லை. ஆகலின் பிரிட்டிஷ் அர சாங்கக் காரியாலயத்திலிருந்து இந்தி யாவிற்கென்று உற்பத்தியாகும் எந்த அரசியல் திட்டத்தையும், அதி ஜாக் கிரதையுடனும், எச்சரிக்கையுடனும் நாம் பரிசோதித்துப் பார்க்கவேண் டும்.

சில உதாரணங்கள்

இந்தப் பிரித்தாளும் கொள்கையா னது, சில சாதகங்களை உண்டுபண் ணுமேயானுலும், ஆள்வோருக்கு எப்பொழுதுமே பூரண சாதகத்தைக் கொடுத்துக்கொண்டிராது. அதற்கு மாருக இது பல புதிய பிரச்னைகளை யும், புதிய சிக்கல்களையும் சிருஷ்டித்

துக் கொண்டே யிருக்கும். கிரேட் பிரிட்டனே இந்தச் சிக்கலில் அகப் பட்டுக்கொண்டிருப்பதை நாம் பார்க் கிறோம். அந்த இந்தியாவில், ஹிந் துக்களைத் திருப்திப்படுத்துமா? முஸ் லீம்களைத் திருப்திப்படுத்துமா? பாலஸ் தீனத்தில் அராபியர்களுக்கு ஆதரவு காட்டுமா? யூதர்களுக்கு இடங் கொடுக்குமா? ஈராக்கிலே அராபியர் களையா, குருக் ஜாதியார்களையா, யாரைத் தட்டிக்கொடுப்பது? எகிப் திலே அரசர் சார்பிலா, வாப்துக் கட்சியின் சார்பிலா நிற்பது? ஏகாதி பத்தியத்திற்குப் புறம்பிலும் இந்தப் பிரிவினைத் தத்துவம் இருப்பதைப் பார்க்கலாம். ஸ்பெயின் விஷயத்தி லேயும், பிராங்கோ கட்சியை ஆதரிப் பதா, அல்லது சட்டரீதியாக ஏற்பட் டுள்ள அரசாங்கத்தை ஆதரிப்பதா, என்று பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் திகைக்கிறார்கள். ஐரோப்பிய அரசி யலில் பிரான்ஸைத் தழுவி நிற்பதா ஜெர்மனியைத் தழுவி நிற்பதா என்ற பிரச்னை கிளம்பியிருக்கிறது. பிரிட்டிஷ் அன்னிய நாட்டுக் கொள் கையில், பல முரண்பாடுகள் காணப் படுவதற்கு அந்த ஏகாதிபத்தியத்தின் கலப்புத் தன்மைதான் காரணம். பிரிட்டிஷ் மந்திரிச் சபையானது, ஒரு புறத்திலே யூதர்களைத் திருப்தி செய்து கொண்டிருக்கிறது. ஏனென் றால், யூதர்களுடைய பணத்தை அது புறக்கணித்துவிட முடியாது. மற் றொரு புறத்திலே இந்தியா மந்திரிக் காரியாலயமும் அன்னிய நாட்டுக் காரியாலயமும் அராபியர்களைத் தட் டிக் கொடுத்துக்கொண்டிருக்கின்றன. ஏனென்றால் கீழ்த் தேசங்களிலும் இந்தியாவிலும் ஏகாதிபத்திய உரிமை கள் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டுமல்லவா? கிரேட் பிரிட்ட னானது இந்த முரண்பாடுகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள வேண் டுமானால், தனது ஏகாதிபத்தியத்தைச் சுதந்திரம் பெற்ற பல தேசங்கள் அடங்கிய ஒரு சமஷ்டியாக மாற்றிக் கொள்ள வேண்டியதுதான். அப்படி அது செய்யுமானால் சரித்திரத்திலே யே அஃது ஓர் ஆச்சர்யமான மாற்றந் தான். அப்படி அது செய்யாதொழியு மாயின் சூரியன் அஸ்தமிக்காத இந் தப் பெரிய ஏகாதிபத்தியம் காலக்கிர மத்தில் சிதறுண்டு போவதைப் பார்த் துக் கொண்டிருக்க வேண்டியதுதான். ஆஸ்திரியா—ஹங்கேரி ஏகாதிபத்தியத் திலிருந்து கற்ற பாடத்தை பிரிட்டிஷ் ஜனங்கள் மறந்து போகாமல் இருப் பார்களாக.

பிரிட்டனின் தர்ம சங்கடம்

தற்போது பிரிட்டிஷ் ஏகாதி பத்தியம் பல கோணங்களிலும் சுமை தாங்க மாட்டாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. ஏகாதிபத்தியத் திற்குள்ளேயே, மேல் கோடியில் அயர்லாந்து; கீழ்க் கோடியில் இந் தியா; மத்தியிலே பாலஸ்தீனமும் அதைச் சுற்றி எகிப்தும் ஈராக்கும்; இவை பெரிய பிரச்னைகளாயிருக்கின் றன. ஏகாதிபத்தியத்திற்கு வெளியில் இத்தலியானது மத்தியதரைக் கடலில் ஆதிக்கம் செலுத்தப் பார்க்கிறது. கீழ்க் கோடியில் ஜப்பானும் அப்படித் தான். இந்த இரண்டு நாடுகளும் ராணு வத் திமிரும், ஆக்ரமிப்பு எண்ணமும், ஏகாதிபத்தியதிருஷ்டியுங்கொண்டிருக் கின்றன. இந்த அமைதியின்மை யென்கிற திரைக்குப் பின்னால் சோவி யத் ருஷ்யா இருக்கிறது. இஃதிருப் பதே ஏகாதிபத்திய அரசாங்கத்து ஆளும் வர்க்கத்தினரின் உள்ளத்தில் ஒரு திகிலை உண்டுபண்ணிக் கொண்டி ருக்கிறது. இந்த ஆதிக்கத்தையும் சுமையையும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தி

யம் எத்தனை நாள்தான் தாங்கிக் கொண்டிருக்க முடியும்?

இன்று பிரிட்டனானது தன்னைக் 'கடலரசி' என்று கௌரவமாகச் சொல்லிக்கொள்ள முடியாது. இந்தக் கடலாதிக்கத்தினாலேயே பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் அது வளர்ச்சியடைந்தது. இருபதாம் நூற்றாண்டில் அந்த வளர்ச்சி குன்றுமானால் உலகசரித்திரத்திலேயே புதிதாகத் தோன்றியிருக்கும் ஒரு சக்திதான் காரணமாயிருக்கும். அதுதான் ஆகாயப்படை. இந்த ஆகாயப்படை பலத்தைக் கொண்டுதான் விஷமத்தனமுள்ள இத்தலி, மத்தியதரைக் கடலில் திரட்டப்பட்டிருந்த பிரிட்டிஷ் கப்பற்படையை எதிர்த்து நின்றது. பிரிட்டனானது தனது தரைப் படையையும், கடற் படையையும், ஆகாயப்படையையும் அதிகப் படுத்திக் கொண்டு போகலாம். ஆகாயத்திலிருந்து வெடி குண்டுகள் வீசி எறியப்படுமானால் அவற்றை யுத்தக் கப்பல்கள் எதிர்த்துநிற்கலாம். ஆனால் நவீனகால யுத்தத்திலே ஆகாயப்படையானது முக்கியமான அம்சமாக வேரூன்றிக் கொண்டு விட்டது. தொலைதூர மென்பது அடியோடு இல்லாமற் போய் விட்டது. எத்தனையோ பாதுகாப்புகளை யேற்படுத்திக் கொண்டிருந்தும் கூட லண்டன்மாநகரம் ஐரோப்பிய வல்லரசுகளின் ஆகாய விமானக் குண்டுகளினுடைய தயவைத்தான் எதிர் நோக்கிக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. சுருங்கக் கூறு மிடத்து ஆகாயப் படையானது நவீன யுத்த முறையிலே ஒரு புரட்சியை உண்டுபண்ணி விட்டது. கிரேட் பிரிட்டனுடைய கட்டுப்பாட்டைக் குலைத்து, உலக அரசியலில், அதிகார பலத்தின் தராசை ஆட்டிவைத்து விட்டது. ஒரு பெரிய ஏகாதிபத்தியத்தினுடைய களிமண் பாதம் எப்பொழுதையும் விட இப்போது அதிகமாக வெளியிலே தெரிகிறது.

இந்தியாவின் ஒற்றுமை

இந்த உலக சக்திகளின் மத்தியிலே இந்தியா முன்னைவிடப் பன்மடங்கு வலிமை பெற்றுத் தலை தூக்கி நிற்கிறது. நமது தேசம் அகண்டமானது. 35 கோடி மக்கள் இதில் வசிக்கிறார்கள். இந்த விஸ்தீரணமும் ஜனப் பெருக்கமும் நமக்கு இதுவரையில் பலஹீனமாகவே இருந்தன. இன்று அவையே நமக்கு ஆக்கயளிப்பனவா யிருக்கின்றன. ஆனால், நாம் ஒன்றுபட்டு நம்மை ஆள்வோர் எதிரில் நிற்க வேண்டும். இந்திய ஒற்றுமை என்ற ஓரம்சத்தை நாம் எடுத்துக் கொண்டு பார்ப்போமானால், பிரிட்டிஷ் இந்தியா வென்றும் சமஸ்தான இந்தியாவென்றும் பிரித்துக் காட்டுவ தென்பது வெறும் போலியே என்பது புலனாகும். இந்தியா ஒன்று; பிரிட்டிஷ் இந்தியாவிலும் சமஸ்தான இந்தியாவிலும் உள்ள பிரஜைகளின் அபிலாஷைகளும் ஒன்று. நம்முடைய லக்ஷியம் இந்தியா பூரண சுதந்தரம் பெற வேண்டுமென்பது. அந்த லக்ஷியத்தை யடைவதற்கு மாகாணங்களும் சமஸ்தானங்களும் ஒன்றுசேரக்கூடிய ஒரு சமஷ்டி திட்டத்தின் மூலமாகவே முடியும். சமஸ்தானங்களிலுள்ள பிரஜைகள் அந்த சமஸ்தானத்திலே ஜனநாயக அரசாங்கம் ஏற்பட வேண்டுமென்று செய்யும் முயற்சிகளில் காங்கிரஸ் எப்பொழுதும் ஆதரவு காட்டி வந்திருக்கிறது. இப்பொழுது நமது கை நிறைய வேலையிருப்பதனால் சமஸ்தானங்களிலுள்ள

நமது சகோதரர்களுக்கு நாம் அதிகமான உதவிகள் செய்ய முடியாமலிருக்கலாம். இப்பொழுது கூட, தனிப்பட்ட காங்கிரஸ் வாதிகள் சமஸ்தானப் பிரஜைகளின் போராட்டத்தில் கலந்து கொண்டு அவர்களுக்குத் துணை செய்வது தடுக்கப்படவில்லை. சமஸ்தானப் பிரஜைகள் நடத்தும் இயக்கங்களில் நேரடியாகக் கலந்து கொள்ள வேண்டுமென்ற ஆவலுடைய பலர் காங்கிரஸில் இருக்கிறார்கள். அவர்களில் நானும் ஒருவன். என்னைப் பொறுத்த மட்டில் காங்கிரஸானது ஒரு அடி முன்னெடுத்து வைத்து, சமஸ்தானங்களிலே போராடும் நமது சகோதரப் பிரஜைகளுக்குக் கை கொடுத்து உதவுமென்று நம்புகிறேன். நம்முடைய ஆதரவையும் உதவியையும் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள் என்பதை நாம் மறந்து விட வேண்டாம்.

சிறு பான்மையோர் பிரச்னை

இந்திய ஒற்றுமையைப் பற்றிப் பேசுகிறபோது நமக்கு அடுத்தபடியாகத் தோன்றுவது, சிறு பான்மையோர் பிரச்னை. இந்த விஷயத்தில் காங்கிரஸானது தன்னுடைய கொள்கை இன்னதென்று பலமுறை வலியுறுத்தியிருக்கிறது. இதைப் பற்றி 1937ம் வருஷம் அக்டோபர் மாதம் கல்கத்தாவில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி நிறைவேற்றியுள்ள தீர்மானம் இங்குக் கவனிக்கத்தக்கது:—

'இந்தியாவிலுள்ள சிறுபான்மையோரின் உரிமைகளைப்பற்றித் தனது கொள்கை யென்னவென்பதன் சம்பந்தமாகக் காங்கிரஸ் பன்முறை வலியுறுத்திப் பேசியிருக்கிறது. இந்த உரிமைகளைக் காப்பது தன்னுடைய கடமையென்றும், சிறுபான்மைச் சமூகத்தினர் வளர்ச்சி யடைந்து தேசத்தின் அரசியல், பொருளாதார, கலைஞான வாழ்விலே பூரண பங்கெடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் காங்கிரஸ் சொல்லியிருக்கிறது. காங்கிரஸின் லக்ஷியம், ஒற்றுமையோடு கூடிய ஒரு சுதந்திர இந்தியா. அதில் ஒரு வகுப்போ, ஒரு கட்சியோ, அல்லது பெரும்பான்மையோரோ, அல்லது சிறுபான்மையோரோ ஒருவரை யொருவர் தன்னலத்துக்காகச் சுரண்டுவதென்பது இராது. சமுதாயத்தின் எல்லா அங்கங்களும் ஐக்கியப்பட்டு இந்தியாவின் நன்மைக்கும் முன்னேற்றத்திற்கும் உழைக்கும். இந்த ஒற்றுமையும் பரஸ்பர ஒத்துழைப்பும் சுதந்தர இந்தியாவுக்குத் தேவையென்பதனால், இந்திய வாழ்க்கையின் பல திறப்பட்ட கலைக் கிளைகளை ஒடுக்கி விடுவதென்பது அர்த்தமல்ல. இந்த விவித கலைஞானங்களை நாம் பாதுகாத்துப் போற்றவேண்டுவது அவசியம். ஒரு தனிப்பட்ட மனிதனோ, அல்லது ஒரு தனிப்பட்ட வகுப்போ தனது பரிபக்குவத்திற்கும் திறமைக்கும் தகுந்தாற்போல் வளர்ச்சி பெறுவதற்கு இந்தக் கலைஞானங்களைப் போற்றுவது இன்றியமையாதது.

இது விஷயத்தில் காங்கிரஸின் நோக்கமென்ன வென்பதைத் தவறாக வியாக்கியானஞ் செய்ய முயற்சிகள் நடைபெறுவதால் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி இந்தக் கொள்கையை வலியுறுத்திக் கூற விரும்புகிறது. பிரஜைகளின் மூலாதார உரிமைகள் என்னும் தீர்மானத்தில் காங்கிரஸ் பின்வரும் அமிசங்களையும் சேர்த்திருக்கிறது:—

(அ) இந்தியாவிலுள்ள ஒவ்வொரு பிரஜையும் தாராளமாகத் தன்

அபிப்பிராயத்தை எடுத்துச் சொல்லவும், பிறரோடு கலக்கவும், கூட்டுறவு கொள்ளவும், சட்டத்திற்கும் ஒழுக்கத்திற்கும் விரோதமில்லாமல், ஓரிடத்தில் ஆயுதமின்றி அமைதியாகக் கூடுவதற்கும் உரிமையுண்டு.

(ஆ) சமுதாய கட்டுப்பாட்டுக்கும் ஒழுங்குக்கும் உட்பட்டு ஒவ்வொரு பிரஜைக்கும் தன் மனச்சாட்சிப்படி நடக்கவும், தனக்கிஷ்டமான மதத்தில் சேரவும், அதனை அனுஷ்டிக்கவும் உரிமையுண்டு.

(இ) சிறுபான்மைச் சமூகத்தினருடைய கலைஞானம், பாஷை, எழுத்து முதலியவைகளும் பாஷை வாரியாக அமைந்துள்ள பிரதேசங்களும் பாதுகாக்கப்பெறும்.

(ஈ) மதம், ஜாதி, வகுப்பு, பால் முதலிய எந்த வித்தியாசமுமின்றி சட்டத்தின் முன் எல்லாப் பிரஜைகளும் சமமானவர்களே.

(உ) மதம், ஜாதி, வகுப்பு, பால் முதலியவை காரணமாக எந்தப் பிரஜைக்கும் உத்தியோகம், அதிகாரம், பதவி, அல்லது வியாபாரம் செய்தல் முதலியவை சம்பந்தமாக எந்த விதமான தடையும் ஏற்படாது.

(ஊ) அரசாங்கத்தினுடையோ, ஸ்தல ஸ்தாபனங்களினுடையோ, அல்லது பொதுஜன நன்மைக்கென்று தனிப்பட்ட நபர்களால் உதவப்பட்ட கிணறுகள், பாதைகள், பொது ஸ்தலங்கள் முதலியவைகளில் எல்லாப் பிரஜைகளுக்கும் சம உரிமையுண்டு.

(எ) எல்லா மதங்களுக்கும் நடுநிலையிலேயே அரசாங்கம் இருக்கும்.

(ஏ) வயது வந்த ஒவ்வொரு நபருக்கும் ஓட்டுரிமை உண்டு.

(ஐ) இந்தியாவிலுள்ள எந்த இடத்திற்கும் செல்லவும், ஓரிடத்தில் தங்கி ஸ்திரவாசம் செய்யவும், ஏதேனும் சொத்துக்களை வாங்கித் தன் சுவாதீனத்தில் வைத்துக் கொள்ளவும், எந்த விதமான உத்தியோகத்தையோ வியாபாரத்தையோ செய்யவும் சட்ட ரீதியாக எல்லாப் பாதுகாப்புகளையும் பெறவும் ஒவ்வொரு பிரஜைக்கும் உரிமையுண்டு.

மூலாதார உரிமைகளைப் பற்றிச் சொல்லப்பட்டுள்ள இந்தப் பிரிவுகள், மனச் சாட்சிப்படி நடக்கும் விஷயத்திலும், மதம், கலைஞானம் முதலியவைகளின் விஷயத்திலும் எவ்விதத் தலையீடும் இராதென்பதைத் தெளிவுபடுத்துவதோடு, சிறு பான்மைச் சமூகத்தினர் அனைவரும், பெரும்பான்மையோருடைய வற்புறுத்தலுக்கு இணங்காமல் தத்தம் சொந்தச் சட்டங்களை அநுஷ்டிக்க உரிமை உண்டு என்பதையும் எடுத்துக் காட்டுகிறது.

வகுப்புத் தீர்ப்பு

வகுப்புத் தீர்ப்பைப் பற்றி காங்கிரஸின் நிலைமை என்ன வென்பது சம்பந்தமாகக் காங்கிரஸ் தீர்மானங்களிலும் சென்ற வருஷம் வெளியிடப் பெற்ற காங்கிரஸ் தேர்தல் அறிக்கையிலும் விளக்கப்படுத்தப் பட்டிருக்கிறது. காங்கிரஸ் இந்தத் தீர்ப்புக்கு விரோதமாயிருக்கிறது. ஏனென்றால் இது தேசியத்திற்கும், ஜன நாயகத்திற்கும், இந்தியசுதந்திரத்திற்கும், இந்திய ஒற்றுமைக்கும் விரோதமாயிருக்கிறது. ஆயினும், இந்தத் தீர்ப்பில் ஏதேனும் மாற்றஞ் செய்ய வேண்டுமானாலும், அல்லது திருத்தி யமைக்க வேண்டுமானாலும், அந்தந்த வகுப்பினருடைய பரஸ்பர சம்மதத்தின் பேரிலேயே செய்ய வேண்டுமென்று காங்கிரஸ் வற்புறுத்தியிருக்கிறது. பரஸ்பர சம்மதத்தின் பேரில் இத்தகைய மாற்றத்தைச் செய்யக் கூடிய சந்தர்ப்பத்தைக் காங்கிரஸ் எப்பொ

முழுதும் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறது.

இந்தியாவிலுள்ள சிறு பான்மையினரைப் பாதிக்கிற எல்லா விஷயங்களிலும், அந்தந்த சமூகத்தினருடைய நல்லெண்ணத்தையும் ஒத்துழைப்பையும் பெற்று, இந்தியாவின் பொது லட்சியமாகிய சுதந்திரம், முன்னேற்றம் இவை சம்பந்தப்பட்ட துறைகளில் இறங்க வேண்டுமென்பது காங்கிரஸின் கொள்கை.

இந்தப் பிரச்னையைக் கடைசி முடிவாகத் தீர்த்து வைக்க நாம் முயற்சி செய்வதற்கு இதுவே சரியான சந்தர்ப்பம். தேசீயத்தின் அடிப்படையான கொள்கைகளுக்கு இசைய, ஒற்றுமையான ஒரு முடிவுக்கு வர, எல்லாக் காங்கிரஸ்காரர்களும் ஆவலுள்ளவர்களாயிருக்கிறார்கள் என்று நான் சொன்னால், அது உங்களுடைய அபிப்பிராயத்தையே பிரதி பலிப்பதாகும். எந்தெந்த வழிகளில் இந்தப் பிரச்னை தீர்க்கப் படலாம் என்ற விவரங்களில் நான் நுழைய விரும்பவில்லை. இதற்கு முன் நடை பெற்ற மகா நாடுகளிலும் தலைவர்கள் சமபாஷணைகளிலும் இதைப் பற்றிப் பேசப் பட்டிருக்கிறது. ஆனால் ஒன்றை மட்டும் இங்கு வலியுறுத்த விரும்புகிறேன். பொருளாதாரத்திலும் அரசியலிலும் நமக்குள்ள பொது லக்ஷியத்தை வற்புறுத்திக் கூறுவதனால் தான் வகுப்புப் பிளவுகளை நாம் சமரஸமாகத் தீர்த்து வைக்க முடியும். மத விஷயங்களிலே 'வாழவும் வேண்டும்; வாழ்விக்கவும் வேண்டும்' என்பதும், பொருளாதாரத்திலும், அரசியலிலும் ஒருவர் தேவையை மற்றவர் பரஸ்பரம் அறிந்து கொள்வதுமே நமது நோக்கமாயிருக்க வேண்டும். சிறு பான்மையோருடைய பிரச்னையைப் பற்றி நாம் நினைக்கிற போது முஸ்லீம்களின் விஷயந்தான் முன்னணியில் வந்து நிற்கிறது. இந்தப் பிரச்னையையும் ஒரு வழியாகத் தீர்த்து வைக்க நாம் ஆவலுள்ளவர்களாயிருக்கிறோம். இதே மாதிரி மற்றச் சிறு பானமைச் சமூகத்தினருக்கும், சிறப்பாக தாழ்ந்த வகுப்பினருக்கும் நியாயந் தேடிக் கொடுக்க வேண்டுமென்பதே காங்கிரஸின் ஆவல். காங்கிரஸ் வேலைத் திட்டத்தை நடை முறையில் கொணர்ந்தால், அதைக் கண்டு அஞ்ச அதில் என்ன இருக்கிறது என்று இந்தியாவிலுள்ள சிறு பான்மைச் சமூகத்தினர் அத்தனை பேரையும் நான் நேரடியாகக் கேட்கிறேன். பாரத சமுதாயத்தின் அரசியல் பொருளாதார உரிமைகளுக்கே காங்கிரஸ் இருக்கிறது. அது தன்னுடைய வேலைத் திட்டத்தை நடத்தி வைப்பதில் வெற்றி பெறுமானால் அதனால் ஏற்படும் நன்மையில் சிறு பான்மைச் சமூகத்தினருக்கும்பங்குண்டல்லவா? அரசியல் அதிகாரத்தைக்கைப் பற்றின பிறகு, அபேதவாத தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு தேசீயப் புனருத்தாரணம் நடை பெறுமானால்—அப்படித் தான் நடை பெறும் என்பதில் எனக்குச் சந்தேக மில்லை—அப்பொழுது பாமர ஜனங்கள் தான் அதிகமான நன்மை யடைவார்கள். ஒரே ஒரு விஷயத்தைப் பற்றி மட்டும் சிறுபான்மைச் சமூகத்தினர் கவலைப்படலாம். அதுதான் மதமும் அதனை ஒட்டியுள்ள கலைஞானமும். இந்த விஷயத்தில் காங்கிரசினுடைய கொள்கை 'வாழவும் வேண்டும், வாழ்விக்கவும் வேண்டும்' என்பதுதான். அதாவது மனச்சாட்சிப்படி நடப்பதிலோ, மதத்தை அநுசரிப்பதிலோ, கலைஞானத்தைப் பயில்வதிலோ அரசாங்

கம் கலையிடாது என்பதுதான். பாஷாவாரியாகப் பிரிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் அந்தந்த பாஷைக்குப் பூரண உரிமை யுண்டு. ஆதலின் இந்தியா சுதந்திரம் பெறுமானால், அதற்காக முஸ்லீம்கள் எவ்விதத்திலும் அஞ்ச வேண்டுவதில்லை. அதற்கு மாறாக அவர்களுக்கு அதிக லாபமே உண்டு. தாழ்ந்த வகுப்பினரின் மத, சமூக விஷயங்களில் சென்ற பதினேழு வருஷகாலமாகக் காங்கிரஸ் பெரிதும் பாடுபட்டு வந்திருக்கிறது. இவை சம்பந்தமாக அவர்களுக்கு ஏற்பட்டுள்ள குறைகளை நிவர்த்திக்க அது எல்லா வகையிலும் பாடுபட்டு வந்திருக்கிறது. இந்தக் குறைகளெல்லாம் கூடிய விரைவில் இறந்துபடும் என்று நான் நம்புகிறேன்.

சத்தியாக்கிரஹம்

அடுத்துவரும் வருஷங்களில் காங்கிரஸ் என்ன முறைகளைக் கையாள வேண்டும் என்பதைப் பற்றியும், தேசியப் போராட்டத்தில் அதன் பங்கு என்ன என்பதைப் பற்றியும் ஆலோசிக்கலாம். நம்முடைய முறை, சத்தியாக்கிரஹமாகத்தான் இருக்க வேண்டுமென்பது என்னுடைய திட நம்பிக்கை. அதாவது பலாத்காரமற்ற ஒத்துழையாமைதான். நம்முடைய முறையை 'சாத்வீக எதிர்ப்பு' என்று சொல்வது சரியல்ல. நானறிந்த வரையில் சத்தியாக்கிரஹம் என்றால் சாத்வீக எதிர்ப்பு மட்டுமல்ல; செயல் அளவிலும் பலாத்காரமற்ற முறையில் எதிர்ப்பது என்பதுதான். மீண்டும் சத்தியாக்கிரஹம் அல்லது பலாத்காரமற்ற ஒத்துழையாமையைத் தொடங்க வேண்டும் என்பதை நமது நாட்டாருக்கு நினைவூட்ட வேண்டுவது அவசியமா யிருக்கிறது. பரீட்சார்த்தமாக நாம் மாகாணங்களில் உத்தியோகத்தை ஏற்றுக்கொண்டுவிட்டதனால், நம்முடைய எதிர்கால வேலைத் திட்டங்களெல்லாம் சட்டவரம்புக்குட்பட்டதாகவே இருக்க வேண்டும் என்று நாம் நினைத்துவிடக் கூடாது. பலவந்தமாக சமஷ்டி அரசியல் திணிக்கப்படுமானால், அதனை எதிர்க்கும் முறையில் நாம் மீண்டும் மற்றொரு சட்டமறுப்பு இயக்கத்தில் இறங்கும்படி நேரிடலாம்.

நமது சுதந்திரப் போராட்டத்தில் நாம் இரண்டு வழிகளைப் பின்பற்றலாம். நாம் பூரண சுதந்திரம் பெறுகிறவரையில் போராடித் தீர்ப்பது என்று சங்கற்பித்துக் கொண்டு, போராடிச் சென்று கொண்டிருக்கும் மார்க்கத்திலே ஏதேனும் அதிகாரம் கிடைக்குமானால், அதனை உபயோகிக்க மறுக்கலாம். அல்லது பூரண சுயராஜ்யத்துக்காக நாம் போராடிக் கொண்டே நமது நிலைமையைச் சீர்படுத்திக் கொள்ளலாம். கொள்கையளவில் இந்த இரண்டு முறைகளும் ஏற்றுக் கொள்ளத் தக்கவைதான். எதற்கு முதல் ஸ்தானம் கொடுப்பது என்பதைப் பற்றி நாம் கவலைப் பட வேண்டியதில்லை. ஆனால், நமது போராட்டத்தின் ஒவ்வொரு நிலையிலும் இந்த இரண்டு முறைகளில் நமது முன்னேற்றத்திற்கு எது அதிகமாகத் துணை செய்யும் என்பதை யோசனை செய்யவேண்டும். இதில் எதைப் பின்பற்றினாலும், நமது முன்னேற்றத்தின் கடைசி நிலையானது பிரிட்டிஷ் தொடர்பினின்று அற்றுக் கொள்வதுதான். அந்தத் தொடர்பற்ற நிலை ஏற்பட்ட பிறகு—பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் ஒரு அடையாளங் கூட இல்லாமற் போன பிறகு, இருதரப்பினரும் மனமொத்துப் பரஸ்பரம் ஒப்பந்தம்

செய்து கொள்கிற முறையில் கிரேட் பிரிட்டனுடன் நம்முடைய எதிர் காலத்தொடர்பு இருக்கும். எதிர் காலத்தில் கிரேட் பிரிட்டனுக்கும் நமக்கும் எத்தகைய தொடர்பு இருக்கும், என்ன மாதிரி இருக்க வேண்டும், என்பதைப் பற்றி நிர்ணயித்துச் சொல்வதற்கு இன்னும் காலம் வர வில்லை. அது பெரும்பாலும் பிரிட்டிஷ் ஜனங்களின் மனப் போக்கைப் பொறுத்திருக்கிறது. இது விஷயத்தில் அயர்லாந்தின் தலைவராகிய டிவேலரா காட்டிய மனப் பான்மை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. அவர் கூறுவது போல் நானும், பிரிட்டிஷ் ஜனங்களிடத்தில் நமக்குப் பகைமை இல்லை என்று கூறுகிறேன். கிரேட் பிரிட்டனோடு தான் நாம் போராடுகிறோம். அதற்கும் நமக்கும் எதிர் காலத்தில் எத்தகைய தொடர்பு இருக்க வேண்டும் என்பதை நிர்ணயிக்கும் உரிமை நமக்கு வேண்டும் என்று கூறுகிறோம். நாம் சுய நிர்ணய உரிமையை உண்மையிலேயே பெற்றுவிட்ட பிறகு பிரிட்டிஷ் ஜனங்களுடன் சௌஜன்யமான சம்பந்தம் ஏன் இருக்கக் கூடாது?

நமது தேசீயப் போராட்டத்தின் சரித்திரத்தில் காங்கிரஸின் ஸ்தானம் எங்கே என்பதைப் பற்றி, காங்கிரஸ்காரர் பலருடைய மனத்தில் இன்னும் தெளிவு ஏற்படவில்லையென்று நான் அஞ்சுகிறேன். சுதந்திரம் பெற்றுவிட்ட பிறகு, காங்கிரஸ் கட்சியானது அதன் லட்சியத்தை அடைந்து விட்ட காரணத்துக்காக அது கலைக்கப்பட வேண்டுமென்று ஒரு சில நண்பர்கள் நினைக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். இந்த எண்ணம் தவறு. எந்தக் கட்சியானது இந்தியா சுதந்திரம் பெறுவதற்குக் காரணமாயிருந்ததோ அதுவே தேசத்தின் புனருத்தாரண வேலைத் திட்டத்தையும் நடத்தி வைக்க வேண்டும். அதிகாரத்தைச் சம்பாதித்தவர்களுக்குத்தான் அதனைச் சரியாக உபயோகிக்கத் தெரியும். அதிகாரத்தைப் பெறும் முயற்சியில் சம்பந்தப்படாதவர்களை அந்த அதிகார ஸ்தாபனங்களில் கொண்டு விட்டால், அவர்களுக்குத் தேசிய வாழ்வின் லட்சியமென்ன, அதனை அடையும் மார்க்கங்கள் யாவை என்பன தெரியாது. இவற்றிற்கு வேண்டிய தன்னம்பிக்கையும் அவர்களிடத்திலே இராது. குறுகலான மாகாணப் பொறுப்பாட்சித் திட்டத்தில் கூட, காங்கிரஸ் மந்திரிகள் செய்துள்ள வேலைக்கும், காங்கிரஸ் அல்லாத மந்திரிகள் செய்துள்ள வேலைக்கும் உள்ள வேற்றுமையை இந்தக் கண் கொண்டு பார்த்தால் வேற்றுமை நன்கு புலனாகும்.

சுதந்திரம் பெற்ற பிறகு

அரசியல் சுதந்திரம் பெற்ற பிறகு காங்கிரஸ் கட்சி கலைந்து போவதா? இல்லை. முக்காலுமில்லை. அதற்கு மாறாக இந்தக் கட்சி, அதிகாரத்தையும் நிர்வாகப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டு தன்னுடைய நிர்மாண வேலைத் திட்டத்தை நடைமுறையில் கொண்டு வர வேண்டும். அப்பொழுதுதான் காங்கிரஸ் கட்சி தன்னுடைய ஸ்தானத்தைக் கௌரவமாக வகித்ததுபோலாகும். அப்படிக்கின்றி இந்தக் கட்சி பலவந்தமாகக் கலைக்கப் பட்டுவிடுமானால் குழப்பந்தான் உண்டாகும். ஐரோப்பிய மகா யுத்தத்துக்குப் பிறகு ஒழுங்கான முன்னேற்றத்தைக் கண்டுள்ள எல்லா நாடுகளிலும், எந்தக் கட்சியானது அதிகாரத்தைக் கைப்பற்றியதோ அந்தக் கட்சிதான் தேசியப் புனருத்

தாரண வேலையிலும் ஈடுபட்டிருக்கிறது. இந்த மாதிரியான நிலைமையில் ஒரு கட்சி, அரசாங்கத்தின் பின்பலமாக இருக்குமானால், அந்தக் கட்சியும் அரசாங்கமும் ஒன்று பட்டுவிடும் என்று சிலர் சொல்லலாம். இதனை நான் ஏற்றுக் கொள்ள முடியாது. ருஷ்யா, ஜெர்மனி, இத்தலி ஆகிய நாடுகளில் உள்ளதைப்போல் ஒரு கட்சி மட்டும் இருக்குமானால், அந்தக் கட்சியே அரசாங்கமாக மாறிவிடும் என்பதை நான் ஒத்துக் கொள்ளுகிறேன். ஆனால் மற்றக் கட்சிகள், ஏன் தடுக்கப்பட வேண்டும்? மற்றும் நாஜிக் கட்சியைப்போலல்லாமல் நமது கட்சி, ஜனநாயக தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு அமைதல் வேண்டும். ஒரு கட்சிக்குமேல் பல கட்சிகள் இருப்பதனாலும், காங்கிரஸ் கட்சியை ஜனநாயக முறை கொண்டு அமைப்பதனாலும், இந்தியா வருங்காலத்தில் ஒரு சர்வாதிகார நாடாக அமையாமலிருக்கும். தவிர, கட்சியின் ஜனநாயகக் கொள்கைக்கு இணங்கத் தலைவர்கள் ஜனங்களிடம் கொண்டு திணிக்கப்படமாட்டார்கள்; ஆனால், ஜனங்களால் தெரிந்தெடுக்கப்படுவார்கள்.

முன்னேற்றத் திட்டங்கள்

எதிர்காலத்தில் நம்முடைய புனருத்தாரண வேலைத் திட்டம் எத்தகையதா யிருக்கவேண்டும் என்பதைப்பற்றி விவரமாகச் சொல்வது இப்பொழுது முடியாதாயினும், நமது எதிர்கால சமுதாயப் புனர் அமைப்பு எந்தக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும் என்பதைப்பற்றிச் சிறிது ஆலோசிப்போம். அபேதவாத முறைகளில் தான் நமது நாட்டின் வறுமை, அறியாமை, நோய் முதலியவற்றை அகற்ற முடியுமென்பதிலும், சாஸ்திர ரீதியில் பொருளுற்பத்தி செய்து அதனை விநியோகிக்க வேண்டுமென்பதிலும் எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை. எதிர்காலத்தில் அமையப்போகிற தேசிய அரசாங்கத்தின் முதல் வேலையானது தேசிய புனருத்தாரணத்திற்கு விரிவான திட்டம் ஒன்று வகுக்க ஒரு கமிஷனை நியமிக்க வேண்டுவதாகும். இந்த வேலைத் திட்டம் இரண்டு பாகங்களாக இருக்கும். ஒன்று உடனே கவனிக்கவேண்டிய வேலைகள்; மற்றொன்று காலக் கிரமத்தில் கவனிக்கவேண்டியவை. இந்த முதல் பாகத்தை நாம் தயாரிக்கும்பொழுது மூன்று விதமான நோக்கங்கள் நமக்கு இருக்கவேண்டும். முதலாவது தேசத்தைத் தியாகத்துக்குத் தயார்ப்படுத்த வேண்டும். இரண்டாவது இந்தியாவை ஒற்றுமைப் படுத்த வேண்டும். மூன்றாவது பிரதேச வாரியாகக் கலைஞானத்திற்கும் மற்றவைகளுக்கும் பூரண உரிமை கொடுக்கப்பட வேண்டும். இந்த இரண்டாவது மூன்றாவது நோக்கங்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்டவையாகத் தோன்றலாம். ஆனால் உண்மையில் அப்படியில்லை. நம்மிடத்தில் ஏதேனும் அரசியல் ஞானமோ, திறமையோ இருக்குமானால், அதனை இந்த இரண்டு நோக்கங்களையும் ஒன்று படுத்தும் முயற்சியிலேயே செலவழிக்க வேண்டும். இந்தியாவை அந்நிய நாட்டுப் படையெடுப்பி னின்று பாதுகாக்க அதனை ஒற்றுமைப் படுத்தவேண்டும். பலமான ஒரு மத்திய அரசாங்கத்தின் மூலமாக, தேசத்தை ஒன்று படுத்துவதோடுகூட, மாகாணங்களுக்குக் கலைஞான விஷயங்களிலும் அர

சாங்க விஷயங்களிலும் பூரண உரிமை கொடுத்து அவைகளைத் திருப்திப் படுத்த வேண்டும். அந்நிய ஆட்சியானது, நமது ஜனங்களை ஒழுக்கமின்றியும், ஒற்றுமையின்றியும் செய்து விட்டபடியால், அந்த அந்நிய ஆட்சியானது விலகியவுடனே, நமது ஜனங்களை ஒன்றுபடுத்தி வைக்கிற விஷயத்தில் நாம் அதிகமான முயற்சிகள் எடுத்துக் கொள்ளவேண்டும். தேசிய ஒற்றுமையை வளர்க்க வேண்டுமானால் நாம், ராஷ்ட்ர பாஷையையும், பொதுவான ஓர் எழுத்தையும் நடைமுறையில் கொணர முயற்சி செய்ய வேண்டும். தவிர, நவீன சாதனங்களாகிய ஆகாய விமானம், டெலிபோன், ரேடியோ, சினிமா, தூரதரிசினிப்படம் முதலியவைகளைக் கொண்டு இந்தியாவின் பல பாகங்களையும் நாம் இன்னும் நெருக்கமாகக் கொணர வேண்டும். எல்லாருக்கும் பொதுப்படையான ஒரு கல்வித் திட்டத்தினால், அகில இந்திய ஜனங்ளிடத்தில் ஒன்றுபட்ட உணர்ச்சியை உண்டுபண்ணவேண்டும்.

ராஷ்ட்ர பாஷை

நமது ராஷ்ட்ர பாஷையைப் பொறுத்தமட்டில், ஹிந்தியென்றும் உருதுவென்றும் கற்பிக்கப்படுகிற வேற்றுமை யெல்லாம் செயற்கையென்றே நான் கருதுகிறேன். இயற்கையாகவே அமையக்கூடிய ராஷ்ட்ர பாஷையானது, இந்த இரண்டு பாஷைகளும் கலந்ததாய், தேசத்தின் பெரும்பாலான மக்களால் தினசரி பேசக்கூடிய பாஷையாய் இருக்க வேண்டும். இந்தப் பாஷையை நாகரியிலோ உருதுவிலோ எழுதலாம். இந்த இரண்டு எழுத்துக்களில் ஏதேனும் ஒன்றைத்தான் உபயோகிக்க வேண்டும் என்று சொல்கிறவர்கள் இருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். ஒன்றையே ஆதரிக்கக்கூடியதாக நமது கொள்கை இருக்கக்கூடாது. இரண்டு எழுத்துக்களும் உபயோகிக்கப்பட நாம் இடங்கொடுக்கவேண்டும். ஆனால் இதே சமயத்தில், உலகத்தாரோடு ஒட்டி வாழ்வதற்கு அநுகூலமாக, நாம் எல்லாருக்கும் பொதுவான ஓர் எழுத்தை உபயோகித்துக்கொள்ள முயற்சி செய்ய வேண்டும். இதுதான், எழுத்துக்களைப்பற்றி எழுந்துள்ள பிரச்னைகளைத் தீர்ப்பதற்குரிய பரிகாரம். எல்லாப் பாஷைகளுக்கும் பொதுவாக ரோம எழுத்துக்களை உபயோகிக்க வேண்டுமென்று நான் சொன்னால் அதைக் கேட்டுப் பலர் நமது நாட்டில் திடுக்கிடக்கூடும். இந்த ரோம எழுத்துப் பிரச்னையை, சாஸ்திர ரீதியாகவும் சரித்திர ரீதியாகவும் கவனிக்க வேண்டுமென்று எனது சகோதரர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அப்படிக் கவனித்துப் பார்த்தோமானால், எந்த எழுத்திலும் ஒரு புனிதத் தன்மை இல்லையென்பதை நாம் உணர்வோம். இப்பொழுது நமது அநுஷ்டானத்திலிருக்கிற நாகரி எழுத்து பல மாற்றங்களை அடைந்திருக்கிறது. தவிர, இந்தியாவின் பெரிய மாகாணங்கள் பலவற்றிலும் அந்தந்த மாகாணத்திற்குரிய எழுத்துக்களே உபயோகிக்கப் படுகின்றன. உருது பாஷையைப் பேசுகிற எல்லா ஜனங்களும் உருது எழுத்துக்களையே உபயோகிக்கிறார்கள். இன்னும், பஞ்சாப், சிந்து ஆகிய இரு மாகாணங்களிலுமுள்ள ஹிந்துக்களும் முஸ்லீம்களும் உருது எழுத்துக்களையே உபயோகிக்கிறார்கள். இந்தமாதிரி பல வேற்றுமைகள் இருப்பதினால், இந்தியாவுக்குப்

பொதுவான எழுத்து இன்னதென்பதை நாம், எவ்வித விருப்பு வெறுப்பின்றியும் சாஸ்திர ரீதியாகவும் இருந்து ஆலோசித்து முடிவுகட்ட வேண்டும். இந்தமாதிரி ஓர் அந்நிய எழுத்தை உபயோகிப்பது தேசியத்திற்கு விரோதமென்று நான் ஒரு காலத்தில் அபிப்பிராயப்பட்டேன். ஆனால் 1934-ம் வருஷம் நான் துருக்கிக்குப் போய் வந்தபிறகு, இந்த அபிப்பிராயத்தை மாற்றிக் கொண்டேன். உலகத்தின் பல பாகங்களிலும் அனுஷ்டிக்கப்படுகிற ஒரே எழுத்தை நாமும் உபயோகப்படுத்துவதனால் என்னென்ன சாதகங்கள் உண்டு என்பதை அப்பொழுது நான் நன்கு உணர்ந்தேன். நமது நாட்டுப் பாமர ஜனங்களில் 100-க்கு 90 பேர் கல்வி வாசனை யில்லாதவர்கள். அவர்களுக்கு எந்தவிதமான எழுத்தும் தெரியாது. இதனால், நாம் எந்த எழுத்தை அநுஷ்டானத்திற்குக் கொண்டுவந்தாலும், அதனால் அவர்களுடைய படிப்புக்கு அது தடையாயிராது. ரோம எழுத்துக்களை அவர்கள் கற்றுக்கொண்டால், அவர்கள் ஏதேனும் ஓர் ஐரோப்பிய பாஷையைக் கற்றுக் கொள்வதற்கும் அநுகூலமாயிருக்கும். ரோம எழுத்துக்களை உடனே அநுஷ்டானத்திற்குக் கொண்டுவந்தால், அதனை ஜனங்கள் எவ்வளவு தூரம் வெறுப்பார்கள் என்பதை நான் அறிவேன். ஆனால், நாளாவட்டத்தில் எந்த எழுத்தை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவந்தால் நன்மை பயக்கும் என்பதை எனது நாட்டார் ஆலோசித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொருளாதாரத் திட்டங்கள்

இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு, காலக் கிராமத்தில் நாம் செய்ய வேண்டிய புனருத்தாரண வேலைத் திட்டங்களில் முதன்மையானது என்னவென்றால், பெருகிக்கொண்டே போகும் நமது தேசத்தின் ஜனத்தொகையைப்பற்றிக் கவனஞ்செலுத்துவதேயாகும். இந்தியாவின் விஸ்தீரணத்திற்குத் தக்கபடி ஜனத்தொகை அதிகமா இல்லையா என்ற ஏட்டுவாதத்தில் நான் நுழைய விரும்பவில்லை. ஆனால் ஒன்றுமட்டும் கூற விரும்புகிறேன். நமது நாட்டில் வறுமை, பசிப்பிணி, நோய் முதலியன உறுத்துப் பார்த்துக்கொண்டிருக்கும்போது, நாம் ஒரு பத்து வருஷ காலத்திற்குள் மூன்று கோடி வீதம் ஜனத்தொகையைப் பெருக்கிக் கொண்டு போகமுடியாது. ஏற்கனவேயுள்ளவர்களுக்கு உணவும், உடையும், கல்வியும் அளிக்கக்கூடிய சக்தியை நாம் பெறும் வரையில், நமது ஜனத்தொகைப் பெருக்கத்தைச் சுருக்கிக் கொள்வது நல்லது. ஜனப் பெருக்கத்தைத் தடுப்பதற்கு என்னென்ன மார்க்கங்கள் உண்டு என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் விவரித்துக்கொண்டு போதல் சரியல்ல. ஆனால் இந்த விஷயத்தில் பொது ஜனங்கள் கவனஞ் செலுத்துதல் நல்லது.

புனருத்தாரண திட்டத்தில் மற்றொரு முக்கியமான பிரச்னை யென்னவென்றால், தேசத்திலிருந்து வறுமையை எப்படி ஓட்டுவது என்பதை கவனிக்கும் பிரச்னையாகும். இதற்கு ஜமீன்தாரி முறை உள்பட நில விஷயமாக பரிபூர்ண மாற்றங்கள் ஏற்படுத்துவது அவசியமாகும். விவசாயிகளின் கடன் சுமையைக் குறைக்க வேண்டும். கிராமவாசிகளுக்குச் சுலபமான முறையில் கடன் கிடைக்குமாறு செய்யவேண்டும். கூட்டுறவு

இயக்கத்தை விசாலப்படுத்த வேண்டும். இது பொருள் உற்பத்தி செய்வோருக்கும், பொருள்களை வாங்குவோர்களுக்கும் அநுகூலமாயிருக்கும். நிலத்திலிருந்து அதிகமான பொருளை உற்பத்தி செய்யவேண்டி, விவசாயத்தைச் சாஸ்திர ரீதியாக அமைக்கவேண்டும்.

பொருளாதாரப் பிரச்னையைத் தீர்க்க வேண்டுமானால், விவசாய அபிவிருத்திமட்டும் போதாது. அரசாங்க நிருவாகத்தின் கீழ் விரிவான ஒரு கைத்தொழில் திட்டம் அமைக்கப்படவேண்டும். அந்நிய நாடுகளில் பெருவாரியாகப் பொருளுற்பத்தி செய்வதனாலும், உள் நாட்டிலே அந்நிய ஆதிக்கத்தினாலும் சீரழிந்து போன கைத்தொழிற் திட்டத்தை மாற்றிவிட்டுப் புதிய முறையில் கைத்தொழில் திட்டத்தை அமைக்க வேண்டும். எங்கெந்த தொழில்களை குடிசைத் தொழில்களாக ஆதரிக்கவேண்டும், எங்கெந்த தொழில்களைப் பெருவாரியாக உற்பத்தி செய்யவேண்டுமென்பதை, ஒரு கமிஷன் நியமித்து அதன்மூலமாக நிர்ணயஞ் செய்துகொள்ள வேண்டும். தற்காலக் கைத்தொழில் முறைகளையும் அதன் விளைவாக ஏற்படும் தீமைகளையும் நாம் எவ்வளவு கண்டித்தபோதிலுங்கூட, நாம் பழையகாலத்திற்குச் செல்ல முடியாது. நாம் விரும்பினால்கூட அந்தக் காலம் வராது. ஆகையால், கைத்தொழில் நாகரிகத்திற்கு நாம் இணங்கிப் போகவேண்டியதுதான். அதனால் விளையும் தீமைகளைக் குறைக்கவும், அதே சமயத்தில் குடிசைத் தொழில்களை ஆதரிக்கவும் நாம் சில ஏற்பாடுகளைச் செய்துகொள்ள வேண்டும். இந்தியாவில் குடிசைத் தொழில்கள் அபிவிருத்தியடைய ஏராளமான அநுகூலங்கள் இருக்கின்றன. சிறப்பாக, விவசாயத்திற்கனுகுணமான நூல் நூற்றல், நெசவுத் தொழில் முதலியவற்றில் அதிகமான அபிவிருத்தி காண இடமிருக்கிறது.

இறுதியாக, ஆனால் முக்கியமாக, மேற்படி புனருத்தாரண வேலைத் திட்டத்தை அமைத்துக் கொடுக்கும் கமிஷனானது, நமது விவசாயத்தையும் கைத்தொழில்களையும் அபேதவாத முறையில் அமைத்து வைக்க ஏற்பாடுகள் செய்து கொடுக்க வேண்டும். இவற்றிற்காக அதிகமான மூலதனம் தேட வேண்டும். உள் நாட்டிலோ வெளி நாட்டிலோ கடன்கள் வாங்குவதன் மூலமாகவோ, அல்லது நாணய மதிப்பை அதிகப் படுத்துவதன் மூலமாகவோ, இந்த மூலதனத்திற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

உத்தியோக வருக்கம்

இந்தியாவிலுள்ள பதினொரு மாகாணங்களில் ஏழு மாகாணங்களில் காங்கிரஸ் கட்சியினர் நிருவாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறபடியால் இப்பொழுதுள்ள அரசியல் சட்டத்தின் மாகாணப் பொறுப்பாட்சித் திட்டத்தை எதிர்ப்பது இனி முடியாத காரியம். இந்த உத்தியோகம் ஏற்றுக் கொண்டதன் விளைவாக, காங்கிரஸை நாம் வலுப்படுத்தப் பார்க்க வேண்டும். காங்கிரஸ் கட்சியினர் உத்தியோகங்களை ஏற்றுக் கொள்ளக் கூடாதென்ற கொள்கையுடையவன் நான். அப்படி உத்தியோகம் ஏற்றுக் கொள்வது தவறு என்று நான் சொல்லவில்லை. அதனால் நன்மை உண்டாகாது என்றும் நான் சொல்லவில்லை. ஆனால் உத்தியோகம் ஏற்றுக் கொள்வதனாலுண்டாகும் நன்மைகளை விட தீமைகள் அதிகமாக உண்டாகும் என்று நான் அஞ்சுகிறேன்.

என்னுடைய அச்சத்துக்கு எவ்வித ஆதாரமுமில்லை யென்று தான் இன்று நான் நம்புகிறேன்.

காங்கிரஸ் கட்சி மந்திரிகள் உத்தியோகத்திலிருக்கும் போது, காங்கிரஸை எங்ஙனம் வலுப்படுத்துவது? முதலாவது அதிகார வர்க்கத்தின் அமைப்பையும் தன்மையையும் நாம் மாற்ற வேண்டும். இதைச் செய்யா விட்டால், காங்கிரஸ் கட்சிக்குத் துன்பந்தான் நேரிடும். ஒவ்வொரு நாட்டு அரசியலிலும் மந்திரிகள் வந்து கொண்டும் போய்க் கொண்டு மிருக்கிறார்கள். ஆனால் 'எஃகுச் சட்டம்' என்று சொல்லப்பட்ட நிரந்தர ஊழியர்கள் சாசுவதமாகவே இருக்கிறார்கள். இந்த உத்தியோக வருக்கத்தின் அமைப்பையும் தன்மையையும் நாம் மாற்றி யமைக்கா விட்டால், அரசாங்கக் கட்சியினரும் மந்திரிச் சபையும் தங்கள் கொள்கைகளை நடைமுறையில் கொணரச் சிரமப் படுவார்கள். ஐரோப்பிய யுத்தத்திற்குப் பிறகு, ஜெர்மனியில் அரசாங்க நிருவாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட அபேதவாத ஜன நாயகக் கட்சிக்கும், இங்கிலாந்தில் 1924ம் வருஷத்திலும் 1929ம் வருஷத்திலும் தொழிற் கட்சிக்கும் இந்தக் கதி தான் ஏற்பட்டது. ஒரு நாட்டை உண்மையிலேயே ஆள்வோர் நிரந்தர ஊழியர்கள் தான். இந்தியாவிலே, இந்த உயர்தர உத்தியோகம் பிரிட்டிஷாரால் சிருஷ்டிக்கப் பட்டது. இவற்றில் பெரும்பாலனவற்றுள் ஐரோப்பியர்களே இருக்கிறார்கள். இவர்களுடைய திருஷ்டியும் மனப் போக்கும் இந்தியத் தன்மையாகவும் இல்லை; தேசிய மாகவுமில்லை. தேசியக் கொள்கை யொன்றை நடைமுறையில் கொண்டு வர வேண்டுமானால், நிரந்தர உத்தியோகஸ்தர்களுடைய திருஷ்டியும், மனப் போக்கும் தேசியமாகவே இருக்க வேண்டும். ஆனால் இந்த உத்தியோக வருக்கத்தை மாற்றி யமைப்பதில் கஷ்டம் இருக்கவே இருக்கிறது. ஏனென்றால், உயர்தர உத்தியோகங்கள் யாவும் இந்தியா மந்திரியின் நேரான ஆதிக்கத்தின் கீழ் இருக்கின்றன; மாகாண அரசாங்கத்தின் கீழ் இல்லை.

நிர்மாண வேலைகள்

மாகாணங்களிலுள்ள காங்கிரஸ் மந்திரிகள், கல்வி, சுகாதாரம், மதுவிலக்கு, சிறைச்சாலைச் சீர்திருத்தம், நீர்ப் பாசனம், கைத் தொழில், நிலச் சீர்திருத்தம், தொழிலாளர் நலன் முதலியவை சம்பந்தமாக அநேக சீர்திருத்தத் திட்டங்களை நடைமுறையில் கொண்டு வர வேண்டும். இந்தப் புனருத்தாரண திட்டங்கள், ஏறக்குறைய இந்தியா அனைத்திற்கும் பொதுவான திட்டங்களாக இருத்தல் வேண்டும். இங்ஙனம் பொதுவான திட்டங்களைக் கொண்டு வருதல் இரண்டு வழிகளில் சாத்தியமாகும். 1937ம் வருஷம் அக்டோபர் மாதம் கல்கத்தாவில், எல்லா மாகாணத் தொழில் மந்திரிகளும் ஒன்று கூடின மாதிரி, எல்லா மாகாண மந்திரிகளும் ஒன்று கூடி பொதுவான திட்டங்களை வகுத்துக் கொள்ளலாம். இரண்டாவது, காங்கிரஸ் காரியக் கமிட்டியானது, காங்கிரஸின் நிருவாக சபை என்ற தோரணையில், தன்னுடைய நிபுணர்களின் ஆலோசனைகளைக் கொண்டு, எல்லா மாகாண அரசாங்கங்களுக்கும் பொதுப் படையான திட்டங்கள் வகுத்துக் கொடுக்க உதவி செய்யலாம். இதனால், ஒவ்வொரு மாகாண அரசாங்கத்தின் நிருவாகத்தில் வரும் எல்லாப் பிரச்னைக

லையும் காரியக் கமிட்டி அங்கத்தினர்கள் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். இவர்கள் நிருவாக விவரங்களில் புக வேண்டுமென்று நான் சொல்லவில்லை. பொதுவாக, எல்லா மாகாணங்களிலும் என்னென்ன பிரச்னைகள் முக்கியமானவையா யிருக்கின்றன வென்பதை அவர்கள் தெரிந்துகொண்டால் அகில இந்தியாவுக்கும் பொதுவான ஒரு வேலைத் திட்டத்தை வகுத்துக் கொடுக்க அவர்களால் முடியும். இந்த விஷயத்தில், காங்கிரஸ் காரியக் கமிட்டியானது, இது வரையில் செய்து வந்ததை விட இன்னும் அதிகமாகச் செய்ய வேண்டும். அப்படி அது செய்யா விட்டால், பல மாகாணங்களிலுமுள்ள காங்கிரஸ் மந்திரிமார்களின் நிருவாகத்தை எப்படி தணிக்கை செய்ய முடியும்?

இந்தச் சமயத்தில், காங்கிரஸ் காரியக் கமிட்டியினுடைய ஸ்தானம் என்ன வென்பதைச் சிறிது விளக்கிக் கூற விரும்புகிறேன். இந்தக் காரியக் கமிட்டியானது, நமது சுதந்திரத்திற்காகப் போர் புரியும் வீரர்களின் சைன்னியத்தை நடத்திச் செல்கிற ஒரு தலைமை ஸ்தாபனம் மட்டுமன்று. சுதந்திர இந்தியாவிலே ஏற்படப் போகிற மந்திரிச் சபையின் ஒரு சாயலாகவும் இஃது இருக்கிறது. அந்த முறையில்தான் இது வேலை செய்ய வேண்டும். இப்படி நான் சொல்வது என் சொந்தக் கற்பனையினா லல்ல. தேசிய விடுதலைக்காக மற்ற நாடுகளில் போராட்டங்கள் நடத்தின ஸ்தாபனங்களிலும் இப்படித் தான் நடை பெற்றிருக்கிறது. வருங்கால இந்தியாவைச் சுதந்திர இந்தியாவாகவே நான் பார்க்கிறேன். இந்த நாட்டிலே, நமது தலை முறைக்குள்ளேயே தேசிய அரசாங்கம் ஏற்படப் போகிறதென்று நினைக்கிறவர்களில் நான் ஒருவன். ஆகையால், காங்கிரஸ் காரியக் கமிட்டியானது, வருங்கால சுதந்திர இந்தியாவில் அமையப்போகிற மந்திரிச் சபையின் சாயையாக இருக்கவேண்டுமென்று கருதி அப்படியே வேலை செய்ய வேண்டுமென்று நாம் கருதுவது சகஜந்தான். அயர்லாந்தில் டிவேலராவின் குடியரசு அரசாங்கமானது, பிரிட்டிஷ் அரசாங்கத்தோடு போராடிக்கொண்டிருக்கையில் இதே மாதிரிதான் செய்துகொண்டுவந்தது. எகிப்திலும் வாப்து கட்சியினர், மந்திரிப் பதவிகளை ஏற்றுக் கொள்வதற்கு முன்னர் இப்படித் தான் செய்து கொண்டு வந்தனர். ஆகையினால், காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினர்கள், அன்றாட காங்கிரஸ் வேலைகளைக் கவனிப்பதோடு கூட, தாங்கள் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிய பிறகு, என்னென்ன பிரச்னைகளைக் கவனிக்க வேண்டுமென்பதையும் இப்பொழுது முதலே பரிசீலனை செய்து கொண்டு வர வேண்டும்.

சமஷ்டிக்கு எதிர்ப்பு

மாகாணங்களிலுள்ள காங்கிரஸ் அரசாங்கங்கள் சரியானபடி வேலை செய்கின்றனவா என்பதைப் பற்றிய பிரச்னையை விட முக்கியமான பிரச்னையானது என்ன வென்றால், புதிய அரசியல் சட்டத்தில் காணப் பெற்றுள்ள சமஷ்டி திட்டத்தை எப்படி எதிர்த்துப் போராடுவது என்பது மிகவும் முக்கியமான பிரச்னை. இந்தச் சமஷ்டி திட்டத்தைப் பற்றிக் காங்கிரஸின் கொள்கை என்ன வென்பது, 4-2-1938ல் வார்தாவில் கூடிய காங்கிரஸ் காரியக் கமிட்டி நிறைவேற்றிய தீர்மானத்திலிருந்து தெரியும். இந்தத் தீர்மானம், விஷயாலோசனைக் கமிட்டிக்கு முன்

னர் வந்து, பிறகு இந்தக் காங்கிரஸ் முன்னிலையிலும் வரும். இந்தத் தீர்மானம் என்ன கூறுகிறதென்றால்:—

'காங்கிரஸானது புதிய அரசியல் சட்டத்தை நிராகரித்து விட்டது. இந்தியாவுக்கென்று இந்திய மகா ஜனங்களால் அங்கீகரிக்கப்பட வேண்டிய அரசியல் சட்டமானது, பூர்ண சுதந்திரத்தை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். அந்நிய அதிகாரத்தின் எவ்விதத் தலையீடுமின்றி, ஜனங்களால் தெரிந்தெடுக்கப்படுகிற ஜனப்பிரதிநிதி சபையே இந்த அரசியல் சட்டத்தைத் தயாரிக்க வேண்டும். புதிய சட்டத்தை நிராகரிக்கிறது என்ற கொள்கையை விட்டுக் கொடாமல், காங்கிரஸானது, தேசத்தின் சுதந்திரப் போராட்டத்தை வலுப்படுத்த, மாகாணங்களில் காங்கிரஸ் கட்சியினர் மந்திரிப் பதவிகளை ஏற்றுக் கொள்ளுமாறு அநுமதித்திருக்கிறது. சமஷ்டியைப் பொறுத்த மட்டில், தற்காலிகமாக உத்தியோகங்களை ஏற்றுக் கொள்ளலாமென்ற பிரச்னை கூட வரவில்லை. இந்தச் சமஷ்டியானது, இந்தியாவுக்குப் பல தீங்குகளை விளைவிக்கும் என்றும், ஏகாதிபத்திய ஆக்ரமிப்பை இன்னும் வலுப்படுத்துமென்றும் காங்கிரஸ் கருதுகிறது. ஓர் அரசாங்கம் செய்ய வேண்டிய முக்கியமான கடமைகளையெல்லாம், இந்தச் சமஷ்டி திட்டமானது, தன் பொறுப்பிலிருந்து கழித்து விட்டிருக்கிறது.

சமஷ்டி தத்துவத்தை இந்தக் காங்கிரஸ் எதிர்க்கவில்லை. ஆனால் உண்மையான சமஷ்டி எப்படி இருக்க வேண்டுமென்றால், ஜன நாயக முறைப்படி தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளடங்கியதாயும், சம அந்தஸ்தும் சம உரிமையும் உடைய சுதந்திரப் பிரதேசங்கள் ஒன்று சேர்ந்ததாயும் இருக்க வேண்டும். சமஷ்டியிலே சேருகிற சுதேச சமஸ்தானங்கள், ஜனப் பிரதிநிதி ஸ்தாபனங்களையும் பொறுப்பாட்சியையும் பிரஜா உரிமையையும் கொண்டிருப்பதோடு, சமஷ்டி சட்ட சபைக்கு ஜன நாயக முறையில் பிரதிநிதிகளை அனுப்பக் கூடியனவாகவும் இருக்க வேண்டும். அப்படிக்கின்றி, இப்பொழுது யோசிக்கப்படுவதுபோல் சமஷ்டி திட்டம் புகுத்தப்படுமானால், இந்தியாவில் ஒற்றுமை ஏற்படுவதற்குப் பதிலாக வேற்றுமை உணர்ச்சிகள் ஏற்படுவதோடு, தேசத்திற்கு உள்ளும் புறம்பும் பல போராட்டங்கள் ஏற்படும்.

ஆகலின், சமஷ்டியைக் காங்கிரஸ் நிராகரிக்கிறது என்பதை இந்தக் கமிட்டி மீண்டும் வலியுறுத்துகிறது.

இதனை நடைமுறையில் கொணராதபடி தடுக்க வேண்டுமென்று மாகாண, ஸ்தல, காங்கிரஸ் கமிட்டிகளுக்கும், பொதுவாக ஜனங்களுக்கும், மாகாண அரசாங்கங்களுக்கும், மந்திரிகளுக்கும் கூறுகிறது.

ஜன சக்தியைப் புறக்கணித்து அப்படி இந்தச் சமஷ்டியைத் திணிக்க முயற்சி செய்யப் படுமானால், அந்த முயற்சியை எல்லா வகையிலும் எதிர்க்க வேண்டும். மாகாண அரசாங்கங்களும், மந்திரிச் சபைகளும் அதனுடன் ஒத்துழைக்க மறுக்க வேண்டும்.

அப்படிப்பட்ட நிலைமை ஏற்படுமானால், அப்பொழுது எந்த மாதிரி நடந்து கொள்ள வேண்டுமென்பதை நிர்ணயித்து நடத்த அ. இ. கா. கமிட்டிக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.'

ஏன் எதிர்க்கிறோம்?

சமஷ்டி திட்டத்தை நாம் ஏன் எதிர்க்கிறோம் என்பதற்கு நான் இன்னும் சில காரணங்களைச் சொல்ல விரும்புகிறேன். சமஷ்டி திட்டத்தில் உள்ள ஆட்சேபகரமான அம்சங்களுள் ஒன்று வியாபார சம்பந்தமாகவும் பணப் பொறுப்புச் சம்பந்தமாகவும் உள்ள பாது காப்புகள். தேசப் பாது காப்புச் சம்பந்தமாகவும், அந்நிய நாடுகளுடன் கொள்ளவேண்டிய உறவு சம்பந்தமாகவும், ஜனங்களுக்கு இப்பொழு துள்ளதைப்போலவே அப்பொழுதும் அதிகாரம் இராது. தவிர, அரசாங்கச் செலவின் பெரும்பாகம் ஜனப் பிரதிநிதிகளின் நிருவாகத்திற் குட்பட்டிராது. 1937–38ம் வருஷத்து இந்தியா அரசாங்க வரவுசெலவுத் திட்டத்தில் மொத்தச் செலவு 77.90 கோடி ரூபாய். இதில் ராணுவச் செலவு மட்டும் 44.61 கோடி ரூபாய் என்று திட்டம் போடப் பட்டிருக்கிறது. அதாவது இந்தியா அரசாங்கத்தின் மொத்தச் செலவில் 100க்கு 57பங்கு ராணுவச் செலவாகி விடுகிறது. சமஷ்டி அரசாங்கத்தில், ஒதுக்கப்பட்ட இலாகாக்கள் கவர்னர்–ஜெனரல் நிருவாகத்தில் இருக்குமென்றும், சமஷ்டி அரசாங்கத்தின் மொத்தச் செலவில் 100க்கு 80 பங்கு இந்த ஒதுக்கப் பட்ட இலாகாக்கள் பெற்றுக் கொண்டு விடுமென்றும் தெரிகின்றன. மற்றும், ஏற்கனவே சிருஷ்டிக்கப் பட்ட ரிசர்வ் பாங்கி, சமஷ்டி ரெயில்வே ஸ்தாபனம் போன்றவைகளும் இன்னும் இது போன்ற ஸ்தாபனங்களும் சமஷ்டி சட்டசபையின் மேற்பார்வைக்குட்பட்டிராது. இப்பொழுதுள்ள இந்தியா சட்ட சபைக்கு, ரெயில்வே கொள்கையை நிர்ணயிக்கிற உரிமையாவது இருக்கிறது. சமஷ்டி சட்டசபைக்கு இந்த அதிகாரம் கூட இராது. தவிர, தேசத்தின் பொருளாதார அபிவிருத்திக்கு மூலாதாரமாயுள்ள நாணயச் செலாவணி, நாணயமாற்று விஷயங்களில் இந்தச் சமஷ்டி சட்ட சபைக்கு அதிகாரமே இராது.

சமஷ்டி திட்டத்தில், வெளி நாட்டு விவகாரங்கள் ஒதுக்கப் பட்ட இலாக்காவாக இருப்பதால், மற்ற நாடுகளோடு வியாபார ஒப்பந்தம் செய்து கொள்ள இந்தியா சட்ட சபைக்கு அதிகாரம் இராது. இதனால் வியாபார சுதந்திரம் கட்டுப் படுத்தப் பட்டு விடும். இங்ஙனம் வெளி நாடுகளுடன் செய்து கொள்கிற வியாபார ஒப்பந்தத்தை, சமஷ்டி அரசாங்கமானது, சமஷ்டி சட்டசபை முன்னர் வைக்க வேண்டுமென்ற கட்டாயம் சமஷ்டி சட்டப்படி கிடையாது. இப்பொழுது, இந்தோ–பிரிட்டிஷ் வியாபார ஒப்பந்தத்தை எப்படி இந்தியா சட்டசபை முன்னர் ஆஜர் படுத்த மறுக்கிறார்களோ அது போலவே, வியாபார சுதந்திரம் என்பதற்கும் அர்த்தமில்லாமல் போகும். ஆதலின் இந்தியாவின் சார்பாக நிறைவேற்றப் படும் எந்த வியாபார ஒப்பந்தமும் இந்தியா சட்டசபை முன்னர் ஆஜர் படுத்தப் பட்டாலன்றி அமுலுக்குக் கொண்டு வரப்படமாட்டாது என்று இருக்க வேண்டும். ஜெர்மனி, ஜெக்கோ–ஸ்லோவேகியா, இத்தலி, அமெரிக்கா முதலிய நாடுகளுடன் இந்தியா வியாபார ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். இந்த நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் முற்காலத்திலிருந்து வியாபார சம்பந்தம் இருந்துவந்திருக்

கிறது. ஆனால் புதிய சமஷ்டி திட்டப்படி இந்த மாதிரியான வியாபார ஒப்பந்தங்களை சமஷ்டி அரசாங்கம் செய்து கொள்ள வேண்டுமென்று சொல்லி வற்புறுத்த சமஷ்டி சட்டசபைக்கு அதிகாரமில்லை.

வியாபாரப் பாதுகாப்புகள்

சட்டத்தில் கூறப்பட்டுள்ள அநீதமானதும், நியாயமற்றதுமான வியாபாரப் பாதுகாப்புகள், தேசியக் கைத்தொழில்களை ஆதரிக்கவோ, புதிதாக உண்டாக்கவோ முடியாமல் செய்து விடக்கூடியனவாயிருக்கின்றன. சிறப்பாக பிரிட்டிஷ் வியாபார உரிமைகளுடன் இந்தியக் கைத்தொழில்கள் முரண்படுகிற சமயத்தில் இது அதிகமாக விகசிதமாகிறது. கவர்னர்-ஜெனரலுக்கு அளிக்கப் பட்டிருக்கும் விசேஷப் பொறுப்புகளில், இந்தியாவில் இறக்குமதியாகும் பிரிட்டிஷ் சாமான்களின் விஷயத்தில் எவ்வித பாரபட்சமான நடவடிக்கைகளும் எடுத்துக் கொள்ளப் படாமலிருக்கும்படி பாதுகாப்பதும் ஒரு பொறுப்பாகும். இந்தப் பாதுகாப்புச் சம்பந்தமாக உள்ள விரிவான விதிகளை நாம் சிறிது ஆராய்ந்து பார்த்தோமானால், பிரிட்டிஷ் வியாபாரப் போட்டிக்கு எதிராக இந்தியா ஒன்றும் செய்ய முடியாத நிலையிலிருக்கிறது. இந்தியர்கள் இந்நாட்டிற்குள் வந்து, இந்த நாட்டு மக்களுடன் சரிசமமாகப் போட்டி போட அநுமதிக்கப்படுவது கூடாது. தன்னுடைய தேச நிலைக்குத் தக்கவாறு ஒரு பொருளாதார திட்டத்தை வகுத்துக் கொள்ளவும், அவசியமானால், சுய நாட்டாரென்றும் அந்நிய நாட்டாரென்றும் பிரித்துக் காட்டி, சுய நாட்டாருக்கென்று சில சலுகைகள் காட்டவும் உரிமை இல்லாவிட்டால் அது உண்மையான சுயராஜ்யமாகாது. 1931ம் வருஷம் காந்தி-இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு, மகாத்மா காந்தி, 'யங் இந்தியா' பத்திரிகையில் 'ராட்சதனும் குள்ளனும்' என்ற தலைப்பின் கீழ் எழுதிய ஒரு கட்டுரையில், 'இந்திய உரிமைகளுக்கும் இங்கிலீஷ் அல்லது ஐரோப்பிய உரிமைகளுக்கும் எவ்வித பாகுபாடும் காட்டக் கூடாதென்று சொல்வது இந்தியாவின் அடிமைத் தனத்தை ஸ்திரப் படுத்துவதேயாகும். ஒரு ராட்சதனுக்கும் குள்ளனுக்கும் எப்படி சரி சமானமான உரிமைகள் இருக்க முடியும்?' என்று குறிப்பிடுகிறார். இப்பொழுதுள்ள இந்தியா சட்டசபைக்கு, இந்தியர்களுடைய மூல தனத்துடன் இந்தியர்களால் நடத்தப் பெறும் இந்தியத் துறைமுகக் கப்பல் வியாபாரத்தை இந்தியர்களுக்கென்றே ஒதுக்க வேண்டுமென்பன போன்ற சட்டங்களைச் செய்ய இப்பொழுதுள்ள இந்தியா சட்டசபைக்கு அதிகாரம் இருக்கிறது. புதிய சீர்திருத்தச் சட்டத்தில் இந்த உரிமையும் எடுக்கப்பட்டிருக்கிறது. கப்பல் தொழில் ஒரு முக்கியமான தொழில்; தேசப் பாதுகாப்புக்கும் தேசத்தின் பொருளாதாரத்திற்கும் மிகவும் அவசியமானது. மற்ற பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகள் அநுஷ்டிக்கிறமாதிரி, நியாயமான முறைகளில் இந்தத் தொழிலை அபிவிருத்தி செய்வதுகூட இனி முடியாமல் செய்யப்பட்டிருக்கிறது. 'பரஸ்பரம் விட்டுக்கொடுத்தல்' 'சரி சமானமான பங்காளிகள்' என்ற சொற்றொடர்களைக் கொண்டு, நம்முடைய ராஜ்ய உரிமையில் இந்தமாதிரி வரம்பு கட்டுவது, ஆறாத புண்ணின் மீது கோலிட்டது போலாகும்.

இந்தியாவுக்கு நன்மை பயக்கும் என்று தெரிந்தால், இந்தியர்களென்றும் இந்தியரல்லாதார் என்றும் பிரித்துக்காட்டிச் சட்டஞ்செய்யும் உரிமை நமக்கு இருக்கவேண்டும். இதை நாம் எந்தக் காலத்திலும் விட்டுக் கொடுக்க முடியாது. இது சம்பந்தமாக ஐர்லாந்து உதாரணத்தை இங்கே சொல்ல விரும்புகிறேன். 1935-ம் வருஷத்துப் பிரஜா உரிமைச் சட்டமானது, தேர்தல் அமைப்பிலும், உத்தியோகங்களிலும், வியாபாரக் கப்பல் தொழிலிலும், ஆகாய விமானப் போக்குவரத்துகளிலும் ஐரிஷ்காரருக்கென்று சில தனியான சலுகைகள் காட்டப்பட்டிருக்கின்றன. ஐரிஷ் பிரஜா உரிமை யென்பது பிரிட்டிஷ் பிரஜா உரிமைக்கு வேறுபட்டது. பிரிட்டிஷ் பிரஜா உரிமை ஐர்லாந்தில் அங்கீகரிக்கப்படுவதில்லை. அதுபோலவே இந்தியாவும் தனக்கென்று ஒரு சமுதாய அந்தஸ்தை ஏற்படுத்திக்கொண்டு, தனக்கென்று தனியான ஒரு பிரஜா உரிமையையும் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

வியாபார சுதந்திரத்தைப் பற்றியும், வியாபாரப் பாதுகாப்பைப் பற்றியும் நான் சொல்கிறபோது இந்தியாவுக்கு வெளிநாட்டு வியாபாரத் தொடர்பு அவசியமென்பதைப் பற்றிச் சிறிது கூற விரும்புகிறேன். இந்தியாவின் அந்நியநாட்டு வியாபாரத்தை நாம் தனித்தனியாகப் பிரித்துப் பார்க்க முடியாது. ஆனால் இப்பொழுது அப்படிச் செய்யப்படுகிறது. ஏனென்றால், பிரிட்டிஷ் வியாபாரிகளுக்குத் தற்காலிகமாகச் சில நன்மைகள் உண்டு என்பதற்காக இங்ஙனம் செய்யப்படுகிறது. இனியும் அப்படிச் செய்யப்படாமல் இந்தியாவின் அந்நியநாட்டு வியாபாரக் கொள்கையை, உள்நாட்டின் பொருளாதார வளர்ச்சியோடு இணைத்து ஒரு திட்டத்துக்கு உட்படுத்த வேண்டும். அப்படிச் செய்கிறபோது இந்தியாவின் ஏற்றுமதிச் சக்தியையும், வெளி நாடுகளுடன் இருக்க வேண்டிய தொடர்பையும் கவனித்துக்கொள்ள வேண்டும். இந்தியாவின் ஏற்றுமதி வியாபாரத்தை நாம் நோக்குகிறபோது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குப் புறம்பாயுள்ள நாடுகளுடன் வியாபாரத் தொடர்பு வைத்துக்கொள்வது பாதிக்கப்படும்படியாக, இங்கிலாந்துடன் எவ்வித மான வியாபார ஒப்பந்தமும் செய்து கொள்ளக்கூடாது. ஏனென்றால், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குப் புறம்பாயுள்ள நாடுகள்தான் இந்தியாவின் சாமான்களை அதிகமாக வாங்குகின்றன. அவைகளோடு நாம் வியாபாரத் தொடர்பு வைத்துக் கொள்வதனால் நமது பணப்புழக்கம் சரளமாக இருக்கும். இந்தோ பிரிட்டிஷ் வியாபார ஒப்பந்தம் இன்னும் ஒரு முடிவுக்கு வராமல் இருக்கிறது. ஆனால் காலாவதியாகிவிட்ட ஒட்டாவா ஒப்பந்தம், இந்திய சட்டசபை அதனை ரத்து செய்துவிட வேண்டுமென்று தீர்மானித்த பிறகுகூட இன்னும் அமுலிலிருக்கிறது. மேற்படி ஒட்டாவா ஒப்பந்தம் பிரிட்டிஷாருடைய எஃகுச் சாமான்களுக்கும் ஜவுளி தினுசுகளுக்கும் விசேஷ சலுகை காட்டியிருப்பதனால்தான் இந்தச் சலுகை போலும். இப்பொழுதைய அரசியல் நிலைமையில் இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் ஏற்படுகிற எந்த விதமான வியாபார ஒப்பந்தமும் சம அந்தஸ்துள்ள ஒப்பந்தமாக இராது.

ஏனென்றால், நமக்கும் இங்கிலாந்துக்குமுள்ள அரசியல் சம்பந்தமானது, நமக்குப் பாதகமாகவும் இங்கிலாந்துக்குச் சாதகமாகவும் இருக்கும்படி செய்யும். பிரிட்டிஷாருடைய வியாபார சலுகை முறைக்கு அடிப்படையாயிருப்பது அரசியல் காரணந்தான். ஆகையால் வியாபார ஒப்பந்தம் என்ற பெயரால் இந்த நாட்டில் இந்தியர் அல்லாதார் தங்கள் உரிமைகளை ஸ்திரப்படுத்திக் கொள்ளும்படி செய்து விடுவதற்கு முன்னர், அதனால் ஏற்படும் அரசியல் பொருளாதார பலாபலன்களை நாம் கவனிக்க வேண்டும். இப்பொழுது பேச்சு நடைபெறுகிற இந்தோ—பிரிட்டிஷ் வியாபார ஒப்பந்தமானது, மற்ற நாடுகளுடன் நாம் செய்து கொள்கிற வியாபார ஒப்பந்தங்களுக்குத் தடையாயிருக்கக் கூடாது. அப்படிச் செய்யப்படுகிற எந்த வியாபார ஒப்பந்தமும் இந்திய அரசாங்கத்தாரால் கையெழுத்திடப்படும் முன்னர், இந்தியா சட்ட சபையினால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

ஆகையினால் இந்தியா அரசாங்கத்தின் தற்போதைய நிர்வாக சபைக்கும், இனி அமையப்போகிற சமஷ்டி மந்திரிச் சபைக்கும் உள்ள அதிகார தாரதம்மியங்கள் பல. மற்றும் சமஷ்டி சட்ட சபையின் அமைப்பே பிற்போக்குள்ளதாயிருக்கிறது. இந்தியாவின் மொத்த ஜனத்தொகையில் நூற்றுக்கு இருபத்து நாலு விகிதந்தான் சமஸ்தானங்களின் ஜனத்தொகை. ஆயினும் சமஸ்தானாதிபதிகளுக்கு—அவர்களுடைய பிரஜைகளுக் கல்ல—சமஷ்டி அரசாங்கத்தின் கீழ்ச் சட்ட சபையில் நூற்றுக்கு முப்பத்துமூன்று விகிதம் ஸ்தானங்களும், மேல் சபையில் நூற்றுக்கு நாற்பது விகிதம் ஸ்தானங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த மாதிரி இருக்கும்போது சமஷ்டி திட்டத்தைப் பற்றித்தான் கொண்டுள்ள அபிப்பிராயத்தைக் காங்கிரஸ் எப்பொழுதும் மாற்றிக் கொள்ள முடியாது. பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இந்தச் சமஷ்டி திட்டத்தை கொண்டு திணிக்காமல் இருக்க நாம் நடத்துகிறபோராட்டத்தில் எவ்வளவுக் கெவ்வளவு வெற்றி பெறுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நம்முடைய எதிர்கால அரசியல் வாழ்வும் சமீபித்துக் கொண்டிருக்கிறது. இந்தச் சமடிஷ்யை சட்ட வரம்புக்குட்பட்ட முறைகளோடு மட்டு மல்லாது, நியாயமானதும் சமாதானமானதும் ஆன எல்லா வழிகளிலும் எதிர்த்துப் போராட வேண்டும். கடைசி பட்சமாகப் பொதுஜன சட்ட மறுப்பியக்கத்தையும் நாம் தொடங்க வேண்டியிருக்கலாம். அப்படிப் பட்ட ஒரு சந்தர்ப்ப மேற்படுமானால் இந்த இயக்கமானது பிரிட்டிஷ் இந்தியாவில் மட்டு மல்ல, சுதேச சமஸ்தானங்களிலும் பரவும் என்பதில் சந்தேக மில்லை.

தொண்டர் படை

எதிர் காலத்தில் நாம் நம்முடைய போராட்டத்தைத் திறம்பட நடத்த வேண்டுமானால், நம்முடைய வீட்டை நாம் முதலில் ஒழுங்கு படுத்திக் கொள்ள வேண்டும். சென்ற சில வருஷங்களாகப் பாமர ஜனங்களிடையே ஏற்பட்டிருக்கும் விழிப்பு அபாரமாயிருக்கிறது. இதனால் நம்முடைய கட்சி ஸ்தாபனத்தைப் பற்றியும் கட்சி அமைப்பைப் பற்றியும் பலபுதியபிரச்னைகள் தோன்றியிருக்கின்றன. ஆண் பெண் அடங்க, சுமார் ஐம்பதினாயிரம் பேர் நிறைந்த கூட்டங்கள் நடைபெறுவதை இன்று நாம் தினசரி காண்கிறோம். இந்த மாதிரியான கூட்டங்களையும் இவை போன்ற மற்றத் தேசிய

திருவிழாக்களையும் நிர்வகித்து நடத்திச் செல்ல நம்முடைய கட்சி சாதனங்கள் மிகக் குறைவாகவே இருக்கின்றன. இதை விடப் பெரிய பிரச்னை ஒன்று இருக்கிறது. அதாவது, பாமர ஜனங்களின் எழுச்சியைப் சண்படுத்தி, அதனைச் சரியான வழியில் செலுத்துவது மிகவும் முக்கியம். இந்த வேலையைச் செய்வதற்காக நம்மிடத்தில் ஒழுங்கு பட்ட ஒரு தொண்டர் படை இருக்கிறதா? தேசியத் தொண்டுக்காக வரிசைக் கிரமமாக உத்தியோகஸ்தர்களை நியமித் திருக்கிறோமா? இப்பொழுது தான் முகிழ்த்து மலரும் தருணத்தில் இருக்கும் தலைவர்களுக்கும், எதிர் காலத்தில் சிறப்படையக் கூடிய இளந் தொண்டர் களுக்கும் சரியான படி நாம் பயிற்சி கொடுக்கிறோமா? இந்தக் கேள்விகளுக்கு விடை மிகத் தெளிவாகவே இருக்கிறது. இதைப் பற்றி நான் விரித்துக் கூற வேண்டுவ தில்லை. ஓர் அரசியல் கட்சிக்கு இன்றியமையாத தென்று கருதப்படும் இவற்றையெல்லாம் நாம் செய்து வைக்கவில்லை. ஆனால் இது விஷயத்தில் உடனே கவனஞ் செலுத்துதல் அவசியம். பண்பட்ட உத்தியோகஸ்தர்களால் பயிற்சி பெற்ற ஒழுங்கான தொண்டர் படை நமக்கு அவசியம் தேவை. நம்முடைய அரசியல் தொண்டர்களுக்குப் போதுமான கல்வியும் பயிற்சியும் அளிக்கப் பெற வேண்டும். அப்பொழுதுதான் எதிர் காலத்தில் சிறந்த தலைவர்கள் தோன்றுவார்கள். இந்த மாதிரியான பயிற்சி, கோடைகாலப் பள்ளிக்கூடங்களின் மூலமாகவும், மற்ற ஸ்தாபனங்களின் மூலமாகவும் இங்கிலாந்தில் எல்லா அரசியல் கட்சியினராலும் அளிக்கப் படுகிறது. இந்த அரசியல் பயிற்சி சர்வாதிகார நாடுகளில் ஒரு விசேஷமான அம்சம். நம்முடைய தொண்டர்கள், மிகச் சிறந்த தொண்டு செய்திருக்கிறார்கள் என்பதை நான் ஒத்துக் கொள்ளுகிறேன். ஆயினும் நமது கட்சியில் இன்னும் அதிகமான திறமைக்கு இடமிருக்கிறது. இந்தக் குறையை நாம் போக்க வேண்டுமானால் காங்கிரஸ் வேலைக் கென்று சில அறிவுள்ள இளைஞர்களைத் திரட்டி அவர்களுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டும். ஏற்கனவே காங்கிரஸ் தொண்டு செய்து கொண் டிருப்பவர்களுக்கு இன்னும் அதிகமான கல்வி போதிக்கப்பட வேண்டும். இந்தப் பிரச்னையை ஐரோப்பிய நாடுகள் பல, எவ்வளவு முக்கியமாகக் கவனித்துக் கொண்டு வந்திருக்கின்றன என்பதை நான் சொல்லத் தேவை இல்லை. நம்முடைய லட்சியம், நமது பயிற்சி முறைகள் முதலியவைகளெல்லாம் வேறுபட் டிருக்கலாம். ஆனால் நம்முடைய தொண்டர்களுக்கு மேனாடுகளில் கொடுக்கப் படுகிறதுபோல் சாஸ்திரரீதியான பயிற்சி கொடுக்கப்பட வேண்டும் என்பதில் யாருக்குமே கருத்து வேற்றுமை யிராது. மற்றும் ஜெர்மனி நாஜிக் கட்சியைச் சேர்ந்த 'கைத்தொழில் தொண்டர் படை' யைப் போன்ற ஒரு ஸ்தாபனத்தைப் பற்றிய விவரங்களையும் நாம் கவனித்தல் நல்லது. சில மாற்றங்களுடன் இந்த மாதிரியான ஸ்தாபனமொன்றை நாம் ஏற்படுத்திக்கொண்டால், அது இந்தியாவுக்கு நன்மையைத் தருவதாகவே இருக்கும்.

பிற ஸ்தாபனங்களுடன் தொடர்பு

நமது கட்சியில் ஒழுங்கை நிலை நிறுத்துவது ஒருபுற மிருக்கட்டும். நமக்குக் கவலையையும், ஒரு சங்கடத்தையும் உண்டு பண்ணிக் கொண்

டிருக்கிற மற்றொரு பிரச்னையையும் நாம் கவனிக்க வேண்டும். அதாவது தொழிலாளர் ஸ்தாபனங்கள், கிருஷிகர் சபைகள் முதலியன வற்றிற்கும் காங்கிரஸுக்கும் உள்ள தொடர்பை நாம் நிர்ணயித்துக் கொண்டுவிட வேண்டும். இது சம்பந்தமாக இரு வித அபிப்பிராயங்கள் இருக்கின்றன. காங்கிரஸுக்குப் புறம்பாக வேறு எந்த ஸ்தாபனமும் இருக்கக் கூடாது என்பது ஒரு கட்சி. அப்படிப்பட்ட ஸ்தாபனங்கள் இருக்கலாமென்பது மற்றொரு கட்சி. என்னுடைய சொந்த அபிப்பிராயம் என்னவென்றால் இந்த ஸ்தாபனங்களைப் புறக்கணிப்பதின் மூலமாகவோ, கண்டிப்பதின் மூலமாகவோ இவைகளை நாம் ரத்து செய்துவிட முடியாது என்பதுதான். இவைகள் இப்போது ஸ்தாபனங்களாக உருக்கொண்டு நிற்கின்றன. எப்பொழுது இவை தோன்றிவிட்டனவோ, இவைகள் சீக்கிரம் கலைந்து போகும் என்பதற்கு எந்த விதமான அறிகுறிகளும் எப்பொழுது காணப்படவில்லையோ, அப்பொழுதே இவைகளுக்குச் சரித்திர பூர்வமாக ஒரு தேவையிருக்கிறது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். மற்றும் இந்த மாதிரியான ஸ்தாபனங்கள் பிற நாடுகளிலும் காண்கிறோம். அந்த ஸ்தாபனங்களை நாம்விரும்பினாலும் வெறுத்தாலும் அவை ஸ்தாபனங்களாக நிலவி நிற்பதை அங்கீகரித்துக் கொண்டுதான் ஆக வேண்டும். இப்பொழுதுள்ளபிரச்னையெல்லாம்என்னவென்றால், காங்கிரஸானது இந்த ஸ்தாபனங்களையெல்லாம் எப்படி நடத்த வேண்டுமென்பது தான். ஆனால், அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக, பாமர ஜனங்களின் பிரதிநிதியென்று அமைந்திருக்கும் காங்கிரஸுக்குப் போட்டியாக இந்த ஸ்தாபனங்கள் இருக்கக் கூடாதென்பது வாஸ்தவம். ஆகையால் இந்த ஸ்தாபனங்கள், காங்கிரஸினுடைய லட்சியங்களையும், முறைகளையும் பின்பற்றிக் காங்கிரஸோடு நெருங்கி ஒத்துழைக்க வேண்டும். இதற்காகக் காங்கிரஸ் தொண்டர்கள் ஏராளமாக, தொழிலாளர் சங்கங்களிலும், கிருஷிகர் சபைகளிலும் கலந்து வேலை செய்ய வேண்டும். தொழிலாளர் ஸ்தாபனங்களைப் பற்றி என்னுடைய அனுபவத்தைப் பொறுத்த மட்டில், நம்முடைய லட்சியத்திற்கும் கட்சிக்கும் முரண்பாடின்றி வேலை செய்யலாம் என்பது என் அபிப்பிராயம். காங்கிரஸுக்கும், மேலே கூறப்பட்ட இரண்டு ஸ்தாபனங்களுக்கும் எப்படி ஒத்துழைப்பு ஏற்படுமென்றால், பின்னிரண்டு ஸ்தாபனங்களும் அதாவது தொழிலாளர் ஸ்தாபனமும், கிருஷிகர் ஸ்தாபனமும் தொழிலாளர்களுடையவும் கிருஷிகர்களுடையவும் பொருளாதார சம்பந்தமான குறை நிறைகளை மட்டும் கவனித்துக் கொண்டு, தேசிய விடுதலைக்கென் றேற்பட்ட ஒரு பொது மேடையாகக்காங்கிரசைக் கருதுவார்களானால் அப்பொழுது இருதாத்தினரும் ஒன்று பட்டு வேலை செய்யலாம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மற்றொரு சிக்கலான பிரச்னையும் நமக்கு ஏற்படுகிறது. அதாவது தொழிலாளர் ஸ்தாபனங்கள் அத்தனையையும் பொதுப் படையாகக் காங்கிரஸுடன் இணைத்துவிடுவதா என்பதுதான். ஒரு காலத்தில் காங்கிரஸினுடையசெல்வாக்கின்கீழ்எல்லா ஏகாதிபத்தியஎதிர்ப்பு ஸ்தாபனங்களையும் ஒன்று படுத்த வேண்டும் என்ற முறையில், இந்த இணைப்பு பாத்தியதையை மேற்படி இரண்டு ஸ்தாபனங்களுக்கும்

கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படும் என்றே நான் கருதுகிறேன். இந்த இணைப்பு உரிமையை எவ்வளவு தூரம்கொடுக்கலாம் என்பதைப்பற்றி அபிப்பிராய வேற்றுமைகள் ஏற்படலாம். ஆனால், காங்கிரஸோடு இந்த ஸ்தாபனங்களை அணைத்துக் கொள்வதற்கு முன்னர், அவற்றின் தராதரத்தையும் சாசுவத அந்தஸ்தையும் கவனித்துக்கொள்ள வேண்டும். 1916ம் வருஷம் அக்டோபர் மாதம் ருஷ்யாவில் நடைபெற்ற புரட்சியிலே, தொழிலாளர்கள், குடியானவர்கள், போர்வீரர்கள் ஆகிய மூவரும் சேர்ந்த ஓர் ஐக்கியக் கட்சி முக்கிய பங்கெடுத்துக் கொண்டது. ஆனால், இங்கிலாந்தில் பிரிட்டிஷ் தொழிலாளர் சங்கமானது, பார்லிமெண்டரி தொழிற் கட்சியினிடத்தில் அதிகமான செல்வாக்கைச் செலுத்த முடியவில்லை. இந்தியாவிலே உள்ள தொழிலாளர் ஸ்தாபனங்களும், கிருஷிகர் சபைகளும் காங்கிரஸினிடத்தில் எவ்வளவு தூரம் தங்கள் செல்வாக்கைச் செலுத்தும் என்பதை நாம் கவனிக்க வேண்டும். அப்படிக் கவனிக்கிற போது, தொழிலாளர்களுடையவும், விவசாயிகளினுடையவும் குறைகளை நாம் உடனே கவனியாவிட்டால் நம்மோடு அவர்கள் சேர்ந்து போராட மாட்டார்கள் என்பதையும் கவனிக்க வேண்டும். எப்படி இருந்தபோதிலும் இந்திய தேசியக் காங்கிரஸிற்கும், மற்ற ஏகாதிபத்திய எதிர்ப்பு ஸ்தாபனங்களுக்கும் நெருங்கிய உறவு இருக்கவேண்டும் என்பதே என் கருத்து. பிற் கூறப்பட்ட ஸ்தாபனங்கள் காங்கிரஸின் கொள்கைகளைப் பின்பற்றுமானால், இந்த உறவு விரைவிலே ஏற்பட்டுவிடும்.

அபேதவாதம்

காங்கிரஸுக்குள்ளேயே, காங்கிரஸ் அபேதவாதக் கட்சி என்றொரு தனிக் கட்சி ஏற்படுவதைப் பற்றி, பெரிய சச்சரவு தோன்றி யிருக்கிறது. நான் காங்கிரஸ் அபேதவாத கட்சிக்கு, வக்காலத்து வாங்கிக் கொண்டு பேச வரவில்லை. நான் அதில் ஓர் அங்கத்தினனும் இல்லை. ஆயினும் ஆரம்பத்திலிருந்தே அதனுடைய கொள்கைகளில் எனக்குப் பூரண அங்கீகாரம் உண்டு. முதலாவது, தீவிர சக்திகளெல்லாம், ஒரு கட்சியாகச் சேருவது நல்லது. இரண்டாவது இந்தத் தீவிரக் கட்சியானது, அபேதவாதத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தால்தான், அது தனிக் கட்சியாகத் தோன்றுவதற்கும் நியாயமுண்டு. இந்த அபேதவாதப் பிரிவினரை ஒரு தனிக் கட்சியாகச் சொல்வதைச் சில நண்பர்கள் ஆட்சேபிக்கிறார்கள். ஆனால், என்னைப் பொறுத்தமட்டில் அதனை, ஒரு பிரிவென்றாவது, கட்சி என்றாவது, சங்கமென்றாவது சொல்லட்டும்; அதைப்பற்றிக் கவலையில்லை. காங்கிரஸின் சட்டதிட்டத்திற்கு உட்பட்டுத் தீவிர வாதிகள் சிலர் அபேதவாதக் கொள்கையுடையவரா யிருக்கலாம். அந்தக் கொள்கையினரை எந்தப் பெயரிட் டழைத்தாலும் சரிதான். ஆனால் காங்கிரஸ் அபேதவாதக் கட்சியோ அல்லது அது போன்ற வேறெந்தக் கட்சியோ தீவிரக் கொள்கை யுடையதாகத்தான் இருக்கவேண்டும். அபேதவாதம் இப்பொழுதே நாம் கவனிக்கப்பட வேண்டிய ஒரு பிரச்னையல்ல. ஆனால், அரசியல் சுதந்திரம் பெற்ற பிறகு தேசத்தை அபேதவாதத்திற்குத் தயார்ப்படுத்த இப்பொழுதே நாம் பிரசாரம் செய்யவேண்டியது அவசியம். அப்படிப்பட்ட பிரசாரத்தைக்

காங்கிரஸ் அபேதவாதக் கட்சிதான் செய்ய முடியும்.

அந்நிய நாடுகளுடன் தொடர்பு

சென்ற சில ஆண்டுகளாக நான் மற்றொரு முக்கியமான பிரச்னையைப் பற்றி அதிக அக்கரை கொண்டிருக்கிறேன். அதைப் பற்றி உங்கள் முன்னிலையிலும் சில கூற விரும்புகிறேன். அதாவது இந்தியாவிற்கென்று தனியான ஓர் அந்நிய நாட்டுக் கொள்கை வேண்டும். இந்தியாவுக்கும் மற்ற நாடுகளுக்கும் உள்ள தொடர்பு அதிகப்பட வேண்டும். இந்த வேலைக்கு நான் அதிக முக்கியத்துவம் கொடுக்க விரும்புகிறேன். ஏனென்றால், இனி வருங் காலத்தில், சர்வ தேச நிலைமையானது, இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்திற்குத் துணை செய்யும் என்று நான் நம்புகிறேன். ஆனால் உலக நிலையைப் பற்றி நாம் சரியானபடி தெரிந்து கொள்ள வேண்டும். அதனை எப்படி நமக்குச் சாதகமாக உபயோகித்துக் கொள்ள வேண்டுமென்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும். எகிப்தின் உதாரணம் நம் கண் முன்னே நிற்கிறது. மத்திய தரைக் கடலில் இங்கிலாந்துக்கும் இத்தலிக்கும் ஏற்பட்டுள்ள பிணக்குகளை ஆதாரமாகக்கொண்டு அது, ஒருகுண்டு கூட வீசாமல், கிரேட் பிரிட்டனுடன் ஒரு சிநேக ஒப்பந்தம் செய்து கொண்டு விட்டது.

அந்நிய நாடுகளுடன் நாம் தொடர்பு கொள்கிற போது, அந்த நாடுகளின் அரசியலிலோ, அந்த நாட்டு அரசாங்க அமைப்பிலோ நாம் தலை யிட்டுக் கொள்ளக் கூடாது. ஒவ்வொரு நாட்டிலுமுள்ள பல் வேறு கட்சியினரும், இந்தியாவின் சுதந்திரத்திற்காக அநுதாபஞ் செலுத்துகிறவர்கள் இருக்கிறார்கள். இந்த விஷயத்தில், சோவியத் ராஜ தந்திரத்திலிருந்து நாம் சில பாடங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும். சோவியத் ருஷ்யா, ஒரு பொதுவுடைமை அரசாங்கம். ஆனால் அதனுடைய ராஜ தந்திரிகள், பொதுவுடைமைக் கொள்கையை யநுஷ்டியாத பல அரசாங்கங்களுடன் தொடர்பு கொள்ளப் பின் வாங்கவில்லை; தங்கள் பொதுவுடமைக் கொள்கைக்கு யார் ஆதரவு காட்டினும் அதனை ஏற்றுக் கொள்ள மறுத்தது மில்லை. ஆகையால், இந்தியாவினிடம் அநுதாபங் காட்டுகிற ஒரு கூட்டத்தாரை ஒவ்வொரு நாட்டிலும் நாம் ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட ஒரு கூட்டத்தை ஏற்படுத்திக் கொள்ள, அந்நிய நாட்டுப் பத்திரிகைகள் மூலமாகவும், சினிமாக்கள் மூலமாகவும், பொருட் காட்சிகள் மூலமாகவும் ஆங்காங்கு பிரசாரங்கள் செய்ய வேண்டும். சீனர்கள், ஐரோப்பாவில் சித்திரப் பொருட் காட்சிகளை வைத்து நடத்தி, ஐரோப்பியர் பலருடைய ஆதரவையும் அநுதாபத்தையும் பெற்றிருக்கிறார்கள். தவிர, ஒருவர்க்கொருவர் நேருக்கு நேர் சந்தித்துப் பழகுதல் நல்லது. இந்தச் சந்திப்பில்லாமல், வெளி நாடுகளில் இந்தியாவின் செல்வாக்கைப் பரப்ப முடியாது. இந்தப் பிரசார வேலையில், வெளி நாடுகளிலுள்ள இந்திய மாணுக்கர்கள் உதவி செய்யலாம். இந்த மாணுக்கர்களுடைய தேவைகளை மட்டும் நாம் கவனிக்கவேண்டும் இந்தியாவின் நாகரிகத்தையும் கலைஞானத்தையும் தெரிவிக்கக் கூடிய இந்தியாவிலேயே தயார் செய்யப்பட்ட சினிமாக்களை வெளிநாடுகளில் கொண்டு காட்டினோமானால், இந்தியாவின் பெருமையை வெளி நாட்டார் நன்கு அறிதல் கூடும். வெளிநாடுகளி

ளுள்ள இந்திய மாணுக்கர்களுக்கும் மற்ற இந்தியர்களுக்கும் இவை பெரிதும் பயன்படும்.

பிரசாரம் என்ற வார்த்தையை நான் விரும்ப வில்லை. இதில் ஒரு பொய்யான எண்ணம் இருக்கிறது. ஆனல் இந்தியாவையும் இந்தியாவின் நாகரிகத்தையும் வெளி யுலகத்திற்குத் தெரியப் படுத்த வேண்டு மென்பதை நான் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலு முள்ள ஒவ்வொரு நாடும் இந்த முயற்சியை ஆதரிக்கும் என்று நான் அறிவேனுதலினுலேயே இங்ஙனம் கூறுகிறேன். இந்த வேலையை நாம் தீவிரமாகச் செய்வோமானுல், சுதந்திர இந்தியாவின் ஸ்தானீகர் காரியாலயங்களையும் தூதர் காரியாலயங்களையும் ஏற்படுத்திக் கொண்டவர்களாவோம். இந்த விஷயத்தில் கிரேட் பிரிட்டனை நாம் புறக்கணித்து விட முடியாது. இங்கிலாந்திலும், இந்தியாவின் லட்சியங்களில் உண்மையான அநுதாப முடைய ஒரு சிறு கூட்டத்தார்—ஆனல் செல்வாக்கு நிரம்பிய கூட்டத்தார்—இருக்கின்றனர். இங்கிலாந்திலுள்ள இளைஞர்களும், மாணுக்கர்களும் இந்திய விஷயத்தில் அதிக அநுதாபங் காட்டுகிறுர்கள். இவர்களுடைய தொகை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டு வருகிறது. இந்த உண்மையைத் தெரிந்து கொள்ள கிரேட் பிரிட்டனிலுள்ள சர்வகலாசாலைகளைச் சென்று பார்த்தால் தெரியும்.

இந்த வேலையைத் திறம் படச் செய்ய, காங்கிரஸின் உண்மையான ஏஜெண்டுகள் ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா, வட, மத்திய, தென் அமெரிக்கா முதலிய நாடுகளில் நியமிக்கப் பெற வேண்டும். மத்திய அமெரிக்காவையும் தென்னமெரிக்காவையும் நாம் இது காறும் புறக்கணித்து விட்டோம். இங்கே, இந்தியாவைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற அக்கரை அதிகம் இருக்கிறது. காங்கிரஸானது இந்தச் சர்வ தேசத்தொடர்பு விஷயத்தில் வேலை செய்வதற்கு, இந்தியாவில் பல கலை ஞானக் கழகங்கள் தோன்ற வேண்டும். சர்வ தேசங்களுடன் வியாபாரப் போக்கு வரத்துச் செய்து கொள்ள வியாபார சபைகள் ஏற்பட வேண்டும். தவிர, ஒவ்வொரு சர்வ தேச மகா நாட்டிற்கும் இந்தியர்கள் செல்லுமாறு வைத்துக் கொள்ள வேண்டும். இந்த மாதிரி மகாநாடுகளில் கலந்து கொள்வது, இந்தியாவுக்குப் பெரிய பிரசாரமாகும். வெளி நாடுகளுடன் சம்பந்தம் வைத்துக் கொள்வது என்ருல், பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு விரோதமாகச் சூழ்ச்சி செய்வது என்பது அர்த்தமல்ல. இந்த மாதிரி சூழ்ச்சிகளுக்கெல்லாம் நாம் புறம்பானவர்களாயிருக்க வேண்டும். வெளி நாடுகளில் இந்தியாவைப்பற்றி என்ன பிரசாரஞ் செய்யப்பட்டு வருகிறதென்ருல், 'இந்தியா ஓர் அநாகரிகமான நாடு' இந்தியர்களை நாகரிகப் படுத்தவே பிரிட்டிஷார் இங்கு இருக்கின்றனர் என்கிற மாதிரியெல்லாம் சொல்லப்பட்டு வருகின்றன. இதற்குப் பதிலாக, நமது நாகரிகம் என்ன, கலை ஞானம் என்னவென்பவைகளைப் பற்றி உலகத்திற்குத் தெரிவிக்க வேண்டியது நமது கடமை. இதை நாம் செய்தோமானல் நாம் சர்வதேச அநுதாபத்தைச் சம்பாதித்துக் கொள்வதோடு, உலக அபிப்பிராயத்தின் முன்னர் நம்முடைய கட்சியும் வலுத்து நிற்கும்.

வெளி நாட்டு இந்தியர்கள்

ஆசியாவிலும் ஆப்ரிக்காவிலுமுள்ள

பல பாகங்களிலும், சிறப்பாக ஜான்ஸிபார், கென்யா, தென்னாப்ரிக்கா, மலேயா, இலங்கை முதலிய இடங்களிலும் வசிக்கும் நமது நாட்டார் முன்னிலையில் நிற்கும் பிரச்னைகள், கஷ்டங்கள், பரிசோதனைகள் முதலியவற்றைப் பற்றி நான் இங்குக் கூறாமல் மறந்துவிட முடியாது. இவர்கள் விஷயத்தில் காங்கிரஸானது அதிகமான கவலை யெடுத்து வந்திருக்கிறது. இனியும் அப்படியே கவலை யெடுத்துக் கொள்ளும். இவர்களுக்கு நாம் இன்னும் அதிகமாகச் செய்ய முடியவில்லை யென்றால் அதற்குக் காரணம் உள் நாட்டிலேயே நாம் அடிமைகளா யிருப்பதுதான். சுதந்திர இந்தியாவானது, உலக அரசியலிலே ஒரு முக்கியத்துவத்தைப் பெறும். அப்பொழுதுதான் அது, வெளி நாடுகளிலுள்ள தனது பிரஜைகளின் அநுகூலத்தை நாட முடியும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மற்றொரு அவசியத்தையும் நான் வற்புறுத்த விரும்புகிறேன். நமது அயல் நாட்டினராகிய பாரசீகம், ஆப்கானிஸ்தானம், நேபாளம், சீனா, பர்மா, சையாம், மலேயா, கிழக்கிந்தியத் தீவுகள், இலங்கை முதலியவற்றுடன் நாம் இன்னும் நெருங்கிய தொடர்பு கொள்ள வேண்டும். அவர்களைப்பற்றி நாம் அறிந்து கொள்வதும் அவர்கள் நம்மைப்பற்றி அறிந்து கொள்வதும் பரஸ்பரம் இருதரப்பினருக்கும் நல்லது. முக்கியமாக, நம்முடன் நீண்ட காலத் தொடர்பு கொண்டுள்ளதன் காரணமாக பர்மாவுடனும் இலங்கையுடனும் நாம் அதிகமான கலைஞானத் தொடர்பு கொள்ளவேண்டும்.

கைதிகள் விடுதலை

தோழர்களே! நான் முதலில் எண்ணியதை விட இப்பொழுது உங்களுடைய அதிகமான காலத்தை எடுத்துக் கொண்டு விட்டேன். ஆனால் என் பிரசங்கத்தின் கடைசி பாகத்திற்கும் வந்து விட்டேன். நாம் கவனிக்க வேண்டிய மற்றொரு பிரச்னையும் இருக்கிறது. தற்போது உடனே கவனிக்கப்பட வேண்டிய பிரச்னையாகவும் அஃது இருக்கிறது. அதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அதாவது, பாதுகாப்பிலும் சிறையிலும் வைக்கப் பட்டிருக்கும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதென்பதேயாம். சமீபத்தில் சிறைச்சாலைகளில் நடைபெற்ற உண்ணாவிரதமானது, இந்த விடுதலைப் பிரச்னையை முன்னணிக்குக் கொண்டு வந்திருக்கிறது. இதைப்பற்றிப் பொதுஜனங்களும் கவனிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். இவர்களனைவரையும் உடனே விடுதலை செய்ய மனித யத்தனம் எவ்வளவு உண்டோ அவ்வளவையும் செய்ய வேண்டுமென்று நான் சொன்னால் அஃது உங்களுடைய அபிப்பிராயத்தைப் பிரதி பலிப்பதேயாகும். மாகாண காங்கிரஸ் மந்திரிச் சபைகளைப் பொறுத்தமட்டில் ஒரு சில, பொதுஜனங்கள் அவைகளிடமிருந்து எவ்வளவு எதிர்பார்த்தார்களோ அவ்வளவுக்கு அவை வரவில்லை என்பதை இங்கே குறிப்பிடுவது நல்லது. காங்கிரஸ் மந்திரிகள், பொதுஜனங்களின் கோரிக்கையை எவ்வளவு சீக்கிரத்தில் திருப்தி செய்து வைக்கிறார்களோ அவ்வளவுக்குக் காங்கிரஸுக்கும், காங்கிரஸ் கட்சியினரல்லாதாரால் நிருவகிக்கப்பெறும் மாகாணங்களுக்கும் நல்லது. இதைப்பற்றித் திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டிருப்பதில் பயனில்லை. கூடிய சீக்கி

ரத்தில், காங்கிரஸ் மந்திரிகள் பொதுஜனங்களின் குறைக்கு இடமில்லாதபடி நடந்து கொள்வார்களென்று நம்புகிறேன்.

சிறையிலேயும் காப்பிலேயும் வைக்கப்பட்டிருப்பவர்களைப்பற்றி மாத்திரம் நாம் கவனித்தால் போதாது. இவர்களுடைய கஷ்டங்கள் பலரறிந்தவொன்று. ஆனால் சிறையிலிருந்தோ பாதுகாவலிலிருந்தோ விடுதலையாகிறவர்களுடைய நிலைமை மிகவும் பரிதபிக்கத்தக்கதாயிருக்கிறது. உடல் நலம் குன்றிப்போய் க்ஷயம் போன்ற கொடிய வியாதிகளுக்கு இரையாகி இவர்கள் வீட்டுக்கு வருகிறார்கள். வீட்டுக்கு வந்ததும் இவர்களுக்கு எதிரே நிற்பது வறுமைதான். இவர்களுடைய நெருங்கிய உறவினர் இவர்களைப் புன்சிரிப்போடு வரவேற்பதில்லை. கண்ணீருடன்தான் வரவேற்கிறார்கள். தங்களிடத்திலேயுள்ள சிறந்தன எல்லாவற்றையும் தாய் நாட்டுக்காகக் கொடுத்துவிட்டு அதற்குப் பதிலாகத் துயரத்தையும் வறுமையையும் ஏற்றுக்கொண்ட இவர்களுக்கு நாம் செய்ய வேண்டியது ஒன்றுமில்லையா? ஆதலின் தேசத்தை நேசித்த குற்றத்திற்காகத் துன்பம் அநுபவித்த அத்தனை பேருக்கும் நமது அநுதாபத்தைச் செலுத்துவோமாக. அவர்களுடைய துன்பத்தைப்போக்க நம்மாலானதைச் செய்வோமாக.

ஏகாதிபத்திய எதிர்ப்பு

தோழர்களே! ஒரே ஒரு வார்த்தை. அதனோடு நான் முடித்துக்கொண்டு விட்டேன். இன்று நாம் நெருக்கடியான நிலைமைக்கு எதிரே நிற்கிறோம். காங்கிரஸுக்குள்ளேயே இடப் பக்கக் கட்சி யென்றும் வலப் பக்கக் கட்சியென்றும் இருக்கின்றன. இவைகளைப் புறக்கணித்துப் பேசுவதில் பயனில்லை. காங்கிரஸுக்கு வெளியே, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் நம்மை அறை கூவி அழைக்கின்றது. அதையும் நாம் எதிர்த்து நிற்க வேண்டியவர்களாயிருக்கிறோம். இந்த நெருக்கடியில் நாம் என்ன செய்வது? நம்மை ஆள்வோர் பிரயோகிக்கும் தந்திரங்களை யெல்லாம் பொருட்படுத்தாமல், நாம் ஒன்றுபட்டு இருக்க வேண்டு மென்பதையும் நான் சொல்ல வேண்டுமா? பொது ஜனப் போராட்டத்தின் பிரதான அங்கமாயிருப்பது இன்று காங்கிரஸ் ஒன்றுதான். இதற்குள்ளே தீவிரப் பிரிவென்றும் மிதவாதப் பிரிவென்றும் இருக்கலாம். ஆனால் இந்தியாவின் விடுதலையை லட்சியமாகக் கொண்டு, ஏகாதிபத்தியத்திற்கு விரோதமாயுள்ள எல்லாச் சக்திகளும் ஒன்று சேரும் மேடை இந்தக் காங்கிரஸ்ஆதலின் காங்கிரஸ் கொடியின் கீழ் தேசத்தை ஒன்று திரட்டுவோமாக. தீவிர வாதிகள், தங்கள் சக்திகளையெல்லாம் ஒன்று திரட்டி, காங்கிரஸை ஜனநாயக முறையில் அமைத்து ஏகாதிபத்திய எதிர்ப்பை அடிப்படையாகக் கொண்டு அதனைத் திருத்தி வேலை செய்ய வேண்டுமென்று அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இந்த விஷயத்தில் பிரிட்டிஷ் பொதுவுடமைக் கட்சியினர், இந்தியாவைப் பற்றிக் கொண்டுள்ள கொள்கை, காங்கிரஸின் கொள்கைக்கு ஒத்ததாக இருப்பது நமக்குக் கொஞ்சம் ஊக்கந் தருவதாயிருக்கிறது.

மகாத்மா காந்தி

நமது தேசநலத்திற்காக, மகாத்மா காந்தி இன்னும் பல வருஷங்கள் ஜீவித்திருக்க வேண்டுமென்று அகில பாரதமும் பிரார்த்தனை செய்கிறது. இந்தியா, அவரை விட்டுப் பிரிந்

காங்கிரஸ் உத்தியோகஸ்தர்கள் 1938ம் வருஷத்திற்கு

தலைவர்: ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ்

காரியதரிசி: ஆசாரியா ஜே. பி. கிருபாலினி

காரியக் கமிட்டி அங்கத்தினர்கள்:

1. சர்தார் வல்லபாய் படேல்
2. பண்டித ஜவஹர்லால் நேரு
3. கான் அப்துல் கபார்கான்
4. மௌலானா அபுல் கலாம் அஸத்
5. பாபு ராஜேந்திர பிரசாத்
6. ஸ்ரீமதி சரோஜனி தேவி
7. ஸ்ரீ புலாபாய் தேசாய்
8. ,, யமுனலால் பஜாஜ்
9. ,, பட்டாபி சீதாராமய்யா
10. ,, சரத் சந்திரபோஸ்
11. ,, ஜயராம் தாஸ் தௌலத் ராம்
12. ,, ஹரிகிருஷ்ண மேதாப்
13. ,, கங்காதரராவ் தேஷ் பாண்டே

புதிய காரியக் கமிட்டியின் முதற் கூட்டம் 22-2-38ல் ஹரிபுராவில் நடைபெற்றது.

திருக்க முடியாது. அதுவும் இந்த நெருக்கடியான நேரத்தில் முடியவே முடியாது. நமது ஜனங்களை ஒற்றுமைப் படுத்தி வைக்க அவர் தேவை. நமது போராட்டத்தைத் துவேஷமில்லாதபடி நடத்திச் செல்ல அவர் தேவை. இந்திய சுதந்திரத்திற்காகவும் அவர் தேவை. மனித சமூகத்திற்காகவும் அவர் தேவை. நாம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தோடு மட்டுமல்ல, உலக ஏகாதிபத்தியத்தோடும் போராடுகிறோம். ஆகையால் நாம் இந்தியாவுக்கு மட்டுமல்ல; உலகத்திற்காகவும் போராடுகிறோம். இந்தியா சுதந்திரம் பெற்றது என்றால் உலகம் காப்பாற்றப் பட்டது என்று அர்த்தம்.

வந்தேமாதரம்!